# கல்வியியல் கலைச்சொல் விளக்க அகராதி

முனைவர் செ. சுப்பிரமணியன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

# கல்வியியல் கலைச்சொல் விளக்க அகராதி

முனைவர் செ. சுப்பிரமணியன்

இணைப்பேராசிரியர்

சமூக அறிவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-373-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு :312

திருவள்ளுவராண்டு 2037, ஆவணி-செப்டம்பர் 2006

| | | |
|---|---|---|
| நூல் | : | கல்வியியல் கலைச்சொல் விளக்க அகராதி |
| ஆசிரியர் | : | செ. சுப்பிரமணியன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | அகராதியியல் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2006 |
| பக்கம் | : | 8 + 237 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு.100/- |
| படிகள் | : | 1000 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
## தஞ்சாவூர்

**முனைவர் சி.சுப்பிரமணியம்**
**துணைவேந்தர்**


## அணிந்துரை

உலகில் பல மொழிகள் உள்ளன. ஒரு மொழியின் அடிப்படை நோக்கம் செய்திப் பரிமாற்றமே. ஒருவர் மற்றொருவரிடம் தொடர்பு கொள்ள மொழிச் சொற்களின் பொருளறிவு மிகமிகத் தேவையாகின்றது. மொழிச் சொற்களின் பொருட்சூழலை விளக்கத் தோன்றியவையே அகராதிகள். இத்தகைய சொற்பொருள் கூறும் கருவிநூல் படைப்பாக்கம் நீண்ட நெடுங்காலமாகவே நடைபெற்று வந்துள்ளது. பழைய ஓலைச்சுவடிகளிலேயே இதற்குச் சான்றுகள் உள்ளன. கடினமான சொற்களுக்குரிய விளக்கங்களை அங்கங்கே குறித்து வைத்துக்கொள்ளும் பழக்கத்தை எல்லா மொழிகளிலும் காண்கிறோம். இத்தகைய சொற்பொருட் குறிப்புகளின் தொகுப்புகளே பின்னால் அகராதிகளாகத் தோற்றம் பெற்றுள்ளன.

தமிழ் அகராதி மரபு இலக்கண உருவாக்கத்தோடு இணைந்தது என்பதைத் தொல்காப்பியம் புலப்படுத்துகிறது. தொல்காப்பிய உயிரியல், நூற்பா நடையில் அமைந்த ஒரு அகராதியாக உள்ளது. எனவே, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழில் அகராதி மரபு தோன்றி வளர்ந்ததைக் காண்கிறோம். இம்மரபே பின்பு நிகண்டுகளாகத் தோற்றம் பெற்றன. பிற்காலத்தில் இவை அகராதிகளாகப் பல்கிப் பெருகி வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெரிய அளவில் கலைக் களஞ்சியங்களும் அகராதிகளும் தொகுத்து வெளியிடப்பட்டு அனைவரின் வரவேற்பைப் பெற்று வருகின்றன. இவ்வகையில், முனைவர் செ. சுப்பிரமணியம் அவர்கள் தொகுத்தளித்துள்ள கல்வியியல் கலைச்சொல் விளக்க அகராதி அச்சில் இப்பொழுது வெளிவருவது மிகவும் பாராட்டிற்குரியது.

1931-ஆம் ஆண்டில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வேதியியல், வணிகவியல், புவியியல், வரலாறு, கணிதம், இயற்பியல், உடலியல் போன்ற துறைகளுக்குத் தனித்தனியே கலைச்சொற் பட்டியல்களை வெளியிட்டனர். 1960 – 65-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு பல்வேறு அரசுத் துறைகளுக்கும் தனித்தனிக் கலைச்சொல் அகராதிகளை வெளியிட்டுள்ளது. இதன் பின்னர், அறிவியல் கலைச்சொல் அகராதிகள் விளக்கச் சொற்பொருளோடு உருவாக்கப்படும் நிலை பெருகி வருகின்றது. தமிழ் மொழி வளர்ச்சியில் இத்தகைய அகராதி உருவாக்கங்கள் குறிப்பிடத்தக்கன.

மொழி மற்றும் அறிவியல் சார்ந்த துறைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மை வாய்ந்த சொற்தொகுதிகள் உண்டு. இத்தனித்தன்மை மிக்க சொற்களே கலைச்சொற்கள் என்று அழைக்கப்படுகின்றன. அறிவியல், தொழில்நுட்பப் பரவலின் காரணமாகவும் புதுப்புது இலக்கிய வகைகளின் பெருக்கத்தாலும் பல புதிய சொற்படைப்புகள் தோன்றுவது இயல்பு. இவ்வாறு தோன்றும் அகராதிகள் சொற்தொகுதி, இடம்பெறும் மொழிகள் ஆகிய அடிப்படையில் ஒரு மொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி எனப் பலவகைப்படுகின்றன.

பதிவுச் சொற்களுக்கு பிற மொழியில் பொருள் விளக்கம் தரும் அகராதிகள் இருமொழி அகராதிகள் ஆகும். இவ்வகையில், கல்வியியல் தொடர்பான ஆங்கில மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும், தமிழ் மொழிப் பொருளையும் விளக்கும் இரு மொழி அகராதியாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கில நூல்களை விளங்கிக் கொள்ள முயலும்போது இவ்வகை அகராதிகள் மிகவும் பயனுடையதாகும். கல்வியியலில் விளங்காத ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ப் பொருளை அறிந்து கொள்ளவும், ஆங்கிலத்தில் உள்ளதைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவ்வகராதி மிகவும் பயனுடையதாகும்.

கலைச்சொல் விளக்க அகராதிகளில் பல்வேறு அறிவியல் துறை சார்ந்த சொற்களைத் திரட்டித் தொகுப்பது என்பது பொது நிலையாகும்.

ஆயின், ஒரு துறை சார்ந்த சொற்களை மட்டுமே தரும் அகராதிகள் சிறப்பு நிலையினவாம். இவ்வகையில், மிகச் சிறப்பாக இவ்வகராதி தொகுக்கப்பட்டுள்ளமை பெரிதும் பாராட்டத்தக்கது. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைக் குறிப்பது மட்டுமல்லாமல், அச்சொல்லுக்கான முழு விளக்கத்தையும் தமிழிலேயே அளித்திருப்பது மாணவர்கள், ஆய்வாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் போன்ற அனைவருக்கும் பயன்மிக அளிப்பதாகும்.

இத்தகைய அருமையான கலைச்சொல் விளக்க அகராதியை அரிதின் முயன்று மிகச் சிறப்பாகத் தொகுத்தளித்துள்ள முனைவர் செ. சுப்பிரமணியன் அவர்களின் பணியைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறேன்.

**(சி.சுப்பிரமணியம்)**

# முன்னுரை

உலகின் பல வளர்ந்த நாடுகளில் (ஜெர்மனி, பிரான்ஸ். ரஷ்யா) தாய்மொழியிலேயே கல்வியினைக் கற்கின்றனர். தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்மொழிக்கல்வி இன்றியமையாததும் மிகவும் பயனுள்ளதுமாகும்.

சமூக அறிவயில், கல்வியியல் பாடங்களைத் தமிழ் மொழியில் கற்பது, கற்பிப்பது எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியினைத் தரவில்லை. கல்வியியல் பாடம் சமூக அறிவியல் மட்டுமின்றி அறிவியல் பாடங்களுக்கும் பொதுவாக அமைந்துள்ளது. கல்வியியல் உயர் நிலையில் தனிப்பாடமாகவும் கற்பிக்கப்படுகிறது. இப்பாடம் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்படுகிறது. கல்வியியல் நூல்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன. இவைகளைத் தமிழ்ப் படுத்த வேண்டியுள்ளது. கல்வியியலுக்குரிய சொற்களைத் தொகுத்துத் தக்க விளக்கங்களுடன் கலைச்சொல் விளக்க அகராதி உருவாக்கப்பட வேண்டியுள்ளது. இந்நோக்கத்தில் கல்வித் துறையில் எனக்குக் கிடைத்த அனுபவ அடிப்படையில் கல்வியியல் அகராதித் திட்டம் 2003 ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்டு 2005 ஆம் ஆண்டில் நிறைவு செய்து ஆய்வேடாக அளிக்கப்பட்டது. தற்போது இது நூலாக வெளிவருகிறது.

இவ்வகராதி, அடிப்படையில் கல்வியியலைச் சார்ந்ததாக இருந்தாலும் கல்வியியலுக்குத் தொடர்புடைய சமூக இயல், சமூகப் பணியியல், வயதுவந்தோர் கல்வி, உள்வியல் பாடச் சொற்களையும் ஓரளவு உள்ளடக்கியுள்ளது. இக்கலைச் சொற்கள் ஆங்கிலத்தில் வந்துள்ள கல்வியியல் அகராதிகளிலிருந்தும் பெரிதும் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வகராதியின் கலைச்சொல் பதிவமைப்பு மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் ஆங்கிலக் கலைச்சொல் கொடுக்கப் பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில் ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு

இணையான தமிழ்ச் சொல் தரப்பட்டுள்ளது. மூன்றாம் பகுதியில் கலைச் சொல்லிற்கான விளக்கம் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியில் 2324 கலைச்சொற்கள் இடம் பெற்றுள்ளன.

இவ்வகராதித் திட்டத்தினை மேற்கொள்வதற்கு அனுமதியளித்த தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் இதனை நூலாக வெளியிட அனுமதியளித்த தற்போதைய துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் பதிவாளர் (பொ) முனைவர் க. பாஸ்கரன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வகராதிப் பணியினை செய்து முடிப்பதற்கு ஊக்கம் அளித்த தமிழ்ப் பல்கலைக்கழக சமூக அறிவியல் துறை ஆசிரியர்களுக்கும்; ஆய்வு உதவியாளர்களுக்கும் எனது நன்றி உரியது.

இவ்வகராதியின் தட்டச்சுப்படிகளை சரிபார்த்தலில் உதவிய எனது முனைவர் பட்ட ஆய்வாளர்கள் திருமதி நல். இராணி, திருமதி பெ. ஜெயலட்சுமி, திருமதி செ. மாலதி, செல்வி அ. திருமகள் ஆகியோருக்கும் எனது நன்றி.

இறுதியாக, இவ்வகராதியினை நன்முறையில் அச்சிட்டு வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர் (பொ) முனைவர் ஆ. இராமநாதன் அவர்களுக்கும், திரு நா. இராமகிருட்டிணன் உள்ளிட்ட அனைத்து பதிப்புத்துறைப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. சுப்பிரமணியன்

# A

**ABACUS**

**மணிச்சட்டம்**

சட்டத்தில் பொருத்தி உள்ள இணையான கம்பிகளில் கோர்த்துள்ள மணிகளை நகர்த்துவதன் மூலம் கணக்கு போடப் பயன்படும் கருவி.

**ABILITY GROUPING**

**திறன் பிரிப்பு, ஆற்றல்படி வகைப்படுத்தல்**

கற்பிப்பதற்கு வசதியாக, மாணவர்களை அவர்களின் நுண்ணறிவுத் திறனுக்கேற்ப வகை பிரிக்கும் முறை.

**ABILITY TESTS**

**திறன் சோதனைகள்**

ஒரு நபரின் ஒட்டுமொத்த மனத் திறனை மதிப்பிட நடத்தப்படும் தரப்படுத்தப்பட்ட சோதனைகள்.

**ABSTRACTIONS**

**அருவமாக்கம், அருவப்பாடு**

பருப்பொருள் வடிவில் கற்பனை செய்ய முடியாதவற்றுக்கான கணித செயல்பாடு. பரு வடிவிலான நிகழ்வை விளக்கப் பயன்படும் புலன்களால் உணர முடியாத கருத்தையும் குறிக்கும்.

**ABSURDITIES TEST**

**அபத்த சோதனை**

உளச் சோதனைகளில் ஒன்று. இதில் ஒருவரிடம் ஒரு வாசகம்/கதை / படத்தில் உள்ள அபத்தமான பொருளை சுட்டிக் காட்டும்படிக் கேட்கப்படுகிறது.

**ACADEMIC DEVELOPMENT**

**கல்வி வளர்ச்சி**

மாணவர்களின் அறிவு - கற்கும் திறன் அதிகரிப்பைக் குறிக்கிறது.

**ACADEMIC EDUCATION**

**உயர்கல்வி, ஏட்டுக்கல்வி**

அருவநிலைக் கல்வி. பொதுவில், கற்கும் திறமை மிகுதியாகத் தேவைப்படும் கல்வியாகும்.

**ACADEMIC ELITE**

**கல்வியில் சிறந்தோர்**

உயர் கல்வித்தரத்தை எட்டிய தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவைக் குறிக்கிறது.

**ACADEMIC FREEDOM / LIBERTY**

**கல்வி சுதந்திரம் /உரிமை**

பாடத்திட்டத்தை முடிவு செய்ய கல்வி நிலையங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் உள்ள சுதந்திரத்தைக் குறிக்கிறது.

**ACADEMIC GAMES/GAMING**
**விளையாட்டு வழிக் கல்வி, கல்விசார் விளையாட்டு**

குறிப்பிட்ட நடத்தை இலக்கு களை அடைவதற்காக கற்பித்தலில் பயன்படுத்தப்படும் விளையாட்டுக்கள்.

**ACADEMIC HANDICAP**
**கல்வித்தடை**

மாணவர் கற்கும் திறனை மட்டுப் படுத்தும் காரணிகள்.

**ACADEMIC SELECTION**
**கல்வித்துறைத் தெரிவு**

இந்த நடைமுறையால் கல்வி பெறுதற்கான தகுதி என்ற அளவுகோலைக் கொண்டு கல்வி சிலருக்கே எனக் குறுக்கப் படுகிறது.

**ACADEMIC STAFF/PERSONNEL**
**கல்விப்பணியாளர்**

பள்ளி, கல்லூரி அல்லது பல்கலைகளில் கற்பிக்கும் பொறுப்புகளில் இருக்கும் ஆசிரியர்கள். ஐ.அ.வில் இவர்கள் 'பயிற்றுபுலம்' (Faculty) எனப்படுகிறார்கள்.

**ACADEMIC STANDARDS**
**கல்வித்தரம்**

மாணவர் சாதனை அளவை முடிவு செய்ய ஒரு கல்வி நிலையம் வகுக்கும் அளவு கோல்.

**ACADEMIC YEAR**
**கல்வி ஆண்டு**

கல்வி நிலையங்களில் மாணவர்களைப் புதிதாக சேர்க்கும் கட்டத்துக்கு இடைப்பட்ட காலம்.

**ACCESS & SURVEY SKILLS**
**அடைவு-ஆய்வு திறன்கள்**

தன் படிப்பு தொடர்பான கற்றல் சாதனங்களின் இடத்தைக் கண்டுபிடித்து அவற்றைத் தேர்ந்தெடுக்க முடியும் மாணவர்களின் திறன்கள்.

**ACCESSIBILITY**
**அணுகு வாய்ப்பு /அடைவு அளவு**

இயல்பான குறிப்பிட்ட கால அளவில் கற்றல் ஆதாரங்களைப் பயன்படுத்த முடியாத மாணவர்களுக்கு அவற்றை எந்த அளவுக்கு கிடைக்கச் செய்ய முடியும் என்பது.

**ACCESSORY MATERIAL**
**துணைப்பொருள்**

அடிப்படை பாட நூல்களுக்கு உறுதுணையாக பயன்படுத்தப் படும் கற்பித்தல் சாதனங்களையும் உதவிகளையும் குறிக்கிறது.

**ACCIDENTAL ERRORS**
**தற்செயல் பிழைகள்**

அறிந்திராத மாறிகள், ஆய்வு முடிவுகளை பாதிப்பதால் ஆய்வு அவதானங்களில் ஏற்படும் பிழைகளைக் குறிக்கிறது.

**ACCOUNTABILITY**

**கற்பித்தல் பொறுப்புடைமை**

மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு அவர்களின் வயது, தேர்ந்தெடுப்பு ஆகியவற்றைவிட எந்த அளவுக்கு கற்பித்தலே காரணமாகுமோ, அந்த அளவு.

**ACCREDITATION**

**தர அளவிடல்/பரிந்தேற்றல்**

அதாவது ஒரு கல்வி நிறுவனத்தின் தரத்தை, தகுதி உடைமையை சான்றளிக்கும் ஒரு வெளிமுகமை, தேர்வு வாரியம் போன்ற அமைப்பு, தொழில்முறை சான்றளிக்கும் அமைப்பு அங்கீகரித்து ஏற்றல்.

**ACCULTURATION**

**பண்பாடறிதல்**

1. ஒரு பண்பாட்டைத் தொடர்பு கொள்வதன் வழியாக அறிந்தோ அறியாமலோ அப்பண்பாட்டைக் கற்றுக் கொள்வதைக் குறிக்கிறது.

2. ஒரே கல்வி நிலையத்தில் இருந்து ஒரே நேரத்தில் ஒரு உயர்நிலைப் பட்டமும் கீழ் நிலைப் பட்டமும் வழங்கப் படுதல்.

**ACHIEVEMENT ANALYSIS**

**சாதனை ஆய்வு**

வளர்ச்சிக் கட்டங்களைப் பற்றிய ஆய்வு. இதில் குறிப்பான ஒரு பணியில் கற்றல் பகுதியில் பெறப்படும் அடைவு, முயற்சிகளின் காலத்துடன் எண்ணிக்கையுடன் ஒப்பிட்ட வரைபடமாகக் காட்டப்படுகிறது.

**ACHIEVEMENT METHOD OF MARKING**

**அடைவு ஒப்பீட்டு முறை**

இந்த முறையில் கட்டுரைகளுக்கு மதிப்பெண் அளிக்கும் ஆய்வர், கட்டுரை எழுதியவரின் நோக்கங்களை மதிப்பிடுகிறார்.

**ACHIEVEMENT QUOTIENT (AQ)**

**அடைவு கெழு**

ஒரு கல்வி / பயிற்சித் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் நிகழ்த்தலுக்கும் நடந்த நிகழ்த்தலுக்கும் இடையிலான அளவு விகிதம்.

**ACHIEVEMENT RATING**

**அடைவு வீதம் காணல்**

நிகழ்த்தல் அளவையும் ஒப்பிடப்பட்ட நிகழ்த்தல்களுக்கு வழங்கப்பட்ட தர அளவையும் ஒப்பிடுவதைக் குறிக்கிறது.

**ACHIEVEMENT TEST**

**அடைவுச் சோதனை**

ஒரு கல்வித்திட்டப் பரப்பில் குறிப்பிட்ட விதமான கற்பித்தல் அல்லது பயிற்றுவித்தலின் விளைவுகளை அளவிட உருவாக்கப்பட்ட சோதனை.

**ACHROMATISM**
**நிறப்பிறழ்ச்சி**
முழுமையான நிறக்குருடு அல்லது நிறங்களைப் பிரித்தறிய இயலாமை என்னும் மிகவும் அரிதான ஒரு நிலைமையைக் குறிக்கிறது.

**ACOUMETER**
**கேள்மானி**
ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட அளவு தொலைவில் இருந்து சொடுக்கொலி அல்லது பிற ஒலிகளை உண்டாக்குவதன் மூலம் காது கேட்கும் திறனை அறியப் பயன்படும் கருவி.

**ACOUSTIC METHOD**
**ஒலிசார் முறை**
காது கேளாதோரிடம் ஒலி அதிர்வு உணர் திறனை வளர்ப்பதன்மூலம் அதை அவர்கள் புரிந்து பேசக் கற்பிக்கப் பயன்படும் முறை.

**ACROSTIC**
**சொல்புதிர்**
ஒரு சொல் அல்லது சொல் தொடரை நினைவு கூர்வதன் மூலம் ஒரு சொல் வரிசையை அல்லது விதியை நினைவு கூறச் செய்ய பயன்படும் முறை.

**ACTION ON SMOKING & HEALTH (ASH)**
**புகைத்தல் மற்றும் நலம் குறித்த செயல்பாடு**
புகை பிடிப்பதால் விளையும் உடல் நலக் கேட்டை மனிதர்களுக்கும் குறிப்பாக பள்ளிச் சிறுவர்களுக்கும் தெரிவிக்க முனைந்துள்ள குழு.

**ACTIVE RESPONDING**
**விரைந்து விடைகூறல்**
ஒரு கற்பித்தல் தொடரின் போது அடிக்கடி வெளியாகும் மாணவரின் பதில் வினைகளை குறிக்கிறது.

**ACTIVE SYMPATHY**
**செயலுற்ற ஒத்துணர்வு**
எடுத்துக்காட்டாக, ஒரு கும்பல் திகிலடைந்து ஓடும்போது தானும் அதனுடன் திகிலுடன் ஓடாமல், தக்க நடவடிக்கை எடுப்பது.

**ACTIVITY CURRICULUM**
**செயல்வழிக் கல்வித்திட்டம்**
இந்த முறையில் குழந்தைகளின் விருப்பங்களும் நோக்கங்களுமே கல்வித் திட்ட நடைமுறையைத் தீர்மானிக்கும்; ஆசிரியரும் மாணவரும் சேர்ந்தே அதைத் திட்டமிடுகிறார்கள்.

**ACTIVITY LEARNING / TEACHING**
**கற்கும்/கற்பிக்கும் செயல்பாடு**
கற்பவரும் தன் பங்குக்கு பங்கேற்கும் தன்மையுள்ள கற்கும் / கற்பிக்கும் சூழல், அத்தன்மை உள்ள ஆய்வுப் பணி.

**ADAPTABILITY TEST**
**தகைவுத் திறன் சோதனை**
பலவிதமான பணிகளில், அவற்றை நிகழ்த்தும் திறனை முன்னறிவிக்க பயன்படும் குறிப்பான / பொதுவான திறன் சோதனை.

**ADAPTED PHYSICAL EDUCATION**
**தகைவுறு உடற்பயிற்சி**
உடல் ஊன குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட நிலையான உடற்பயிற்சி.

**ADAPTIVE PROGRAMME**
**தகைவுறு நிரல்**
நிரல்படுத்திய கற்பித்தலின் நெகிழ்வான வடிவம். இதில் அமைக்கப்பட்டுள்ள பாட வரிசை, தனித்தனி மாணவர்களுக்கு தேவைப்படும் விரைவு மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கலுக்குத் தக மாற்றப்பட முடியும்.

**ADJUNCTIVE PROGRAMMES**
**இணைப்பு நிரல்**
பயிற்சி பெறுபவரோ, மாணவரோ அவருக்கான பாடப் பகுதியை அல்லது வழக்கத்தில் உள்ள பாட நூல்களைக் கற்றபின் அவர்களுக்கு முன் வைக்கப்படும் கேள்விகள்.

**ADJUSTMENT TO TEACHING**
**கற்பித்தலுக்கான இணக்கப்பாடு / பொருத்தப் பாடு**
மாணவ நிலையில் இருந்து தொழில்முறை ஆசிரியர் என்ற நிலைக்கு வெற்றிகரமாக மாறிக் கொள்ளும் தகுதி காண் பருவத்தில் இருக்கும் ஆசிரியரில் நிகழும் போக்கு.

**ADMINISTRATIVE STUDIES/ SCIENCE**
**மேலாண்மை ஆய்வுகள்/இயல்**
கல்வி மேலாண்மையின் ஒரு பிரிவு. கல்வி நிறுவனங்களையும் முறைகளையும் ஒழுங்கமைப்பதைக் குறிப்பாக கவனிக்கிறது.

**ADOLESCENT CRISIS**
**விடலைப்பருவ சிக்கல்**
தமக்குள்ளும் வெளி உலகிலும் இளையோர் சந்திக்கும் முரண்படும் பாதிப்புகளுக்கு தகவமையும் சிக்கலைக் குறிப்பது.

**ADOLESCENT LITERATURE**
**விடலையர் இலக்கியம்**
பெரிதும் இளைஞர்களுக்காக எழுதப்படும் அல்லது பெரிதும் அவர்களாலேயே வாசிக்கப்படும் எழுத்து.

**ADOLESCENT THEORY**
**விடலைக் கோட்பாடு**
விடலைப் பருவத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஆராயும் உளவியல் கோட்பாட்டின் பகுதி.

**ADOLESCENT UNIT**
**விடலையர் பிரிவு**
மன ஊனமுற்ற இளையோருக்கான சிறப்பு பள்ளிக்கும் வயதுவந்தோர் பயிற்சி மையத்துக்கும் இடைப்பட்ட கல்வி நிலையம்.

**ADULT EDUCATION**
**வயது வந்தோர் கல்வி**
தொழிற்பயிற்சி தரும் நோக்கத்தைவிட பொதுக்கல்வி தரும் நோக்கத்துக்காக வயது வந்தோருக்கு வழங்கப்படும் கல்வி.

**ADVANCED READING/ ACCELERATED READING**
**மேம்பட்ட / முன்னேறிய வாசிப்பு / விரைந்த வாசிப்பு**
புரிதலில் தடங்கல் ஏற்படாமலேயே வாசிக்கும் வேகத்தை அதிகரிக்க உருவாக்கப்பட்ட பயிற்சிகளைக் குறிக்கிறது.

**ADVANCED ORGANISERS**
**அறிமுக நூல்கள்**
ஒரு படிப்பைத் தொடங்குமுன் மாணவர் முன் வைக்கப்படும் பாடங்களின் சுருக்கமாக அறிமுகத்தைக் குறிக்கிறது. இவை பாடப்பொருளை ஒழுங்கமைக்கவும் மனத்தில் உருவாக்கிக் கொள்ளவும் அவருக்கு உதவுகிறது.

**ADVISER (US)**
**அறிவுரையாளர்**
தேர்ந்தெடுக்கக் கூடிய பாடங்கள் பற்றி மாணவர்களுக்கு யோசனை கூறும் கல்விப் பணிக்குழு உறுப்பினர்.

**ADVISORY CENTER FOR EDUCATION (ACE)**
**கல்வி அறிவுரை மையம்**
சுயேச்சையான, லாப நோக்கமற்ற கல்வி அமைப்பு. 'எங்கே'(Where) என்னும் இதழை வெளியிடுகிறது. இதில் இயங்குவோர் தேடல் மற்றும் விசாரணைப்பணி புரிகிறார்கள். கல்வியின் எல்லா கூறுகள் பற்றியும் பெற்றோருக்கும் பிற பொதுமக்களுக்கும் தகவல் சேவை வழங்குகிறார்கள்.

**AFFECTION**
**பற்று**
அனுபவம் மற்றும் நடத்தையின் உணர்ச்சி சார்ந்த கூறுகளைக் குறிக்கிறது.

**AFFECTIVE**
**உணர்ச்சி சார்ந்த**
உணர்ச்சி வளர்ச்சியை ஆராயும் வளர்ச்சி/ கல்வி அனுபவத்தின் சில கூறுகளைக் குறிக்கிறது.

**AFFECTIVE BEHAVIOUR**
**உணர்ச்சி சார்ந்த நடத்தை**
ஒரு மதிப்பு பற்றிய நிலைபாட்டை உணரும் / தழுவும் தனியாளின் உளச் சார்பை ஊகித்தறிய பயன்படும் அவரது நடத்தை.

**AFFECTIVE EDUCATION**
**உணர்ச்சிசார் கல்வி**

மாணவரில் அவர்களின் மைய அக்கறைக்குரியதாக நடத்தையின் உணர்ச்சிசார் கூறுகளை வளர்க்கும் கற்பித்தல் / கற்றல் அனுபவம்.

**AFFIRMATIVE ACTION**
**உடன்பாட்டுச் செயல்பாடு**

ஒரு இடத்தின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது பெண்களும் சிறுபான்மையினரும் வேலை மற்றும் கல்வி துறைகளில் குறைவான இடமே பெற்றிருப் பதை சரிசெய்வதற்கான நேர் மறை செயல்பாடு.

**AFRICAN TRAINING AND RESEARCH CENTER IN ADMINSIT-RATION FOR DEVELOPMENT**
**ஆப்பிரிக்க வளர்ச்சிக்கான மேலாண்மை பயிற்சி மற்றும் ஆய்வு மையம்**

மேலாண்மைச் சிக்கல்களில் ஆப்பிரிக்க குடிமை ஊழியர்களுக்கு பயிற்சி ஆய்வு வசதிக்காக மொராக்கோவுக்கும் யுனெஸ்கோவுக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி 1964இல் நிறுவப்பட்டது. சுமார் 20 நாடுகள் இதன் உறுப்பினர்களாக உள்ளன.

**AFRO-ANGLO-AMERICAN PROGRAM IN TEACHER EDUCATION (AAA PROGRAM)**
**ஆசிரியர் கல்விக்கான ஆப்பிரிக்க - ஆங்கில - அமெரிக்க செயல்திட்டம்**

நியூயார்க் கொலம்பியா பல்கலை ஆசிரியர் கல்லூரியும் லண்டன் பல்கலை கல்வி நிறுவனமும் கார்னெஜி கழகங்களின் நிதி உதவியுடன் கூட்டு சேர்ந்து தொடங்கிய திட்டம். ஆப்பிரிக்க உயர்நிலை பள்ளிகளிலும் ஆசிரியக் கல்வி நிறுவனங்களிலும் கற்பிப்பதற்கு ஆசிரியர்களை தயாரிப்பதற்காக அது நிறுவப்பட்டது.

**AGE EARNINGS PROFILE**
**வயது- வருவாய் ஒப்பீடு**

வெவ்வேறு வயதுகளில் ஒரு தொழிலாளி (அல்லது தொழிலாளிகள்) பெறும் வருவாய் அளவைக் காட்டும் பட்டியல் அல்லது அட்டவணை.

**AGE-GRADE REPORT (US)**
**வயது-படிநிலை அறிக்கை (ஐஅ)**

இயல்நிலையில் பயிலும் மாணவர்களின் வயது - எண்ணிக்கை, மேல் மற்றும் கீழ் நிலைகளில் பயில்வோரின் வயது - எண்ணிக்கையை வெளிப்படுத்தும் அலசல்.

**AGE OF CRIMINAL RESPONSIBILITY**
**குற்றப் பொறுப்பு வயது**

நாட்டின் குற்றச் சட்டத்துக்கு ஒரு குழந்தை உட்படக்கூடும் வயது.

**AGE PATTERN ANALYSIS**
**வயது நிலைவாரி ஆய்வு**
ஒரு அமைப்பில் உள்ள வெவ்வேறு பிரிவு மக்களிடையிலான வயது பரவலைப் பற்றிய ஆய்வு.

**AGGRESSION**
**அத்துமீறல்**
தன்னையோ பிறரையோ காயப்படுத்த துணியும் மனித (அல்லது விலங்கின்) நடத்தை.

**AGNOSIS**
**விளங்காமை**
மூளை சேதத்தால் உருவான ஒரு நிலைமை. இதில் பாதிக்கப்பட்டவர் பொருள்களையும் அவற்றின் அர்த்த வேறுபாடுகளையும் உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

**AH6**
**ஏஎச்6**
கல்லூரி மற்றும் பல்கலைகளில் சேரத் தகுதியான மாணவர்களை கண்டுபிடிக்கவும் அவரது சகாக்களும் உருவாக்கிய பகுத்தறிதல் சோதனை.

**AIDE MEMOIRE**
**உதவிக்குறிப்பு**
ஏற்கனவே கற்ற, வாசித்த அல்லது பார்த்த விசயத்தை நினைவூட்ட தயாரித்த குறிப்பு அல்லது ஆதாரம்.

**AID FOR COMMONWEALTH ENGLISH SCHEME (ACE)**
**காமன்வெல்த் ஆங்கில திட்ட உதவி**
ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பிக்கும் ஆசிரியர்களை காமன்வெல்த் வளரும் நாடுகளில் பணிஅமர்த்துமுன் ஒரு யுகே பல்கலையில் அவர்களை பயிற்றுவிக்க பிரிட்டிஷ் மன்றம் (கவுன்சில்) நடத்தும் அமைப்பு.

**AIMING**
**குறிபார்த்தல்**
கண் - கை ஒத்தியக்கம் தேவைப்படும் செயல் இயக்கத் தொடரில் துரிதமாயும் துல்லியமாயும் செயல்படும் தனிநபர் திறமையைக் குறிக்கிறது.

**ALGORITHM/ALGORISM**
**தீர்வுப் படிமுறை**
ஒரு சிக்கலுக்கான தீர்வுக்கு இட்டுச் செல்லும் தர்க்கரீதியான படிநிலைகளின் வரிசைமுறை.

**ALIENATION**
**அயன்மையாதல்**
சமுதாயத்திலிருந்து தனிமைப்பட்டிருப்பதான உணர்வுள்ள மனிதரின் நிலை.

**ALIEN CULTURE/FOREIGN CULTURE**
**அயல் பண்பாடு**
சமூகம் அல்லது நாட்டின்

பொதுப் பண்பாட்டிலிருந்து வேறுபட்ட மதிப்பீடுகள், நெறிகள் மற்றும் இலக்குகளை கொண்டிருக்கும் பண்பாடு.

**ALL DAY SCHOOL**
**முழுநாள் பள்ளி**
வழக்கமான பள்ளி நாளை விடவும் அதிகமாய் மாலையிலும் நீடிக்கும் கல்வி மற்றும் தொடர்பான நடவடிக்கைகளை வழங்கும் பள்ளி.

**ALL INDIA FEDERATION OF EDUCATIONAL ASSOCIATIONS**
**அனைத்திந்திய கல்விக் கழகங்களின் கூட்டமைப்பு**
1925இல் நிறுவப்பட்ட இது, கல்விச் சிக்கல்களை குறிப்பாக இந்திய நிலைமைகளில் வைத்து ஆராய்கிறது.

**ALL INDIA SCIENCE TEACHERS' ASSOCIATION**
**அனைத்திந்திய அறிவியல் ஆசிரியர் கழகம்**
பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சிறந்த அறிவியல் தரங்களை ஊக்குவிக்க 1965 இல் நிறுவப் பட்டது.

**ALL ROUNDER**
**அனைத்து ஈடுபாட்டு மாணவர் / சராசரி மாணவர்**
பள்ளி நடைமுறையில், உடல், மன சாதனைகளில் குறிப்பிட்டுச் சொல்லும் படியான சிறப்புத் திறமைகள் இன்றி சீராக திகழ்பவரைக் குறிக்கிறது.

**ALPHABETIC METHOD**
**எழுத்து முதல் முறை**
சொல் முதல் முறை புறக் கணிக்கப்பட்டு மாணவர்கள் முதலில் தனித்தனி எழுத்தாக உச்சரித்து பிறகே சொல்லை உச்சரிக்கச் செய்யும் கற்பித்தல்-வாசித்தல் முறை.

**ALPHA-RHYTHM**
**ஆல்பா லயம்**
ஒரு மனிதர் இளைப்பாறு தலாக இருக்கும் போது அவரது மூளை அலைகளில் ஏற்படும் மின் அலைவுகள். மூளை மின் வரைவில் இது தெரிகிறது.

**ALTERNATIVE EDUCATION**
**மாற்றுக் கல்வி**
மரபு நிறுவனக் கல்விக்கு ஒரு மாற்றை வழங்கும் கல்வித் திட்டம். மாற்றுக் கல்வி என்பது வீடு, வீதி முதல் சமூகம் வரை இலவச பள்ளிகளில் நடைபெற முடியும். அல்லது வழமையான பள்ளி வழிக் கல்வி என்ற கருத்தையே இது மறுத்தொதுக் கவும் கூடும்.

**AMBIDEXTERITY**
**இருகை சரளம்**
வழக்கமாக ஒரு கையை மட்டும் பயன்படுத்தும் நிலமை களில் (எகா: கையெழுத்து) எந்த கையையும் பயன்படுத்துவதைக் குறிக்கிறது.

**AMPHIBOLY**
**இரட்டுற மொழிதல்**
தர்க்கத்தில் நிகழும் ஒரு தவறைக் குறிக்கிறது. இரு வெவ்வேறு பொருள் தரும் ஒரு கூற்றை விளக்கப் பயன்படுகிறது.

**ANALOGY TEST**
**ஒப்புமை சோதனை**
2க்கு 4 என்றால் 4க்கு என்கிற முறையில் கேள்விகள் அமையும் மனக் கணக்கின் சாதாரண வடிவம்.

**ANAL STAGE**
**மலவாய்க் கட்டம் / நிலை**
குழந்தையின் வளர்ச்சி நிலையில் அதன் கவனம் மலவாய் தொடர்பான செயல்பாடுகளில் மையம் கொள்ளும் கட்டம். இந்த கட்டத்தில் மலத்தை வெளியேற்றுவதன் மூலமோ வெளிவிடாது இருத்துவதன் மூலமோ அதிகாரத்தை, சாதித்த உணர்வை, இன்பத்தை அல்லது குற்ற உணர்வை குழந்தை அனுபவிப்பதாக கூறப்படுகிறது.

**ANALYSIS OF COVARIANCE (ANCOVA)**
**இணைவேறுபாட்டு ஆய்வு**
ஒரு மாறியில் 2 அல்லது அதற்கும் கூடுதலான குழுக்களை ஒப்பிட, வேறு ஒரு மாறி இந்த ஒப்பீட்டை பாதிக்கலாம் என்னும் போது, பயன்படுத்தும் புள்ளியியல் உத்தி.

**ANALYSIS OF VARIANCE (ANOVA)**
**வேறுபாட்டு ஆய்வு**
வெவ்வேறு அவதான தொகுப்புகளின் சராசரிக்கு இடையிலான மாறி, தற் செயலாக எதிர்பார்க்கப்படுவதைவிட விஞ்சும் எனும்போது பயன் படும் ஆய்வு.

**ANALYTICAL PSYCHOLOGY**
**பகுப்பாய்வு உளவியல்**
யங்கும் அவர் சீடர்களும் வளர்த்த உளவியல் கோட்பாட்டுப் பள்ளி.

**ANALYTIC METHOD OF SELECTION**
**தேர்ந்தெடுப்பின் பகுப்பாய்வு முறை**
ஆள் தேர்ந்தெடுப்பு நிகழ் முறையில் ஒரு கட்டம். இதில் ஒவ்வொரு வேட்பரின் குணநலன்களும் பிரிக்கப்பட்டு, வயது - தகுதிகள் - அனுபவம் - பணிநிலைப்பு - உடல்நலம் போன்ற வெவ்வேறு தலைப்புகளின்கீழ் ஒப்பிடப்படுகின்றன.

**ANBIVERT**
**புறஅகமுகர்**
புறமுக பண்புகளும் அகமுக பண்புகளும் கலந்தவர். நம்மில் பலர் இந்த ரகம்தான்

**ANCILLIARY STAFF**
**துணைப் பணியாளர்**
பள்ளியிலும் பிற கல்வி

நிறுவனங்களிலும் உள்ள ஆசிரியர் அல்லாத உதவி அலுவலர்களைக் குறிக்கிறது.

**ANDROGYNY**
**இருபால் உடைமை**
ஆண் உடலில் பெண் உடல் தன்மைகளும் பெண் உடலில் ஆண் உடல் தன்மைகளும் சேர்ந்து நிலவுவதைக் குறிக்கிறது.

**ANECDOTAL EVIDENCE**
**நிகழ்வு/சம்பவ சான்று ஆதாரம்**
தனி நிகழ்ச்சிகள் மற்றும் பொதுமைப்படுத்திய நிகழ்ச்சிகளின் அடிப்படையிலான தகவலை பெருமளவான மக்கள் கூட்டத்துக்குப் பயன் படுத்தல்.

**ANNOTATED BIBLIOGRAPHY**
**விளக்கம் சேர்ந்த நூல்தொகை**
மேற்கோள் காட்டப்பட்ட படைப்புகள் பற்றிய விவரமான அல்லது விமர்சனமான குறிப்புகள் அடங்கிய மேற்கோள் நூல் பட்டியல்.

**ANOREXIA NERVOSA**
**பயத்தால் உண்ணாநிலை**
குறிப்பாக வயதுவந்த பெண்கள், உடலில் சதை போட்டு விடுமோ எனும் பயத்தால் சரியாக உண்ணாமலும் உறங்காமலும் இருக்கும் நிலை.

**ANSWER CENTEREDNESS**
**விடை முனைப்புத்தன்மை**
மாணவர்கள் சடங்குத்தனமாகவும் சிந்தனை செய்யாமலும் விடைகூறும்படி கற்பிக்கும் பாணி. இதற்கு மாறான சிக்கல் முனைப்புத் தன்மையில் ஒரு சிக்கலின் இயல்பை சிந்திக்கும் போக்கு வலியுறுத்திக் கற்பிக்கப் படுகிறது.

**ANTHROPOLOGY**
**மானிடவியல்/மாந்தரியல்**
மனிதரின் உடல் பண்புகள், அவரது பண்பாட்டு சூழலியல் - சமூக வளர்ச்சியும் உறவுகளும், அவரது மரபின-புவியியல்-வரலாற்று பரவலும் உறவுகளும் ஆகியவற்றை ஆயும் அறிவியல் பிரிவு.

**ANTHROPOMETRY**
**மாந்தர் அளவியல்**
மக்களின் உடலியல் அளவீடுகளை ஆயும் மாந்தவியலின் பிரிவு.

**ANTHROPOMORPHISM**
**மாந்தர் பண்பேற்றம்**
கடவுளருக்கும் விலங்குகளுக்கும் மனித உடல்-மன பண்புகளை ஏற்றிக்கூறும் பார்வை.

**ANTICIPATORY MORPHOLOGICAL MATURATION**
**முன்பே நிலவும் உருவியல்**

முதிர்ச்சி

சேண்டுஸ்டாம் என்னும் உளவியலார் உருவாக்கிய குழந்தை வளர்ச்சிக் கோட்பாடு. அதாவது செயல் திறனானது உயிரியின் வாழ்வில் நேரடியான-அர்த்தமுள்ள பங்கை வகிக்க வழக்கமாக தேவைப்படும்-தூண்டப்படும் காலத்துக்கு மிக முன்னமே, வளர்ந்துவிடும் உயிரியில் சோதனை ரீதியாக அந்த திறன் அடிக்கடி வெளிப்பட முடியும் என்னும் கோட்பாடாகும்.

**ANTI-INTELLECTUALISM**

**நுண்ணறிவு எதிர்ப்புப் பாங்கு**

அருவ சிந்தனைக்கும் பகுப்பாய்வுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் மனநிலையைக் குறிக்கிறது.

**ANXIETY**

**பதற்றம்**

சிக்கலான உணர்ச்சி அனுபவம். இதன் தோற்றுவாய் பெரிதும் உணர்வற்ற மனதில் இருந்து எழுகிறது. அச்சம் அல்லது பீதி இதன் மிகவும் குறிப்பிடத்தக்க பண்பாக உள்ளது.

**APHRAXIA**

**செயல்திற மறுப்பு**

மூளை சேதத்தால் விளையும் மறதிக் கோளாறு. இதில் திறம் பெற்ற அசைவுகளை நிகழ்த்தும் விதத்தை ஒருவரால் நினைவு கூற இயல்வதில்லை.

**APPERCEPTION TEST**

**முன்னறிதிறன் சோதனை**

ஒருவகையான ஆளுமை சோதனை, குழந்தைகளுக்கு வழிகாட்டுவதில் பயன்படுத்தப் படுகிறது. இதில் குழந்தையிடம் தொடர் ஆன படங்கள் காட்டப் படுகின்றன. அவற்றைக் கொண்டு கதைகள் புனையவும் அதைக் கொண்டு பதில்கள் கூறவும் குழந்தை ஊக்குவிக்கப்படுகிறது.

**APPRECIATION LESSONS**

**ரசனைப் பாடங்கள்**

கலை, இசை, கவிதை போன்ற பாடங்களில் அழகியல் ரசனையை தூண்டும் விதத்தில் அமைக்கப்பட்ட பாடங்கள்.

**APPRECIATION TRAINING**

**மதிப்பீட்டுப் பயிற்சி**

செயல்பாட்டறிவு/விரிவான அறிவைவிட ஒரு தலைப்புப் புரிந்து கொள்வதற்கான பயிற்சி.

**APPREHENSION SPAN**

**மனம்கொள் அளவு**

குறுகிய கால தெரிவிப்புக்குப் பிறகு ஒருவர் நினைவுபடுத்திக் கூற முடியும் பொருட்களின் அதிகபட்ச அளவு.

**APPRENTICE**

**பழகுநர், பயிலுநர், கற்றுக் குட்டி**

திறம் தேவைப்படும் ஒரு தொழில் / வேலையில் பல ஆண்டுகள் பயிற்சி எடுக்க

ஒப்பந்தம் செய்யப்படும் இளைஞர்.

**APPRENTICE TEACHER**
**பழகுநிலை/பயில்நிலை ஆசிரியர்**
இளம்ஆசிரியர்/தகுதி காண் பருவ ஆசிரியர்/ மூத்த மாணவ ஆசிரியர்.

**APPROACH-APPROACH CONFLICT**
**அணுகல் - அணுகல் போராட்டம்: விருப்பங்களுக்கிடையிலான முரண்நிலை**
ஒன்றுக்கொன்று ஒவ்வாத வேறுபட்ட இரு இலக்குகளை அணுக தூண்டப்படும் நிலையில் ஒருவருக்கு ஏற்படும் மன மோதலை விளக்கும் சொல். ஊக்குவித்தல் கோட்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது.

**APPROACH-AVOIDANCE CONFLICT**
**அணுகல்-விலகல் போராட்டம்**
வெற்றியை அல்லது வேறு ஏதும் இலக்கை விரும்புதற்கும் அஞ்சுவதற்கும் இடையிலான தனிமனித மனப் போராட்டத்தை குறிக்கிறது.

**APRIORI KNOWLEDGE**
**காரணகாரிய அறிவு**
உள்ளுணர்வால் அடையப்படும் அறிவை அல்லது அனுபவத்துக்கு/விசாரணைக்கு முந்திய அறிவைக் குறிக்கிறது.

**APTITUDE**
**இயல்திறன் /நாட்டம்**
அடைந்துகொண்ட திறனை, அல்லது குறிப்பிட்ட துறையில் தனியாளின் கற்கும்-சாதனை அளவை எட்டும் - திறனின் அடியில் அமைந்ததாக, அதற்கு உகந்ததாக கருதப்படும் திறனைக் குறிப்பது.

**APTITUDE TEST**
**இயல்திறன் / நாட்டச் சோதனை**
குறிப்பிட்ட பணிமுடிக்க தேவையான இடம் சார் மற்றும் இயந்திரத் திறன்கள் தொடர்பான சோதனை

**APTITUDE-TREATMENT INTERACTION**
**இயல்திறன்-பயிற்சிமுறை இடைவினை**
ஆளுமைக் கூறுகளுக்கும் கற்பவரின் இயல்திறன்களுக்கும் கிடைக்கக்கூடிய பல்வேறு கற்பிப்பு வடிவங்களுக்கும் கற்றுக் கொள்ளும் முறைகளுக்கும் இடையிலான இடைவினையைக் குறிக்கிறது.

**ARITHMETIC AND VOCABULARY TESTS (APU)**
**கணித, சொல்வள சோதனை**
ஒட்டுமொத்தமான அடிப் படைத் திறன்கள் தேவைப்படும் தொழில்கல்வி வழிகாட்டல், தொழிற்சாலைத் தெரிவு இன்னும்

இதுபோன்ற சூழ்நிலைகளில் பயன்படும் பொது நோக்க சோதனை.

**APU - OCCUPATIONAL INTEREST GUIDE**
**தொழில் ஆர்வ வழிகாட்டி**

எடின்பர்க் பல்கலையைச் சேர்ந்த டாக்டர் க்ளோஸ் என்பவர் உருவாக்கிய வினாத்தொகுப்பு சாதனம். பள்ளியை விட்டு நீங்குவோருக்கான தொழில் மற்றும் கல்வி வழிகாட்டுதல் தொடர்பான தொழில்முறை ஆசிரியர்கள் மற்றும் இளையோர் வேலைவாய்ப்பு அதிகாரிகளின் பயன்பாட்டுக்கானது. அறிவியல் - சமூகசேவை, எழுத்தர், விற்பனை, இலக்கியம், கலை, கணக்கீடு, நடைமுறை மற்றும் வெளிப்புறம் என 8 தொழில் பிரிவுகளில் இருந்து எடுக்கப் பட்ட மொத்தம் 223 சோடி வேலைகளை இது மாணவர் முன் வைக்கிறது.

**ARBITRATION**
**நடுவர் தீர்ப்பு**

நடுநிலையான மூன்றாம் தரப்பின் முடிவே இறுதியாக கட்டுப்படுத்தும் என்னும் உதவி யின் வழியாக தகராறுகளுக்கு தீர்வு காணும் முறை.

**ARCHAEOLOGY**
**தொல்பொருள் இயல்**

புதைபொருள் ஆய்வு போன்ற ஆய்வுகள் மூலம் மனித பழமை களையும் முன்னாள் நாகரிகங் களையும் ஆயும் அறிவியில் துறை.

**AREA AND BLOCK SAMPLING**
**பகுதி - தொகுதி மாதிரி ஆய்வு**

இந்த மாதிரி ஆய்வு நடைமுறையில், கல்விஇயல் அளவாய்வு நடத்தும் பேட்டி யாளர். ஒரு விரிவான திட்டம் அல்லது வரைபடத்தில் இருந்து தேர்ந்தெடுத்த குறிப்பிட்ட முகவரி களுக்கு அனுப்பப்படுகிறார்.

**AREA STUDIES**
**பகுதி ஆய்வுகள்**

குறிப்பிட்ட அரசியல் / புவிஇயல் பகுதிகளைப் பற்றிய ஆய்வுகள். வரலாறு, மொழி, பொதுவான பண்பாடு ஆகிய னவும் இதில் சேரும்.

**ARITHMETIC ABILITY**
**கணிதத்திறன்**

யுகே-யில் உள்ள தேசிய தொழில்துறை உளவியல் கழகத்தின் பொறியியல் பழகுநர் தேர்வின் பகுதியாக அமைக்கப் பட்ட ஆள் தேர்வு மற்றும் வேலை வழிகாட்டுதல் தேர்வைக் குறிக்கிறது.

**ARITHMETIC AGE**
**கணித வயது**

தரப்படுத்தப்பட்ட கணிதத்

தேர்வில் குறிப்பிட்ட மதிப்பெண் பெறும் மாணவர்களின் சராசரி வயதைக் குறிக்கிறது.

**ARITHMETIC AVERAGE**
**கணித உருப்படி சராசரி**
2 அல்லது அதற்கு மேற்பட்ட உருப்படிகளை கூட்டிய மொத்தத்தை உருப்படிகளின் எண்ணிக்கையால் வகுத்து கிடைக்கும் மையப் போக்கின் புள்ளிஇயல் அளவை.

**ARITHMETIC MEAN**
**கூட்டுச் சராசரி /கணித கெலிப்பெண் சராசரி**
2 அல்லது அதற்கு மேற்பட்ட கெலிப்பெண்களை கூட்டிய மொத்தத்தை கெலிப்புகளின் எண்ணிக்கையால் வகுத்து கிடைக்கும் மையப்போக்கின் புள்ளிஇயல் அளவை.

**ARM-HAND STEADINESS**
**கை இயக்கச் சீர்மை**
ஒருவர் தன் கையைக் கொண்டு எவ்வளவு துல்லியமாகவும் சீராகவும் அசைவுகளை ஏற்படுத்த முடிகிறது என்பது.

**ARM-HAND STEADINESS TEST**
**கைஇயக்க சீர்மை சோதனை**
கையின் துல்லியமான சீராய இயக்கத்தை சோதித்தல். வேலை வழிகாட்டுதலில் பயன் படுத்தப்படுகிறது.

**AROUSAL SYSTEM**
**எழுச்சி/தூண்டல் அமைப்பு**
நனவிழப்பு முதல் பேரச்சம் வரையான ஒரு அளவில் இதை அளவிட முடியும். குறிப்பிட்ட மட்டத்துக்கு கீழ் செயல்பாடு குறைகிறது. தூண்டல் அமைப்பின் பரப்புகளாக மூளைத் தண்டும், மூளை நரம்பு வலைப் பின்னல் அமைவும் உள்ளன.

**ARRAY**
**அணிவரிசை**
மதிப்புகள் பலவற்றை அவற்றின் அளவுப்படி மிகச் சிறியதில் இருந்து மிகப் பெரியது வரை வரிசைப்படுத்துவதைக் குறிக்கிறது.

**ARROW DIAGRAM**
**அம்பு விளக்கப்படம்**
நிகழ்ச்சிகளின் வரைபடம். அவற்றில் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய நிகழ்ச்சி முற்றுப்பெற்ற பின்பு மட்டுமே நிகழ முடியும். ஒவ்வொரு அம்பும் முற்றுப் பெற்ற நிகழ்ச்சியில் இருந்து தொடங்க இருக்கிற நிகழ்ச்சிக்கு பாய்கிறது. வலைப் பின்னல் பகுப்பாய்வில் பயன் படுத்தப்படும் உத்தி இவை.

**ARTICLED CLERK**
**பணி பயிலாளர்**
தொழில்முறையாளரின் அலுவலகத்தில் கணக்கர் அல்லது வழக்கர் போன்ற வேலை செய்தபடி பயிற்சி எடுப்பவர்.

பயிற்சி ஒப்பந்தத்தின் கீழ் இவ்வாறு பழகுபவருக்கு அஞ்சல் வழியில் படிக்கும் வாய்ப்பும் கிடைக்கிறது.

**ARTIFICIAL INTELLIGENCE**
**செயற்கை நுண்ணறிவு**
மனித நுண்ணறிவுடன் தொடர்புடைய செயல்களை செய்யும் எந்திரம் / கருவியின் திறனைக் குறிக்கிறது.

**ASCENDING RETICULAR ACTIVATING SYSTEM (ARAS)**
**ஏறும் வலைப்பின்னல் செயல் தூண்டும் அமைப்பு**
மைய நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியின் அமைப்பு. இதன் செயல்பாடுகள் முதன்மையாக புலன் சார்ந்ததாகும். மின்னியல் செயல்பாட்டின் மாற்றங்கள் வழியாக விழிப்பு தன்மையை நிலைநிறுத்தல் தொடர்பான தாகும்.

**ASCRIBED STATUS**
**சார்த்திய தகுதி**
தனிப்பட்ட சாதனைத் தகுதி அடிப்படையை விட பிறப்பு, செல்வம் போன்ற ஏற்றப்பட்ட தகுதியால் சமூக அமைப்பில் ஒருவருக்கு கிடைக்கும் இடத்தைக் குறிக்கிறது.

**ASCRIPTION ORIENTATION**
**சார்த்திய நோக்குநிலை**
மனிதர்களின் தனிப்பட்ட முயற்சி/சாதனைகளுக்கு தொடர்பில்லாத அவர்களைப் பற்றிய நோக்கு நிலை.

**ASEMASIA**
**மொழி விளங்காமை**
நோய்க்கூறு காரணமாக மொழியை கையாள/புரிந்து கொள்ள இயலா நிலையைச் குறிக்கிறது.

**ASIAN INSTITUTE OF EDUCATION PLANNING**
**ஆசியக் கல்வித்திட்ட நிறுவனம்**
யுனெஸ்கோ அரசாங்க அதிகாரிகளின்கீழ் நிறுவப்பட்டது. நூலகம் நடத்தல், ஆவணமாக்கல் உதவி, ஆய்வு-சேவை பயிற்சி அளித்தல் ஆகியவற்றுக்காக நிறுவப்பட்டது.

**ASIAN STATISTICAL INSTITUTE**
**ஆசிய புள்ளிவிவர நிறுவனம்**
அரசாங்க புள்ளிவிவரகாரர்களுக்கான சுயேச்சையான ஆய்வு - பயிற்சி மையமாக நிறுவப்பட்டது.

**ASPIRATIONAL GROUP**
**ஆர்வக்குழு**
ஒரு மனிதன் தான் உரியவராக விரும்பும் சமூக, கல்வி அல்லது பிற குழுக்களை குறிக்கிறது.

**ASPIRATION**
**அவாக்கள்/ஆர்வங்கள்**
கல்வித்துறையில் ஒருவரின்

பேராவல்களை குறிக்கிறது. வழக்கமாக இவை கல்வி நிலையை - சமூக - அல்லது தொழில்சார் என்றும் சாதனை, கவுரவம், தகுதி சார்ந்தும் பார்க்கப்படுகின்றன.

**ASSEMBLY**
**பேரவை**
பள்ளி நாளின் தொடக்கத்தில் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் வழிபாட்டுக்கு ஒன்றுகூடல். இது ஒரு ஒற்றுமை உணர்வை உருவாக்குகிறது.

**ASSEMBLY PROGRAMME**
**அவைநிரல்**
பேரவைக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திட்டம் / நடவடிக்கை.

**ASSESSMENT**
**மதிப்பீடு**
பல்வேறு மதிப்பீட்டு உத்திகளைப் பயன்படுத்தி கற்றல்-கற்பித்தல் அளவு மற்றும் தரத்தை அளவிட முயலும் நிகழ்முறை.

**ASSESSMENT CENTER**
**மதிப்பீட்டு மையம்**
தெரிவு மதிப்பீடும் பணி மற்றும் மேலாண் திறன் வளர்ச்சியும், மேலாண் திறன்களை மதிப்பிடும் பயிற்சி செய்ய மதிப்பீட்டாளரால் செய்யப்படும் இடம். கற்பதில் சிக்கல்கள் உள்ள குழந்தைகளை ஆராயும் மையத்தையும் குறிக்கிறது.

**ASSIGNMENT**
**ஒப்படைப்பு**
ஒரு மாணவரோ மாணவர் குழுவோ தானே மேற்கொள்ளும் படி அறிவுறுத்தப்படும் கற்றல் பணியைக் குறிக்கிறது.

**ASSIGN-STUDY-RECITE FORMULA**
**ஒப்படை-படி-ஒப்பி முறை**
மரபுவழி கற்பித்தல் முறைகளில் ஒன்று. இதில் ஆசிரியர் விளக்கங்கள் அளிப்பார், மாணவர் தனக்கு ஒப்படைத்ததை கற்பார், கற்றதை புரிந்து கொண்டுள்ளார்களா என அறிய சோதித்தல் அல்லது ஒப்பிக்கும் படி செய்தல் ஆகியவை அடங்கும்.

**ASSISTANT TEACHER**
**உதவி ஆசிரியர்**
ஒரு பள்ளியின் ஆசிரியர் குழுவில் தலைமை ஆசிரியர், உதவி தலைமை ஆசிரியர், முதன்மை ஆசிரியர்கள் தவிர்த்த பிறர்.

**ASSISTING AGENCY**
**உதவி முகமை**
கல்வி நிலையம் மற்றும் பிற நிறுவனங்கள் மூலம் ஆய்வு, வளர்ச்சி முதலியவற்றுக்கும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் முகமை.

**ASSOCIATE**

**இணைந்த உறுப்பு / உறுப்பினர்**

ஒரு தொழில்முறை அமைப்பு அல்லது கற்றோர் அமைப்பில் ஒரு உறுப்பினர் தகுதி. எ.கா. இயற்பியல் கழக இணையாளர்.

**ASSOCIATE PROFESSOR**

**இணைப் பேராசிரியர்**

ஐ.அ. மற்றும் கனடிய பல்கலைகளில் பேராசிரியர் தகுதிக்கு அடுத்த கீழ்நிலை தகுதி. இங்கிலாந்தில் இருக்கும் Wader என்ற நிலையுடன் இது ஒருவாறு பொருந்தும்.

**ASSOCIATION**

**அமைப்பு/தொடர்பு**

கற்றல் மூலம் உருவாகும் எவ்வித இணைப்பையும் குறிக்கிறது. இதில் இணைக்கப் பட்ட இரு கருத்துக்கள் சேர்ந்து, தொடரும் மன நிகழ்முறையின் பகுதியாக ஆகிறது.

**ASSOCIATION AREA**

**தொடர்புப்பகுதி**

இது பெருமூளைப் புறணியைக் குறிக்கிறது. இங்கு தான் பார்வை, கேள்வி மற்றுமுள்ள புலன்வழி தகவல்களின் இணைப்பும் பெயர்ப்பும் நடைபெறுகிறது.

**ASSOCIATION FOR ADULT EDUCATION**

**வயதுவந்தோர் கல்விக் கழகம்**

வயது வந்தோர்/முதியோர் கல்வியை ஊக்குவிப்பதற்கான பிரிட்டன் அமைப்பு.

**ASSOCIATION FOR SCHOOL, COLLEGE & UNIVERSITY STAFFING (ASCUS)**

**பள்ளி, கல்லூரி, பல்கலைப் பணியாளர் சங்கம்**

ஆசிரியர் வேலைவாய்ப்பு பெற உதவுவதில் அதிக முனைப்பு காட்டும் அமைப்பு.

**ASSOCIATION OF COMMONWEALTH UNIVERSITIES**

**காமன்வெல்த் பல்கலைகள் சங்கம்**

1913இல் நிறுவப்பட்ட இதில் 26 காமன்வெல்த் நாடுகளின் 200 உறுப்பினர் பல்கலைகள் உள்ளன.

**ASSOCIATION OF INDIAN UNIVERSITIES**

**இந்திய பல்கலைக்கழக சங்கம்**

இந்திய பல்கலைகளின் துணைவேந்தர்கள் மற்றும் நிர்வாக தலைவர்களின் தேசிய அமைப்பு.

**ASSOCIATION OF SOUTH EAST ASIAN INSTITUTIONS OF HIGHER LEARNING (ASAHM)**

**உயர்கல்விக்கான தென்கிழக்காசிய நிறுவனங்களின் சங்கம்**

கல்வியில் ஒத்துழைப்பு - ஆய்வு வழி தென்கிழக்கு ஆசிய மக்களின் பொருளியல்-பண்பாட்டு - சமூக நலனை உயர்த்த 1956இல் நிறுவப் பட்டது.

**ASSOCIATION TEST (OR) TECHNIQUE**

**இயைபு சோதனை**

வெவ்வேறு மனத் திறன்களின் வலுவையும் அவற்றுக் கிடையிலான தொடர்பையும் கணிக்கும் சோதனை.

**ASSOCIATIVE DISCUSSION**

**இயைபுறு விவாதம்**

சுதந்திரமான குழு விவாதம். இதில் குழுவில் தம் அனுபவத்துக்கும் வெளியில் அதேபோன்ற அனுபவத்துக்கும் இடையிலான உறவுகளை தொகுக்க மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**ASTON INDEX**

**ஆட்டன் குறியெண்**

எழுத்து மொழியில் சரளம் பெற குழந்தைகள் தவறுவதன் காரணங்களைக் கண்டுபிடிக்க ஆசிரியர்கள் பயன்படுத்தும் குறையறி சோதனைத் தொகுப்பு.

**ASTRONOMY**

**வானியல்**

வானில் உள்ள பொருள்கள், அவற்றின் இடம், ஒப்பீட்டு இடம், தன்மை போன்றவற்றை ஆயும் அறிவியல் பிரிவு.

**ATLANTIC COLLEGE**

**அட்லாண்டிக் கல்லூரி**

வயதுவந்தோர் உயர் கல்வியில் நுழைய ஆயத்தம் செய்வதற்கும் உலக முழுவதிலும் உள்ள மனிதர்களிடையே புரிதலை வளர்க்கவுமான பந்நாட்டு அறிவர் சமூகம்.

**ATLANTIC INSTITUTE**

**அட்லாண்டிக் நிறுவனம்**

1961இல் நிறுவப்பட்டது. அரசு சாரா ஆய்வு மற்றும் விவாதத்துக்காக சுமார் 20 நாடுகளில் உறுப்பினர்களை கொண்டுள்ளது.

**ATOMISM**

**அணுவாதம்**

யதார்த்தம் முழுக்கவும் தனித்த - நுண்ணிய பிரிக்க முடியாத அலகுகளாலேயே ஆகியுள்ளது என்ற நம்பிக்கை.

**ATTACHMENT TO MATERIAL OBJECTS**

**பொருட்பற்று**

தன் சொந்த உடல் உட்பட பவுதீக உடைமைகள் மேல் மாறாக் காதல் கொண்டிருத்தல்.

**ATTAINMENT**

**தேர்ச்சி/அடைவு**

பள்ளிப் பாடத்திலோ மொத்த பாடத்திட்டத்திலுமோ பெறும் தேர்ச்சி. இதை தேர்வுகள்/ சோதனைகள் மூலம் அளவிடுகிறார்கள்.

**ATTAINMENT TEST**
**அடைவுத் தேர்வு**

குறிப்பிட்ட பாடம்/திறனின் அடைவு/மெய்யான சாதனை அறிவதற்கான தேர்வைக் குறிக்கிறது.

**ATTENDANCE AREA**
**வருகைப் பகுதி**

எந்த பகுதியில் இருந்து மாணவர்கள் சட்ட ரீதியாக ஒரு குறிப்பிட்ட கல்வி நிலையத்துக்கு வருகை புரிகிறார்களோ அந்த பகுதி.

**ATTENDED STUDY**
**வருகைதரு படிப்பு**

ஒரு பள்ளி/கல்லூரி/பல்கலை முதலிய வற்றில் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையில் நேரடி தொடர்பு மூலம் வருகை தந்து மேற்கொள்ளப்படும் படிப்பு.

**ATTENTION SPAN**
**கவனம் செலுத்தும் காலம்**

ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையில் ஒருவர் கவனம் குவிக்க முடியக்கூடிய கால அளவு.

**ATTITUDE**
**மனப்பான்மை**

குறிப்பிட்ட பொருள்களை குறிப்பிட்ட முறையிலேயே நோக்கவும், உணரவும், அவற்றிடம் குறிப்பிட்ட முறையி லேயே நடக்கவுமான மனச் சாய்வைக் குறிக்கிறது.

**ATTITUDE MEASUREMENT**
**பான்மை அளவீடு**

மனப்போக்கு மற்றும் ஆளுமைப் பண்புகள் மேல் ஒளியைப் பாய்ச்ச அமைக்கப் பட்ட பான்மை அளவைகளையும் சோதனை களையும் பயன்படுத்தல்.

**ATTRIBUTE**
**(இயல்)பண்பு**

ஒரு புலனுணர்ச்சியின் அடிப்படை தனித்தன்மையைக் குறிக்கிறது. இதன் மறைவுடன் புலன் வளர்ச்சியும் மறைகிறது.

**A TYPICAL PUPIL**
**தனிவகை மாணவர்**

ஒரே வகுப்பில் / பிரிவில் இருக்கும் மாணவரில் உடல் ரீதியாக-மனரீதியாக-அல்லது உணர்ச்சிரீதியாக வேறுபடும் மாணவர்கள்.

**AUTHORITARIANISM**
**அதிகாரப் பான்மை**

குடியாட்சி எதிர்ப்பான சமூக நிலைப்பாடுகள், மரபு மதிப்பீடுகளில் மாறாத பற்று, கெடுபிடி மனப்போக்கு, அழிக்கும் குணம் கொண்ட மனப்பான்மை.

**AUTHORITARIAN PERSONALITY**
**ஆளுமை/அதிகாரத்துவ குணம்**

செமித்திய எதிர்ப்பு, அயல் குழு ஒதுக்கல், கொடுங்கோல் கருத்துகள், வலதுசாரி பழமை

வாதம், பொருளியல் போட்டி போடலில் நம்பிக்கை ஆகியவை கொண்ட மன அமைப்பு

**AUTHORITY**
**அதிகாரம்**

சமூகத்தில் உள்ள பிற குழுக்களின் உறுப்பினர்கள்மேல் தாக்கம் செலுத்த இடம் தருமளவு சமூக உறவுகளில் ஒருவருக்கிருக்கும் தகுதியைக் குறிக்கிறது.

**AUTHORITY FIGURE**
**அதிகார உரு**

முறைப்படியாகவோ முறையல்லாமலோ ஆதிக்கம், அதிகாரம் அல்லது செல்வாக்குள்ளவராக பார்க்கப்படும் நபர்.

**AUTHORITY STRUCTURE**
**அதிகார கட்டமைப்பு**

ஒரு துறையை இயக்குவதற்கான உரிமைகள் அல்லது அதிகாரங்கள் பெற்றுள்ளவர்களின் தலைமையிலான ஒரு நிறுவனத்தில் நிலவும் தகவல்-வழிகாட்டல்-கட்டுப்பாடு-அல்லது உதவி வழங்கும் முறையை குறிக்கிறது.

**AUTHORIZATION BILL**
**உரிமை வழங்கும் சட்ட வரைவு**

ஒரு திட்டத்துக்கு உரிமை வழங்கும், அதன் பொது நோக்கத்தைத் தெளிவாக்கும், வழக்கமாக செலவினத்துக்கு ஒரு வரம்பு கட்டும் எந்த மசோதாவையும் குறிப்பது.

**AUTISM**
**தற்காதல் நோய், தற்புனைவு ஆழ்வு**

இரு ஒருவிதமான குழந்தைப் பருவ உளநோய். இதன் காரணம், நிகழ்வு, குறிகள் ஆகியவை பரவலான விவாதத்தில் உள்ளன.

**AUTOBIOGRAPHICAL METHOD**
**தன்வரலாற்று முறை**

ஆளுமை ஆய்வில் பயன்படும் ஒரு முறை. ஆய்வுக்குட்பட்டவர் தன் நடத்தையை அவதானிக்கவும் தன் சொந்த வாழ்க்கை வரலாற்றை ஆராயவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**AUTOCRATIC INSTITUTION**
**எதேச்சதிகார நிறுவனம்**

அதிகாரம் முழுவதும் நிர்வாக முன்னவரிடமே குவிந்திருக்கும் நிறுவனம்.

**AUTO-INSTRUCTIONAL AIDS**
**தற்படிப்புக் கருவிகள்**

கணினிவழி படிப்பு, தொலைபேசி வழி தகவல் முறை, மின்யந்திர உதவிகள், நிரல்படுத்திய கற்பித்தல் உட்பட்ட தன்னைத் தானே படிப்பித்துக்கொள்ளும் சாதனங்கள்.

**AUTOMATED PROGRAMMED INSTRUCTION**
**தன்னியக்க நிரல்படுத்திய கற்பித்தல்**
நுட்பம் வாய்ந்த நிரல் படுத்திய போதனையைக் குறிக்கிறது. இதில் ஏறக்குறைய அனைத்து தகவலும் நடு நிலையானது, நிரல்படுத்திய வடிவில் சோதிக்கப்பட்டது, குறைநீக்கும் போதனை நிரல்களை கிளை பிரிப்பதன் வழி தரப்படுகிறது.

**AUTOMATION**
**தன்னியக்கம்**
நுட்பமான யந்திர-மின்சார-மின்னணு-நீரியக்க காற்றழுத்த சாதனைத்தை-பகுதியாகவோ முழுமையாகவோ அவை மனித உழைப்பை தவிர்க்கும் விதத்தில் பயன்படுத்தல்.

**AUTOMATIZATION**
**தன்னியக்கமாதல்**
மென்மேலும் விரைந்தும் அடுத்தடுத்த முயல்வுகளில் தன உணர்வு குறைந்தும் நடை பெறும் நினைவுகூறும் செயல்.

**AUTONOMIC NERVOUS SYSTEM (ANS)**
**தானியங்கு நரம்பு மண்டலம்**
சுரப்பிகள் மற்றும் உடலின் பல்வேறு பாகங்களின் செயல் களை கட்டுப்படுத்தி ஒருங் கிணைக்கும் நரம்பு மண்டலத் தின் பாகத்தைக் குறிக்கிறது.

**AUTONOMOUS CHANGE**
**தானே மாறல்**
புற காரணிகளின் தாக்கத் துக்கு ஒப்பீட்டளவில் உட்படாத மாறுதலைக் குறிக்கிறது.

**AUTONOMOUS LEARNER**
**தானே கற்பவர்**
தான் படிக்கும் பாடத்தை தானே தேர்ந்தெடுப்பதிலும் அதன் உள்ளடக்கத்திலும் படிக்கும் வேகத்திலும் தன் அதிகாரம் உள்ளவராய் இருப்பவர்.

**AVA UNIT**
**ஏவிஏ அலகு**
ஒரு பள்ளி, கல்லூரி அல்லது பல்கலையில் கேட்பு-காட்சி உதவிச் சாதனங்களை அமைப் பதற்கான மையம்.

**AVERAGE DEVIATION (AD)**
**சராசரி விலகல்**
விலகல் எண்களின் கூட்டு மொத்தத்தை அவற்றின் எண்ணிக்கையால் வகுத்து கணக்கிடப்படுவது.

---

# B

---

**BABBLING**
**மழலை மொழிதல்**
மொழி உருவாகும் கட்டம். இதில் குழந்தை, வழக்கமாக 6 முதல் 12 மாத பருவத்தில், ஒலி

உருவாக்கும் திறன்களை வளர்க்க உதவியாக ஒலிகளை பலமுறை ஒலித்து ஒத்திகை செய்கிறது.

**BABY SITTER**
**ஆயா**
பெற்றோர்கள் பணியில் இருக்கையில் அவர்களின் எல்லா வயது குழந்தைகளையும் கவனித்துக்கொள்ளும் ஆள்.

**BACCULURIA**
**பக்குலூரியா**
ஆப்கனில் பள்ளி இறுதி நிலை தகுதி. மேல் படிப்புக்கு போவதற்கான தகுதி.

**BACHELOR OF LITERATURE (B.LIT)**
**இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம்**

**BACHILLERATO UNIVERSITARIO**
**பசில்லரேட்டோ யுனிவர்சிட்டாரியோ**
அர்ஜென்டைனாவில் தனியார் பல்கலைகளில் தரப்படும் பண்பாட்டுக் கலைகள், அறிவியல் பட்டம்.

**BAND CURVE CHART**
**வரிவளைவு வரைபடம்**

**BAR CHART**
**பட்டை வரைபடம்**
செவ்வக வடிவில் தகவலை குறியீட்டுக் காட்டும் வரைபடம். தகவல் குறிக்கும் அளவுக்குத் தக செவ்வகப் பட்டைகளின் அளவும் இருக்கும். அவை கிடை மட்டமாகவோ செங்குத் தாகவோ இருக்கலாம்.

**BASAL READER/BASIC READER**
**அடிப்படை பாடநூல்**
படிப்படியாய் கடினமாகிச் செல்லும், அடிப்படை படிப்புத் திறன்களை வளர்ப்பதற்கான நூல்.

**BASAL READING/BASIC READING**
**அடிப்படை வாசிப்பு**
படிப்படியாய் கூடுதலாய் முன்னேறிச் செல்லும் முறையில் அமைக்கப்பட்ட வாசிப்புத் திட்டத்தை குறிக்கிறது.

**BASIC EDUCATION AFTER INDEPENDENCE**
**சுதந்திரத்துக்குப் பிந்திய ஆதாரக் கல்வி**
சுதந்திரம் பெற்ற பின் வந்த தொடக்க ஆண்டுகளில் இந்திய அரசாங்கம் கடைபிடித்த கொள்கை. கிராம சமூகங்களின் வாழ்க்கை மற்றும் பணியின் வழியான பொதுக் கல்வியை வழங்குமாறு அது வடிவமைக்கப் பட்டது.

**BASIC ENGLISH**
**அடிப்படை ஆங்கிலம்**
850 சொற்களைக் கொண்டு

மொழி கற்பிப்பதற்கான எளிமைப் படுத்தப்பட்ட முறை. இது படி முறையில் மேலும் சொல் வளங்களை சேர்த்துக் கொள் வதை நோக்கி வளர்ச்சி பெற்றது.

**BATTERY OF TESTS**

**சோதனை வரிசை**

ஒருசேர வழங்கப்படும் சோதனைகளின் மொத்தத்தைக் குறிக்கிறது. இவற்றின் முடிவுகள், பொதுவான/குறிப்பான திறன், இயல்திறன் அல்லது அடைவு பற்றிய அதிக முழுமையான நிகழ்வுச் சித்திரத்தைத் தரப் பயன்படுகின்றன.

**BED WETTING**

**படுக்கை நனைத்தல்**

தூக்கத்தில் தன்னை அறியாமல சிறுநீர் கழித்தல். தகவமைய முடியாமையின் ஒரு அறிகுறி இது.

**BEGINNING SPURT**

**தொடக்க வேகம்**

ஒரு மாணவரின் வேலை, தொடக்கத்தில் குறுகிய காலத் துக்கு துரிதப்படும் போக்கை குறிப்பது.

**BEHAVIOUR ANALYSIS**

**நடத்தைப் பகுப்பாய்வு**

இடையுறவுத் திறன் பயிற்சி முதலியவற்றில் வரையறுத்த நடத்தைகள் பயன்படும் தடவை களை பதியும் நடைமுறை.

**BEHAVIOUR CONTAGION**

**நடத்தைத் தொற்றுதல்**

சுற்றி உள்ளவரிடையே ஒத்த நடத்தையை வெளிப்படுத்தும் போக்கு.

**BEHAVIORIST**

**நடத்தை இயலார்**

தொழில் முறையில் நடத்தை யியலை சார்ந்து நிற்கும் உளவியலாரை குறிக்கிறது.

**BELIEF**

**நம்பிக்கை**

ஒரு அறிவிப்பை/கூற்றை அது சார்ந்த மனநிலையுடனோ அல்லாமலோ ஏற்றல்.

**BENNETT TESTS**

**பென்னட் சோதனைகள்**

இயல்திறனை அல்லது கைத் திறனை அளக்க உருவாக்கப் பட்டுள்ள பலவேறு சோதனை களைக் குறிக்கிறது.

**BENTON VISUAL RETENTION TESTS**

**பெண்ட்டன் பார்வை தக்கவைப்பு சோதனைகள்**

உறுப்புக் கோளாறுகளை நுணுகி அறிய மருத்துவர்கள் பயன்படுத்தும் உத்தி.

**BETA RHYTHM**

**பீட்டா லயம்**

இயல்பான மூளையின் மின் செயல்பாடு.

**BIBLIOGRAPHIC COUPLING**
**நூல்தொகை வகுப்பு**
தொகை நூல்களை ஒத்த குறிப்புகளின் அடிப்படையில் தொடர்புடைய சிறு வகைகளாக பிரித்தல்.

**BIBLIOGRAPHY**
**மேற்கோள் நூல்பட்டியல்**
நூல்/கட்டுரை முடிந்தபின் அல்லது தனிவெளியீடாக தெரிவிக்கப்படும் மேற்கோள் நூல்கள்/பிற எழுத்துக்களின் பட்டியல்.

**BIDDING PRAYER**
**வாழ்த்துப்பாடல்**
பள்ளி விழாக் கொண்டாட்டங்களில் பாடப்படும் பாடல்.

**BILATERAL SCHOOL**
**இருநிலைப் பள்ளி**
ஒரே நிறுவனத்தில் தனித்த இருவடிவில் இயங்கும் இடைநிலைக் கல்வியின் இரு தடங்களை வழங்கும் பள்ளி. எடுத்துக்காட்டாக ஒரு ஏட்டுக் கல்வியும் ஒரு தொழிற்கல்வியும்.

**BILINGUALISM**
**இருமொழித்திறமை**
இரண்டு மொழிகள் ஏறக்குறைய ஒரே காலத்தில் கற்கப்படுகையில் அல்லது ஒன்று முந்தியும் மற்றது பிறகுமாக கற்கப்படுகையில் இரண்டையும் தாய்மொழியாக சரளமாய் பேசும் திறமை.

**BIMODAL DISTRIBUTION**
**இருமுறை பகிர்வு**
இருமுறைகள் நிலவுமிடத்தில் நிகழ்அளவு பரவலைக் குறிக்கிறது. அத்தகைய பரவல், எதிர்பாரா மாறிகளின் சாத்திய மான இருப்பைக் குறிக்க கல்வி அளவீட்டிலும் ஆய்விலும் பயன் படுகிறது.

**BINARY NOTATION**
**இரண்டடிமான முறை**
0,1 என்ற 2 இலக்கங்களை மட்டுமே வைத்து எண்ணும் முறை. இடது பக்கம் அடுத்து வரும் ஒவ்வொரு எண் மதிப்பும் அதன் வலப்புறமிருக்கும் எண் மதிப்பை 2 ஆல் பெருக்கி வருவதாகும். காட்டாக,

1 = 1
10 = 2
11 = 3
100 = 4
111 = 7

**BINET-SIMON SCALE**
**பினே-சிமோன் அளவை**
நுண்ணறிவை அளவிட பயன்படுகிறது. சிறப்புப் பள்ளிகளுக்கான மனவளர்ச்சிக் குறைவான மாணவர்களை இனம் காண பயன்படுகிறது.

**BIOGENIC THEORIES OF MOTIVATION**
**செயல்நோக்கம் குறித்த உயிர்மரபுக் கொள்கைகள்**

ஊக்குவித்தல் நடைமுறையின் ஊற்றுகளை உயிரியல் அடிப்படையில் பார்க்கும். எனவே உயிரியல் செய்முறைகளையும் தேவைகளையும் வலியுறுத்தும் - ஊக்குவித்தல் கோட்பாடுகள்.

**BIOGRAPHICAL INVENTORY TESTS**
**தனியாள் புனைதிறன் சோதனை**
கலைஞர்களிலும் அறிவியலாரிலும் இருக்கும் படைப்பு உள்ளாற்றலை அளவிட உதவும் சோதனைகள்.

**BIOGRAPHICAL TYPE CASE STUDY**
**தனியாள்வகை நிகழ்வு ஆய்வு**
இந்த வகை நிகழ்வு வரலாற்றில் ஒரு ஆளின் உளவியல், உடலியல், கல்வியியல் வளர்ச்சி விவரம், விரிவான அவதானங்களின் அடிப்படையிலான நெடுவரை ஆய்வாகத் தரப்படுகிறது.

**BIOMECHANICS**
**உயிர் எந்திரவியல்**
உயிர்ப் பிராணிகளின் இயக்கங்களைப் பற்றிய எந்திரவியல் ஆய்வு.

**BIOMETRICS (OR BIOMETRY)**
**உயிர்க் கணக்கீடு**
உயிரியல் நிகழ்வுகளுக்குள் செயல்படும் ஆய்வுக்கு புள்ளியியல் முறைகளைப் பயன்படுத்தல்.

**BIONICS**
**உயிர்ப்பயனியல்**
உயிர் அமைப்புகளின் செயல்பாடுகளை மின், யந்திர, மற்றும் பிற ஒத்த உறுப்புகளாக மாற்றுவதை ஆயும் அறிவியல்.

**BIOPHYSICS**
**உயிர் இயற்பியல்**
இயற்பியல் முறைகளையும் கோட்பாடுகளையும் உயிரியல் சிக்கலுக்கு பயன்படுத்துவதை ஆய்கிறது.

**BIRTH RATE**
**பிறப்பு வீதம்**
ஒரு இடத்தில் வாழும் 1000 பேருக்கு மற்றும் மக்கள் தொகைக்கு ஆண்டுக்கு பிறக்கும் உயிருள்ள பிறப்புகளின் எண்ணிக்கையைக் குறிப்பது.

**BISERIAL CORRELATION**
**இருவரிசை தொடர்பு**
இரண்டு மாறிகளில் ஒன்று மதிப்பெண்கள் அல்லது கெலிப் பெண்களால் அளக்கப்பட்டு மற்றது இது தனித்தனி வகைகளாக மற்றும் வகைப் படுத்தப்பட முடியும்போது அவ்விரு மாறிகளுக்கு இடையிலான ஒத்த தன்மையின் அளவாகும்.

**BISERIAL CORRELATION COEFFICIENT**
**இருவரிசை தொடர்பு கெழு**

**BLACK PAPERS**
**கருப்புத்தாள்கள்**
பிரிட்டனின் கல்வி முறையின் சில அம்சம் / அம்சங்களைப் பற்றிய அதிகாரபூர்வமற்ற ஆனால் நம்பத்தகுந்த விமர் சனங்கள். முன்னணி விமர்சகர் கள் மற்றும் கல்வியாளர்களால் செய்யப்பட்டவை.

**BLEND**
**கலவை**
உச்சரிக்கப்படும்போது தம் தனித்தனி அடையாளத்தை தக்க வைக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத் தொலிகள்.

**BLOCK DESIGN**
**கட்டை கோலம்**
இந்த நுண்ணறிவு சோதனை யில் ஆய்பொருள் வண்ணக் கட்டைகளை குறிக்கப்பட்ட கோலத்தில் ஒருங்கிணைக்க வேண்டும்.

**BLUE-COLLAR WORKER**
**உடல் உழைப்பாளி**
உடல் உழைப்பில் ஈடு படுத்தப்படுபவர். பொதுவாக மணிக்கு இவ்வளவு கூலி என தரப்படுபவர். உடல் சாரா உழைப்பாளி White-collar worker எனப்படுகிறார்.

**BOARDER**
**விடுதி மாணவர்**
உணவு வழங்கும் பள்ளியில் தங்கிப் பயிலும் குழந்தையை குறிக்கிறது.

**BOARD GAME**
**பலகை ஆட்டம்**
பங்கெடுப்போரின் முன்னேற் றம், அதற்கென குறிக்கப்பட்ட பலகையில் அமைக்கப்படும் குறிப்பான்களின் இடத்தால் தீர்மானிக்கப்படும் விளையாட்டு.

**BOARDING SCHOOL**
**உண்டுறை பள்ளி**
தன் மாணவர்கள் பெரும்பா லோர்க்கு தங்கிடமும் உணவும் வழங்கும் எந்த பள்ளியும் உண்டுறை பள்ளியாம்.

**BOARD LIABILITY**
**குழு பொறுப்பு**
ஒரு பள்ளியின் அதிகாரிகள், அலுவலர்கள் அல்லது முகவர் களின் செயல்களால் விளையும் காயங்களுக்கு அப்பள்ளிக்குழு சட்டப்படி பொறுப்பாகாது என்னும் விவரம்.

**BOARD OF EXAMINERS**
**தேர்வர் குழு**
குறிப்பிட்ட தேர்வுகளை நடத்த நியமிக்கப்பட்டு அதிகாரம் வழங்கப்படும் குழு.

**BOARD OF STUDIES**
**கல்விக்குழு**
குறிப்பிட்ட கல்வித்துறை / பள்ளி / பல்கலையின் கல்வித்

திட்ட விசயங்களில் பேரவைக்கு பொறுப்புடைய ஆலோசனைக் குழு.

**BODY-AND-MIND PROBLEM**
**உடல் மன சிக்கல்**

மனிதரின் பவுதிகமான உடலுக்கும் பவுதிகமற்ற ஏதோ உட்பொருளாகிய ஆன்மா-ஆவி-உணர்வு-மனம் என்பதற்கும் இடையிலான பாகுபாடு தொடர்பாக மிகப்பழம் காலத்தில் இருந்தே மெய்யியலாளரையும் உளவியலாளரையும் ஆர்வப் படுத்தி வந்துள்ள சிக்கல்.

**BODY BUILD INDEX**
**உடல் அமைப்பு குறிஎண்**

உடல் அமைப்பை ஆளுமை வகைகளுடன் பொருத்தி ஆயும் ஆளுமை ஆய்வில் பயன் படுத்தும் குறியீட்டு எண்.

**BODY LANGUAGE**
**உடல்மொழி**

உடலசைவு அல்லது பாவனையால் தெரிவிக்கப்படும் சொல் பேச்சற்ற மொழி. இந்த வெளிப்பாடு உணர்வுள்ள தாகவோ உணர்வற்றதாகவோ இருக்கலாம்.

**BODY OF KNOWLEDGE**
**அறிவுத்தொகுதி**

ஒரு குறிப்பிட்ட பாடம் அல்லது படிப்பில் மாணவர்களுக்கு வழங்கப்படும்/வழங்குவதற்கான அறிவு/தகவலை குறிக்கிறது.

**BOOK BANK**
**நூல் வங்கி**

பாடநூல்களை விலைக்கு வாங்க வசதியற்ற மாணவர் களுக்கு அவற்றை வாடகைக்கு வழங்குவதற்கான நூலகம்.

**BOOK BURNING**
**நூல் எரிப்பு**

ஒழுக்க ரீதியாக அல்லது அரசியல் ரீதியில் சரியில்லை என கருதப்படும் நூல்களை அழிப் பதை-அகற்றுவதை-அமுக்கு வதை குறிக்கிறது.

**BOOK-AND-SLIDE SYSTEM ( OR PRESENTATION)**
**நூலும் படமும் முறை (அல்லது முன்வைப்பு)**

நூல்கள் அல்லது வேறு அச்சிட்ட சாதனங்களுடன் படக் காட்சியையும் இணைத்துக் கற்பிக்கும் முறை.

**BOOK CATALOGUE**
**நூல் அட்டவணை**

நூலகப் புத்தக விவரங்கள் பக்கம் பக்கமாய் அச்சிடப்பட்டு நூல்வடிவம் ஆக்கியது.

**BOOK LIST**
**நூல்பட்டியல்**

ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது பள்ளிப் பாடத்துக்கு பொருத்தமாக பரிந்துரைக்கப் பட்ட நூல் பட்டியல்.

**BOOK MOBILE**
**நூல் ஊர்தி**

நகரும்/பயணிக்கும் நூலகமாய் பயன் படுத்தப்படும் வாகனம்.

**BOOSTER TRAINING**
**செறிவூட்டும்/உயர்த்தும் பயிற்சி**

நடப்பு வேலையில் பயிற்சி யாளரின் திறனை உயர்த்துவதற் கான தொழிற்சாலைப் பயிற்சி

**BOTANY**
**தாவர இயல்**

தாவரங்கள் பற்றிய அறிவியல் படிப்பு. உயிரியலின் ஒரு கிளையாக கற்பிக்கப்படலாம்.

**BOY SCOUTS/SCOUTS**
**சாரணர் இயக்கம்**

11-18 வயதான பள்ளிப் பையன்களுக்கான தன்னார்வ இயக்கம். பிரிட்டனில் தொடங்கப் பட்டு பின் பல நாடுகளுக்குப் பரப்பப்பட்டது. வெளிப்புற நட வடிக்கைகள், ஒழுக்க வளர்ச்சி, சமூக சேவை ஆகியவற்றுக்கு முக்கியம் தருகிறது. பெண்களுக் கான அமைப்பு பெண் சாரணர் இயக்கம் எனப்படுகிறது.

**BRAILLE**
**பிரெயிலி**

பார்வையற்றவர் விரலால் தடவி வாசிப்பதற்கான மேடாக் கப்பட்ட அச்சு எழுத்து. 19ஆம் நூற்றாண்டின் நடுவில் லூயி பிரெயிலி இதைக் கண்டு பிடித்தார்.

**BRAINARD OCCUPATIONAL PREFERENCE INVENTORY**
**பிரெயினார்க்கு பணி முன்னுரி மைப் பட்டியல்**

வணிகம், யந்திரவியல், தொழில்முறை மற்றும் அறிவியல் வேலை வாய்ப்புகளிலான ஆர்வங்களை முறைப்படி உள் ளடக்கும் உளவியல் பட்டியல்.

**BRAIN CORTEX**
**மூளைப் புறணி**

பெருமூளையின் வெளி அடுக்கைக் குறிப்பிடுகிறது. இதன் பகுதிகள் பணிச்சீர்மை உடையன. எடுத்துக் காட்டாக, பொட்டெலும்புக் கதுப்பில் உள்ள 'புரோக்கா' பகுதி, பேச்சுத் திறனுடன் தொடர்புடையது ஆகும்.

**BRAIN DRAIN**
**அறிவு கழிதல்**

உயர்கல்விகற்ற தொழில் முறையாளர் நல்ல வருவாய் மற்றும் அல்லது வேலை நிலைமைகள் நிலவும் நாடு களுக்குப் போய் விடுதலைக் குறிக்கிறது.

**BRAIN LOBES**
**மூளைக் கதுப்புகள்**

மூளையின், முன், பக்க, பொட்டு மற்றும் பின் என்ற நான்கு பகுதிகள்.

**BRAIN STORMING**
**மூளையைக் கசக்கல்**

குழு உரையாடல். சிக்கல்களுக்கு இயலக்கூடிய தீர்வுகளை ஆய்ந்து காணும் முறை.

**BRAIN WASHING**
**மூளைச் சலவை**

ஒருவர் தனக்குள் வைத்துக் கொள்ளும் தகவலைப் பெறும் முயற்சியாக அவரை உடல் - மன நெருக்கடிக்கு உட்படுத்தல்.

**BRIDGE COURSE**
**இணைப்புப் படிப்பு**

ஒரு நிறுவனத்தில் படிப்பைத் தொடங்கி ஆனால் அதைத் தொடர்ந்து முடிப்பதை வேண்டுமென்றே வேறொரு நிறுவனத்தில் வைத்துக் கொள்ளுமாறு திட்டமிடும் படிப்பு.

**BRIDGING COURSE**
**ஆயத்த படிப்பு**

மாணவர்கள் புதிய பாடத்தை / படிப்பை எடுத்துக் கொள்ள உதவுமாறு வடிவமைக்கப்பட்ட படிப்பு.

**BRIGHT**
**அறிவுக்கூர்மை**

நுண்ணறிவு ஈவு (IQ) 115உம் அதற்கு மேலும் உடைய குழந்தைகளை வருணிக்கப் பயன்படுகிறது. 130க்கு மேல் உடையோர் மிகுந்த அறிவுக் கூர்மை உடையவர்கள் எனப் படுகிறது.

**BROADBENT FILTER THEORY**
**அகல்வளை (வு)வடிகட்டி கோட்பாடு**

இதில் தூண்டல்களைப் பெறும், கடத்தும் புலன் உறுப்புகளும் நரம்பு மண்டலமும் உள்ளீட்டு வாயில்கள் எனப் படுகின்றன. ஆனால் தகவல் மிகையை தடுப்பதற்காக அது ஒரு வரம்பான திறனுள்ள வாயிலை தொடர்ந்து ஒரு வடிகட்டியை முன் வைக்கிறது. அது ஒரு முடிவெடுக்கும் அமைப்பை முறையாக்கும் ஒரு புலனறிவு அமைப்பில் முறையாக்குவதற்கான சில தூண்டல்களை தேர்கிறது. தரப்படாத தகவல், குறுகிய கால நினைவகத்தில் போகிற போக்கில் வைக்கப்படுகிறது.

**BROKEN HOME**
**பிரிந்த இல்லம்**

பெற்றோர் பிரித்த அல்லது மணவிலக்கு செய்த அல்லது இருவரில் ஒருவர் குழந்தைகளை கைவிட்ட குடும்பம்.

**BROKEN LINE**
**முறிந்த கோடு**

ஒவ்வொன்றும் வெவ்வேறு திசையில் போகும் மூலக்கூறுகளின் வரிசையை முடிக்க முடிவென்று காட்டும் தகவலின் படவிளக்கம்.

**BROOK REACTION TEST**
**புருக் எதிர்வினை சோதனை**

சொல் இயைபுகள் வடிவிலான இந்த சோதனை, ஆர்வங்கள் மற்றும் நிலைப்பாடுகளின் குழு சோதனை ஆகும். இதில் தெளிவில்லாத 80 தூண்டல் சொற்கள் உள்ளன. இவற்றின் வெவ்வேறு பொருள்கள் 22 ஆர்வ திணைகளில் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் தொடர்பு டையன.

**BRUNER STRATEGIES**
**புரூனர் செயல்திட்டங்கள்**

இவை கருத்து உருவாக்கத்தில் பயன்படும் செயல்திட்டங்கள் ஆகும். அவை 1.துருவல், 2. குவிதல். துருவலில் ஒருவர் கொடுக்கப்பட்ட தகவலில் இருந்து ஒரே நேரத்திலோ அடுத்தடுத்தோ கருதுகோள் களை அமைக்கிறார். குவிதலில் ஒருவர் ஒரே நேரத்தில் ஒரு கற்பிதத்திலேயே தொடர்ந்து செல்கிறார். கருது கோள்களை சோதிப்பதில்லை.

**BUDDY SYSTEM**
**உடனாள் முறை**

பணியில் உடனிருக்கும் பிறரிடம் இருந்து நடைமுறை அறிவையும் செய்முறை யையும் பெறுவதன்மூலம் கற்றல்.

**BUHLER'S SOCIAL TYPES**
**பூலரின் சமூக வகைகள்**

தனியாள்களிடையே வேறு படும் சமூக கல்வியை வகைப் படுத்தலும் சில உள்ளார்ந்த நடத்தைப் போக்குகளை ஊகித்தலும்.

**BUHLER'S THEORY OF PLAY**
**பூலரின் விளையாட்டுக் கொள்கை**

விளையாட்டுச் செயல் பாட்டை கால வரிசையிலான வளர்ச்சிப்படி இயக்க விளை யாட்டு, கற்பனை விளையாட்டு, ஆக்க விளையாட்டு என வகைப் படுத்தல்.

**BULLDOG (OR) BULLER**
**வேட்டை நாய்**

மாணவர்கள் ஒழுங்குமுறை விதிகளை கடைப்பிடிப்பதை உறுதி செய்வதில் ஒழுங்காளர் களுக்கு ஆக்ஸ்பிரிஜ் ஊழியர்கள் உதவுவதைக் குறிக்கிறது.

**BURSAR**
**பொருளர்**

நிதி மற்றும் கூடுமானால் சொத்து மேலாண்மை மற்றும் பொறுப்பை கவனிக்கும் பள்ளி/ கல்லூரி/பல்கலை ஆளுநர்.

**BUSINESS COMMUNICATIONS**
**வணிகத் தொடர்பியல்**

தொழில் மற்றும் வணிகத்தில் பயன்படும் வெவ்வேறு தொடர்பு வடிவங்களைப் பற்றிய படிப்பைக் குறிக்கிறது. இதில் கடிதத் தொடர்பு, அறிக்கை எழுதுதல், வாய்மொழி அறிக்கை, தொலைத் தொடர்பை கையாளல், பொது மக்கள் உறவு உத்திகள் முதலியன அடங்கும்.

## BUSINESS GAME
**வணிக விளையாட்டு**

கவனமாக தேரப்பட்ட தகவலை முன்வைப்பதன் அடிப்படையிலான வணிக சூழ்நிலைகளை மாணவர்கள் நடித்துக் காட்டல். அதைத் தொடர்ந்து மேலும் முடிவெடுப்பதையும் நடித்துக் காட்டல்.

## BUSINESS MANAGER
**வணிக மேலாளர்**

பள்ளி/கல்லூரியின் வணிக விவகாரங்களை நடத்துதற்கு பொறுப்பான அலுவலரைக் குறிக்கிறது.

## BUSY BOOK
**பயிற்சி ஏடு**

குறிப்பாக தொடக்கப்பள்ளி மாணவன் சிறு பயிற்சிகளை செய்யவும் அல்லது பாடங்களுக்கு இடையிலான பயிற்சிகளை செய்யவும் பயன்படுத்தப் படும் ஏடு.

## BUZZ GROUPS
**அரட்டைக் குழுக்கள்**

சொற்பொழிவு போன்றவை நடக்கும்போது குறுகிய நேரம் சிக்கல்களை விவாதிக்கும் 2 முதல் 6 பேர் அடங்கிய குழு.

# C

## CABLE TELEVISON
**கம்பிவட தொலைக்காட்சி**

இதில் சமிக்கை ஒரு கம்பி வடம் வழியாக வழங்கப் படுகிறது. (ஒளிபரப்பப்படுவதில்லை). வழங்கல் / ஏற்றல் தரம் இதில் மேம்படுகிறது. பார்ப்பவர் ஏராளமான அலை வரிசைகளில் இருந்து தேர்ந்து கொள்ள இயல்கிறது.

## CAFETERIA FEEDING
**தன்தேர்வு ஊட்டம்**

குழந்தையின் பசியின் குறிப்பான தன்மைகளை ஆய பயன் படும் முறை. குழந்தைக்கு பலவித உணவுகள் தரப்பட்டு அவற்றில் அது விரும்புவதை தேர்ந்துகொள்ள அனுமதித்தல்.

## CAFETERIA SCHEME (PLAN)
**தன்தேர்வு திட்டம்**

குறிப்பாக, வெளிப் பார்வைக்கு ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பரந்துபட்ட அலகுகளில் இருந்து தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வழங்கும் பாட அலகுத் திட்டம்.

## CAFETORIUM
**அரங்க விடுதி**

தாமே தேர்ந்து உண்ணுமிடமாகவும், நிகழ்வு அரங்கமாகவும் பயன்படும் மண்டபத்தைக் குறிக்கிறது.

**CALISTHENICS**

**கட்டழகுப் பயிற்சிகள்**

கருவிகள் இல்லாமல் சீரான கதியில் பழகும் உடல் பயிற்சி. இதைஉருவாக்கியவர் பி.எச்.லிங்.

**CAMBRIDGE PLAN**

**காம்பிரிட்ஜ் திட்டம்**

மசாச்சூசெட்சில் உள்ள காம்பிரிஜ்ஜில் உருவாக்கப்பட்ட ஒரு ஆரம்பப்பள்ளி அமைப்பு வடிவம். இதில் அறிவுக்கூர்மை உடைய மாணவர்கள் வழக்கத்தை விட விரைந்து முன்னேற வசதியாக இணை பாடங்கள் வழங்கப்படுகின்றன.

**CAMP**

**(Computer Assisted Menu Planning)**

**கணினி உதவி - தெரிவுத் திட்டம்**

பள்ளி உணவு வழங்கலை விட திட்டமிட கணினி நிரலைப் பயன்படுத்தல்.

**CAMP SCHOOL**

**முகாம் பள்ளி**

ஊரக ஆய்வுகளுக்கு முதன்மைதரும் பள்ளி. முகாமில் நடத்தப்படுவது.

**CAMPUS**

**வளாகம்**

தன்னிறைவும் புற சமூகத்திலிருந்து வெளிப்படையாக தனித்துவமான பள்ளி/கல்லூரி/பல்கலையின் இடம்.

**CANALIZATION**

**நல்வழிப்படுத்தல்**

பல வாயில்களில் இருந்து குறிப்பிட்ட விதமான நடத்தைகளை திரட்டிக் கொள்ளும் வளர்ச்சி நிகழ்முறை.

**CANONICAL CORRELATION**

**நெறிமுறைப் பொருத்தம்**

கல்வி ஆய்வில் பயன்படும் பன்மை பின்னோக்கு ஆய்வின் விரிவாக்கம். சார்பு மாறிகள் மற்றும் தனித்த மாறிகளின் முழுமுழு கணங்கள் இடையான உறவை புள்ளியியல் முறைகளால் ஆராய இது இடம் தருகிறது.

**CAPITATION FEE**

**தலைவீதக் கட்டணம்**

தொடர்புடைய மனிதர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாங்கப்படும் கட்டணத்தைக் குறிக்கிறது.

**CAPRICIOUS BEHAVIOR**

**மனம்போன போக்கு**

வரன்முறையற்ற/ஒழுங்கற்ற செயல் நோக்கம் / நடைமுறை

**CAPTAIN**

**தலைவன்**

பள்ளி/வீட்டின் தலைமை மாணவர், அல்லதுகுழுத் தலைவன்.

**CARD STACKING METHOD**

**அட்டை அடுக்குமுறை**

ஒரு பணியாளர்/மாணவர்

தொகுதிக்கு பயன்படுத்தப்படும் தகுதி மதிப்பீட்டு/தகுதி வழங்கு நடைமுறை. தனி ஆள்களின் பெயர்கள் தாங்கிய அட்டைகள், உற்பத்தித்திறன்-வேலை பற்றிய அறிவு-பணியின் தரம் முதலிய பல்வேறு காரணிகளின் அடிப்பபடையில் வரிசைப்படுத்தப் படுகின்றன.

**CARE**
**அக்கறை**

கல்வியில் இது கவன முடைமை, ஈடுபாடு ஆகிய இரு பொருள்களில் வழங்கப்படுகிறது.

**CAREER AWARENESS**
**வாழ்க்கைத் தொழில் உணர்வு**

பள்ளி தொடக்க ஆண்டு களில் பயன்படுத்தும் தொழில் கல்வி வகை. இதில் பல்வேறு தொழில்வகைகள் பற்றிய அடிப் படை புரிதல் உருவாக்கப் படுகிறது.

**CAREER EDUCATION**
**தொழிற்கல்வி**

குழந்தைப்பருவ' முதலே தனியாள் வாழ்க்கைத் தொழில் வளர்ச்சியில் கவனம் குவிக்கும் அனைத்து தழுவிய கல்வித் திட்டம்.

**CAREER GUIDANCE**
**தொழில் வழிகாட்டல் அல்லது இடஅமர்வு உதவி**

தனி மாணவர்களுக்கு அவர்களுக்கு பொருத்தமான வேலை அல்லது கல்வித் தெரிவு பற்றி அறிவுரை/ஆலோசனை கூறும் நடைமுறை.

**CAREER LADDERS**
**தொழில் படிநிலை ஏணி**

தொடக்க நிலை முதல் உயர்நிலைகள் வரை ஒரே தொழிலில் பயிற்சியுடன் கூடிய தொழில்படிப்பு ஏற்றத்தைக் குறிக்கிறது.

**CAREERS ADVISER**
**தொழில் ஆலோசகர்**

பள்ளி, கல்லூரி அல்லது பல்கலை பணியாளர் ஒருவரைக் குறிக்கிறது. இவர் காலியாக இருக்கும் வேலைகளையும் அவற்றின் வாய்ப்புகளையும் மாணவர் களுக்கு அறிவுறுத்த கடமைப்பட்டவர்.

**CAREERS OFFICER**
**தொழில் வழிகாட்டி**

பள்ளி, கல்லூரி அல்லது பல்கலை மாணவர்களுக்கு தொழில் அல்லது தொழிற்கல்வி வழிகாட்டுதல் வழங்க பொறுப்பு உடையவரைக் குறிக்கிறது.

**CAREERS TEACHER**
**தொழிற்கல்வி ஆசிரியர்**

வாழ்க்கைத் தொழில் மற்றும் மேலுமான கல்வி வாய்ப்புகள் பற்றி மாணவர்களுக்கு அறிவு றுத்தும் சிறப்புப் பொறுப்பைக் கொண்டுள்ள பள்ளி ஆசிரியர்.

**CARE ORDER**
**பராமரிப்பு ஆணை**

ஒரு குழந்தையை / இளைஞரை உள்ளூர் அதிகாரியின் பொறுப்பில் ஒப்படைக்கக் கோரும் நீதிமன்ற ஆணை.

**CARETAKER**
**காப்பாளர்**

பள்ளியின் பேணுதல், நடத்துதல், சுத்தம் முதலியவற்றை அவ்விடமிருந்தேகாக்கப் பொறுப்புள்ளவர்.

**CARREL**
**வளைமேசை**

பகுதியளவு தடுப்புஅமைந்த சூழலில் மாணவர் செயல்பட அனுமதிக்கும் நூலக/வகுப்பறை/மொழி ஆய்வகத்து அரை வளைவு மேசை / மேடையைக் குறிக்கிறது.

**CARTOGRAM**
**குறிப்படம்**

குறிப்பிட்ட வித செயல்பாடுகளின் அடர்த்திகளை நிழலாகவோ பிற முறையிலோ குறிப்பிட்டுக் காட்டும் தரைப் படம்.

**CATRIDGE-LOADING PROJECTORS OR RECORDERS**
**படப்பேழை ஏற்றும் படவீழ்த்தி/பதிவி**

திரைப்படப் பெட்டி அல்லது படவில்லைப் பேழையை விரைந்து ஏற்றும் பட வில்லை வீழ்த்திகளை/பதிவினைக் குறிக்கிறது.

**CARVER WORD-RECOGNITION TEST**
**கார்வர் சொல்அறிதிறன் சோதனை**

கூட்டத்துக்கும் தனிநபருக்குமான குறைஅறி சோதனை. எழுத்தறியும் தொடக்கநிலைகளில் இருந்து சுமார் 8ஆண்டு 6 மாத கால அளவில் இயல்பாக அடையப்படும் நிலை வரைக்குமான சொல்அறி திறனை மதிப்பிடப் பயன்படுகிறது.

**CASCADE NETWORK**
**அலைவீழ்ச்சி ஒருங்கிணைப்பு**

செயல்பாடுகளுக்கிடையிலான உறவுகளை மட்டுமல்ல, அவற்றின் ஒப்பீட்டு அளவையும் கால அளவையும் காட்டும் துருவிப் பாதை காண் படத்தை குறிக்கிறது.

**CASE BOOK METHOD**
**வழக்கு பதிவேட்டு முறை**

குறிப்பாக ஐஅ சட்ட பள்ளிகளில் வளர்த்தெடுக்கப் பட்டுள்ள ஒரு படிப்பு முறை. ஆசிரியர்களின் பாட சொற்பொழிவுகளில் இருந்து மாணவர்கள் பல சட்ட வழக்குகளை ஒரு பதிவேட்டில் தயாரித்து பின் அவற்றை விரிவுபடுத்தி அவற்றின் தீர்ப்புகளை திறனாயும் முறை.

**CASE HISTORY**
**சூழ்நிலை விவரம்**
மேலாண்மை கல்வியிலும் பயிற்சியிலும் பயன்படும் ஒரு முறை. இதில் ஒரு தொழில்/ வணிக சூழ்நிலையின் உண்மையான காரணம் ஆராயப் பட்டு அதன்மேல் விவாதம் ஊக்குவிக்கப் படுகிறது.

**CASE METHOD**
**ஆள்ஆய்வு முறை**
ஒரு ஆளிடம் ஏற்பட்டுள்ள குணக்கேட்டின் காரணங்களையும் சூழ்நிலைகளையும் முழுமையாக விசாரிக்கும் முறை.

**CASE STUDY**
**தனிஅலகு முறை, தனியாள் ஆய்வு**
சமூகப் பணியில் ஒரு தனியாள் அல்லது குடும்பத்தின் ஆய்வுக்காக கிடைக்கக்கூடிய சமூகவியல்-உளவியல்-உடற்கூறியல்-சூழலியல்-சரிதவியல் தகவல்கள்.,

**CASE WORKER**
**ஆட்பணியாளர்**
தன் வாடிக்கையாளரின் நலத்திலும் சூழ்நிலைமையிலும் அக்கறை உள்ள சமூகப் பணியாளரை குறிக்கிறது. இவர் வாடிக்கையாளரின் தேவைகள் பற்றிய தகவல்களையும் மதிப்பீடுகளையும் சேகரிக்கிறார். அந்த தகவலின் அடிப்படையில் வழிகாட்டல் வழங்குகிறார்.

**CASTE**
**சாதி**
பரம்பரையின் அடிப்படையிலான மூடிய சமூக வகுப்பு. இதுவே அதன் உறுப்பினர்களின் மரியாதை, வேலை, குடி இருப்பிடம் மற்றும் சமூக உறவுகளைத் தீர்மானிக்கிறது.

**CATALOGUE**
**(பெயர்) பட்டியல் அறிவிப்பு/ அறிக்கை**
ஐஅ கல்லூரி/பல்கலை தான் வழங்கும் பாடங்கள், வசதிகள், சேவைகள், ஆசிரியர்கள் முதலியவை பற்றி வெளியிடும் வெளியீட்டைக் குறிக்கிறது.

**CATATONIA**
**மாறாட்டம்**
சிலவிதமான உளச்சிதைவு நோயாளிகளில் காணப்படும் தசை இறுக்கநிலை. இந்த நிலையில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட உடல்கோணத்தில் பல நிமிட/ மணி நேரத்துக்கு அப்படியே இறுகிப்போய் இருக்கலாம்.

**CATECHETICAL METHOD**
**வினாவிடை முறை**
தன் பாத்திரத்தை கற்றல், விடைகளை உருப்போடல் இவற்றுக்கு முக்கியம் அளித்த முற்கால கற்பிப்பு முறை.

**CATEGORICAL IMPERATIVES**
**இன்றியமையா அடிப்படைகள்**
முற்றுண்மையான அழகியல்

கோட்பாடுகளை குறிக்கிறது. அவற்றின் சூழல்களையோ விளைவுகளையோ சாராது உள்ளார்ந்த சரியானவை இவை.

**CATEGORICAL VARIABLE**
**இன்றியமையா மாறி**
அனைத்தும் ஒரு பிரிவை/ உள் பிரிவை சேர்ந்த, ஒரே பெயரும் ஒரே எண்மதிப்பும் தரப்பட்ட மாறியை குறிக்கிறது. பண்பு மாறி எனும் அறியப் படுகிறது. இருநிலை மாறி என்பதே அதிகம் வழக்கிலுள்ள மாறியாகும். (எ.கா. ஆண்/பெண்)

**CATEGORIES**
**வகையினம்**
சில அறிவிப்புகள் சிறப்பாக பொருந்தும் வகைகளுக்கு தர்க்கத்தில் வழங்கும் பெயர்.

**CATEGORIES OF HANDICAPS**
**உடல் ஊனர் வகையினங்கள்**
நிர்வாக அல்லது பிற நோக்கங் களுக்கான உடல் ஊன மாணவர் கூட்டத்தைக் குறிக்கிறது.

**CATHARSIS**
**எழுச்சி வடிகால்**
வெளிப்பாட்டு எதிர்வினை மூலம் உணர்ச்சி இறுக்கத்தை தளர்த்துவதைக் குறிக்கிறது.

**CAUSUALITY**
**காரண காரிய தொடர்பு**
காரணத்தையும் விளைவை யும் தொடர்புபடுத்தும் அருவத் தன்மை.

**CEILING & FLOOR**
**உச்சமும் அடிமட்டமும், கூரையும் தரையும்**
ஒரு சோதனையில் நடந்து கொள்ளும் முறையின் உச்ச, கீழ் எல்லைகளைக் குறிக்கிறது.

**CEILING, REACHERS**
**உச்ச அடைவோர்**
தன் நுண்ணறிவு உச்சத்தை எட்டிவிட்டதாலோ சிறப்பாக செயல்பட போதுமான அளவுக்கு ஊக்குவிக்கப்படாததாலோ தம் செயல்திறத்தை (அதற்குமேல்) முன்னேற்றமாட்டாத மாணவர் களைக் குறிக்கிறது.

**CELL BODY**
**அணுப்பொருள்**
அணுப்பொருளும் அதிலிருந்து வெளிவந்திருக்கும் நரம்பு இழையும் அடங்கிய நரம்பு அணுவின் பகுதி.

**CENSUS SURVEY**
**மக்கள்தொகை அளவாய்வு**
பேரண்டம் அல்லது மொத்த மக்கள்தொகை பற்றிய புள்ளி விவரத்தின் அடிப்படையிலான ஆய்வை உள்ளடக்கிய அள வாய்வு முறை.

**CENTILE**
**சென்டைல்**
கல்வி அளவீட்டில் ஒரு நிலையான அளவு. மொத்த பரப்பின் அதிர்வெண் பகிர்வு 100 பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

எனவே எல்லா பிரிவுகளின் சரியாக ஒரு சதவீதமே ஒரு செண்ட்டைல் பரப்பில் நிகழ்கிறது.

**CENTRALISATION**
**குவித்தல் போக்கு**

தீர்மான அதிகாரங்களை மய்ய/உச்ச நிர்வாக அமைப்புகள் வழங்குவதைவிட பிடித்து வைத்துக் கொள்ளும் அளவைக் குறிக்கிறது.

**CENTRAL NERVOUS SYSTEM (CNS)**
**மைய நரம்பு மண்டலம்**

மூளையிலும் தண்டுவடத்திலும் உள்ள அனைத்து நரம்பு அணுக்களையும், மூலகங்களையும் இணைப்புப் பாதைகளையம் குறிக்கிறது. மனித/விலங்குச் செயல்பாட்டின் மொத்த நரம்பு மண்டல கட்டுப்பாட்டுக்கும் இந்த அமைப்பே காரணம்.

**CENTRAL PROCESS**
**மைய செயல்முறை**

புற உணர்வு/செயல் நரம்புகளுக்கும் தன்னியக்க நரம்பு மண்டலத்துக்கும் மாறாக மைய நரம்பு மண்டலம் (குறிப்பாக உயர் மூளை மையங்கள்) ஒழுங்கமைக்கும் செயல்பாட்டைக் குறிக்கிறது.

**CENTRE FOR EDUCATIONAL TECHNOLOGY**
**கல்வி தொழில்நுட்ப மையம்**

இந்திய ஆய்வு வளர்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம். முகவரி: National Council of Educational Research and Training, Sri Aurobindo Marg, New Delhi-110 016.

**CENTERE OF INTEREST**
**ஆர்வ மையம்**

மாணவர் ஆர்வத்திலிருந்தும் பாடப் பகுதியை பெரிதும் ஒருங்கிணைக்கும் அனுபவத்தில் இருந்தும் எழும் கல்வித்திட்ட பகுதி / பாடம்.

**CEPHALOCAUDAL DIRECTION**
**தலைமுதல் கொள்கை**

தலையிலிருந்து இடுப்புச் சட்டம் நோக்கியே வளர்ச்சி நிகழ்கிறது. அதாவது கழுத்து வளர்வதற்கு முன்பே தலை வளர்கிறது என்னும் மனித வளர்ச்சிக் கோட்பாடு.

**CERAMICS**
**வனைபொருள்கலை**

களிமண் போன்ற வனை பொருள் மூலப்பொருள் பற்றிய அல்லது அவற்றால் வனைந்த பொருள்கள் பற்றிய அறிவியல் ஆய்வு.

**CEREBELLUM**
**சிறுமூளை**

நடுமூளைக்கும் முகுளத்துக்கும் பின்னால் அமைந்துள்ள மூளைப் பகுதி. இவற்றுடன் நரம்பு இழைகளால் இணைக்கப் பட்டது. இவை பெருமூளைப் புறணிக்கும் தண்டுவடத்துக்கும்

இடையில் தகவல் அனுப்பவும் பெறவும் உதவுவன. இச்செயல் களை சிக்கலின்றி சீராக நிறை வேற்றுவதற்கு சிறுமூளை உதவு கிறது.

**CEREBRAL HEMISPHERES**
**மூளை-அரைக்கோணங்கள்**
மூளை சமச்சீரான ஒரு அரைக்கோணங்களாக உள்ளது.

**CEREBRAL PALSY**
**(பெரு)மூளை - பக்கவாதம்**
பெரிதும் பேறு காலத்துக்கு முந்திய நிலையில் மூளை சேதத்தினால் விளையும் பலவித இயலாமைகள்.

**CEREBRATION**
**மூளை இயக்கம்**
மூளையின் உணர்வுள்ள அல்லது உணர்வற்ற இயக்கத்தை குறிக்கிறது.

**CEREBRUM**
**பெருமூளை**
மூளையின் முன்புறமுள்ள பெரிய பகுதி. உயர் சிந்தனைச் செயல்களுடன் தொடர்புடையது.

**CERTIFICATE IN EDUCATION**
**ஆசிரிய சான்றிதழ்**
கற்பிக்க தகுதி வழங்கும் விருது. முதல் பட்ட மேல் படிப்புக் கோ உயர்கல்விக்கோ பிறகு பெறப் படக் கூடியது. கற்பித்தலுக்கான தொடக்க நிலை பயிற்சியிலேயே கிடைத்து விடும் என்பதில்லை.

**CERTIFICATION**
**சான்றளிப்பு**
ஒரு மாணவர் மேலுமான பயிற்சிக்கு தேவையான தகுதி பெற்றவர் என்பதற்கான சான்று.

**CHAIN**
**தொடர்**
சமூக அளவையில், பரிமாறத் தக்க அல்லது பரிமாறத் தக்கதல்லாத தெரிவுகளின் தொடர் பிரித்தறி முடியக்கூடிய ஒரு சமூகத் திட்டத்தில் உள்ள தெரிவுக் கட்டமைப்பின் வடிவத்தைக் குறிக்கிறது.

**CHAIN COMPLEX**
**தொடர் தேர்வு**
குழந்தை தன் முந்திய தேர்வுக்கு தக்க பொருளையே தேர்கிறது என்னும் வைகாட் ஸ்கியின் கருத்தாக்க வளர்ச்சிக் கோட்பாட்டின் உள்நிலை.

**CHAINING**
**சங்கிலி இணைப்பு**
தனித்த துலங்கல்களின் தொடரை ஒரு குறிப்பிட்ட வரிசையில் ஒன்றாக இணைப் பதை குறிக்கிறது. இதில் முதல் துலங்கலின் நிறைவு இரண் டாவது துலங்கலுக்கான தூண் டலை வழங்குகிறது.

**CHAIN LEARNING**
**தொடர் கற்றல்**
தூண்டல் - துலங்கல் உளவியலில் ஒன்றாக இணைக்

கப்பட்டு ஒரே தூண்டல் துலங்களாக செயல்படும் தொடர்புடைய பல தூண்டல்/துலங்கல் உறவுகளைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு அச்சிட்ட சுரக்குறிப்பின் தூண்டலுக்கு துலங்கலாக இசைக்கருவியில் பொருத்தமான ஒரு கட்டையைத் தட்டுவது தொடர்புடைய பல சிறு தூண்டல்களுடன் தொடர்பு உடையது. எடுத்துக்காட்டாக, உருவத்தைப் பார்த்தல், மூளைக்கு செய்தி அனுப்பப்படல், கைக்கு கரத்துக்கு செய்தி அனுப்பப்படல். இப்படியே ஆனால் உளவியலார் வெறுமனே ஒட்டுமொத்த செயலையே கவனித்திருக்கலாம்.

**CHAIR**
**தலைமை**

பல்கலை / உயர்கல்வி நிலையம் எதிலும் முக்கியமான கற்பித்தல் / ஆய்வுப் பதவி. தலைமைப் பொறுப்பாளர் பெரிதும் பேராசிரியராக இருக்கிறார். ஒரு சிறப்புத் திறனால் கிடைத்த பதவியையே பெரிதும் இச்சொல் குறிக்கிறது.

**CHAIRMAN (OF A UNIVERSITY DEPARTMENT)**
**தலைவர் (பல்கலைத்துறை)**

சில பல்கலைகளில் குறித்த காலத்துக்கு அமர்த்தப்படும் துறைத்தலைவர்.

**CHALK-AND-TALK**
**கரும்பலகை சோதனை**

இந்த கற்பித்தல் முறையில் மாணவரின் அதிக ஈடுபாடு, கண்டுபிடிப்பு இன்றியே ஆசிரியர் பாடம் நடத்துகிறார். இதில் கரும்பலகையே கற்பித்தல் சாதனமாகிறது.

**CHANCELLOR**
**வேந்தர்**

பல்கலைக்கழகத்தின் உயர் அதிகார அமைப்பின் தலைவர்.

**CHANCE RELATIONSHIP**
**தற்செயல் உறவு**

புரிந்துகொள்ளப்படாத செல்வாக்கிலிருந்தும் முற்றிலுமான தன்னிச்சையாகவும் எழும் மாறிக்கு இடையிலான உறவு.

**CHANGE AGENT**
**மாற்ற காரணி**

ஒரு மாற்றத்தை அறிமுகப் படுத்தி நடைமுறைப்படுத்துவதை சாதிப்பதை நோக்கமாகக் கொண்டு ஊக்கியாக செயல்படும் மனிதரைக் குறிக்கிறது.

**CHANNEL CAPACITY**
**வாயில் திறன்**

ஒரு வாயிலில் அனுப்பப்பட முடியும் தகவலின் அதிகபட்ச அளவு.

**CHAPLAIN**
**மதகுரு**

கல்வி நிலையத்தை சேர்ந்த மதகுரு. மத சடங்குகளை அவர் நெறிப்படுத்த முடியும்.

CHARACTER
**ஒழுக்கம்**
அன்பு, நேர்மை போன்ற குணங்களை குறிக்கிறது. அற ரீதியில் நல்லதோ கெட்டதோ ஆன நடத்தையில் வெளிப்படும் ஒப்பீட்டளவில் நிலையான ஒன்று.

CHARISMA
**வசீகரம்**
பிறரை உந்த அல்லது பிறர்மேல் செல்வாக்கு செலுத்த ஒருவருக்கு அமையும் தனி குணம் அல்லது வரம்.

CHARTERED STUDENT
**உரிமை மாணவர்**
உரிமை பெற்ற தொழில் முறை நிறுவனத்தின் உறுப்பினருக்காக வேலை செய்யும் பணியில் எழுத்தர்.

CHECK LIST
**சரிபார்ப்புபட்டி**
ஆய்வர்கள் முக்கியம் என கருதும் தலைப்புகள் அல்லது நடத்தைக் கூறுகளால் தயாரிக்கப்பட்ட பட்டியல்களின் அட்டவணையைக் குறிக்கிறது. ஒவ்வொரு தலைப்பிற்கு பிறகும் பார்வையாளர் ஆய்வுக்குட்பட்ட ஆள் அல்லதுநிலைமையில் அதன் இருப்பை அல்லது இன்மையை குறிப்பிடுகிறார். நிலைபாடுகள் பற்றிய விசாரணைக் கேள்விகளிலும் அவை பயன்படுகின்றன. இங்கு எடுத்துக் கொண்ட ஆய்வுக்காக அவற்றை விடையளிப்பவர் நிரப்புகிறார்.

CHEMICAL ENGINEERING
**வேதிபொறியியல்**
தொழில்துறை வேதிசெய்முறைகளுக்கான தொழிற்கூடம்/யந்திரங்களுக்கான வடிவமைப்பு, இயங்குமுறை, மற்றும் உருவாக்கம் தொடர்பான பொறியியல் துறை.

CHEMOTHERAPY
**வேதி சிகிச்சை**
தூக்கமூட்டிகள் போன்ற மருந்துகள் அல்லது வேதிப் பொருள்களைக் கொண்டு மனநிலை பாதிப்புக்கு சிகிச்சை அளித்தல்.

CHIEF STUDIES
**முதன்மை பாடங்கள்**
மாணவர்கள் படிக்க தேர்ந்துகொள்ளும் முதன்மை/முக்கிய பாடங்கள். துணையான/முக்கியமற்ற பாடங்கள் நிரப்பு பாடங்கள் எனப்படலாம்.

CHILD ABUSE
**குழந்தைகளை துன்புறுத்தல்**
சிறு குழந்தைகளை உடல் - மன ரீதியில் மோசமாக நடத்துதல்.

CHILD ACCOUNTING
**குழந்தை கணக்கு வைப்பு**
மாணவர் வேலை தொடர்பான தகவல் சேகரிப்பையும் பதிவையும் குறிக்கிறது.

**CHILD ADVOCACY**
**குழந்தை சட்டக்காப்பு**
குழந்தைகளின் அடிப்படை உரிமைகளையும் தேவைகளையும் உறுதி செய்யும் சாத்தியமான அனைத்து மூலவளங்கள்.

**CHILD CARE CENTERS**
**குழந்தை நல மையங்கள்**
ஆயத்த கல்வி/ மழலை கல்வி வழங்கும் அமைப்புகள்.

**CHILD CARE PROGRAM**
**குழந்தை நலத்திட்டம்**

**CHILD CENTERED EDUCATION**
**குழந்தை மைய கல்வி**
கற்பித்தல் மற்றும் கற்றலின் உணர்தல் அம்சங்களை விட அறிதல் அம்சங்களுக்கு முதன்மை அளிக்கிறது.

**CHILD DEVELOPMENT**
**குழந்தை வளர்ச்சி**
பிறப்பெடுத்ததில் இருந்து வாலிபம் வரை குழந்தைகளின் உடல் - அறிவு - சமூகவியல் மற்றும் ஆளுமை வளர்ச்சியை ஆராயும் கல்வி உளவியல் பிரிவு.

**CHILD GUIDANCE**
**குழந்தை வழிகாட்டல்**
குழந்தைகளின் நடத்தை, கற்றல் மற்றும் உடல் மன சிரமங்களுக்கு காரணமறிதலும் சிகிச்சையும்.

**CHILD GUIDANCE CENTERS (OR CLINICS)**
**குழந்தை வழிகாட்டல் மையங்கள்**
நடத்தை, வளர்ச்சி அல்லது கற்றல் சிரமங்கள் உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் இடங்களை குறிக்கிறது.

**CHILDHOOD**
**குழந்தைமை**
6 வயது முதல் 13 வயது வரையான மனித வளர்ச்சிக் கட்டத்தைக் குறிக்கிறது.

**CHILD MINDER**
**குழந்தை பராமரிப்பாளர்**
பெற்றோர் வேலைக்கு போவதால் அவர்களின் பிள்ளைகளை சம்பளத்துக்காகப் பார்த்துக் கொள்பவரைக் குறிக்கிறது.

**CHILD NEGLECT**
**குழந்தை புறக்கணிப்பு**
குழந்தையின் உடல் - வளர்ச்சித் தேவைகளை நிறைவு செய்யத் தவறுவதைக் குறிக்கிறது.

**CHILD PSYCHIATRY**
**குழந்தை உளநோயியல்**
குழந்தை மற்றும் இளம் பருவத்தின் இயல்பற்ற நடத்தையை மருத்துவ ரீதியில் ஆய்வதைக் குறிக்கிறது.

**CHILD PSYCHOLOGY**
**குழந்தை உளவியல்**
மனித வளர்ச்சி மற்றும்

நடத்தை பற்றிய ஆய்வின் குழந்தை பருவ பிரிவு.

**CHILD REARING PRACTICES**
**குழந்தை வளர்ப்பு நடைமுறை**

பெற்றோர் தம் குழந்தைகளை வளர்க்கும் முறைகள்.

**CHILDREN'S APPERCEPTION TEST (CAT)**
**குழந்தைகளின் முன்னறிவு சோதனை**

குழந்தைகளின் சிக்கல்கள்/ துன்பங்களை குறித்துக் காட்டு வதாக கூறும் சோதனை. வெவ் வேறு பொருள் அல்லது நிலை மையைக் காட்டும் படங்களுக்கு குழந்தைகள் புரியும் எதிர் வினைகள் மீது விளக்கங்கள் தரப்படுகின்றன.

**CHILDREN'S BEHAVIOR QUESTIONNAIRE**
**குழந்தைகள் நடத்தை கேள்விப்பட்டி**

குழந்தைகளின் இயல்பற்ற நடத்தை பற்றிய 26 சுருக்கமான குறிப்புகள் கொண்டது. குறிப் பிட்ட குழந்தைக்கு அது முற்றிலும் பொருந்துகிறதா, ஓரளவு பொருந்துகிறதா அல்லது பொருந்துவ-தில்லையா என ஆசிரியர் சோதிக்கிறார். இது ஆசிரியர்கள் எளிதாக-விரைவாக கையாள உதவியாக உள்ளது. இதன் பயன் நிறைவாக-நம்பகமானதாக உள்ளது.

மாணவர்களை வடிகட்ட இது பயன்படுகிறது.

**CHILD STUDY**
**குழந்தை ஆய்வு**

கல்விக் கொள்கையையும் நடைமுறையையும் ஆழமாக மதிப்பிட ஒரு சில மாணவர் களின் பின்னணி மற்றும் செயல் முறையை ஒரு மாணவரே ஆராய்தல். ஆசிரியர் கல்வியில் இது ஒரு உத்தியாக பயன் படுகிறது.

**CHISQUARE (K2) TEST**
**சீசி இருப்பு (K2) சோதனை**

பெயரளவு தகவல் தொடர் பான திட்டமற்ற கருதுகோள் களை ஆராயப் பெரிதும் பயன் படும் புள்ளியியல் சோதனை இரு தனித்தனி அவதானங்களுக் கிடையேயான உறவு தற் செயலாக நிகழ்கிறதா என்பதை தீர்மானிக்க உதவுகிறது.

**CHIVALRIC EDUCATION**
**மறக்கல்வி**

இடைக்கால கல்வி வடிவம். இதில் உயர்குடி பையன்கள் ஒரு பிரபுவின் வீட்டில் எடுபிடியாக இருந்து கொண்டு, குதிரை ஏற்றம், ஆயுத பயிற்சி, சமூகத்தின் நடத்தை மரபுகளில் பயிற்சி பெறுவார்கள்.

**CHOICE STATUS INDEX**
**வாய்ப்பு -தகுதி குறியெண்**

சமூக அளவை இயலில்

பயன்படும் புள்ளியல் உத்தி. ஒரு மாணவர் பெறும் வாய்ப்புகளின் தொகை N-1ஆல் வகுக்கப் படுகிறது. N என்பது குழுவின் அளவுக்கு சமம்.

**CHROMOSOMES**
**நிறப்புரிகள்**

உயிரணுக்களின் கருவில் சிக்கலான வேதிப் பொருள் இழைகள் உள்ளன. அணுக்கள் வேறுபடவும் மரபு பண்புகளை கடத்தவுமான முறைக்கு இவையே காரணமாகின்றன. பால் நிறப்புரிகள் என்பவை எடுத்துக் காட்டாக ஒரு சோழ நிறப் புரிகளை கொண்டது. பெண்ணில் அவை ஒரே மாதிரியாக உள்ளன. (x,x என அறியப்படும்). ஆணில் மாறுபட்டு உள்ளன (x, y).

**CHRONOLOGICAL AGE (CA)**
**கால வயது**

ஆண்டு-மாதக் கணக்கில் வெளிப்படும் ஒருவரின் உண்மையான உடல் வயது.

**CHRONOLOGICAL SYLLABUS**
**காலவரிசைப் பாடத்திட்டம்**

கடந்த கால நிகழ்ச்சிகளை காலவரிசைப்படி விளக்கும் வரலாறு கற்பித்தல் முறை

**CHUNKING**
**தொகுதியாக்கல்**

எண்ணிக்கை 7 வரும் விதத்தில் உருப்படிகளை தொகுதிகளாக்கி தரும் நினைவுப் பயிற்சி உத்தி. வேதி குறியீடுகள், நெடுங்கணக்கின் எழுத்துக்கள் போன்றவற்றை கற்க உதவும்.

**CIRCUIT TIME**
**சுற்று நேரம்**

தொலைதூர கல்வியில் மாணவர் பயிற்சிகளையும் கேள்விகளையும் கவனிக்கவும் கருத்துரைக்கவும் ஆகும் கால அளவு.

**CIRCULAR REACTIONS**
**சுழல் எதிர்விணைகள்**

குழந்தையின் முதலிரு ஆண்டுகளில் காணப்படும் திரும்பத் திரும்ப நிகழும் செயல் சுழற்சிகளை குறிக்கிறது.

**CIRCULATION SPACE**
**சுற்றுவட்ட பகுதி/**
**சுற்றுவட்டப் பரப்பு**

கற்பித்தலுக்கு பயன்படுத்தப் படாத பள்ளி/கல்லூரி கட்டிடப் பகுதியைக் குறிக்கிறது. இந்த இடைவழிகளும் நுழைவு அரங்குகளும் சுற்றுவட்ட பகுதியில் அடங்கும்.

**CIRCUS**
**சுழல் கல்வி**

படிப்புகளையோ சிறப்பு ஆசிரியர்கள் போன்று இருக்கும் வசதிகளையோ சுழற்சி முறையில் வழங்கும் கல்விமுறை. இதில் பல குழுக்களும் படிக்கவும் சிறப்பு வசதிகளைப் பெறவும் வாய்ப்பு கிடைக்கிறது.

**CITIZENSHIP EDUCATION**
**குடி உரிமைக்கல்வி**
ஒரு சமுதாயத்தில் சமூகத்தில் விரும்பப்படும் சமூக நடத்தையைப் பதியச் செய்யும் கல்வி.

**CIVIC EDUCATION**
**குடிமைக் கல்வி**
குடி உரிமைக்கல்வி. சமூகச் சிக்கல்களையும் உள்ளாட்சி இயங்கும் முறையையும் பற்றிய புரிதலை வழங்கும் நோக்கமுடைய வயதுவந்தோர் கல்வி.

**CIVICS**
**குடிமை இயல்/நூல்**
மாணவர் வசிக்கும் சமூகச் சூழலின் நோக்கில் இருந்து கற்பிக்கப்படும் அரசியல் அறிவியலின் எளிய வடிவம்.

**CIVIL ENGINEERING**
**குடி பொறியியல்**
முதலில் எவ்வித பொறியியலுக்கும் பயன்படுத்தப்பட்டது - படை பொறியியல் தவிர (எனவேதான் குடி) இப்போது இது கட்டுமானங்களின் அமைப்பு, கட்டுதல் ஆகியவற்றைக் குறிக்க பயன்படுத்தப் படுகிறது. (கட்டடப் பொறியியல்)

**CIVILISATION**
**நாகரிகம்/பண்பாடு**
குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாடு, மொழி, மதிப்புகள் ஆகியவை.

**CIVIL SERVICE COMMISSION**
**பொதுப்பணி ஆணையம்**
பொதுப்பணிக்கு ஆள் எடுக்கும் தேர்ந்தெடுக்கும் பிரிவு.

**CLASS ANALYSIS CHART**
**வகுப்பு ஆய்வு விளக்கப்படம்**
ஒரு வகுப்பில் தனிநபர்கள் ஆற்றிய செயல்களை ஒப்பிட்டுக் காட்டும் படம்.

**CLASS CONFLICT**
**வகுப்பு மோதல்**
சமூக வகுப்புகளுக்கிடையில் வெளிப்படையான அல்லது மறைமுகமான முரண்/பகை நிலவுவதைக் குறிக்கிறது.

**CLASSICAL SCHOOL**
**மரபிலக்கிய பள்ளி**
மரபிலக்கியங்களை பயில முக்கியத்துவம் தரும் பள்ளியைக் குறிக்கிறது.

**CLASSICAL TEST THEORY MODEL**
**மரபுசோதனை கொள்கை மாதிரி**
ஒரு உளவியல் சோதனையில் காணப்படும் மதிப்பெண்ணுக்கு 2 பகுதிகள் உண்டு. மெய்யான மதிப்பெண், தொடர்பற்ற பிழை மதிப்பெண் என்ற கருத்து மேற்கொள்ளப் படும் மாதிரி.

**CLASSICS**
**மரபிலக்கியம்**
லத்தீன் - கிரேக்க மொழிப்

படிப்பு, நிரந்தர மதிப்பு மரியாதையை பெற்றுள்ள கலை இலக்கியம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

**CLASSIFIED PERSONNEL**
**தனிப்பட்ட ஊழியர்**
சான்றளிக்கப்பட்ட ஆசிரியர்கள் தவிர பள்ளி கல்லூரிகளில் அமர்த்தப்படும் ஊழியரைக் குறிக்கிறது.

**CLASSIFYING SCHOOL**
**தனிப்பட்ட பள்ளி**
அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் பயிலுமாறு நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்ட குழந்தைகளுக்கான இடைக்காலப் பள்ளி.

**CLASS INTERVAL**
**வகுப்பு இடைவெளி**
ஒரு வகுப்பின் மதிப்பெண்களின் கீழ்-மேல் எல்லை வீதம்.

**CLASS NOTES**
**பாடக்குறிப்புகள்**
வகுப்பில் கற்பிக்கப்படும் போது மாணவர் எடுக்கும் குறிப்புகள் அல்லது வகுப்பு ஆசிரியர் வழங்கும் குறிப்புகள்.

**CLASS RANK**
**வகுப்புத்தரம்/தகுதி**
ஒருவரின் தனிப்பட்ட சராசரி தகுதியால் ஒருவர் ஒரு வகுப்பில் பெறும் ஒப்பீட்டு நிலையைக் குறிக்கிறது.

**CLASSROOM AIDE**
**வகுப்பறை உதவியாளர்**
சான்றுபெறாத ஆசிரியரின் உதவியாளர். மதிப்பெண் வழங்கல், ஒளி-ஒலி சாதன ஏற்பாடு, தேவைப்பொருட்களை கண்காணித்தல் முதலிய வழக்கமான - கல்வி சாரா பணிகளை நிறைவேற்றுபவர்.

**CLASSROOM ECOLOGY**
**வகுப்பறைச் சூழல்**
கல்வியியல் ஆய்வில் ஒரு பிரிவு, யதார்த்த, வகுப்பறை சூழ்நிலையில் - எடுத்துக்காட்டாக ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையேயான உறவில் வரும் சிக்கல்களை ஆயும் துறை.

**CLASS SPONSOR**
**வகுப்பு பொறுப்பாளர்**
ஒரு வகுப்புக்கு நீதி போதனை வழங்கப் பொறுப்புள்ள ஆசிரியர்.

**CLEARING HOUSE**
**தீர்வகம்**
பல மூலங்களில் இருந்து உள்ளீட்டு வெளியீட்டு தகவல் பெறும் நிறுவனத்தைக் குறிக்கிறது.

**CLIENT**
**வாடிக்கையாளர்**
மனநோய் மருத்துவத்தில் சிகிச்சை பெற வரும் நோயாளியை குறிக்கிறது.

**CLIENT CENTERED THERAPY**
**வாடிக்கையாளர் நிலை சிகிச்சை**
உளவியல் சிக்கல்களுக்கான அதிகார சார்பற்ற சிகிச்சை. இதில் உளவியலாளர் அல்லது மருத்துவரின் கோட்பாட்டு முற்கருத்துக்கள் தவிர்க்கப்பட்டு நோயாளியின் பார்வைகள், தனிப்பட்ட அனுபவங்கள் முக்கியப் படுத்தப் படுகின்றன.

**CLINICAL EXPERIENCE**
**மருத்துவப் பயிற்சி அனுபவம்**
அறிவு வளர்ச்சி பற்றிய ஊகங்களைக் செய்யும் முன்னேற்றப் படுத்தப்பட்ட நோய்காண் முறை.

**CLINICAL PSYCHOLOGY**
**மருத்துவ உளவியல்**
உளவியல் மற்றும் தகவமைப்பு குழப்பங்களை இனம் கண்டு குணப்படுத்தும் கோட்பாடு மற்றும் முறை தொடர்பான உளவியல் பிரிவு.

**CLIQUE**
**தனிக்குழு**
பொதுவான விருப்பு வெறுப்பு, தம் தனிச்சிறப்புத் தன்மையில் பொதுவான பெருமிதம், தனித்த பார்வையை ஆசித்தல் ஆகியவற்றில் ஒன்றுபட்ட உறுப்பினர்களைக் கொண்ட தனிச்சிறப்புக் குழு.

**CLOSED CIRCUIT TELEVISON (CCTV)**
**மூடிய சுற்று தொலைக்காட்சி**
வடம்/நுண்அலை மூலம் பரப்பப்படும் தொலைக்காட்சி சமிக்கைகள். தனித்த பார்வை விரும்பப்படும் கல்வி பயிற்சி சூழ்நிலைகளில் பயன்படுகிறது.

**CLOSED MATERIALS**
**வரையறுத்த பொருள்கள்**
உள்ளீட்டு நிகழ்முறைகளும் வெளியீடுகளும் கறாராக வரையறுக்கப்பட்ட விளையாட்டு / பகர்ப்பு சாதனங்கள்.

**CLOSED QUESTION**
**வரையறுத்த கேள்வி**
மதிப்பீட்டு விளக்கம், அபிப்பிராயம், அல்லது ஊகத்தை கிளப்பும் திறந்த கேள்வியிலிருந்து மாறுபட்ட, ஒற்றை விளக்கம்/ பொருள் மட்டும் தேவைப்படுகிற தேர்வு/ சோதனையை குறிக்கிறது.

**CLOSED SCHOLARSHIP**
**வரையறுத்த உதவித் தொகை**
குறிப்பிட்ட பள்ளி(கள்) போல் குறிப்பிட்ட விதமான வேட்பாளர்களுக்கு மட்டுமென மட்டுப்படுத்தப்பட்ட பல்கலை/ பிற உதவித் தொகைகளைக் குறிக்கிறது.

**CLOSURE**
**மூடிய போக்கு**
வட்டம், சதுரம், முக்கோணம் போன்ற மூடுண்ட உருவங்

களையே 'திறந்த' உருவங்களை விட உடனடியாக காணமுடியும் போக்கு.

**CLOTHING ALLOWANCE**
**உடைப்படி**
உடை வாங்க மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை.

**CLUMSINESS**
**கோணல் தன்மை**
சில குழந்தைகள் நடப்பதிலும் பொருள்களை கையாளுவதிலும் கோணிகோணி செய்கிறார்கள். இந்த கோணங்களை கண்டு இவர்களை மூளைக் கோளாறு உள்ளவர்களாக சிலர் தவறாக நினைத்து விடுகிறார்கள்.

**CLUSTER ANALYSIS**
**கொத்து பகுப்பாய்வு**
காரண ஆய்விற்கு தொடர்புடைய புள்ளி இயல் உத்தி. இயைபுபடுத்தும் அணியில் உள்ள இடை உறவுகளின் அடிப்படையில் மாறிகளைத் தொகுக்கப் பயன்படுகிறது.

**CLUSTER AREA**
**கொத்துப்பகுதி**
ஒரு வானொலி/தொலைக் காட்சியின் கல்வி ஒலி / ஒளி பரப்புக்குட்பட்ட புவிப் பகுதியை குறிக்கிறது.

**CLUSTER COLLEGE**
**கொத்து கல்லூரி**
ஒரே வளாகத்தை/ பிற வசதிகளை பொதுவாக பயன்படுத்தும் கல்லூரிகளின் ஒரு திறன்.

**CLUSTER SAMPLING**
**கொத்து மாதிரி அமைப்பு**
குறிப்பிட்ட மனிதக் கூட்டத்தில் இருக்கும் குழுக்களில் இருந்து வரன்முறையற்ற தெரிவு. எ.கா. ஒரு மாணவர் கூட்டத்திலிருந்து மொத்த வகுப்புகளைத் தேர்தல்.

**COACH & PUPIL MEHTOD**
**பயிற்றுநர்-மாணவர் முறை**
ஆசிரியர் அறிமுகம் செய்த/ விளக்கிய நடைமுறையில் சோடி மாணவர்கள் ஒருவருக்கொருவர் மாறிமாறி கற்பிக்கும் பயிற்சி உத்தி.

**CO-ACTION**
**இணைசெயல்**
ஒரு ஆசிரியருக்கும் தனிப்பட்ட குழந்தைகளுக்கும் இடையிலான உறவு.

**COCURRICULAR ACTIVITIES (or FUNCTIONS)**
**இணை பாடத்திட்ட நடவடிக்கைகள் (செயல்கள்)**
பள்ளி பாடத்திட்டத்தின் பகுதியாக இல்லாத-ஆனால் ஒரு கல்வி நிறுவனத்தின் இயங்கலில் ஆதார பகுதியாக உறுதிப்படுத்தப் பட்டுள்ள பள்ளி / கல்லூரியில் வழங்கப்படும் / ஏற்கப்படும் நடவடிக்கைகள். விளையாட்டுகள், பள்ளி குழுக்கள், மாணவர்

செய்தித் தாள்கள் முதலியவை இதில் அடங்கும்.

**CODES OF LANGUAGE**
**மொழிநெறிமுறை**
ஒரு சமூகக் குழுவுக்குச் சிறப்பாக உரியதும் ஓரளவுக்கு அதன் உலகப் பார்வையை வடிவமைப்பதும் ஆகிய சொல் வளமும் பேச்சு அமைப்பும்.

**CODING FRAME**
**குறியீட்டு சட்டகம்**
ஆய்வு மற்றும் விளக்கத்துக்கான ஒரு கேள்விப் பட்டிக்கு சுதந்திரமான பதில்கள் தர இடமளிக்கும் முறை.

**CODING PROCESS**
**குறியீட்டு நிகழ்முறை**
ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டில் தேர்ச்சி பெற வேண்டிய விதிமுறைகளும் ஒழுங்கு முறைகளும்.

**CODING SHEET**
**குறியீட்டு தாள்**
கல்வி ஆய்வில் ஒரு பாடத்துக்கான அடையாள தகவல் அடங்கிய தாள். அதன் பின் வரும் எண் பட்டியல் ஒரு துளை அட்டையின் துளைகளைக் குறிக்கின்றன. ஒவ்வொருவருக்குமான குறியீட்டு தாள், குறியீட்டு அட்டவணையிலிருந்து பெறப்படுகிறது.

**COEFFICIENT OF CONTINGENCY**
**தற்செயல் மாறா எண்**
ஒவ்வொன்றும் பல திணைகளால் / பண்புகளால் வெளிப்படுத்தப்படும் இரு மாறிகளுக்கு இடையிலான உறவின்/ தொடர்பின் ஒரு அளவு.

**COEFFICIENT OF CORRELATION**
**இயைபு மாறா எண்/**
**இணைப்புக்கெழு எண்**
சோதனைக் கூட்டம் பற்றிய தனித்தனியாக இரு தகவல் தொகுப்புக்கிடையேயான புள்ளியியல் உறவின் அளவு.

**COERCION**
**வலுக்கட்டாயம்**
ஒரு ஆளுக்கு வெளியிலிருந்து திணிக்கப்படும் கட்டுப்பாடுஅல்லது அளவு கடந்த அதிகாரத்தைக் குறிக்கிறது.

**COGNITION**
**அறிதல்**
காட்சி, கண்டுபிடிப்பு, கண்டுணர்தல், கற்பனை, தீர்மானம், மனனம், கற்றல், கருதல் ஆகிய நடைமுறைகள். இவை மூலமே ஒருவர் அறிவு கருத்தாக்க புரிதல்/ விளக்கமும் பெறுகிறார்.

**COGNITIVE BEHAVIOUR**
**அறிதல் (சார்ந்த) நடத்தை**
காணல், நினைவு கூர்தல், தீர்ப்பிடல் அல்லது பகுத்தாய்தல்

போன்ற அறிதலின் கூறுகளில் ஒன்றை ஒருவர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என கருதும் விதமாக புலப்படும் நடத்தை.

**COGNITIVE CHANNEL**
**அறிதல் தடம்**

பார்வை, கேள்வி தொடுதல் முதலான உடல் புலன் உணர்வுகளில் ஏதாவது ஒன்றைக் குறிக்கிறது.

**COGNITIVE DEVELOPMENT**
**அறிவு வளர்ச்சி**

நுண் அறிவின் பல்வேறு அறிதல் கூறுகளின் வளர்ச்சி.

**COGNITIVE LEARNING**
**அறிதல்வழி கற்றல்**

நுண்ணறிவாக்கம் மூலம் விவரங்களையும் கருத்துகளையும் கொள்கைகளையும் கற்பவர் கற்றுக்கொள்ளும் நிகழ்முறை.

**COGNITIVE LEARNING THEORISTS**
**அறிதல்வழி கற்றல் கருத்தினர்**

நடத்தையையும் கற்றலையும் அறிதல் வழி விளக்குவோரைக் குறிக்கிறது.

**COGNITIVE OBJECTIVES**
**அறிதல் நோக்கங்கள்**

புரிதல், தெளிவானசிந்தனை, சிக்கல் தீர்க்கும் ஆய்வு/மதிப்பீடு தொடர்பான நோக்கங்களைக் குறிக்கிறது.

**COGNITIVE REPRESENTATION**
**அறிதல் மாதிரி**

எண்ணத்தை கருத்தாக்க தனியர் தழுவும் மாதிரி.

**COGNITIVE STRATEGY**
**அறிதல் (வழி) உபாயம்**

ஒருவர் தான் மிகப் பொருத்தமான தேடும் அறிவின் அடிப்படையில் தன் அறிவின் துணைகொண்டு சிக்கல்களைத் தீர்க்கும் வழிகளைத் தேடும் உத்தி.

**COGNITIVE STRUCTURE**
**அறிதல் கட்டமைப்பு**

அறிதலை ஆளும் மனமா, / விதி. இதை வெவ்வேறு சூழ்நிலைகளில் கையாள முடியும்.

**COGNITIVE STYLE**
**அறிதல் பாணி**

கற்றல்/ சிந்தித்தலில் ஒருவர் விரும்பி/ பழக்கத்தால் தேடும் பாணி.

**COGNITIVE THEORY OF INTELLECTUAL DEVELOPMENT**
**நுண்ணறிவு வளர்ச்சிக்கான அறிதல் கொள்கை**

குழந்தையானது பண்பளவில் மாறுபட்ட பல அறிவுச் செயல் கட்டங்களின் வழியாக வளர்கிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலான கொள்கை. அறிவு முதிர்ச்சி பெறுதலே அந்த மாற்றங்களுக்கு பெரிதும் காரணமாகிறது.

COGNITIVE TIME
**அறிதல் காலம்**
தொடக்கதூண்டுதல்/துணைப் பொருள் வழங்கல் முதல் விரும்பிய அறிவு / திறமை அடையும் வரை யான கற்றல் காலம்.

COHESSIVENSS
**பிணைப்புத்தன்மை**
ஒரு குழு அதன் உறுப்பினர் களை ஒட்டுமொத்தமாகக் கவரும் தன்மையைக் குறிக்கிறது.

COHORT
**ஓரியல்குழு ஒத்த வயதுக்குழு**
ஒரு தேர்ந்தெடுத்த அளவு கோலின்படி (எடுத்துக்காட்டாக- பிறந்த தேதி) ஆய்வுப் படிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர் குழு வைக் குறிக்கிறது.

COLLAGE
**ஒட்டுப்படம்**
மரம், துணி, பிளாஸ்டிக் அல்லது உலோகம் முதலான பொருள்களைக் கொண்டு ஒரு தாள் அல்லது பலகை மீது ஒட்டி உருவாக்கும் படம் / கலை வடிவம்.

COLLECTING
**திரட்டல்**
தொடர்ச்சியாக, திட்டமிட்ட முறையில் குழந்தைகள் பொருள் களை பதுக்கும் குணம்/

COLLECTOIN
**தொகுப்பு**
ஏதாவது ஒருமித்த கருத்து/ தன்மை கொண்டதாயிருக்கக் கூடிய நூலகம் / கண்காட்சி / கலைக்கூடம்.

COLLECTIVE BARGAINING
**கூட்டு பேரம்**
வேலை தருபவருக்கும் பெறு வோருக்கும் இடையில் ஊதியம், வேலை நிபந்தனைகள் முதலி யவை பற்றி கூட்டாக ஒப்பந்தம் செய்யும் நிகழ்முறை.

COLLECTIVE UNCONSCIOUS
**கூட்டு உணர்வின்மை**
உணர்வற்ற மனத்துக்கு மரபின அனுபவத்திலிருந்து உள்ளூற பெறப்படுவதாக கூறப்படும் அனுபவத்தைக் குறிக்கிறது.

COLLEGE
**கல்லூரி**
உயர்கல்வியின் மூன்றாம் கட்ட நிறுவனம். வழக்கமாக பல்கலைக்கழகத்துக்கு கீழ்ப்பட்டிருக்கும்.

COLLEGE DIPLOMAS
**கல்லூரி பட்டயம்**
எந்த ஒரு வெளி தேர்வு அல்லது தரநிர்ணய அமைப்பும் அல்லாமல் கல்லூரியே வழங்கும் பட்டயம்.

COLLEGE OF EDUCATION OR TEACHER TRAINING COLLEGE
**கல்வியியல் கல்லூரி/ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி**
ஆசிரியச் சான்றிதழுக்கான

படிப்பையோ கல்வி இளநிலைப் பட்டத்துக்கான படிப்பையோ வழங்குவதற்கான நிறுவனம்.

**COLLEGE RECRUITER**
**கல்லூரி ஆள்சேர்ப்பாளர்**
புதிய மாணவர்களை கண்டு பிடிப்பதை பணியாக கொண்டு உள்ள அலுவலரைக் குறிக்கிறது.

**COLLEGIATE UNIVERSITY**
**கல்லூரி சேர் பல்கலை**
ஒவ்வொன்றும் குறிப்பிட்ட அளவு தன்னாட்சி உடைய பல கல்லூரிகளை உள்ளடக்கிய பல்கலைக்கழகம்.

**COLOMBO PLAN**
**கொழும்பு திட்டம்**
தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பொருளியல் கூட்டு றவை வளர்க்க 1950இல் வகுக்கப்பட்டது. காமன்வெல்த் (பொதுநல கழக) உறுப்பினர்கள் தொழில்நுட்ப கூட்டுறவுக் குழு வையும் அமைத்தார்கள்.

**COLOUR BLINDNESS**
**நிறக்குருடு**
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறங்களை பிரித்தறிய முடியாத கண் குறைபாடு.

**COLOUR CHEMISTRY**
**நிற வேதியியல்**
குறிப்பிட்ட பொருள்களின் குறிப்பிட்ட நிறத்தை உரு வாக்கும் இயல்.

**COLOURS**
**விருதுகள்**
குறிப்பிட்ட விளையாட்டுப் போட்டியில் மாணவரின்பள்ளி/ கல்லூரி/ பல்கலையை பிரதி நிதித்துவப்படுத்தி வழங்கப்படு வது.

**COLOUR VISION TEST**
**நிற காட்சி சோதனை**
நிறக்குறை அல்லது நிறக் குருட்டின் அளவை அறியும் சோதனை.

**COMBINED SCIENCE**
**கதம்ப அறிவியல்**
தொடர்புடைய ஆனால் தனித்தனியாக பாடங்களான இயற்பியல் - வேதியியல் - உயிரியல் இவற்றை இணைத்துக் கற்பிக்கும் அறிவியல் பாடத் திட்டம்.

**COMBINED STUDIES**
**இணைந்த ஆய்வுகள் / படிப்புகள்**
தொடர்புடைய பல பாடங் களை இணைக்கும் கூறுகள்.

**COMMEMORATION**
**நினைவு விழா / நிறுவன நாள்**
ஒரு நிறுவனத்தை நிறுவிய ஆண்டு விழாவை குறிக்கிறது.

**COMMERCIAL STUDIES (OR EDUCATION)**
**வணிகவியல் கல்வி (படிப்பு)**
தட்டச்சு, சுருக்கெழுத்து,

கணக்கு வைப்பு, போன்ற பள்ளிப் பாடங்களை குறிக்கிறது.

**COMMITTEE**
**குழு**

குறிப்பிட்ட துறை / தலைப் பைக் கவனிக்க தேரப்பட்ட/ நியமிக்கப்பட்ட மனிதர் குழு வைக் குறிக்கிறது.

**COMMONER**
**பொதுவர்**

உதவித்தொகை பெற்றிராத/ தன் கல்லூரியை வெளிப்படுத்தி இராத இளநிலைப்பட்டம் பெறாத வரைக் குறிக்கிறது.

**COMMON LEARNINGS**
**பொது படிப்பு**

எல்லா மாணவர்களுக்கும் இன்றியமையாதவை என கருதப் படும் அறிவு/ திறன்களின் மொத்தம்.

**COMMON ROOM**
**பொது அறை**

பள்ளி / கல்லூரி முதலிய வற்றின் குறிப்பிட்ட உறுப்பினர் கள் முறைப் படியோ சுதந்திர மாகவோ சந்திக்கப் பொதுவாக பயன்படும் இடம்.

**COMMONWEALTH INSTITUTE**
**பொதுநலக்கழக நிறுவனம்**

காமன்வெல்த் நாடுகள் பற்றிய தகவல்,கல்வி மய்யம். 1887இல் இம்பீரியல் (பிரிட்டிஷ் வல்லரசு நாடுகளின்) நிறுவனம் என்ற பெயரில் நிறுவப்பட்ட இது 1958இல் அதன் தற்போதைய பெயரை (காமன்வெல்த் நிறு வனம்) பெற்றது. இதன் முகவரி: Kensington High Street, London, W8.

**COMMONWEALTH SCHOLARSHIP AND FELLOWSHIP PLAN**
**காமன்வெல்த் உதவித்தொகை திட்டம்**

காமன்வெல்த் பல்கலை களின் சங்கம், காமன்வெல்த் பல்கலைகளுக்கு இடையிலான மாணவர் இயக்கத்துக்கு உதவ ஏற்படுத்திய உதவித்தொகை திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் சுமார் 1000 பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**COMMONWEALTH UNIVERSITIES YEAR BOOK**
**காமன்வெல்த் பல்கலை ஆண்டுநூல்**

காமன்வெல்த் பல்கலை சங்கம் ஆண்டுதோறும் வெளி யிடும் நூல். சங்கத்தின் உறுப்பி னரான 200 பல்கலைகள் பற்றிய விரிவான விவரமும் சங்க உறுப்பினர்கள் பற்றிய பட்டி யலும் அடங்கியது.

**COMMUNICATION**
**செய்தித்தொடர்பு**

மக்களுக்கிடையேயான அர்த் தப் பரிமாற்றம். இது மொழி வழியாகவோ மொழியல்லா வழியிலோ நடைபெறுகிறது.

அறிவு, நோக்கம் நிலைபாடு களின் வெவ்வேறு அளவுகளுக் கேற்ப இது மாறுபடுகிறது.

**COMMUNICATION SKILLS**
**தொடர்பு திறன்கள்**

பேச்சு/எழுத்து/காட்சி வடிவில் பிறருடன் செய்தி தொடர்பு கொள்ளும் திறன் களைக் குறிக்கிறது.

**COMMUNICATION STRUCTURE**
**தொடர்பு அமைப்பு**

ஒரு வகுப்பறை அல்லது வேறொரு குழுவுக்குள்ளான செய்தித் தொடர்பு வாயில்களைக் குறிக்கிறது.

**COMMUNICATION STUDIES**
**தொடர்பு ஆய்வுகள்**

தனி மற்றும் பொது தொடர் புக்கான உத்தி மற்றும் முறைகள் தொடர்பான ஆய்வுகள்.

**COMMUNICATION SYSTEM**
**தொடர்பு முறை**

உள்ளீடு, வாயில், குறுக்கீடு மூலம், வெளியீடு என முன்வைக்க முடிகிற தகவல் பரிமாற்றத்தை யும் வழங்கலையும் குறிக்கிறது.

**COMMUNICATIVE COMPETENCE**
**தொடர்பு திறன்**

நடப்பு வாழ்க்கை சூழலில், கற்கவேண்டிய மொழியில் அதை சொந்த மொழியாக உடைய வரிடம் பேசும் எழுதும் திறனைக் குறிக்கிறது. இதில் மொழியின் சரியான வடிவத்தை விட கருத்தை விளங்கப்படுத்து வதற்கு முக்கியத்துவம் தரப் படுகிறது.

**COMMUNIST EDUCATION**
**பொதுவுடைமைக் கல்வி**

வர்க்கமற்ற சர்வதேசிய உணர்வுடன் கருத்து முதல் ஆன்மீகப் பார்வைக்கு எதிராக ஒரு பொருள் முதல் (உலகாயத) பார்வையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கல்வி முறை

**COMMUNITY ACTION**
**சமூகச் செயல்பாடு**

ஒரு பகுதியில் வசிப்போர் தான் அநீதி என நம்பும் ஒன்றை சரிசெய்யும் குறிப்பிட்ட நோக் கத்தை சாதிக்க ஒன்று சேர்ந்து செய்யும் செயல்.

**COMMUNITY ACTIVITIES DEPARTMENT**
**சமூகச் செயல்பாட்டுத் துறை**

மாணவரின் சமூகச் செயல் பாடுகளை ஒழுங்கமைக்கும் ஊக்குவிக்கும் பள்ளி / கல்லூரி துறையை குறிக்கிறது.

**COMMUNITY CARE**
**சமூகப் பராமரிப்பு**

பொதுவாக ஒரு சிறப்பான சமூக-மருத்துவ-அல்லது கல்வி நிறுவனத்தில் இருக்கத்தக்க வரை சமுதாயத்தில் வாழ இயலச்

செய்யும் பணிகளை குறிக்கிறது.

**COMMUNITY CENTER**
**சமூக மய்யம்**
வழக்கமாக ஒரு ...ன்னார்வ சமூக சங்கத்தால் நடத்தப்படும் சமூக நடவடிக்கைகளுக்கான உள்ளூர் மய்யம்.

**COMMUNITY DEVELOPMENT**
**சமூக வளர்ச்சி**
தன் கையே தனக்குதவி என்னும் கொள்கையுள்ள சமூகத்தில் நடக்கும் கல்வி நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

**COMMUNITY EDUCATION**
**சமூகக் கல்வி**
கற்பிப்பு நடைமுறையில் அப்பகுதி சமூகத்திலுள்ள பெற்றோர், ஆசிரியர்கள், குழந்தைகள் மற்றும் பிறரையும் ஈடுபடுத்தும் கல்வித் திட்டங்கள்/ நிகழ்ச்சிகள்.

**COMMUNITY MATRIX**
**சமூக அளவை**
பள்ளிக்கும் அதைச் சுற்றியுள்ள சமூகத்தில் உள்ள பிற குழுக்களுக்கிடையிலான இடைவினைப் பாணி - பள்ளி அமைப்பு, கல்வி செயல்பாடு, வட்டாரத்தின் மக்களியல், சூழலியல் தொடர்பாக.

**COMMUNITY MEDICINE**
**சமூக மருந்து**
குறிப்பிட்ட சமூகச் சூழலில் தேவைப்படும் தடுப்பு மருந்தை குறிக்கிறது.

**COMMUNITY OF PERSUASION**
**இணக்க சமூகம்**
மக்களாட்சி முறையிலும் பவுதிக நெருக்கடி தராமலும் அடையப்படும் ஒத்த கருத்து, பொது நம்பிக்கை அல்லது புரிதலைக் குறிக்கிறது.

**COMMUNITY OF SCHOLARS**
**படிப்பாளி சமூகம்**
கல்வித் தேடலில் பொதுவான ஆர்வமுள்ள கல்லூரி/பல்கலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் குறிக்கிறது.

**COMMUNITY RELATIONS**
**சமூக உறவு**
ஒரு பகுதியில்/ சமூகத்தில் வாழும் மக்கள் இடையே குறிப்பாக வெவ்வேறு இன மக்களிடையே புரிதலையும் உறவையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

**COMMUNITY SERVICE (OR WORK)**
**சமூக சேவை**
ஒரு சமூகத்துக்கு தேவையான பணிகள் எடுத்துக்காட்டாக இதை வட்டார அரசாங்கம் முறைப்படி செய்கிறது.

**COMMUNTIY THEORY**
**சமூகக் கோட்பாடு**
புலம் பெயர்ந்தோர் தாம் குடியேறிய நாட்டின் பண்பாட்டுடன் தன் மூலப்பண் பாட்டையும் பேண வேண்டும் என்னும் கொள்கை.

**COMMUNITY TV**
**சமூகத் தொலைக்காட்சி**

ஒரு சமூகத்தில் உள்ள மனிதர்கள் தம் சொந்த தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் உருவாக்க வும் பரப்பவும் அனுமதிக்கும் தொலைதொடர்பு வசதி.

**COMMUTER SCHOOLS**
**நாளும் செல்லும் பள்ளி**

சுற்றுப் பகுதி மாணவர்களுக்கு தன்னில் தங்கிட வசதிகள் வழங் காத கல்லூரிகள், பல்கலை களைக் குறிக்கிறது.

**COMPANY GAME**
**குழும விளையாட்டு**

ஒரு குழுமத்தின் பெரும் பாலான செயல்பாடுகள் பகர்ப்பு செய்யப்படும் வணிக விளை யாட்டு

**COMPANY SCHOOL**
**குழுமப் பள்ளி**

ஒரு தொழில் / வணிக அமைப்பு, தன்னிடம் வேலை செய்வோரின் குழந்தைகளுக்கு பள்ளி வசதி வழங்காவிட்டால் அவர்களை வேலைக்கு வர செய்வது கடினமான மலையகப் பகுதிகளில் தானே சொந்தமாக நடத்தும் பள்ளி.

**COMPARATIVE EDUCATION**
**ஒப்பீட்டுக் கல்வி**

கல்விக் கொள்கையை பாதிக்கும் - தீர்மானிக்கும் காரணிகளைப் பற்றிய ஆய்வைக் குறிக்கிறது. கல்வி - கல்வி அறிவாண்மை இடையிலான அரசியல் ஆய்வையும் இது குறிக்கிறது.

**COMPARATOR SYSTEM**
**ஒப்பீடு அமைப்பு**

புலன் குறிப்புகளுக்கு வெவ் வேறு விதங்களில் துவங்கும் இணைப்புகள் எனப்படும் கற்பித மான மூளை பகுதிகளை குறிக்கிறது. இந்த கற்பிதமான இணைப்புகளின் மொத்தத் தொகுப்பு ஒப்பிடு அமைப்பு எனப்படுகிறது.

**COMPENSATION**
**ஈடுகட்டல்**

ஒரு குறையை உணர்கையில் வேறு துறையிலான முன்னேற் றத்தால் அதை ஈடு செய்தல்.

**COMPENSATORY EDUCATION**
**ஈடுசெய்கல்வி**

தம் சமூகச் சூழல் மற்றும் கடந்தகால பின்னணியால் சாதனையிலும் அறிவு வளர்ச்சி யிலும் தேங்கியிருக்கும் குழந்தை களின் பாதகமான கல்வி நிலை யை சீர்செய்ய முயலும் நிகழ்ச்சி களையும் கல்வி முறைகளையும் குறிக்கிறது.

**COMPENSATORY UNIT**
**ஈடுசெய் குழு**

ஈடுசெய் கல்வியை வழங்கு வதில் தொடர்புடைய ஆசிரியர் குழுவைக் குறிக்கிறது.

**COMPETENCY BASED TEACHING (CBT)**
**தகுதி வளர்ப்பு கல்வி**
மாணவர்களை குறிப்பான வகுப்பறைத் திறன்களில் பயிற்றுவிப்பதை குறியாகக் கொண்ட ஆசிரியர் கல்வி இயக்கம்.

**COMPETENCY TEST**
**தகுதி சோதனை**
ஒரு குறிப்பிட்ட திறனில் தேர்ச்சி இருக்கிறதா என்பதை மதிப்பிட உருவாக்கிய சோதனைகள்.

**COMPETITION**
**போட்டி**
மதிப்பெண்கள், வீட்டு மதிப்புகள் முதலிய வடிவில் பரிசுகள் பெற மாணவர்களிடையே நடக்கும் போட்டி. இத்தகைய போட்டி வீடுகளிடையிலும் பள்ளிகளிடையிலும் கூட நிகழ்கிறது.

**COMPETITION ITEM**
**போட்டி உருப்படி**
விடுபட்டுப்போன ஒரு சொல், சொல்தொடர், எண், குறி, படத்தின் மீதி பாகம் போன்ற ஏதாவதொன்றை நிரப்பும் வடிவில் எதிர்வினை வேண்டும் உருப்படியைக் குறிக்கிறது.

**COMPLEMENTARY STUDIES**
**நிரப்பு படிப்பு**
பொதுவான படிப்பு, நூலகத்தில் படித்தல், துணைப்பாடங்களை படித்தல் இவற்றைக் குறிக்கிறது.

**COMPLETION TEST**
**நிறைவு தேர்வு**
முற்றுப்பெறாத உருப்படிகளை, இந்த தேர்வில் பங்கெடுக்கும் ஆள் முடிக்க வேண்டும்.

**COMPONENT BAR CHART**
**ஆக்கக்கூறு பட்டை வரைபடம்**
இந்த வரைபடத்தின் பட்டைகள் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை குறிக்கும் மொத்தம் எப்படி அடையப்படுகிறது என்பதைக் குறிக்கும் வண்ணம் உள்ளன.

**COMPONENT BEHAVIOUR**
**ஆக்கக்கூறு நடத்தை**
கற்றல்/கற்பித்தல் சூழலின் போக்கில் ஒரு மாணவர் தேர்ச்சிபெற வேண்டுமென எதிர்பார்க்கப்படும் அடிப்படை நடத்தையின் ஆக்கக்கூறு.

**COMPOSITION / ESSAY**
**கட்டுரை**
ஒரு தலைப்பு பற்றி தொடர்ச்சியாக எழுதப்படும் அல்லது மொழியப்படும் விவரிப்பு.

**COMPREHENSION**
**கிரகித்தல், புரிந்து கொள்ளல்**
எழுதப்படும்/பேசப்படும் மொழியின் பொருளை புரிதல்.

**COMPREHENSIVE SCHOOL**
**அனைத்தும் கற்பிக்கும் பள்ளி**

ஒரு பகுதியில் உள்ள அனைத்து/பெரும்பாலான குழந்தைகளுக்கு எல்லாவித கல்வியும் வழங்கும் தேர்ந்தெடுக்கப்படாத நடுநிலைப்பள்ளி.

**COMPRESSED SPEECH**
**அழுத்திய உரை**

பதிவைத் திரிக்காமல் பதியப்பட்ட ஒலியின் வேகத்தைப் பன்மடங்கு அதிகரிக்கும் முறை.

**COMPULSORY EDUCATION**
**கட்டாயக் கல்வி**

ஒரு நாட்டின்/அரசின் சட்டத்தால் மேற்கொள்ளப்பட்டாகும் கல்வி. குறிப்பிட்ட தொடக்க வயதிலிருந்து குறிப்பிட்ட பள்ளி இறுதி வயது வரையிலோ குறிப்பிட்ட வகுப்பு வரையிலோ கட்டாயக் கல்வி என சட்டம் கோரலாம்.

**COMPULSORY SCHOOL AGE**
**கட்டாய கல்வி வயது**

கட்டாயமாக பள்ளியில் சேர வேண்டிய வயதுக்கும் பள்ளியை விட்டு விலகும் வயதுக்கும் இடையிலான காலத்தைக் குறிக்கிறது.

**COMPULSORY SCHOOL LEAVING AGE**
**கட்டாய பள்ளி விலகல் வயது**

குழந்தை பள்ளியை விட்டு நிற்க சட்டத்தால் அனுமதிக்கப் படும் குறைந்த பட்ச வயது.

**COMPUTER ASSISTED (OR) AIDED INSTRUCTION / LEARNING (CAI/CAL)**
**கணினி உதவிக் கல்வி/படிப்பு**

தனித்தனி மாணவனின் தேவைக்கேற்ப கற்கும் முன்னேற்றத்தை கண்காணிக்கவோ அல்லது கூடுதல் கல்வி சாதனங்களை மாணவருக்கு வழங்க உதவுவதில் கணினியின் பயன்பாடு

**COMPUTER BASED EDUCATION**
**கணினிவழிக் கல்வி**

கணினி துணையுடனான கற்றல்/கற்பித்தலை அல்லது கணினிவழி போதனையைக் குறிக்கிறது.

**COMPUTER BUREAU**
**கணினி அலுவலகம்**

கணினி நேரத்தையும் அல்லது நடைமுறை அறிவையும் வாடகைக்கு விடும் ஒரு முகமை

**COMPUTER MANAGED INSTRUCTION (CMI)**
**கணினிவழி போதனை**

வகுப்பறை மேலாண்மைக்கும் தனியாள் கல்வியை ஒழுங்குசெய்யவும் உதவியாக ஒரு ஆசிரியர் கணினியைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது.

**COMPUTER MARKED ASSIGNMENT (CMA)**
**கணினி குறித்து தரும் பாடப்பகுதி**

கணினி குறித்து தரும் பாடப்பகுதி அதை நடைமுறைப் படுத்தும் வடிவில் முன் வைக்கப்படுகிறது.

**CONCENTRATION**
**கவன ஓர்மை**

ஒரு கடமையில் கவனம் குவிக்கவும் கவனச் சிதறல்கள் இருந்தாலும் அதில் தொடரவும் ஆன திறமையைக் குறிக்கிறது.

**CONCENTRIC METHOD (OR) CURRICULUM)**
**பொதுமைய முறை/ பாடத்திட்டம்**

படிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒரே பாடமே இன்னும் அதிக ஆழத்துடன் விரிவுடன் கற்பிக்கப்படும் கல்வித்திட்டம்.

**CONCEPT CARDS**
**கருத்து அட்டைகள்**

குறிப்பிட்ட பாடம் / தலைப்பின் அடிப்படை கருத்துகளில் மாணவர்களின் உணர்வைத் தூண்ட பாட சாதனங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் அட்டைகளைக் குறிக்கிறது.

**CONCEPT FILM**
**கருத்து படம் (நாடா)**

ஒற்றைக் கருத்து ஒன்றை எடுத்துக்காட்டுடன் விளக்கவோ செயல்மூலம் விளக்கவோ செய்யும் சிறு திரைப்பட/நாடாப் பதிவைக் குறிக்கிறது.

**CONCEPTUAL TEMPO**
**கருத்து விரைவு**

அறிதல் பாணியின் பிரதிபலிப்புப் பரிமாணத்தை குறிப்பிடப் பயன்படும் சிக்கல் தீர்ப்பு வரிசைகளில் செலவிடும் காலக் குறியெண்.

**CONCOMITANT VARIATION**
**உடன்நிகழ் மாறுபாடு**

2அல்லது அதற்கும் அதிகமான மாறிகளில் இணையாக ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கிறது. இவற்றுக்கிடையில் கட்டாயம் நேரடி இடைஉறவு இருக்க வேண்டும் என்பதில்லை.

**CONCURRENT COURSES**
**ஒருங்கியல் பாடங்கள்**

இரண்டு அல்லது அதிக பாடப்பகுதிகள் ஒருங்கே தொடரப்படும் படிப்புகள்.

**CONCURRENT TEACHER EDUCATION**
**ஒருங்கியல் ஆசிரிய படிப்பு**

ஆரம்ப ஆசிரியப் பயிற்சி முறை. இதில் மாணவர் தான் கற்பிக்கப்போகும் உள்ளடக்கத்தையும் முறையையும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக அல்லாமல் ஒரே நேரத்தில் கற்கிறார்.

**CONCURRENT VALIDITY**
**ஒருங்கியல் செல்லுபடிநிலை**
ஆளுமைக் கூறுகள் பற்றிய ஒரு சோதனை, பிற தகுதியாக சோதனைகள், கணக்கீடுகள், ஆளுமை அவதானங்களுடன் பொருந்தும் புள்ளியியல் ஆய்வு.

**CONDENSATION**
**சுருக்கம்**
2 அல்லது கூடுதலான உணர்வற்ற மனதின் கருத்துகள் இணைந்து உணர்வு மனத்தில் ஒரு கருத்தை உருவாக்கும் நிகழ்முறை.

**CONDITIONED REFLEX**
**கட்டுப்படுத்திய துலங்கல்**
ஒரு தூண்டல் கொணரும், அதனுடன் இயல்பாக/இயற்கை யான தொடர்புடையதல்லாத துலங்கல்.

**CONDITIONED STIMULUS**
**கட்டுப்படுத்திய தூண்டல்**
கட்டுப்படுத்தப்படாத ஒரு தூண்டலுடன் சேர்ந்து வரும் ஒரு தூண்டலைக் குறிக்கிறது.

**CONDITIONING**
**ஆக்கநிலையுறுத்தல்**
நடத்தையில் ஒரு மாறுதலைக் கொண்டுவர ஒரு தூண்டலுக்கு ஆன துலங்கலின் உறவை திருத்தி அமைக்கும் நிகழ்முறை.

**CONDUCT**
**நடத்தை**
நல்ல அல்லது கெட்ட நடத்தையைக் குறிக்கிறது.

**CONDUCT PROBLEMS**
**நடத்தைச் சிக்கல்கள்**
ஒரு மாணவர் கீழ்ப்படியாமை, அமைதியின்மை, அழிவு மனப்பான்மை-இவற்றை வெளிப்படுத்தும்போது அந்த நடத்தையில் உள்ள கோளாறுகள் / தகைக்கேட்டை குறிக்கிறது. இதுவேறு ஆளுமைச் சிக்கல்கள் என்பது வேறு.

**CONE OF EXPERIENCE**
**அனுபவக் கூம்பு**
நேரடி உடமை பங்கேற்பில் இருந்து பட வெளியீட்டுக்கும் அதிலிருந்து முற்றிலும் அருவமான குறியீட்டு வெளிப்பாட்டுக்கும் கற்றல் அனுபவம் முன்னேறுவதை காட்டும் காட்சி ஒப்புமையைக் குறிக்கிறது.

**CONFERENCE CALL**
**கூட்ட இணைப்பு**
குழு விவாதத்துக்காக பலர் ஒரே நேரத்தில் தொலைபேசிகளில் பேச இணைப்பு தரும் தொலைத்தொடர்பு அமைப்பு.

**CONFIDENCE INTERVAL**
**நம்பிக்கை இடைவெளி**
ஒரு அளவீட்டுக்குள் அமையும் மதிப்பீடுகளின் வீச்சுக்குள் ஆன நம்பிக்கையை புள்ளியியல் முறையில் அளவிடல்.

**CONFIDENCE TESTING**
**நம்பிக்கைச் சோதனை**
ஒரு சோதனை உருப்படி தொடர்பான பகுதியறிவின் மட்டங்களை பாகுபடுத்தி அறியும் முறை. அச்சோதனையில் சோதிக்கப்படுபவர் தன் நம்பிக்கை அளைவை தன் பதிலுக்கான தெரிவில் குறிப்பிடுகிறார்.

**CONFIGURATION**
**உரு அமைவு**
உள் உணர்வு வழியாக அடையப்படும் கருத்தாக்க அமைப்பு விளக்க பயன படுகிறது.

**CONFLATION**
**ஒன்றாக்கல்**
2தொகுதி கெலிப்பெண்களை ஒன்றாக இணைக்கும் நிகழ் முறை. எடுத்துக்காட்டாக, தொடர் மதிப்பீட்டு கெலிப்பெண்ணும் கடைசி தேர்வு கெலிப்பெண்ணும் ஒன்றாக்கப்பட்டு ஒரு ஒட்டு மொத்த ஒரே மதிப்பெண் கிடைக்கச் செய்யப்படுகிறது.

**CONGENITAL FACTORS**
**பிறவி காரணி**
பிறப்புக்கு முன்பே மனித வளர்ச்சி மீது ஏற்படும் தாக்கங்களை மரபியல் காரணிகள் கரு உருவாகும்போது உள்வாங்கப் படுகின்றன. பிறவி காரணிகளோ கருப்பையில் சூழலியல் செலுத்தும் தாக்கங்கள் ஆகும்.

**CONGREGATION**
**பல்கலை அவை**
பட்டம் வழங்கும் அமைப்பு அல்லது கல்வி நிலைய பேரவை.

**CONSECUTIVE TEACHER EDUCATION**
**அடுத்தடுத்த ஆசிரியர் கல்வி**
கல்வியியல் படிப்பை சிறப்புத் திறன் படிப்பு முந்தும் தொடக்க நிலைப் பயிற்சி.

**CONSERVATION**
**அளவு காப்பு**
குறிப்பிட்ட அளவு பொருள், அதன் வடிவம் எவ்வளவு மாறினாலும் அளவு மாறாமலே இருக்கும் நிகழ்வு.

**CONSTANCEY**
**மாறாநிலை**
திரிந்த நிலைகளில் முனை வைக்கப்படும் போதும் ஒரு பொருள் உண்மையில் இருக்கும் நிலையிலேயே பார்க்கும் காட்சியைக் குறிப்பது.

**CONSTITUTIONAL PSYCHOLOGY**
**ஆக்கக்கூறு உளவியல்**
உள-உடல் பண்புகளை ஆயும் உளவியல் பிரிவு.

**CONSTITUTIVE DEFINITION**
**உள்ளுக்குள்ளான வரை யறை**
ஒரு கருத்தை வரையறுக்க இன்னொரு கருத்தாக்கத்தையே பயன்படுத்தும் வரையறை.

**CONSTRUCTIVE TECHNIQUE OR CONSTRUCTIVE PROJECTIVE METHOD**
**ஆக்க உத்தி/ ஆக்க வெளிப்பாட்டு முறை**

அமைப்பாக்கப்படாத/ஓரள வே அமைப்பாக்கப்பட்ட தேர்வு சாதனங்களில் ஒருவர் ஒரு அமைப்பை முன்னிறுத்தும் முறையில் அவரது ஆளுமைக் கூறுகளை உய்த்துணரும் முறை.

**CONSULTANT TEACHER**
**ஆலோசக ஆசிரியர்**

ஒரு சிறப்புத்துறை பாடத்தில் பயிற்சி பெற்றிருக்கிற ஒரு ஆசிரியரை குறிக்கிறது. பாடத் தின் ஏதாவது ஒரு பகுதியைக் கற்பிக்க அவருடைய பயிற்சி பெறா சகாக்கள் அவரிடம் ஆலோசனை பெற முடியும்.

**CONSUMABLE REWARDS**
**உட்கொள்ளத்தக்க பரிசுகள்**

ஒருவருக்குத் தரப்படும் உட்கொள்ளத் தக்க பரிசுகள். எடுத்துக்காட்டாக, வெற்றிகர மாக பள்ளி தேர்வை முடித்த சிறு குழந்தைகளுக்கு இனிப்பு, பொம்மை, பென்சில் போன்றவை வழங்குதல்.

**CONSUMER SOCIETY**
**துய்ப்பு சமூகம்/நுகர்வு சமூகம்**

மனிதன் மென்மேலும் கூடு தலான பொருள்களையும் பணி களையும் அதிகரித்த அளவில் துய்த்துச் செல்லும் ஆசை யாலேயே தூண்டப்படுகிறான் என்னும் கற்பித கருத்தின் அடிப்படையிலான பொருளி யலையும் மதிப்பீடுகளையும் கொண்டுள்ள சமுதாயம்.

**CONSUMPTION VALUES**
**துய்ப்பு மதிப்புகள்**

நிகழ்கால வருவாயை நிகழ் கால நிறைவுக்கு செலவழிப்பதை ஒரு அடிப்படை பண்பாட்டு நம்பிக்கையாக கொண்டிருத்தல்.

**CONTACT TIME**
**தொடர்பு நேரம்**

மாணவர்களுடன் ஆசிரியர் முகம்முகமாக நின்று கற்பிக்கும் நேரத்தைக் குறிக்கிறது.

**CONTENT ANALYSIS**
**உள்ளடக்க ஆய்வு**

சில குறிப்பிட்ட வகையினங் கள் நிகழும் தடவைகளைக் கண்டு அட்டவணைப் படுத்தல் மூலம் பண்புவகை தகவலை அளவு வகைப்படுத்தல்.

**CONTEST MOBILITY**
**போட்டி ஏற்றம்**

போட்டியாளரின் சொந்த முயற்சிகளால் ஒரு திறந்த போட்டியில் மேட்டுக்குடி தகுதி பரிசாக கிடைக்கும் மேல் நோக்கிய ஏற்றம்.

**CONTEXT STUDIES**
**சூழிட ஆய்வுகள்**

மாணவர்களின் முதன்மைப்

பாடத்தைஉரியகாட்சியில்வைக்க உதவுவதாக பார்க்கப்படும் சுதந்திரமான ஆய்வுகள் அல்லது துணை பாடங்களைக் குறி கிறது.

CONTIGUITY
**அருகிருப்பு**
கற்றல் கோட்பாட்டின் ஒரு விதி. கற்றலில் தொடாபுற இரு நிகழ்வுகள் காலத்தாலும் இடத் தாலும் அருகுஅருகில் நிகழ்ந் தாக வேண்டும் என்கிறது இது.

CONTIGUOUS TEACHING
**அருகிருந்து கற்பித்தல்**
ஆசிரியரும் மாணவரும் நேரடி தொடர்பு கொள்ளும் நேருக்கு நேரான கற்பித்தலை குறிக்கிறது.

CONTINGENCY MANAGEMENT
**தற்செயல் மேலாண்மை**
நடத்தை விதிகளை சோ தனைச்சாலை நிலைமையில் வளர்த்தெடுத்ததை வகுப்பறை கற்பித்தலில் பயன்படுத்தல். தண்டனையையோ தொட்டுரைக் கூடிய புற உதவிகளையோ பயன் படுத்துவதில்லை.

CONTINGENCY TABLE
**தற்செயல் அட்டவணை**
2 அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் வகைப்படுத்தப்படும் புள்ளியியல் அட்டவணையைக் குறிக்கிறது.

CONTINUATION EDUCATION
**தொடர்கல்வி**
மரபு பள்ளிக் கல்வியை முடித்துவிட்ட கற்போரின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப் பட்ட சிறப்புத் திட்டம்.

CONTINUOUS ASSESSMENT
**தொடர் மதிப்பீடு**
ஒரு பாடபோதனை நெடு கிலும் ஒருவர் நடைமுறை பற்றிய மதிப்பீடு.

CONTINUOUS GUIDANCE
**தொடர் வழிகாட்டல்**
ஒரே ஆலோசகரிடம் மாண வர்கள் தொடர்ந்து ஆலோசனை கேட்பதைக் குறிக்கிறது.

CONTINUOUS PROGRESS PLAN
**தொடர் முன்னேற்ற திட்டம்**
தனியாள் படிப்பு மற்றும் வளர்ச்சிக்கான வரிசையான பாடங்களை பயன்படுத்தும் முறையான கல்வித்திட்டம்.

CONTINUOUS VARIABLE
**தொடர்மாறி**
படிப்படியாய் மாறி குறிப்பிட்ட எல்லைக்குள் ஓரிடத்தில் வீழும் மதிப்பு. எ.கா. உடல் உயரம்.

CONTRACT RESEARCH
**ஒப்பந்த அடிப்படை ஆய்வு**
ஆய்வுச் செலவுகளை ஏற்க முன்வருபவருக்காக மேற்கொள்ளப் படும் ஆய்வு. ஆய்வுத் தலைப்பை வழங்குநர் தேர்ந்தெடுப்பார்.

ஆய்வுக் கண்டு பிடிப்புகள் வேறு எவருக்கும் தெரியக்கூடாது என்ற நிபந்தனை இருக்கலாம்.

**CONTRA SUGGESTION**
**எதிர்மறை கருத்தேற்றம்**
தனக்குப் பிடிக்காத ஒருவரின் கருத்து என்பதால் அதற்கு எதிர்மாறாக நம்புவது -நடப்பது.

**CONTROL CONSOLE**
**கட்டுப்பாட்டு நிலை**
ஒரு தானியங்கி / அரை தானியங்கி அமைப்புக்கு பொறுப் பானவர் எந்த நிலையில் கட்டுப்பாடு செலுத்த முடியும் என்பது.

**CONTROL ENGINEERING**
**கட்டுப்பாட்டு பொறியியல்**
கட்டுப்பாட்டு யந்திரங்கள், கருவி மயமாக்கல் தொடர் புடைய பொறியியல் பிரிவு.

**CONTROL GROUP**
**கட்டுப்பாட்டுக் குழு**
சோதனை ஆய்வின் தலைப் பான குழுவுக்கு முடிந்தவரை நெருக்கமாய் பொருந்தும் மனிதர் களின் குழுவைக் குறிக்கிறது.

**CONTROLLED DISCUSSION**
**கட்டுப்படுத்தப்பட்ட விவாதம்**
மாணவர்கள் கேள்விகளோ கருத்துகளோ எழுப்பலாமாயினும் பொதுவான திசை ஆசிரியரின் கண்டிப்பான கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கற்பித்தல்.

**CONTROLLED EXPERIMENT**
**கட்டுப்படுத்தப்பட்ட சோதனை**
சோதனையின் போக்கில் ஓரிரு மாறிகள் மாறினாலும் பெரும்பாலான காரணகாரிய/ தனித்த மாறிகள் மாறாத அறிவியல் முறை.

**CONTROLLED SAMPLING**
**கட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட மாதிரி ஆய்வு**
மாதிரி ஆய்வுக்கு எடுக்கப் பட்ட மக்கள் தொகையில் ஒவ் வொரு வகைக்கும் அவற்றின் நிகழ் அளவுக்கேற்ப குறிப்பிட்ட எண்ணிக்கையினரை அனு மதிக்கும் உத்திக்கேற்ற மாதிரி ஆய்வு.

**CONTROL OF ENTRY**
**சேர்க்கை/நுழைவுக் கட்டுப்பாடு**
தேர்வில் பெறும் நிலைகளின் அளவு, மாணவர்களின் வயது, அல்லது ஒரு மத அடிப்படையி லான சோதனை எனக் குறிப் பிட்ட அளவு கோலுக்கு ஏற்ப பள்ளி/கல்லூரியில் சேர அனுமதி வழங்குவதை மட்டுப்படுத்து வதைக் குறிக்கிறது.

**CONVERGER**
**குவிப்பவர்**
ஒற்றைத் தீர்வற்ற திறந்த தன்மையான சிக்கல்களுக்கு சரி யான ஒற்றை தீர்வுகளை காண் பதில் சிறந்தவராக விளங்கும் மாணவர்/ ஆளைக் குறிக்கிறது.

CONVERGENT THINKING
**குவி சிந்தனை**
இது தூண்டப்பட்டால் சிந்தனை வழக்கமான சரியான விடையை நோக்கி குவிந்து அதை அடையாளம் காட்டுகிறது. எ.கா: த.நாவின் தலைநகர் எது? 2 x 2 = ? இதற்கு எதிர்சொல் Divergent thinking,

CONVERSATIONAL LANGUAGE COURSES
**உரையாடல் வழி மொழிப் படிப்பு**
வகுப்பில் உரையாடல் பயிற்சி மூலம் மாணவர்கள் ஒரு மொழியைக் கற்கும் படிப்பு.

CONVERSION
**மனமாற்றம்**
அடிப்படையான மனப்பான்மை, நிலைபாடு மாற்றம். அல்லது மாறுதல் எதிர்வினை, அல்லது பதற்றம் உடற்குறிகளாக வெளிப்படும் மனஎழுச்சி வடிவம்.

CONVERSION COURSE
**மாற்றல் படிப்பு**
ஒரு மாணவரின் அல்லது பயிற்சியாளரின் முந்திய அனுபவம் /தகுதி அவர் தற்போது பயிலும் தொழில் / திறமையுடன் நேரடியாக பொருந்தாத படிப்பு.

CONVERSION REACTON
**மாற்றல் எதிர்வினை**
தேவை/ உள்நோக்க மோதல் உடற்குறிகளாக மாற்றப்படும் நரம்புக் கோளாறு எதிர்வினை.

CONVOCATION
**பட்டர் அவை**
கல்லூரி / பல்கலையின் பதிவுபெற்ற பட்டதாரிகள் அவை.

COOKBOOK LABORATORY EXPERIMENT
**செய்முறை தெரிந்த சோதனை**
புதிய கண்டுபிடிப்பு அம்சம் ஏதுமின்றி வெறுமனே பின்பற்றும் உத்திரவுகள் அடங்கிய சோதனை

COOLING OUT
**ஆற்றுவித்தல்**
மூன்றாம் நிலை (கல்லூரி) கல்வியில் மாணவருக்கு ஏற்பட்ட தோல்வியின் விளைவுகளை தணிக்க எடுக்கும் நடவடிக்கைகள். அவற்றில் ஆலோசனை வழங்கல், தொழில்கல்வி வழிகாட்டல், மறுநிலைகொள் படிப்புகள், பிற கீழ்நிலை படிப்புகளுக்கான யோசனை போன்றவை அடங்கும்.

COOPERATIVE PLAY
**கூட்டுறவு ஆட்டம்**
பங்குகொள்வோர் தம் நடவடிக்கைகளையும் இறுதி விளைவையும் உணர்வுடன் ஒழுங்கமைக்கும் ஒரு விளையாட்டைக் குறிக்கிறது.

COORDINATE ACTIVITIES
**இணைந்த செயல்பாடுகள்**
பள்ளி/கல்லூரியில் கற்பித்த

லுடன் கூடுதலாக தேவைப்படும் நடவடிக்கைகள்.

**COORDINATION**
**ஒருங்கிணைவு**
மரவேலையில் கண்-கை இசைவு போல் ஒரு திறன்/பணி முடிப்பில் உடல் உறுப்புகள் ஒன்றாகச் சேர்ந்து வெற்றி கரமாக இயங்கல்.

**CORE COURSE**
**அடிப்படைப் பாடம் / மையப்பாடம்**
கற்பித்தலுக்காக மூலக் கருத்துக்கள் மட்டுமே தரப்படும் ஆசிரியப் படிப்பு. அதற்கு மேல் ஆசிரியர் தன் சொந்த கருத்துகள்/ முறைகளை சேர்த்துக் கொள்ள முடிய வேண்டும்.

**CORE CULTURE**
**அடிப்படைப் பண்பாடு**
ஒரு சமுதாயம்/குழுவின் அனைத்து உறுப்பினர்களாலும் பகிரப்படும் பண்பாட்டின் பகுதி.

**CORE CURRICULUM**
**அடிப்படைப் பாடத்திட்டம்**
ஒரு கல்வி நிறுவனத்தின் பாடத்திட்டத்தில் அனைத்து மாணவர்களும் பயிலும் பொதுக் கூறுகள்.

**CORNER**
**பிரிவு**
குறிப்பிட்ட பணிக்காக ஒதுக்கப்படும் வகுப்பறை பகுதி. எ.கா:
படிக்கும் பிரிவு. படம் வரையும் பிரிவு.

**CORPORAL PUNISHMENT**
**உடல் ஒறுப்பு**
பள்ளி மாணவர்களை அடிக்கும் தண்டனை. ஒரு காலத்தில் பரவலாக இருந்தது இப்போது குறைந்துள்ளதுடன் மதிப்பற்றதாகவும் உள்ளது.

**CORPORATE LIFE**
**கூட்டு வாழ்க்கை**
ஒரு பள்ளி/கல்லூரி/பிற கல்வி சமூகத்தின் மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்த சமூக வாழ்க்கை மற்றும் கல்விச் செயல்பாடு.

**CORRECTION FOR CHANCE**
**குத்துமதிப்பு திருத்தம்**
வேட்பரின் ஊகத்தின் விளைவை குறைப்பதற்கான திருத்த சூத்திரத்தால் போட்டி கெலிப்பெண் மொத்தத்தில் ஏற்படும் குறைவு. ஊக திருத்தம் எனவும்படும். எடுத்துக்காட்டு: S=R-W/K-1. S= குத்துமதிப்பு திருத்தம்.

R= சரியான விடைகளின் எண்ணிக்கை. W-தவறான விடைகளின் எண்ணிக்கை. K=பன்மை தெரிவுள்ள உருப்படியில் தெரிவுகளின் எண்ணிக்கை. 2 தெரிவுள்ள உருப்படிக்கான திருத்த வாய்பாடு: S=R-W/(2-1)+R-W.

**CORRELATED CURRICULUM**
**இடைத்தொடர்புடைய பாடத்திட்டம்**

பாடப் பகுதிகளிடையான பொது களத்தையும் இடை உறவையும் காட்டுவதற்கான சாதகமான முயற்சி உள்ள பாடத் திட்டம்.

**CORRELATION MATRIX**
**இடைத்தொடர்பு அளவை**

ஒரு மாறிகள் தொகுப்பின் இடையிலான எல்லா சாத்திய மான இடைதொடர்பை காட்டும் புள்ளியியல் அட்டவணை. இடையுறவுகள் பின்வரும் இடைத்தொடர்பு கெழுக்களால் வெளியிடப்படுகின்றன.

எ.கா.

| | உயரம் | வயது | எடை |
|---|---|---|---|
| உயரம் | 1.00 | 0.76 | 0.42 |
| வயது | 0.76 | 1.00 | 0.62 |
| எடை | 0.42 | 0.62 | 1.00 |

**CORRESPONDENCE COLLEGES OR SCHOOLS**
**அஞ்சல்வழி கல்லூரிகள்/ பள்ளிகள்**

அஞ்சல் வழி படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்கள்.

**CORRESPONDENCE COURSE**
**அஞ்சல்வழிப் படிப்பு**

ஆசிரியருக்கும் மாணவருக் கும் இடையில் கடிதத் தொடர்பு மூலம் நடத்தப்படும் படிப்பு

**CORRESPONDENCE EDUCATION**
**அஞ்சல்வழிக் கல்வி**

அஞ்சல் வழியில் தரப்படும் கல்வியை குறிக்கிறது.

**CORRESPONDENCE TEXT**
**அஞ்சல்வழிப்பாடம்**

அஞ்சல்வழிக் கல்வியில் வரும் பாடம்.

**CORTEX, OCCIPITAL**
**புடனி, புறணி**

பார்வையும் காட்சி அனுபவத் தின் பெயர்ப்பும் தொடர்பான பெருமூளைப் புறணிப் பகுதி.

**COSMOPOLITAN TEACHER**
**பரந்த நோக்கு ஆசிரியர்**

பரந்த புவியியல் தொழில் சூழலில் தன் பணியை/ பாத்திரத் தை வைத்துப் பார்க்கும் ஆசிரிய ரைக் குறிக்கிறது.

**COST ACCOUNTING**
**ஆக்கசெலவு கணக்கிடல்**

ஒரு பொருளை உருவாக்க, ஒரு பணியை வழங்க... ஆகும் செலவைக் காண தேவைப்படும் தகவலை பதிதல் - வகைப் படுத்தல் - பரிசீலித்தல்.

**COST BENEFIT ANALYSIS**
**ஆக்க செலவு - பயன் பகுப்பாய்வு**

மரபு செலவு கணக்கிடலில் வராத சிறப்பு செலவுகளையும் பயன்களையும் குறிப்பாக

கணக்கில் கொள்ளும் மொத்த செலவுகள் - வருவாய் முன் மதிப்பீடு.

**COST EFFECTIVENESS**
**ஆக்க செலவு விளைவு**
குறிப்பிட்ட செலவின் பயன்களை ஆய்தல். இதே செலவு இன்னும் பயனுற செய்யப்பட்டிருக்க முடியுமா அல்லது இதே பயன் இன்னும் குறைந்த செலவில் பெறப்பட்டிருக்க முடியுமா எனக் காண்பதற்கான/நிறுவுவதற்கான ஆய்வு.

**CO-TWIN CONTROL**
**இரட்டையர் பற்றிய ஆய்வு**
குழந்தை வளர்ப்பு ஆய்வில் பயன்படுத்தும் உத்தி. வெவ்வேறு சூழல்களில்/அடிப்படைத் திறன் பயிற்சிகளில் வளர்க்கப்படும் இரட்டையர்களில் அந்த வளர்ப்பு ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிய ஆய்வு.

**COUNCIL**
**அவை**
ஒரு கல்லூரி/பல்கலையின் பொது நிர்வாகத்துக்கு பொறுப்பான அமைப்பு. கல்வி விசயத்தில் பொதுவாக அது பேரவை முடிவுக்குக் கட்டுப்படுகிறது.

**COUNCIL FOR TECHNICAL COOPERATION**
**தொழில்நுட்ப கூட்டுறவுக்கான அவை**
தொழில்நுட்ப கல்வி-அறிவியல் கூட்டுறவை ஊக்குவிக்க கொழும்பு திட்டத்தின் கீழ் காமன்வெல்த் உறுப்பினர்கள் நிறுவியது. இப்போது கடல் கடந்த நாடுகளுக்கான தொழில் நுட்ப கல்வி பயிற்சி குழு (TETOC) உடன் இணைந்துவிட்டது.

**COUNSELLING**
**அறிவுரை (கூறல்)**
மாணவர்களுக்கு அவர்களின் கல்வி வளர்ச்சி, முன்னேற்ற பாணி, தொழில்கல்வி தெரிவுகள் பற்றி அறிவுரை வழங்கல்

**CUNSELLING & TEST PROFILES**
**அறிவுரையும் சோதனை உருவரையும்**
தொடர்ச்சியான சோதனைகளில் மாணவர்களின் கெலிப்பை காட்டும் வரைபடம். இசை கல்வியியல் மற்றும் தொழில் கல்வி ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு பயன் படுகிறது.

**COUNTER CONDITIONING**
**கட்டு நீக்கல்**
ஒரு விரும்பத்தகாத எதிர் வினையுடன் போட்டியிடும் அல்லது அதனை கழித்துக் கட்டும் ஒவ்வாத எதிர்வினை கட்டுப்படுத்தப்படும் நடைமுறை.

**COURSE REQUIREMENT**
**படிப்புத் தேவை**
குறிப்பிட்ட படிப்பில் நுழைய தேவைப்படும் தகுதிகள்/தேவைகளைக் குறிக்கிறது.

**COURSE TEAM**
**பாடத்திட்டக்குழு**
ஒரு பாடத்திட்டத்தை உருவாக்க அமைக்கப்படும் குழு.

**COURSE TEAM ASSISTANT**
**பாடக்குழு உதவியாளர்**
பாடக்குழுவில் இருக்கும் ஒரு இளம் பட்டதாரி உறுப்பினர். பாடக்குழுத் தலைவரின் கடமைகளுக்கு சார்பாக நிர்வாக, பாடத்திட்ட பணிகளை இவர் நிறைவேற்றுவார்.

**COURSE TUTOR**
**படிப்பு மேற்பார்வையாளர்**
பள்ளி/கல்லூரி/பல்கலை பணியாளர்களில் ஒருவர். மாணவர்கள் குறிப்பிட்ட படிப்பில் முன்னேறும் போக்கை மேற்பார்வையிடுவார்.

**COVERDALE TRAINING**
**கவல்தேல் பயிற்சி**
பங்குகொள்வோர் தம் பணி செயல்பாட்டையும் நடைபெற்றிருக்கும் சமூக இடைவினையையும் பகுத்தாயும் நுண்ணுணர்வு பயிற்சி.

**COVERT STIMULUS / MEDIATING STIMULUS**
**மறைமுக தூண்டல்/ இடைநுழை தூண்டல்**
நேரடியாக அவதானிக்க முடியாத நினைவுகூறல், பசி உணர்வு போன்ற உள்தூண்டல்.

**CRAFT TRAINING**
**கைவினைப் பயிற்சி**
பழகும் காலத்தில் பெறப்பட்டு மேலுமான கல்வியால் கைவினைஞர் தகுதிபெறும் கைவினைப் பயிற்சி.

**CRAFTSMAN**
**கைவினையாள்**
பயிற்சி மற்றும் தொடர்பான தொழில் நுட்பக் கல்விக்கு பின் பரவலான திறன்கள்-செய்முறைகளை கையாள முடியக்கூடிய திறன்பெற்ற தொழிலாளர்.

**CRAMMING**
**நெட்டுருச் செய்தல்**
ஒரு தேர்வுக்காக அவசரமாக திரும்பத் திரும்ப மனப்பாடம் செய்தல்.

**CRASH COURSE**
**மீவிரை பயிற்சி**
இயல்பான காலத்தைவிட விரைவாக குறிப்பிட்ட பயிற்சியை வழங்க உருவாக்கிய படிப்பு.

**CREAMING OFF**
**சிறந்தது பிரித்தல்**
உயர்கல்வித் திறமை உடைய மாணவர்களை பிற மாணவரிலிருந்து தனியாக தேர்ந்த பள்ளிகளிலோ பிற நிறுவனங்களிலோ வலிந்து கொணரும் நடைமுறை.

**CREATIVE DESIGN**
**படைப்பு வடிவமைப்பு**
கைவினை, தொழில்நுட்பம்,

அழகியல் புரிதல் இவற்றின் வளர்ச்சியுடன் தொடர்புடைய படிப்புத்துறை.

**CREATIVE EXPRESSION**
**படைப்பு வெளியீடு**
தன் வெளிப்பாட்டுக்கு இடமளிக்கும் ஓவியம், வண்ணப் பூச்சு, நடனம் போன்ற செயல்பாடுகள்.

**CREATIVE OBJECTIVES**
**படைப்பு நோக்கங்கள்**
புதிய உறவுகளை காணல், கற்பனை தீர்வுகளை உருவாக்கல் போன்றவை தொடர்பான நோக்கங்கள்.

**CREATIVITY**
**படைப்புத்தன்மை, படைப்பாற்றல்**
பலதிற சிந்தனை அல்லது திறந்த தன்மையான சிந்தனை திறனைக் குறிக்கிறது.

**CREATIVITY TESTS**
**படைப்பு சோதனைகள்**
பல திற சிந்தனை மீதான உளவியல் சோதனைகள். இதில் பெரும்பான்மையான நுண்ணறிவு சோதனைகளின் மூடிய எதிர்வினை போன்று அல்லாமல் கேள்விகள் திறந்த தன்மையில் இருக்கும். எடுத்துக்காட்டாக, சொல் தொடர்பு.

**CREDIT OR COURSE CREDIT**
**தகுதிச்சான்று**
குறிப்பிட்ட பாடப்படிப்பில் தேர்ச்சி பெறப்பட்டுள்ளதற்கான சான்றிதழ்.

**CREDIT ACCUMULATION SYSTEM**
**தகுதி சேர்ப்பு முறை**
பட்டம் போன்ற ஒரு தகுதி எண்ணிக்கை அடிப்படையிலும் மாணவர்கள் பெற்றுள்ள/சேகரித்துள்ள தகுதிகளின் தன்மை அடிப்படையிலும் வழங்கப்படும் முறை.

**CREDIT COURSE**
**சான்றிதழ் படிப்பு**
குறிப்பிட்ட படிப்பு நிரலின் சூழலில் கல்வித் தகுதி பெற்றிருக்கும் படிப்பு.

**CREDIT TRANSFER SCHEME**
**தகுதி பரிமாற்ற முறை**
பட்டம்/பட்டயம் வழங்கும் நோக்கங்களுக்காக 2 அல்லது அதற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் ஒன்று மற்றதின் தகுதியை அங்கீகரிக்கும் ஏற்பாட்டைக் குறிக்கிறது.

**CRETINISM**
**வளர்ச்சி மந்தம்**
தைராய்டு பற்றாக்குறை யால் குழந்தைப் பருவ தொடக்கத்தில் தெரியக்கூடும் உடல் மன வளர்சசி தடைபட்ட பிறவி நிலை. வளர்ச்சியின் போதிய முன்கூட்டிய நிலையிலேயே தைராய்டு சத்தால் சிகிச்சை தரப்பட்டால் குணம் இயலும்.

**CRIB NOTES**
**திருட்டு குறிப்புகள்**
ஏமாற்றும் நோக்கில் தேர்வுக்கு எடுத்துச் செல்லப்படும் அனுமதிக்கப்படாத குறிப்புகளைக் குறிக்கிறது.

**CRICHTON VOCABULARY SCALE**
**கிரிக்டன் சொல்வள அளவுகோல்**
சொல்வள அறிவின் ஒரு அம்சத்தை அளக்கும் அளவை. ராவனின் முன்செல்லும் அளவைகளுடன் பயன்படுத்தப் பட்டால் பொது அறிவு சோதனையாகிறது.

**CRIMINAL RESPONSIBILITY**
**குற்ற பொறுப்பு**
சட்டத்தில் ஒருவர் குற்றத்துக்கோ நெறி பிறழ்வுக்கோ பொறுப்பென காணும் நிலைமைகள்.

**CRIMINOLOGY**
**குற்றவியல்**
குற்றம் - நெறி பிறழ்வு என்பதை சமூக, உளவியல் சிக்கலாக ஆயும் துறை.

**CRISIS GAME**
**நெருக்கடி ஆட்டம்**
பங்கேற்போருக்கு நெருக்கடியான நிலவரங்கள் ஏற்படும் வணிக விளையாட்டு.

**CRITERION-REFERENCED TESTING**
**அளவுகோல்படி சோதித்தல்**
குறிப்பிட்ட தரத்துடன் ஒப்பிட்டு ஒருவர் மதிப்பிடப்படும் சோதனை.

**CRITERION TEST**
**அளவுகோல் சோதனை**
ஒரு ஆய்வு அல்லது பயிற்சியின் முடிவில் குறிக்கப்பட்ட அளவு நடத்தை சாதிக்கப்பட்டுள்ளதா என அறியப் பயன்படும் சோதனை.

**CRITICAL-INFORMATION WRITTEN**
**எழுத்துவழி திறனாய்வு தகவல்**
பின் ஒரு நாளில் மாணவர் செய்துகாட்ட தேவைப்படும் திறன்கள் மற்றும் கருத்துக்களை, வாசகர் ஒரு தராதரத்தை நிறுவும் வரை அவற்றினுள் செல்ல அனுமதிக்கும் வடிவில் முன் வைப்பதை குறிக்கிறது.

**CRITICAL PERIODS**
**சிக்கலான காலம் / செல்வாக்கு வாய்ந்த கட்டம்**
ஒருவரின் வாழ்வில் குறிப்பிட்ட திறமையை கற்க மிக வாய்ப்பான குறிப்பிட்ட காலங் களைக் குறிக்கிறது. இந்த காலத்தில் கற்க தவறுவது பின் கற்பதில் சிரமத்தை ஏற்படுத்தலாம்.

**CRITICAL VALUE**
**நடுநிலை மதிப்பீடு**
மதிப்பின்மை கற்பிதத்தை ஏற்பதையும் மறுப்பதையும் பிரிக்கும் புள்ளியியல் சோதனையில் எல்லைக்கோட்பாட்டு மதிப்பீடு.

**CROSS AGE TEACHING**
**கடந்த வயதினர் கற்பித்தல்**

மேல்நிலை வகுப்புகளில் உள்ள மூத்த மாணவர்கள் கீழ்நிலை வகுப்புகளில் உள்ள இளைய மாணவர்களுக்கு அதிக உதவியும் கவனமும் வழங்கும் கற்பித்தல்.

**CROSS-BRACING**
**கலந்து உயர்த்தல்**

2 அல்லது அதிக துறைகள்/ நிறுவனங்களின் மூலவளங் களை இணைத்தல்.

**CROSS CULTURAL STUDIES**
**பண்பாட்டு இடைஆய்வுகள்**

வெவ்வேறு பண்பாட்டினரை தனித்தனியாகவோ ஒன்று சேர்த் தோ ஆயும் உளவியல் ஆய்வுகள். வெவ்வேறு பண்பாட்டின் வெவ் வேறு நடத்தை பொதுவான நிலைகளின்கீழ் நிகழ்கிறதா என பார்ப்பதற்கான ஆய்வுகள்.

**CROSS DOMINANCE**
**குறுக்குஆதிக்கம்**

உடலின் ஒரு பக்க உறுப்பின் பயன்பாடு நேர் எதிர்பக்க உறுப் பின் ஆதிக்கத்துடன் இசைதல். எ.கா. வலதுகை பயன்பாடு இடது கண் ஆதிக்கத்துடன் இசைதல்.

**CROSS FERTILISATION**
**அயல் கருவுறல்**

ஒரு பாடம்/துறை பிற துறை களுடனான தொடர்பில் தூண்டப் பெற்று வளமுறும் நிகழ்முறை.

**CROSS NATIONAL RESEARCH**
**தேசம் தழுவிய ஆய்வு**

முற்றிலும் உள்ளூர்/வட்டார அளவிலன்றி நாடு முழுதும் ஏற்படுத்தப்படும் ஆய்வுகள்/ விசாரணைகளைக் குறிக்கிறது.

**CROSS OVER GROUPS**
**குறுக்கே மேவும் குழுக்கள்**

சிறு குழுக்களில் குறுகிய கால விவாதம் என்னும் நட வடிக்கை. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு குழுவில் இருந்தும் மற்றதற்கு குறிப்பிட்ட முறையில் ஒவ்வொரு உறுப்பினர் பரி மாற்றல். சிலர் புதுக்குழுவுக்கு தகவல் கொண்டு செல்கிறார். அவர்களிடமிருந்து தகவல் பெறு கிறார். ஒவ்வொரு மூலக் குழு விலும் மூல ஆள் ஒருவர் மட்டும் மிஞ்சும் வரை இது தொடரலாம். விரைவான கருத்துப் பரி மாற்றத்துக்கு இது உதவும்.

**CROSS SECTIONAL STUDY**
**குறுக்கு வெட்டுஆய்வு**

வெவ்வேறு வயது மாணவர் களை மாதிரிகளாக கொள்ளும் ஒரு ஆய்வு உத்தியை குறிக்கிறது. ஒரு நேரத்தில் ஒரு மாதிரியை, மனிதர்களின் வாழ்வில் வெவ் வேறு மாறிகளின் வளர்ச்சி விளக்கமாக சோதிக்கிறது.

**CROSS-VALIDATION**
**குறுக்கு தகுதி காணல்**

ஒரேமக்களின் வெவ்வேறு மாதிரிகளில் இருந்து பெறப்பட்ட

தகவலுக்கு புள்ளியியல் உத்தியைப் பயன்படுத்தி தகுதிகாண் சோதனை.

**CRYSTALLOGRAPHY**
**படிகவடிவியல்**

படிகங்களின் வடிவயியல் உருவத்தை அறிவியல் முறையில் ஆய்தல்.

**CUE (OR CLUE)**
**துப்பு**

ஒரு சொல் / பொருளை வாசகர் இனம் காண உதவும் எதையும் குறிக்கிறது.

**CUED SPEECH**
**சமிக்கை பேச்சு**

செவிடர் மொழி கற்கும் முறை. உதடு அசைவுடன் உடல் குறிப்புகளும் சேர்ந்து பயன் படுத்தப்படுகின்றன.

**CUISENAIRE RODS**
**குசினேர் குச்சிகள்**

1 செமீ முதல் 10செமீ வரை வெவ்வேறு நீளமுள்ள குச்சிகள். எண்ணிக்கைக்கு குறிப்பிட்ட வண்ணம் உடையன. சிறு குழந்தைகளில் எண்ணிக்கை கருத்து உருவாக இவை உதவியாக உள்ளன.

**CULTURAL AESTHETIC AWARENESS**
**பண்பாட்டு அழகியல் உணர்வு**

கலை வடிவங்களை ரசிக்கும் திறன். மானுடவியல் பொருளில் தன் பண்பாட்டை உணர்தல்.

**CULTURAL APPRAOCH**
**பண்பாட்டு அணுகல்**

ஒருவரின் வளர்ச்சிக்கு இயற்கையைவிட வளர்ப்பே அதிகம் காரணம் என்னும் உளவியல் கொள்கை.

**CULTURAL DEPRIVATION**
**பண்பாட்டு உரிமை மறுப்பு**

அழகியல் வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமைகளை பெற தனியாளுக்குள்ள இயலாமையாலோ அல்லது பிறரின் வலிந்த தடைச்செயல் களாலோ அல்லது அறிவு-அழகியல் வளர்ச்சிக்கு ஊக்கமான சூழல்களை வழங்க அவரது குழு/சமூகம் தவறுவதாலோ ஒருவருக்கு அறிவு-அழகியல் வளர்ச்சி மறுக்கப்படும் நிலை.

**CULTURAL DISCONTINUITY**
**பண்பாட்டு தொடர்ச்சியின்மை**

பள்ளியின் பண்பாடு, மாணவரின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தின் பண்பாட்டு பின்னணியுடன் முரண்படும நிலையைக் குறிக்கிறது.

**CULTURAL ENRICHMENT**
**பண்பாட்டு வளமை**

அறிதல், பார்வை, சொல் திறன்களின் வளர்ச்சி.

**CULTURAL EPOCH APPROACH**
**பண்பாட்டு காலகட்ட அணுகல்**

இந்த அணுகலில் ஒரு கல்வி ஆண்டுக்கான பாடத்திட்டம்,

ஒரு பண்பாட்டு காலக்கட்டத்தை அல்லது முதன்மையான கருப்பொருளைப் பற்றிய படிப்பை அடிப்படையாகக் கொள்ளும். எடுத்துக்காட்டாக இடைக்காலத்திலிருந்து நமக்கு வந்த மரபுவளம். இந்த அணுகலின் முக்கியமான ஒரு கூறு, கருத்துக்களை ஒன்றுடன் ஒன்று உறவுபடுத்தி ஆய்தலாகும்.

**CULTURAL HANDICAP**
**பண்பாட்டு ஊனம்**

முறைப்படியான கல்வி சார்பான மதிப்புகளின்மையால் குழந்தைகள் ஊனப்படுவதான நம்பிக்கையைக் குறிக்கிறது.

**CULTURAL HERITAGE**
**பண்பாட்டு மரபுவளம்**

தனக்கு முந்திய தலைமுறையின் பழக்கங்கள், நாட்டார் வழக்குகள், நிறுவனங்கள், நம்பிக்கைகள், மதிப்பீடுகள், கலை, இலக்கியம், இசை முதலியவற்றை ஒரு தலைமுறை மரபுவழியாக பெறுவதைக் குறிக்கிறது.

**CULTURAL LIAISON TEACHER**
**பண்பாட்டு தொடர்பு ஆசிரியர்**

சரியான வீடு-பள்ளி உறவுகளை பேணுவதற்கும் பாடத்திட்டத்துக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை வளர்ப்பதற்கும் பொறுப்புடையவர்.

**CULTURAL PUBERTY**
**பண்பாட்டு முதிர்ச்சி**

மூத்தவர்களால் ஏற்கப்பட்ட பண்பாட்டின் பழக்கங்கள், கருத்துகள், நிலைபாடுகள், மதிப்பீடுகளை ஏற்பதிலும் தழுவுவதிலும் இளையவர்கள் காணும் சிரமத்தை குறிக்கிறது.

**CULTURAL SERVICES**
**பண்பாட்டு பணிகள்**

நூலகங்கள், கலை அரங்குகள், ஓய்வுநேர முயல்புகள், சொற்பொழிவு நிகழ்ச்சிகள் போன்ற உள்ளூர் பணிகளை குறிக்கிறது.

**CULTURAL SHOCK OR CULTURE SHOCK**
**பண்பாட்டு அதிர்ச்சி**

ஒருவர் ஒரு புதிய சமுதாயத்துக்குள் அல்லது புதிய வாழ்க்கை முறைக்குள் நுழையும்போது (காட்டாக, ஒரு மாணவர் முதல் முறையாக ஒரு கல்லூரிக்கு/பல்கலைக்கு போகும்போது) உணரும் பதட்டமான உளவியல் தாக்கம்.

**CULTURAL STUDIES**
**பண்பாட்டு ஆய்வுகள்**

வெவ்வேறு சமூகங்கள் / சமுதாயங்களின் பண்பாடுகளைப் பற்றிய ஆய்வுகளைக் குறிக்கிறது.

**CULTURAL TRANSFER**
**பண்பாட்டுப் பரிமாற்றம்**

இன்னொரு நாடு/சமூகத்தின் அடிப்படையிலான கல்வி மற்றும்

தொடர்பான நிறுவனங்களை ஒரு நாடு சமூகம் எடுத்துக் கொள்ளுதல்.

**CULTURAL TRANSMISSION**
**பண்பாட்டு பரவல்**

தலைமுறைகளுக்கு பண்பாட்டை பரப்பும் நிகழ்முறை. கல்வியின் நோக்கம் இது என்பது சமூகவியலில் மிகப் பொதுவான கருத்து.

**CULTURE**
**பண்பாடு**

குழுக்கள் அல்லது நாடுகளின் மொத்த மதிப்பீடுகள், நம்பிக்கைகள், வழக்கங்கள், கலை, கல்வி, நிறுவனங்கள், கலைப் பொருட்களைக் குறிக்கிறது.

**CULTURE BOUND**
**பண்பாட்டில் கட்டுண்ட நிலை**

வேறு பண்பாட்டைச் சேர்ந்த மக்களின் நிலைப்பாட்டைப் புரிந்துக் கொள்ள கணக்கில் கொள்ள முடியாமை

**CULTURE CONFLICT**
**பண்பாட்டு மோதல்**

ஒரு பண்பாட்டிலோ பண்பாடுகளுக்கு இடையிலே வெவ்வேறு குழுக்களுக்கு இடையிலான மதிப்பீடுகள், நம்பிக்கைகள், நடத்தைகளில் மாறுபாட்டில் இருந்து எழும் வாக்குவாதங்களைக் குறிக்கிறது.

**CULTURE DEFICIT**
**பண்பாட்டு வறுமை/ பற்றாக்குறை**

ஒரு மாணவர்/மனிதர் பண்பாட்டு வறுமைக்கு உள்ளாகும் அளவைக் குறிக்கிறது.

**CULTURE-FAIR INTELLIGENCE TEST**
**பண்பாட்டு தொடர்பற்ற நுண்ணறிவுச் சோதனை**

பண்பாட்டிலிருந்து முடிந்த வரை சுயேச்சையான நுண்ணறிவு சோதனையை எனவே எண் வரிசைகள், அணிகள், மேல்படியும் எண்கள் முதலிய பயிற்சிகள் மட்டுமே கொண்டுள்ளதைக் குறிக்கிறது.

**CULTURE FREE TEST**
**பண்பாடு தவிர்த்த சோதனை**

மொழியைப் புரிந்துகொள்வதை சார்ந்திராத - எனவே வெவ்வேறு நாடுகள் / பண்பாடுகளில் உள்ள எவருக்கும் பொருந்துவதாக கருதப்படும் சோதனை. எடுத்துக்காட்டாக குறியீடுகள் - பொருள்கள் - அல்லது எளிய சமூக இடைவினைகளை சார்ந்திருக்கும் சோதனைகள், பண்பாடு தவிர்த்த நுண்ணறிவு சோதனை அமைப்படுவதில் பயன்படுகின்றன.

**CULTURE PATTERN**
**பண்பாட்டு பாணி**

ஒன்றுக்கொன்று தொடர்புடைய கூறுகள். ஒரு தனிச் சிறப்பான வாழ்க்கை முறை, வழக்கங்கள், மதிப்பீடுகள்

முதலியவையாக அமைவதைக் குறிக்கிறது.

**CUMULATIVE DEFICIT**
**அதிகரிக்கும் வேறுபாடு, பற்றாக்குறை**

சாதனை வேறுபாடுகளில் ஏற்படும் தொடர்ந்த அதிகரிப்பு.

**CUMULATIVE FREQUENCY**
**அதிகரிக்கும் அதிர்வெண்**

அடுத்தடுத்த கெலிப்பெண் கூடுதலால் கணக்கிடப்படும் ஒரு பங்கீட்டின் அதிர்வெண்களின் தொகைகளுக்கு சமம். அல்லது அளவின் வரிசைப்படியான வகுப்பு அதிர்வெண்களுக்கு சமம்.

**CUMULATIVE FREQUENCY DISTRIBUTION**
**அதிகரிக்கும் அதிர்வெண் பங்கீடு**

வேறொரு சோதனையின் மீதான அதிர்வெண் பங்கீட்டுடன் ஒப்பிட முடியும்படியாக ஒரு சோதனையின் அதிர்வெண் பங்கீட்டை தரப்படுத்தும் முறை. இதன்படி கெலிப்பெண்களின் வீச்சின் ஒரு முனையிலிருந்து தொடங்கி ஒவ்வொரு அடுத்தடுத்த இடைவெளியிலும் கெலிப்பெண்களின் அதிர்வெண்ணைக் கூட்டவேண்டும். எடுத்துக்காட்டாக,

| கெலிப் பெண் | அதிர் வெண் | அதிகரிக்கும் அதிர்வெண் | |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | |
| 2 | 3 | 4 | (3+1) |
| 3 | 3 | 7 | (3+4) |
| 4 | 6 | 13 | (6+7) |
| 5 | 6 | 19 | (6+13) |

**CUMULATIVE FREQUENCY GRAPH**
**அதிகரிக்கும் அதிர்வெண் வரைபடம்**

கிடை அச்சில் மதிப்பெண் களையும் குத்து அச்சில் அதிகரிக்கும் அதிர்வெண்களையும் காட்டும் படம்.

**CUMULATIVE FREQUENCY PERCENTAGE**
**அதிகரிக்கும் அதிர்வெண் சதவீதம்**

சதவீதமாக காட்டப்படும் அதிகரிக்கும் அதிர்வெண் பங்கீட்டை சதவீதமாக மாற்றுவதில் தேவையான நிலையாகிய இது ஒரே அலகில் 2 கெலிப்பெண் தொகுப்புகளை தெரியப்படுத்த செய்கிறது. எடுத்துக்காட்டாக,

| கெலிப் பெண் | அதிர் வெண் | அதிக ரிப்பு | அதிர் வெண் அதிகரிப்பு |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | 3 |
| 2 | 3 | 4 | 14 |
| 3 | 3 | 7 | 24 |
| 4 | 6 | 13 | 45 |
| 5 | 6 | 19 | 66 |
| 6 | 5 | 24 | 83 |
| 7 | 3 | 27 | 93 |
| 8 | 1 | 28 | 97 |
| 9 | 1 | 29 | 100 |
| 10 | 0 | 29 | 100 |

**CUMULATIVE HANDICAP**
**திறன் ஊனம்**
உடல்-மன-சமூக ஊனங்கள் என்ற வரிசையான ஊனங்களையோ அல்லது இம்மூன்றும் இடைவினை புரிவதையோ ஒருங்கு திரட்டல்.

**CUMULATIVE METHOD**
**திரட்டு முறை**
அயல்மொழி கற்பித்தலில் மென்மேலும் கடினமான பாடங்களை படிப்படியாக அதிகரித்துச் செல்லும் முறை.

**CUMULATIVE PART METHOD**
**பகுதி திரட்டு முறை**
பயிலவேண்டிய நடைமுறை பல பாகங்களாக/கூறுகளாக பிரிக்கப்பட்டு தரும் பயிற்சி. கற்பித்தலும் நடைமுறையும் முதல் பாகத்தில் மட்டுமே தரப்படுகின்றன. அடுத்து முதலிரு பாகங்கள் சேர்த்து தரப்படுகின்றன. இப்படியே முழு நடைமுறையும் கற்கப்படுகிறது.

**CUMULATIVE RATING SCALE**
**திரள் கணக்கீட்டு அளவை**
மனப்பான்மை கணக்கீட்டு அளவைக் குறிக்கிறது. இதில் ஒருவரின் மனப்பான்மைத் தீவிரத்தை மாறி 1 என கணக்கிட முயலப்படுகிறது. எடுத்துக் காட்டாக ஒலி தாங்கும் திறன்.

**CUMULATIVE RECORD**
**திரள் பதிவு (ஏடு)**
ஆசிரியர் தன் கல்வி திட்டமிடலில் பயன்படுத்தும் மாணவர் பற்றிய தகவல் தொகுப்பை (அ) கோப்பை குறிக்கிறது. தகவல், அவதானம்-பேட்டி-சோதனை, சமூக அளவை ஆய்வு போன்றவற்றால் தொகுக்கப்படுகிறது. பள்ளி தேர்ச்சி, பாடம் கடந்த நடவடிக்கைகள், மருத்துவ வரலாறு, சமூக அனுசரிப்பு போன்றவற்றை இது உள்ளடக்குகிறது.

**CUMULATIVE THEORY**
**திரள் கோட்பாடு**
கற்றலை ஒரு சேகரித்துக் கொள்ளும் நடைமுறையாக பார்க்கும் கோட்பாடு. இதில் எளிய திறமைகளின் இடைவினையால் சிக்கலான விதிகள் உருவாகின்றன.

**CURRICULUM**
**கல்வித்திட்டம்**
ஒரு கல்லூரி/பள்ளி/பல்கலை அல்லது ஒரு கல்வி நிறுவனத்தின் ஆதரவுடன் ஒரு மாணவர் மேற்கொள்ளும் முறைப்படுத்தப் பட்ட படிப்பு.

**CURRICULUM DEVELOPMENT**
**கல்வித்திட்ட வளர்ச்சி**
திட்டமிட்ட கற்றல் அனுபவ மொத்தத்தை உருவாக்க உருவாக்கிய செயல்திட்டம்.

**CURRICULUM (DEVELOPMENT) MODEL**
**கல்வித்திட்ட மாதிரி**
மாணவர் அனுபவிக்கும் படிப்பைத் திட்டமிடும் சட்டகத்தை

அல்லது செயல் திட்டத்தைக் குறிக்கிறது.

**CURRICULUM THEORY**
**கல்வித்திட்ட கொள்கை**

கல்வித்திட்ட நோக்கங்கள், உள்ளடக்கம், முறை முதலிய வற்றை தேர்ந்தெடுக்க வழி காட்டும் அடிப்படையான கொள் கை அடிப்படை.

**CURRICULUM VITAE OR RE-SUME**
**முன் கல்வியறிவு குறிப்பு**

ஒருவரின் வாழ்க்கைக் குறிப்பு விவரம். அவரது தனி பதிவேடு களிலோ அல்லது கல்வி/வேலை தகுதி/ அனுபவத்தை அவரது நியமனத்துக்காக தரவே பயன் படுகிறது.

**CURSIVE SCRIPT**
**சேர்த்து எழுத்து**

அச்சு எழுத்து போலன்றி இணைந்துள்ள கை எழுத்து.

**CURVE OF RETENTION**
**நினைவில் தங்கும் கால அளவு, நினைவு வளைகோடு**

நினைவில் நிற்பதன் வரை பட வெளியீடு. குறிப்பிட்ட கால அளவில் அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முயற்சி களுக்குப் பிறகு கற்ற தகவலை சரியாக மீண்டும் வெளியிடும் தடவைகளை காட்டுகிறது.

**CURVILINEAR**
**வளைகோடான**

தகவலை நேர்கோடாக அன்றி வளைகோட்டு வரைபடமாக காட்டல்

**CUSTODIAL INSTITUTION**
**காவல் நிறுவனம்**

குற்றவாளிகளை பிடித்து வைக்க அல்லது ஒரு சுதந்திர சமூகத்தில் தமக்கோ பிறர்க்கோ தீங்கிழைக்கக்கூடும் தகுதிபெற்ற வர்களுக்கோ ஆன பாதுகாப்பு அமைப்பைக் குறிக்கிறது.

**CUSTODIAL STUDENT**
**காவல்வேண்டும் மாணவர்**

மன-சமூக-உடல்-அல்லது உணர்ச்சி வளர்ச்சி குறைவான- எனவே நிறுவன பராமரிப்போ வீட்டில் ஓயாத மேற்பார்வையோ தேவைப்படும் மாணவரைக் குறிக்கிறது.

**CUSTOMIZED INSTRUCTION**
**வழமையாக்கப்பட்ட உத்திரவு**

நிரல்படுத்தப்பட்ட உத்திரவு போலவே தனி மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்ய வடிவமைத்த உத்திரவுகள்.

**CUT OFF POINT**
**வரையறை எல்லை**

குறிப்பிட்ட காரணங்களுக் காக மாணவர்களை தேர/மறுக்க ஒருவர் கருதுவதற்கான மதிப் பெண் அளவை எல்லை.

CUTTING SCORE
**பிரிக்கும் புள்ளி**

ஒரு கெலிப்பெண் அளவில் அதற்கு மேல் கீழ் கெலிப்பெண் பெற்றவர்களை இரண்டு குழுக்களாக பிரிக்கும் தேர்ந்தெடுத்த புள்ளியைக் குறிக்கிறது.

CYBERNETICS
**கணினி ஒப்பியல்**

உயிரிகளிலும் யந்திரங்களிலும் செயல்படும் தொடர்பு-கட்டுப்பாடு உத்திகள் பற்றிய கோட்பாடு.

CYCLOTHYME
**ஊசலாடி**

மனநிலை ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு ஊசலாடும் ஆளுமை வகையைக் குறிக்கிறது.

---

# D

---

DACTYLOLOGY
**விரல் எழுத்து முறை**

சொல் உருவாக்கும் எழுத்தை வரைய விரல்களை பயன்படுத்தும் பார்வை வழி தொடர்பு முறை. செவிடரும் ஓரளவே கேட்கும் திறன் உடையவரும் பயன்படுத்துவது.

DALTON PLAN
**டால்ட்டன் திட்டம்**

இந்த திட்டத்தில் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பாடத்திலும் வேலைகள் தரப்படுகிறது. அவர்களின் முன்னேற்றம் பணி அட்டைகளில் பதியப்படுகிறது. தனியாள் மற்றும் குழு வேலை இணைப்பையும் தொடர்ச்சியான ஆசிரியர் மாணவர் கூட்டங்களையும் இத் திட்டம் பயன்படுத்துகிறது.

DATA
**விவரங்கள்/தகவல்**

ஒரு உளவியல் சோதனையில் ஒருவர் அல்லது இன்னொருவர் அல்லது ஒரு குழுவின் அவதானங்களை பதிவுசெய்த விளக்கங்களை குறிக்கும் புள்ளி விவரம்.

DATA DEGRADATION
**தகவல் சிதைவு**

மாற்ற முடியாத நிகழ் முறையால் பரிசீலிக்காத தகவலில் இழக்கப்படும் விவரத்தை குறிக்கிறது.

DATA IN CATEGORIES
**தகவல் பகுப்புகள்**

தனித்த பகுப்புகளில் மட்டுமே போடக் கூடிய கெலிப்பெண்/பிற தகவலைக் குறிக்கிறது.

DATA LOGGING
**தகவல் பதிவு**

ஒரு சாதனத்தை கட்டுப்படுத்த அல்லாவிட்டாலும் அதன் செயல்பாட்டை பதிவு செய்ய எளிய வடிவிலான கணினியை பயன்படுத்தலை குறிக்கிறது.

**DATA PROCESSING**
**தகவல் முறையாக்கல்**

கெலிப்பெண்கள் / பிற தகவலை வெவ்வேறு முறைப் படுத்தும் முறைகளைப் பயன் படுத்தி அட்டவணை வடிவில் அடுக்கல். இதற்கான தெரிவு, அவற்றின் மாதிரி அளவு, கிடைக்கும் மாறிகளின் எண்ணிக் கை, கிடைக்கும் ஆய்வு வசதிகள், இவற்றைப் பொறுத்தது. இவற்றில் கையால்/யந்திரத்தால்/ கணினியால் வகை பிரிக்கும் துளை அட்டை பயன்பாடும் அடங்கும்.

**DATA TRANSFORMATION**
**தகவல் நிலைமாற்றம்**

கச்சா தகவலை பிற தகவலுடன் சேர்ந்து கணிக்கும் வகையிலோ புள்ளியியல் உத்தி களை அவற்றின்மேல் கையாளும் விதத்திலோ அவற்றின்மேல் நிகழ்த்தப்படும் நடவடிக்கை.

**DAY CARE CENTER**
**பகல் நேர குழந்தை பராமரிப்பு நிலையம்**

பள்ளி செல்லும் வயது வராத குழந்தைகளுக்கான மையம். வசதி குறைவான பெற்றோர் களின் குழந்தைகளுக்கு பெரும் பாலும் குறைந்த செலவில் பராமரிப்பு வழங்க இம்மையங்கள் உள்ளன.

**DAY DREAMS**
**பகல் கனவு**

கருத்துக்களையும் ஆசை களையும் வலிய கற்பனை செய் வதை குறிக்கிறது. இதில் ஒருவர் தன் கருத்துக்களையும ஆசை களையும் இறுதிவரை முயன்று உண்மையாகவே நிறைவு செய் வதற்குப் பதில் மாயக் கற்பனை யில் நிறைவு காண்கிறார்.

**DAY NURSERY / CRECHE**
**மழலையர் காப்பகம்**

பெற்றோர் கல்வியிலோ வேலை யிலோ ஈடுபட்டிருக்கையில் அவர்களின் பள்ளி செல்லும் வயது வராத குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் பள்ளி.

**DAY OF ACTION (OR OUTRAGE)**
**நடவடிக்கை நாள்**

ஒரு குறிப்பிட்ட குறை பாட்டின்மேல் கவனத்தை ஈர்க்க ஆர்ப்பாட்டம் அல்லது ஏதாவது ஒரு நேரடி நடவடிக்கை வடி வத்தை மாணவர்கள் கையாளும் நேரம்.

**DAY SCHOOL**
**பகற்பள்ளி**

உண்டுறை பள்ளி அல்லாத, மாணவர்கள் தம் வீட்டில் இருந்து சென்று வரும் பள்ளி.

**DAY STUDENT**
**பகல் மாணவர்**

உண்டுறை பள்ளியின் அரு கில் வசித்து ஆனால் அங்கு தங்கி யிராத மாணவரைக் குறிக்கிறது.

DEAN
தலைவர்
ஒரு பல்கலை / கல்லூரி அலுவலரில் ஒருவர் பொதுவாக மூத்த உறுப்பினர்- ஒழுங்கு, கவனிப்பு என்பதில் சிறப்பு பொறுப்பு உடையவர்.

DEANERY
**தலைவரகம்**
ஒரு தலைவர், அல்லது அவர் யாருக்கு பொறுப்பாவாரோ அந்த மாணவர் குழு வசிக்கும் இடம்.

DEAN'S LIST
**தலைவர் பட்டியல்**
குறிப்பிட்ட பருவத்தில் குறிப்பான குறைந்தபட்ச சராசரி பெற்ற கல்லூரி/ பல்கலை மாணவர் பட்டியலை தலைவர் தயாரித்ததை குறிக்கிறது.

DEAN INSTINCT
**சாவூக்கம்**
சாவையும் அழிப்பையும் நோக்கி உந்தும் உள்ளார்ந்த போக்கு. இதை Thanatos என்கிறார் பிராய்டு.

DECAY
**சிதைவு**
சித்திர நினைவிலிருந்து மூலம் தேடும் நினைவு நேரப் போக்கில் மறைவதைக் குறிக் கிறது.

DECENTRALISATION
**பரவலாக்கம்**
ஒரு மைய அதிகாரம் பள்ளி அமைப்பின் துணை அலகுகளுக்கு செயல் பொறுப்பையும் ஓரளவு முடிவு செய்யும் பொறுப்பையும் வழங்குவதை குறிக்கிறது. இவற்றில் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட நிலவியல் பகுதியில் பள்ளிகளை நடத்துகிறது. இதனால் அதிக அளவு சமூகக் கட்டுப்பாடு விளைகிறது.

DECENTERING
**மையம் விலகல்**
கருத்தாக்க உருவாக்க வளர்ச்சியில் ஒரு மனச்செயல் கட்டத்தை விலகுகிறது.

DECILE
**தசம பாகம்**
ஆய்வில் உள்ள மொத்த மக்களில் பத்தில் ஒரு பாகத்தைக் குறிப்பது.

DECIMAL SYSTEM
**தசம முறை**
பத்தை அடிமானமாகக் கொண்ட கணித குறிமானம்.

DECISION ORIENTATED STUDY
**முடிவு நோக்கிய ஆய்வு**
முடிவு செய்யும் நிலையில் ஆசிரியர்களுக்கோ நிருவாகிகளுக்கோ ஏற்பட்டுள்ள நடைமுறை சிக்கல் மீது விளக்கம் காட்டும் வகையில் உருவாக்கிய கல்வி ஆய்வு படிப்பு/ஆய்வுத் திட்டத்தைக் குறிக்கிறது.

DEPENDENT
**சார்ந்திருப்பவர்**
ஆதரவுக்கு மற்றவரைச் சார்ந்திருப்பவர்.

**DEPENDENCY**
**சார்பு நிலை**
ஒருவரின் தேவைகளை நிறைவு செய்ய மற்ற ஆட்களை/ பொருள்களை சார்ந்திருக்கும் தேவை.

**DEPENDENCY LEVEL**
**சார்பு அளவு**
கூலி/சம்பளகாரர்களாய் இன்றி பிறரை சார்ந்திருக்கும் மக்கள் தொகை வீதத்தைக் குறிக்கிறது.

**DEPENDENT VARIABLE**
**சார்பு மாறி**
ஒருநிகழ்ச்சியின் காரணமென கருதுவதன் விளைவாக கருதப் படும் மாறியைக் குறிக்கிறது.

**DEPOSITORY LIBRARY**
**வைப்பு நூலகம்**
ஒரு நாட்டின்/தேசத்தின்/ அரசாங்க துறையின் ஆவணங் களின் மொத்த கோப்பையும் வைத்திருக்கும் நூலகம்.

**DEPRIVATION**
**உரிமை இழப்பால் வருந்தல்**
பள்ளியிலிருந்து தனிமைப் பட்டு வளர்ச்சியிலும் நடத்தை யிலும் கோளாறுகள் விளை வதைக் குறிக்கிறது.

**DEPRIVED CHILD**
**உரிமை இழந்த குழந்தை**
மகிழ்ச்சியான குடும்ப பின் னணி நீங்கப்பெற்ற குழந்தை யைக் குறிக்கிறது.

**DEPTH PERCEPTION**
**தூரகாட்சி**
பார்ப்பவரிடமிருந்து பொருள் கள் இருக்கும் ஒப்பீட்டு தூரக் காட்சி.

**DEPTH PSYCHOLOGY**
**ஆழ்மன உளவியல்**
உணர்வற்ற மனத்தின் உந்து தலையும் போரட்டங்களையும் பற்றிய ஆய்வு.

**DESCRIPTIVE RESEARCH**
**விவரணை ஆய்வு**
தகவலை அட்டவணைப் படுத்தல், பெயர்த்துரைத்தல் மூலம் ஆழமான ஆய்வுக்கு அடிப்படையாக பயன்படும் அடிப் படை விவரங்களை திரட்டு வதுடன் தொடர்புடைய ஆய்வு.

**DESCRIPTIVE SURVEY**
**விவரணை அளவாய்வு**
ஒரு குறிப்பிட்ட தலைப் பிலான விவரங்களை அவசியம் அவற்றை விளக்கும் தேவை யின்றி முன்வைக்குமாறு உரு வாக்கிய அளவாய்வு.

**DESEGREGATION**
**பிரிவினை நீக்கல்**
முன்பு தனியாக இருந்த ஒரு வசதியை/அமைப்பை மீண்டும் ஒன்றாக்கும் நடைமுறை.

**DESIGNATORY LETTERS**
**தகுதி குறிப்பு கடிதங்கள்**
BSc என்றால் இளங்கலை

அறிவியல் என குறிப்பிட்ட பதவி/ தகுதியை குறிக்கும் கடிதங்கள்.

**DESIGNED EXPERIMENT**
**திட்டமிட்ட சோதனை**
ஆய்வாளர் மாறிகளை கை யாளும் விதத்திலான கல்வி ஆய்வு சோதனை.

**DE-SKILLING**
**திறன்/திறமை குறைத்தல்**
ஒரு பணிக்குத் தேவைப்படும திறன் அளவை குறைக்கும் முறையில் அதைச் செய்யும் முறைகளைத் தழுவுதல்.

**DESTINATION GROUPS**
**இலக்கு குழுக்கள்**
மாணவர்கள் வயது வந்தோராய் வாழும் சமூகக் குழுக்கள்.

**DETENTION CENTER**
**சிறைப்பிடித்தல் மையம்**
இளம் குற்றவாளிகள் ஒரு வழக்கு மன்றத்தால் சிறையில் அடைக்கப்படும் மையம்.

**DETERMINISM**
**தீர்மான வாதம்**
மதிப்பீடுகள், மனப்பான்மைகள், நடத்தை, வளர்ச்சி எதிர்வினைகள் யாவும் கடந்த கால அல்லது நிகழ்கால சூழ்நிலை காரணிகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்ற நம்பிக்கை.

**DETERMINISTIC MATERIAL**
**தீர்மானவாத சாதனங்கள்**
பங்கெடுப்போரை குறிப்பிட்ட திசைகளில் இட்டுச்செல்லும் ஒரு ஆட்டம் / பகர்ப்பின் சாதனங்கள்.

**DETERRENCE**
**தடுப்பு**
தொடக்கத் தண்டனைக்கு காரணமான விதமான நடத்தையை திரும்பத்திரும்ப செய்வதைத் தடுக்கும் / துணிவு கெடுக்கும் நோக்கமுள்ள தண்டனை வடிவம்.

**DETOUR BEHAVIOR**
**சுற்றிவளைத்த நடத்தை**
மறைமுக வழிகளில் கற்றல் இலக்கை சாதிக்கும் நடைமுறை.

**DEVELOPING COUNTRY**
**வளரும் நாடு**
கடந்த காலத்தில் வளர்ச்சி அடையாதிருந்த இயற்கை வளங்களை கொண்டு நாடு, தற்போது தொழில்மயம் மூலமும் தக்க கல்விவசதிகள் பரவல் மூலமும், முடிந்தவரை விரைவாக வளர்ந்து வரல்.

**DEVELOPMENTAL DYSPHASIA**
**கேட்கும் திறன் சார்ந்த வளர்ச்சி நிலைக் கோளாறு**
இது கேள்விப்புலனில் ஏற்பட்டு அதனால் மொழிவளர்ச்சி தாமதம் ஆகலாம்.

**DEVELOPMENTAL DYSLEXIA**
**படிப்பதில் ஏற்படும் வளர்ச்சி நிலைக் கோளாறு**
இதுதான் பள்ளியில் அதிகமாக கண்டுபிடிக்கப்பட்டு ஒரு தொல்லையாக கருதப்படுகிறது. எனவே dyslexia என்ற இந்த சொல்லே எல்லாவித கற்றல் ஊன நிலைகளுக்கும் பொதுவான குறிப்புச் சொல்லாக வழங்கப் படுகிறது.

**DEVELOPMENTAL PSYCHOLOGY**
**வளர்நிலை உளவியல்**
நடத்தையின் அடுத்தடுத்த கட்டங்களை ஆயும் உளவியல் பிரிவு.

**DEVELOPMENTAL STAGE**
**வளர்ச்சி நிலைகள் / பருவங்கள்**
ஒருவரின் வாழ்வில் குறிப் பிட்ட குணநலன்கள் கூடுதலாக இருக்கும் கட்டத்தைக் குறிக் கிறது.

**DEVELOPMENTAL STUDIES**
**வளர்நிலை ஆய்வுகள்**
மாத/ஆண்டு கணக்கில் கூட மாறிகள் வளரும் போக்கை காணும் ஆய்வு வகை.

**DEVELOPMENT ASSESSMENT**
**வளர்ச்சி மதிப்பீடு**
வளர்ந்துவரும் குழந்தை அடைந்திருக்கும் உடல்-அறிவு-சமூக-பிற வளர்ச்சி நிலை பற்றிய மதிப்பீடு.

**DEVELOPMENT CENTER**
**வளர்ச்சி மையம்**
பாடத்திட்டமும் அமைப்பு வளர்ச்சிகளும் சோதிக்கப்படும் பள்ளியைக் குறிக்கிறது.

**DEVELOPMENT CLASS**
**வளர்ச்சி வகுப்பு**
மனவளர்ச்சி குன்றிய / கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக் கான வகுப்பு.

**DEVELOPMENT EDUCATION**
**வளர்ச்சி கல்வி**
ஒரு நாடு / சமூகத்தின் பொருளியல்-அரசியல்-சமூக வளர்ச்சி காண்பதற்கென உரு வாக்கப்படும் கல்வி.

**DEVELOPMENT METHOD**
**வளர்ச்சி முறை**
மாணவர் வேலை கட்டங் களின் ஊடே சிரம வரிசையில் படிப்படியாக இட்டுச் செல்லப் படும் கற்பித்தல் முறை

**DEVIANCE**
**பிறழ்ச்சி**
புள்ளிவிவர இயல்பிலிருந்து மாறுபடும் நடத்தையை குறிக்கப் பயன்படுகிறது.

**DEVIANT**
**வேறுபடுபவர்**
ஒருவரிடமிருந்து இயல்பாக எதிர்பார்க்கப்படும் நடத்தை யுடன் இல்லாதவரைக் குறிக் கிறது.

**DEVIATION**
**வேறுபாடு**
பொது சராசரியாக உள்ள குறிப்பீட்டு மதிப்பிலிருந்து வேறுபடும் தனிநபர் கெலிப்பெண் அளவு.

**DEVIATION IQ**
**வேறுபடு நுண்ணறிவு வீதம்**
ஒருவரின் நுண்ணறிவு வீதம் (IQ) அவரது வயதினில் இயல்பான நிலையிலிருந்து வேறுபடும் அளவு.

**DEVIATION SCORE**
**வேறுபாட்டு கெலிப்பெண்**
மொத்த மக்களின் சராசரியில் இருந்து மாறுபடும் குறிப்பிட்ட கெலிப்பெண் அளவைக் குறிக்கிறது.

**DEWEY DECIMAL CLASSIFICATION**
**டேவி தசம வகைப்பாடு**
நூலகருக்குப் பயன்படும் வகைபாட்டு முறை. அறிவுதுறையை 10 முதன்மை பிரிவுகளாக பிரித்து பின் அவற்றை பத்து பத்து உட்பிரிவுகளாக பிரித்துச் செல்வதே இம்முறையாகும்.

**DEXTERITY**
**கைத்திறன்**
பொதுவாக கைகளின் சரளமான, திறமையான இயக்கத்தை குறிக்கிறது.

**DIAGNOSTIC ABILITY**
**நிலைஅறி திறன்**
ஒரு மாணவரின் நிறைகுறைகளை அறிய ஒரு ஆசிரியருக்கு/கல்வி சோதனைக்கு உள்ள திறன்.

**DIAGNOSTIC STUDIES**
**நிலைஅறி ஆய்வுகள்**
பகுதியாகவோ முழுமையாகவோ மாணவரின் திறமை / ஆர்வங்களை அறிய உருவாக்கிய ஆய்வுகள்.

**DIAGNOSTIC TEACHING**
**நிலைஅறி கல்வி**
மாணவர் திறன்களை அறிய உருவாக்கப்பட்ட கற்பித்தல் முறை.

**DIAGNOSTIC TEST**
**நிலைஅறி சோதனை**
பள்ளி வாழ்வின் நிறை குறைகளை இனம் காண உதவும் சோதனைகள்.

**DIALECTIC**
**முரண் தருக்கம்**
வெவ்வேறு மெய்யியலார் வெவ்வேறு பொருளில் கூறி இருக்கும் தருக்க விவாத ஆய்வு.

**DIALECT STUDIES**
**பேச்சுமொழி ஆய்வுகள்**
ஒரே மொழி வெவ்வேறு நில பகுதிகளில்/ வெவ்வேறு சமூகப் பிரிவுகளில் பேசப்படும் வெவ்வேறு விதங்களை ஆய்தல்.

**DIARY**
**குறிப்பேடு**
மாணவரின் பள்ளி வேலை-

வீட்டு வேலைகளை பதிய பள்ளியில் ஆசிரியர் பயன்படுத்தும் ஏடு.

**DICHOTOMIZE**
**பாகுபடுத்து**
ஒரு சதவீத அளவை நடு எண்ணுக்கு மேல்-கீழ் என இரண்டாக பிரிக்கும் பிரிவினை.

**DIFFERENTIAL APTITUDE TEST**
**பலதிற நாட்டச்சோதனை**
மனத்திறத்தின் பல கூறுகளையும் தனித்தனியாக அளவிட உதவும் புறநிலைத் தேர்வு. நுண்ணறிவு என்பது பல திற கூறுகளின் மொத்தமே என்பது இதன் துணிவு.

**DIFFERENTIAL CURRICULUM**
**மாறுபடும் பாடத்திட்டம்**
குறிப்பிட்ட மாணவர்களின் திறமைகள், ஆர்வங்கள், தேவைகள், பணி இலக்குகளுக்கு ஏற்ப மாற்றும் கல்வித்திட்டம்.

**DIFFERENTIAL PARTNERSHIP**
**மாறுபடும் சோடிமுறை**
மாணவர்கள் இரண்டு இரண்டு பேராக செயல்பட்டு, குறிப்பிட்ட நடைமுறைப்படி ஒருவரை ஒருவர் கேள்வி கேட்பதன் மூலம் கற்பிக்கும் முறை

**DIFFERENTIAL PSYCHOLOGY**
**மாறுபாட்டு உளவியல்**
மனித, விலங்கு நடத்தையின் உளவியல் கூறுகளின் தனியாள் வேறுபாடுகளின் தன்மை மற்றும் தோற்றங்களை ஆயும் உளவியல் பிரிவு.

**DIFFERENTIAL SAMPLING**
**மாறுபாட்டு மாதிரி**
மக்களின் குறிப்பிட்ட தன்மையின் கவனம் செலுத்த வேண்டுமென்றே திரிக்கப்படும் மாதிரி மக்கள்தொகை.

**DIFFERENTIATING STATEMENTS**
**மாறுபடுத்தும் வாசகங்கள்**
தொடர்புடைய ஒரு கருத்தை மற்றதிலிருந்து வேறுபடுத்தும் வாசகங்களைக் குறிக்கிறது.

**DIFFERENTIATION**
**வேற்றுமைப்படுத்தல்**
ஒருவரிடம் உள்ள வேறுபடும் மனதிறன்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதை குறிக்கிறது.

**DIFFICULTY INDEX**
**சிக்கல் குறியீடு**
குறிப்பிட்ட தேர்வு கேள்விக்கு சரியாக விடையளிக்கும் ஒரு குழுவில் உள்ள உறுப்பினர்களின் சதவீதம்.

**DIFFICULTY SCORE**
**சிக்கல் கெலிப்பெண்**
குறிப்பிட்ட மாறியில் ஒருவர் அடையும் அதிக அளவு சிக்கலைக் குறிக்கும் குறிப்பெண்.

**DIFFUSE SKILLS**
**பரவல் திறன்கள்**
ஆட்களை ஈடுபாட்டுடன் வைத்தல், பொருள்களை விற்றல், தலைமை ஏற்று நடத்தல் போன்ற சமூகத் திறன்கள்.

**DIFFUSION**
**பரவல்**
உணர்வு பரப்பலையும் புதிய பாடத்திட்ட, கற்பித்தல் முறை களை பயன் படுத்தலையும் குறிக்கிறது.

**DIFFUSION INDEX**
**பரவல் குறிகாட்டி**
ஒரு எண்ணிக்கையில் உள்ள பெருவாரி புள்ளியியல் தொடரின் போக்கின் திசையை தொகுத்து ரைக்கும் சாதனம்.

**DIRECT ACTION**
**நேரடி செயல்பாடு**
அதிகாரபூர்வ சட்ட அரசாங்க நடைமுறைகள் மூலமாக அன்றி நேரடியாக ஒரு அநீதியை எதிர் கொள்ளும் முயற்சி.

**DIRECT COSTS**
**நேர்விலை**
விளக்கத்துக்கு தக அதிகரிக் கும் விலைகளைக் குறிக்கிறது.

**DIRECTED OBSERVATION**
**நெறிப்படுத்திய காட்சிமுறை**
விளக்கத்துக்கு உதவுமாறு மாணவர் காட்சிக்கு ஆசிரியர் உதவல்.

**DIRECTED TEACHING / DIRECT TEACHING**
**நெறிப்படுத்திய/நேரடி கல்வி**
ஆசிரியரின் வழிகாட்டலும் நெறிப்படுத்தும் வலுவாக இருக்கும் கற்பித்தல்.

**DIRECT METHOD**
**நேரடி முறை**
அயல்மொழிக் கல்வியில் முதலில் இருந்தே ஆசிரியர் மாணவர்களிடம் தாய்மொழியில் கற்பிக்காமல் அந்த அயல் மொழியில் மட்டுமே கற்பித்தல்.

**DIRECTOR**
**இயக்குநர்**
கல்வி, ஆய்வு அல்லது பிற நிறுவன முதல்வர் / தலைவரைக் குறிக்கிறது.

**DISADVANTAGED CHILD**
**பாதிக்கப்பட்ட குழந்தை**
கல்வி ரீதியில்/சமூக ரீதியில்/ இரண்டு ரீதியிலும் பாதக நிலையில் உள்ள குழந்தை.

**DISCIPLINE**
**ஒழுங்கு/ கட்டுப்பாடு**
வகுப்பறையை/பொதுவாக மாணவர்களின் நடத்தையை ஆசிரியர் கட்டுப்படுத்துவதைக் குறிக்கிறது.

**DISCIPLINE ORIENTED**
**பாடத்துக்கு முதன்மைதரும்**
மாணவர்களின் கற்கும் தேவை களுக்கு முதன்மை தருவதைவிட

குறிப்பிட்ட பாடம்/துறைக்கு முதன்மை தரும் கல்வி.

**DISCOURSE**
**சொல்லாடல்**
ஒரு செயல்பாட்டில் பயன் படும் மொழிவகையைக் குறிக் கிறது. எ.கா: அறிவியல் சொல் லாடல்.

**DISCOVERY LEARNING**
**கண்டுபிடிப்பு முறையில் கற்றல்**
கற்க வேண்டியதன் முதன்மை உள்ளடக்கம் தரப்படாமல், கற் பவர் தானே அதை கண்டுபிடிக்க வேண்டும், பிறகே அதை உள் வாங்க முடியும் என்னும் கல்விச் சூழலை குறிக்கிறது. முற்றிலும் கட்டற்ற முறையில் இருந்து மாணவரிடம் சிக்கல்தரப்பட்டு தீர்வுக்கு ஆசிரியர் வழிகாட்டும் முறைவரை வகுப்பறை முறை கள் மாறுபடலாம்.

**DISCRETIONARY GRANT**
**விருப்புரிமை வழங்கல்**
கொடை வழங்கும் அமைப் பின் விருப்புரிமையின் படி தரப்படும் கொடை.

**DISCRIMINATION**
**வேறுபடுத்தி உணர்தல்**
தூண்டல்களுக்கும் பொருள் களுக்கும் இடையிலான லேசான வேறுபாடுகளைக் காணும் திறன்.

**DISCRIMINATION POWER**
**பிரித்தறி திறன்**
சராசரிக்கு மேலும் கீழுமான நடைமுறை, மனப்பான்மை, ஆர்வர் முதலியவற்றை பிரிக்கும் சோதனை/தேர்வு திறன்.

**DISCRIMINATORY (OR DIS-CRIMINATION) ANALYSIS**
**பிரித்தறிதல் ஆய்வு**
பலவகை மக்களில் ஒருவகை யினரின் தனித்தன்மைகளை வகைப்படுத்தவோ வெவ்வேறு மக்களை வகை பிரிக்கவோ பயன்படும் புள்ளியியல் முறை.

**DISPLACEMENT**
**இடப்பெயர்ச்சி**
பதற்றத்தின் மூல இடத்தி லிருந்து ஒரு ஆள்/ பொருள் இடமாற்றப்படும் தற்காப்பு செயல் பாடு.

**DISPOSITION**
**மனச்சாய்வு**
ஆயத்தமான நிலைக்கான வாய்ப்பைக் குறிக்கிறது.

**DISPUTATION**
**வாக்குவாதம்**
ஒரு மாணவர் தான் தயாரித்த ஆய்வுக்கட்டுரை போன்றவற்றை ஆய்வருடன் வாய்மொழி விவாதம் மூலம் ஆதரிக்கும் கற்பித்தல் முறை.

**DISSEMINATION PROJECT**
**பரப்பல் திட்டம்**
தகவல் திரட்டல், ஒழுங்கு

படுத்தல், பரப்புதலுடன் தொடர்புடைய திட்டம்.

**DISSERTATION/THESIS**
**ஆய்வுரை**
ஒரு சிக்கல் பற்றிய அசலான ஆய்வு, முற்றுப்பெறாத ஒரு ஆய்வு விசாரணை, பல்கலை உயாபட்டடத்துக்கோ பிற உயர் கல்வி நிறுவனத்திலோ தேவைப் படுவது.

**DISSONANCE**
**ஒத்திசைவின்மை**
இரு ஒத்துவராத அறிதல் களில் எண்ணத்தாலோ நடத்தை யாலோ விளையும் தொந்தர வைக் குறிக்கிறது.

**DISTRIBUTED PRACTICE**
**பகிரப்பட்ட நடைமுறை**
கற்றல் பணியின் இடையில் ஒய்வு இடைவேளைகள் அனு மதிக்கப்படும் நிலையைக் குறிக் கிறது.

**DISTRIBUTION**
**பங்கீடு**
சாத்தியமான மதிப்பீடுகள் அல்லது அளவீடுகளின் உலகிலி ருந்து தொகுப்பட்டவற்றை குறிக்கிறது. இவை உலகுக்குள் தொகுப்பின் கூறுகள் வெளிப் படுத்தும் ஏற்பாட்டு அமைப்பில் முக்கிய கவனத்துடன் சற்று கூடுதல் இணக்கத்துடன் பயன் படுத்தப்படுகிறது.

**DISTRIBUTIVE EDUCATION**
**பங்கீட்டு கல்வி**
பங்கீட்டு தொழிலில் குறிப் பாக சில்லறை தொழில்களில் வேலைக்கான கல்வி பயிற்சி யைக் குறிக்கிறது.

**DISTRIBUTIVE FUNCTION (OR EDUCATION) OR SELECTIVE FUNCTION**
**பங்கீட்டு செயல்பாடு (கல்வி)/தேர்வு செயல்பாடு**
ஒரு சமூகத்துக்கோ அதிலி ருக்கும் சிறப்பு குழுக்களுக்கோ தேவைப்படும் சிறப்புத் திறன் களை / கல்வியை வழங்கும் செயல்பாடு.

**DIVERGENT THINKING**
**விரிசிந்தனை**
ஒரே சரியான விடை இல்லாத சிக்கல்களுக்கு பல தீர்வுகளை வழங்கும் சிந்தனை முறையைக் குறிக்கிறது.

**DIVERGER**
**விரிவாளர்**
ஒரே சரியான விடை உள்ள சிக்கல்களை தீர்ப்பதைவிட பலவிடை இயலும் சிக்கல்களை கையாள்வதில் அதிக சிறப்பாக செயல்படும் போக்கினர்.

**DOCTORATE / DOCTORAL DEGREE**
**முனைவர்/தகுதி பட்டம்**
பல்லாண்டு ஆய்வுக்கும் அதைத் தொடரும் ஆய்வு

ரைக்கும் பின் கிடைக்கும் உயர் பட்டம். (அந்த ஆய்வுரை முனைவர் பட்டத்துக்கான ஆய்வுரை எனப்படும்). மிகப் பொதுவான முனைவர் பட்டம் மெய்யியல் முனைவர் (Ph.D) என்பது மற்றும் D.Phil, D.Sc (அறிவியல் முனைவர்), D.Litt (இலக்கிய முனைவர்) போன்ற பட்டங்களும் உள்ளன.

**DOCUMENTATION CENTER**
**ஆவண பதிவு மையம்**
மூல ஆவணங்கள் கிடைக்கச் செய்யும் கருத்துவள மையம்.

**DOGMA**
**மத/வறக் கோட்பாட்டு**
தகவலாகவோ தனியாள் அனுபவமாகவோ சரியான சான்றான ஆதாரம் இன்றி உண்மை என்னும் அதிகார பூர்வமானதாகவும் கருதப்படும் நம்பிக்கை/அபிப்பிராயம்.

**DOLL PLAY**
**பொம்மைவிளையாட்டு**
பொம்மை விளையாட்டுக்குள் குழந்தைகள் தம்முன் வைக்கப்படும் வாழ்க்கை சூழ்நிலைகளை கையாளும்படி குழந்தை வளர்ச்சியில் பொம்மைகளைப் பயன்படுத்தும் சோதனை.

**DOMESTIC SCIENCE**
**மனைஇயல்**
சமையல், துப்புரவு முதலான வீட்டுப்பணிகள் தொடர்பான பள்ளி/கல்லூரிப் படிப்பு.

**DOMINANCE**
**ஆதிக்கம்**
மூளை / உடலின் ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்த முந்துவதை குறிக்கிறது. எ.கா: வலது கை பழக்கம்.

**DOMINANT GENE**
**முனைப்பான மரபணு**
தன் மரபு குணங்களை எப்போதும் வெளிப்படுத்தும் மரபணு.

**DOMINOES TEST**
**டாமினோ சோதனை**
சதுரங்கம் போன்ற டாமினோஸ் என்ற ஆட்டத்தை சோதனைக்குட்படுபவர் முடிக்க வேண்டிய சொல் சாரா நுண்அறிவு சோதனை வகை.

**DOTTING TEST**
**புள்ளியியல் சோதனை**
சோதனைக்குள்ளான கார் பேனாவால் புள்ளி வரையும் வேக சோதனை அல்லது நகரும் தாளில் குறிப்பிட்ட வடிவில் புள்ளிகள் அமைக்கும் திறன் சோதனை.

**DOUBLE HONOURS DEGREE**
**இரட்டை கவுரவப் பட்டம்**
ஏறக்குறைய ஒரே அளவில் இரு பாடங்களை படித்தபின் வழங்கும் கவுரவ பட்டம்.

**DOUBLE SESSION DAY/DOUBLE SESSIONS**
**இரட்டை அமர்வு (நாள்)**
பள்ளி நாளை இரு அமர்வாக

பிரித்து இரு வெவ்வேறு குழு மாணவர்களுக்கு ஒரே இட, வசதிகளை பயன்படுத்தல்.

**DOUBLE SITTING**
**இருமுறை பங்கேற்றல்**
இரண்டு தேர்வுகளில் ஒன்றில் தோற்றுவிட்டாலும் மற்றதில் வெல்லும் வாய்ப்பில் ஒரே பாடத்தில் இரண்டு தேர்வுகள் எழுதுவதைக் குறிக்கிறது.

**DOUBLE TRANSLATION**
**இருவழி மொழிபெயர்ப்பு**
மொழி கற்பிப்பதில் ஒருமுறை இதில் மாணவர் அயல் மொழி பகுதி ஒன்றை தன் தாய் மொழியில் பெயர்க்கிறார். பின் அதை மீண்டும் அந்த அயல் மொழியில் பெயர்க்கிறார்.

**DOWNWARD MOBILITY**
**கீழ்நோக்கிய அசைவு**
ஆட்கள்/குழுக்கள் மேலிருந்து கீழ் தகுதிக்கோ சமூக வகுப்புக்கோ இறங்குவதைக் குறிக்கிறது.

**DRAW-A-MAN TEST**
**மனித உரு வரையும் சோதனை**
3-18 வயது குழந்தைகளின் நுண்ணறிவை மதிப்பிடப் பயன் படும் வரைதல் சோதனை. மனித உருவை மிகச் சிறப்பாக வரைவது ஒரு தரப்படுத்திய மதிப்பெண் முறைப்படி மதிப்பிடப்பட்டு நுண்ணறிவு திறன் கணக்கிடப் படுகிறது.

**DREAM ANALYSIS**
**கனவுப் பகுப்பாய்வு**
உளவியல் ஆய்வில் பயன் படும் முறை. இதில் கனவில் உள்ளடக்கம் ஆயப்பட்டு ஒருவரின் உணர்ச்சி சிக்கல்களின் அடிப்படைகள் பற்றிய தகவல்கள் பெறப்படுகின்றன.

**DRESS CODE**
**உடுப்பு விதிமுறை**
உடை, முடி, சுத்தம் உட்பட தனிப்பட்ட தோற்றம் பற்றிய பள்ளி விதிமுறைகள்.

**DRIVE REDUCTION THEORY**
**உந்தல் குறைப்பு கோட்பாடு**
கற்றல் நடைபெற ஒரு உந்தல் நிறைவு செய்யப்பட வேண்டும் என்னும் உளவியல் கருத்து.

**DRIVES**
**உந்தல்கள்**
தூண்டப்பட்டால் செயலுக்கு இட்டுச்செல்லும் உள்நிலைகள்.

**DROP OUT (TO DROP OUT)**
**பாதியில் விடல் (விட்டவர்)**
உயர்நிலைப் படிப்பை முடிக்கும் முன் பள்ளியை விட்டு நின்றுவிடுவதைக் குறிக்கிறது.

**DRUG ADDICTION / DEPENDENCE**
**போதை அடிமைநிலை**
போதைப் பொருள்களை உடல்-மனம் சார்ந்திருக்கும் நிலை.

**DRUG-HANDICAPPED STUDENT**
**போதையால் கெட்ட மாணவர்**

போதைப் பொருளுக்கு பழகி விட்டதால் படிப்பில் முன்னேற்றம் பாதிக்கப்பட்ட மாணவர்.

**D.Sc**
**அறிவியல் முனைவர்**

அறிவியல்-தொழில்நுட்பத் தில் தனிச்சிறப்பான பங்களிப்பு செய்தவருக்கு வழங்கும் பல் கலை பட்டம். பண்பாட்டுக் கலைகளில் இதற்கு இணையான பட்டம் D.Litt.

**DUAL ENROLMENT**
**இரட்டை சேர்க்கை**

ஒரே நேரத்தில் மாணவர் இரண்டு பள்ளிகளில் சேர்வதைக் குறிக்கிறது.

**DUALISM**
**இருமைக் கொள்கை**

நன்மை X தீமை போல் உலகில் எல்லாவற்றிலும் 2 அடிப்படையான எதிரெதிர் தத்துவங்கள் உள்ளன என்னும் மெய்யியல் நோக்கு.

**DUCTLESS GLANDS**
**நாளம் அற்ற சுரப்பிகள்**

ரத்த ஓட்டத்தில் ஊக்கிகளை (ஹார்மோன்களை) கலப்பதன் மூலம் வாலிப வயதில் உடல் வளர்ச்சியில் உள் மாற்றங்களுக்கு காரணமாகும் சில அகச் சுரப்பிகள். அவை. பிட்யூட்டரி, அட்ரினல், கொனாடு சுரப்பிகள் (மூளை அடி, சிறுநீரக மேல், பாலுறுப்பு சுரப்பிகள்)

**DULNESS**
**மந்தம்**

உள்ளார்ந்த அறிவு மந்தம் உடைய மெதுவாக கற்கும் குழந்தையை குறிக்கிறது. இதற்கு சிறப்பு பயிற்சி அளித்தாலும் அது அறிவுகூர்மை பெறாது.

**DUNCE**
**மடையன்**

தேர்ச்சித்திறன் உள்ளாற்றல் சிறிதும் அற்ற அல்லது சிறிதே உள்ள மாணவரைக் குறிக்கிறது.

**DUO DECIMAL SYSTEM**
**பன்னிரண்டு அடிமானம்**

பத்துக்குப் பதிலாக பன்னிரண்டை அடிமானமாகக் கொள்ளும் கணித எண்மானம்.

---

# E

---

**EARLY ADOLESCENE**
**முன்விடலைப் பருவம்**

தோராயமாக 12-16 வயதிலுள்ள விடலை பருவரைக் குறிக்கிறது.

**EARTH SCIENCE**
**மண்நிலை அறிவியல்**
புவியின் மேற்பரப்பு மற்றும் ஓட்டின் தன்மை ஆயும் புவியியலைக் குறிக்கிறது.

**ECHOIC RESPONSES**
**எதிரொலி எதிர்வினை**
மொழி கற்கும் ஒரு முறை. இதில் பிறர் எழுப்பும் ஒலியை அப்படியே ஒலிக்கும் குழந்தைக்கு உடனே ஒப்புதல் தருவதன்மூலம் பேச்சை திரும்ப பேசுவது ஊக்குவிக்கப்படுகிறது.

**ECOLOGY**
**சூழலியல்**
உயிரிகளுக்கும் அவற்றின் சுற்றுப்புறத்துக்கும் இடையிலான உறவு பற்றிய இயல்.

**ECONOMETRICES**
**பொருளியல் அளவையியல்**
கணிதவியல்-புள்ளிஇயல் முறைகளை பொருளியல் மாறிகளுக்கு இடையிலான உறவுகளை நிறுவப் பயன்படுத்தும் பொருளியல் கிளையைக் குறிக்கிறது.

**ECONOMIC HISTORY**
**பொருளியல் வரலாறு**
சமுதாயங்களின் பொருளியல் வளர்ச்சி என்ற நோக்கு நிலையிலிருந்து வரலாற்றை ஆய்வதை குறிக்கிறது.

**ECONOMICS OF EDUCATION**
**கல்விப் பொருளியல்**
மனித மூலவளங்களின் பொருளியலையும் குறிப்பிட்ட பொருளியில் நியதிகளைப் பொறுத்த திட்டமிட்ட கல்வியையும் பற்றிய ஆய்வு. இக்கல்வி, குறிப்பிட்ட பொருளியல் இலக்குகளுடன் தொடர்புடையது. கல்வி முறை மற்றும் வளர்ச்சியைப் பொறுத்த வரை முதலீடு, மூலவளம், துய்ப்பு ஆகியவற்றை பரிசீலிப்பது.

**ECO SYSTEM**
**சூழல் அமைப்பு**
சூழலியலின் அடிப்படை அலகு. உயிருள்ள-உயிரற்ற கூறுகளை உடையது. இவை பரஸ்பரம் வினைபுரிந்து ஒரு நிலையான அமைப்பை உருவாக்குகின்றன.

**ECTODERM CELLS**
**புறத்தோல் அணுக்கள்**
அணுக்கரு வளர்ச்சியின்போது வளரும் புற அணு அடுக்கை குறிக்கிறது. இதுவே பின்பு புலன்உணர் அமைப்பாகிறது.

**EDRIDGE-GREEN LANTERN TEST**
**எட்ரிஜ் - கிரீன் விளக்கு சோதனை**
நிற பார்வைத் திறன் சோதனை. இதில் ஒருவரிடம் வெவ்வேறு நிறமும் வெளிச்ச அளவும் கொண்ட விளக்குகள் தரப்பட்டு சோதிக்கப்படுகின்றன.

**EDUCABLE CHILD**
**கற்பிக்கத்தக்க குழந்தை**
மிதமான மன வளர்ச்சிக் குறைவுள்ள குழந்தை. இதற்கு அடிப்படை கல்வியில் ஓரளவு திறன் பெற முடியும்.

**EDUCANDS**
**கற்போர்**
கல்வி கற்கும் மாணவர் அல்லது எந்த ஒருவரும்.

**EDUCATION**
**கல்வி (இயல்)**
மனித திறன் மற்றும் நடத்தையை மேம்படுத்தும் அனைத்து நடைமுறைகளும் இதில் அடங்கும். யுனெஸ்கோவின் கருத்தில், வாழ்வின் எல்லா செயல்பாடுகளுக்கும் பயன்படும் அறிவுத்திறன் மற்றும் புரிதல் சேர்க்கையை வழங்க திட்டமிட்ட ஒழுங்கான-சீரான கற்பித்தல்.

**EDUCTIONAL ACCOUNTABILITY**
**கற்பித்தல் பொறுப்பு**
மாணவர்களில் குறிப்பிட்ட விளைவுகளை கொணரும் பொறுப்பை ஏற்றல்.

**EDUCATIONAL ADMINISTRATION**
**கல்வி நிர்வாகம்**
கல்வி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் மேலாண்மை மற்றும் ஒழுங்கமைப்புக்கான கோட்பாடு மற்றும் நடைமுறையை குறிக்கிறது.

**EDUCATIONAL AGE (EA)**
**கல்வி வயது**
தரப்படுத்தப்பட்ட தேர்ச்சி சோதனைகளால் தீர்மானிக்கப்பட்ட குறிப்பிட்ட வயதுடைய குழந்தைக்கு குறிப்பிட்ட கல்வி நிலை என்ற சராசரி வயதுடைய பள்ளிக் குழந்தை.

**EDUCATIONAL ANTHROPOLOGY**
**கல்வி மானுடவியல்**
கல்வி நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளின் ஆய்வில் மானுடவியல் கருத்துகளையும் முறைகளையும் பயன்படுத்துவதை குறிக்கிறது.

**EDUCATIONAL ASSESSMENT**
**கல்வி மதிப்பீடு**
தனி ஒருவரின் திறனையும் கல்வித் தேர்ச்சியையும் மதிப்பிடும் எந்த ஒரு செயல்பாட்டையும் குறிக்கிறது.

**EDUCATIONAL COUNSELLING**
**கல்வி அறிவுரை**
படிப்பு வளர்ச்சி மற்றும் தொழில்கல்வி தெரிவில் அறிவுரை வழங்குவது பற்றிய கோட்பாடு மற்றும் நடைமுறை.

**EDUCATIONAL DANCE**
**கல்வி நடனம்**
ஒழுங்கான-கோவையான மொழிவழி குழந்தைகளில் அசையும்

கலையை வளர்க்க உருவாக்கிய நடனத்தைக் குறிக்கிறது.

**EDUCATIONAL DEFERMENT**
**கல்விக்காக ஒத்திபோடல்**
கல்லூரி, பல்கலை மாணவர்களுக்கு பாட சேவையிலிருந்து தற்காலிக விலக்களித்தல்.

**EDUCATIONAL DEVELOPMENT**
**கல்வி வளர்ச்சி**
ஒரு மதிப்புக்குரிய அளவுகோலின்படி கல்வி முறையின் சில தன்மைகளை ஒரு உடன்பாடான திசையில் மாற்றுவதைக் குறிக்கிறது.

**EDUCTIONAL GERONTOLOGY**
**கல்வி மூப்பியல்**
வயதானவர்களுக்காக/வயதானவர்கள் பற்றிய கல்வி முயற்சிகளின் ஆய்வும் நடைமுறையும்.

**EDUCATIONAL GYMNASTICS**
**கல்வி உடற்பயிற்சி**
யந்திரத்தனமாக திருப்பிசெய்யும் பயிற்சியை விட தனிப்பட்ட பயிற்சி வெளிப் பாட்டுக்கு முக்கியமளிக்கும் உடற்கல்வி முறை.

**EDUCATIONAL LADDER**
**கல்வி ஏணி**
தொடக்க நிலையில் இருந்து உயர்நிலை கல்விக்கு குழந்தை முன்னேறும் முறையை விளக்க பயன்படுகிறது.

**EDUCATIONALLY DISADVANTAGED**
**கல்வியில் பாதகமான**
கல்வி வாய்ப்புகள் அதிகம் இல்லாத மனிதரைக் குறிக்கிறது.

**EDUCATIONALLY SUBNORMAL (ESN)**
**கல்வியில் சராசரிக்குக் கீழ்**
மனத்திறன் குறைவால் தனிப் பள்ளிகளுக்கு பரிந்துரைக்கப்படும் குழந்தைகள். இவர்களின் நுண்ணறிவு ஈவு 45-80 என இருக்கும்.

**EDUCATIONL MANAGEMENT**
**கல்வி மேலாண்மை**
நிலவும் கல்வி நிறுவனம் மற்றும் முறைகளின் அமைப்பு மற்றும் மேலாண்மையின் கோட்பாடு மற்றும் நடைமுறை.

**EDUCATIONAL MEASUREMENT**
**கல்வி அளவீடு**
கல்வியில் பொருத்தமான மனிதப் பண்பு எதையும் அளவீடாக்கும் நடைமுறை.

**EDUCATIONAL OBJECTIVES**
**கல்வி நோக்கங்கள்**
கற்றல் அனுபவத்தின் விரும்பிய விளைவு பற்றிய அறிக்கை. இது மாணவர் திறன்களின் வளர்ச்சி என்ற முறையிலோ அறிவை பெறுதல் என்ற முறையிலோ வெளிப்படுத்தப் படுகின்றன.

**EDUCATIONAL PLANNING**
**கல்வித் திட்டமிடல்**

முன் அறிவித்த வருங்கால கல்வித் தேவைகளுக்கேற்ப திட்டங்களை வகுப்பதும் ஏற்பாடு செய்வதும் இதில் அடங்கும்.

**EDUCATIONAL PSYCHOLOGIST**
**கல்வி உளவியலாளர்**

குழந்தை, கல்வி வழிகாட்டு தல் பணிபுரியும் - தனியாள் கல்வி வளர்ச்சி சிக்கல்களில் அக்கறை உள்ள உளவியலாளரைக் குறிக் கிறது.

**EDUCATIONAL PSYCHOLOGY**
**கல்வி உளவியல்**

கல்வி வளர்ச்சி மற்றும் நடத்தையை அதன் அனைத்து அம்சங்களிலும் ஆயும் இயல்.

**EDUCATIONAL QUOTIENT (EQ)**
**கல்வி ஈவு**

கல்வி வயதை (EA) உடல் வயதால் வகுத்து கிடைப்பது.

**EDUCATIONAL RESEARCH**
**கல்வி ஆய்வு**

பண்பாட்டு கலைகளிலும் அறிவியல்களிலும் ஆன ஆய்வுக் குப் பொதுவான பலவித முறை களை பயன்படுத்திக் கல்விக் கோட்பாட்டின் வெவ்வேறு கிளை களையும் ஆய்வதன் மூலமாக கல்வி முறைகளையும் நடை முறை களையும் ஆய்வதைக் குறிக்கிறது.

**EDUCATION SYSTEM**
**கல்வி முறை**

ஒரு சமுதாயம் தன் உறுப்பினர் களுக்கு மனித செயல்பாட்டின் பல்வேறு காலங்களில் முறைப் படுத்திய - கட்டுப்பாடான கல்வி யை வழங்கும் அனைத்து முறை களையும் கருவிகளையும் குறிக் கிறது. சமூக அமைப்புகளையும் அவற்றை நியாயப் படுத்தும் மதிப்பீடுகளையும் பேணுவதும் (செயல்பாட்டு மற்றும் நடை முறை கூறுகள்) ஏற்பதும் (அறவியல் கூறுகள்) இதன் நோக்கமாகும்.

**EDUCATIONAL TECHNOLOGY**
**கல்வி நுட்பவியல் / தொழில்நுட்பம்**

திரைப்படம், துண்டுபடம், மற்றும் உள்ள ஒளி-ஒலி சாதனங் கள் போன்ற வன்பொருள்களை கல்வியிலும் கற்பித்தலை வடி வமைத்தல் மற்றும் ஒழுங்கு படுத்தல் தொடர்பான நடத்தை - பொறியியலிலும் பயன்படுத்து வதைக் குறிக்கிறது.

**EDUCATIONAL TELEVISION (ETV)**
**கல்வித் தொலைக்காட்சி**

கல்வி/ தகவல் நிகழ்ச்சிகளை தொலைக்காட்சி மூலம் ஒளி பரப்புவதைக் குறிக்கிறது.

**EDUCTIONAL TESTING SERVICE**
**கல்வி சோதனை சேவை**

கற்பிக்கும் சாதனங்களையும்

கற்கும் முறைகளையும் மதிப்பிடுவது தொடர்பான வணிக / வணிகம் சாரா அமைப்பு.

**EDUCATIONAL THOUGHT**
**கல்விச் சிந்தனை**
கல்வி மெய்யியல் படிப்பை குறிக்கிறது. பெரும் மெய்யியலார் மற்றும் கல்வியாளர்களின் கருத்துகளையும் உரைகளையும் தெரிவிக்கும் பழைய முறை பாடத்திட்டத்தின் அடிப்படையில் இது அமைந்தது.

**EDUCATIONAL TOYS**
**கல்விசார் பொம்மைகள்**
கல்வி மற்றும் விளையாட்டு நோக்கத்துக்கான பொம்மைகள்/ விளையாட்டுகள்.

**EDUCATION STUDENT**
**கல்வி மாணவர்**
மாணவ ஆசிரியர் அல்லது தொழில் முறை தகுதி வழங்காத கல்விக் கோட்பாட்டுப் படிப்பில் ஈடுபடும் மாணவர்.

**EDUCOLOGY**
**ஆசிரியர் திறனியல்**
கற்பித்தல் திறன்கள் பற்றிய கோட்பாட்டு ஆய்வு அல்லது கற்பிக்கும் நடைமுறை பற்றிய கோட்பாடு.

**EFFECTOR FIBRES**
**நிகழ்த்து நாரிழைகள்**
மைய நரம்ப மண்டலத்தில் இருந்து தசைகளுக்கு செல்லும் நாரிழைகள்.

**EFFICIENCY**
**செயல்திறன்**
ஆற்றலுடன் ஒப்பிடும்போது விளைவின் வீதம்.

**EFFICIENCY BAR**
**திறன் எல்லை**
ஒரு ஆசிரியரின் ஊதிய உயர்வு அளவின் மட்டுப்படுத்தும் நிலை. ஆசிரியரின் செயல் திறனை மெய்ப்பிப்பதன்மூலமே இதை கடக்க முடியும்.

**EGALITARIANISM**
**சமத்துவவாதம்**
மக்கள் அரசியல் சமூக-கல்வி வளர்ச்சியில் சமமானவர்கள் என்ற கருத்து.

**EGO**
**அகம்**
நடத்தையையும் அனுபவத்தையும் நடத்துவது அகம். இதை உணர்வு மனம் என்றார் பிராய்டு.

**EGOCENTRICISM**
**தன்மையவாதம்**
இன்னொருவரின் நிலைபாட்டிலிருந்து விசயங்களை பார்க்க முடியாமையைக் குறிக்கிறது.

**EGOCENTRIC SPEECH**
**தன்மைய பேச்சு**
சமூகத் தொடர்புக்கு உதவும் சமூக மய பேச்சுக்கு எதிரான தனிப்பட்ட தொடர்பு நோக்கமுள்ள எந்த பேச்சையும் குறிக்கிறது.

**EGO CONSCIOUSNESS**
**தன் உணர்வு**
தான் என்பதை அனுபவப் பொருளாக அறிவதை குறிக் கிறது.

**EGO-IDEAL**
**தன் இலக்கு**
தன் சொந்த ஆசைகள்-நோக்கங்களின் ஆகச் சிறந்த லட்சிய வடிவமாக ஒருவர் யாரைக் கருதுகிறாரோ அவர்.

**EGO INTEGRITY**
**தன் நேர்மை**
தான் யார், தான் யாராக இருக்க முடியும் என்ற தன்னைப் பற்றிய உண்மையை ஏற்கும் திறன். வாழ்வின் பலவேறு துறைகளில் தகுந்த தலை மையை பின்பற்றுவதுடன் தான் இருக்க முடியும் இடத்தில் பொறுப்புள்ள தலைவராக செயல்படுவதற்குமான திறன்.

**EGOISTIC NEEDS**
**தன்னிறைவு தேவைகள்**
தொழில் உளவியலில் பொருள் வருவாயைவிட வேலை நிறை வுக்கான தனிப்பட்ட ஆதாரங் களை குறிக்கிறது.

**EIDETIC IMAGERY**
**மீத்தெளி சாயல்**
புலன் உணர் நிகழ்ச்சியின் மிகத் துல்லியமான காட்சியை மீண்டும் நினைவு கூற முடியும் திறன்.

**ELECTIVE COURSE**
**விருப்பப் பாடம்**
தேவையான பாடத்துடன் மாணவர் தானே விரும்பித் தேரும் பாடம்.

**ELECTIVE STUDIES**
**விருப்பப் படிப்பு**
மாணவர் படிக்க தேரக்கூடிய பாடங்களை குறிக்கிறது.

**ELECTRA COMPLEX**
**எலக்ட்ரா சிக்கல்**
உள - பாலியலில் ஒரு நிலைமை பற்றியது. அதாவது சிறு வயதில் பெண்பிள்ளை தந்தை மீதான பாசத்துக்கு தன்தாயை ஒரு போட்டியாக கருதிப் பொறாமைப்படுதல். இதேமாதிரி ஆண்பிள்ளை தாய் மீதான பாசத்துக்கு தன் தந்தை யை போட்டியாகக் கருதுவது ஒடிபஸ் (Oedipus) சிக்கல் எனப் படுகிறது.

**ELECTRIFIED EDUCATION**
**மின்கல்வி**
வானொலி, தொலைக்காட்சி மூலம் வழங்கும் கல்வியைக் குறிக்கும் சீனபதம்.

**ELECTRO CONVULSIVE THERAPY (ECT)**
**மின் அதிர்ச்சி சிகிச்சை**
மனச் சோர்வு போன்ற மன நோய்க்கு மின் அதிர்ச்சி மூலம் வலிப்பு ஏற்படுத்தி சிகிச்சை யளித்தலை குறிக்கிறது.

**ELECTRO ENCEPHALOGRAPH (EEG)**

**மூளைமின் வரைவி**

மூளை தூண்டுதல் அளவை மதிப்பிட மருத்துவத்தில் பயன் படும் கருவி. மின்செயல் பாட்டை இது அளவிடுகிறது.

**ELECTRONIC DATA PROCESSING (EDP)**

**மின்னணு தகவலாய்வு**

தகவல் ஆய்வுக்கு கணிணி யைப் பயன்படுத்தல்.

**ELECTRONIC VIDEO RECORDING (EVR)**

**மின்அணு ஒளிப்பதிவு**

தகவமைத்த தொலைக் காட்சிப் பெட்டியில் போட்டு பார்க்க முடியும் திரைப்பட பதிவைக் குறிக்கிறது.

**ELITE**

**மேட்டுக்குடி**

சலுகை பெற்ற பிறப்பு அல்லது கல்வியின் சில நடவடிக்கைகள் அல்லது அம்சங்கள் மூலமாக சமுதாயத்தில் அதிகாரம், அந்தஸ்து, தலைமை இடங்களைப் பிடிக்கும் ஒரு குழு. இவர்களின் அணிகளில் இருந்தே வருங்கால உயர் பதவி அல்லது உயர் அந்தஸ்து இடத்துக்கு ஆள்கள் வருகிறார்கள்.

**ELITE HIGHER EDUCATION**

**மேட்டுக்குடி உயர்கல்வி**

அளவான இடங்களும் உயர் நுழைவு தகுதிகளும் உடைய உயர்கல்வி முறையைக் குறிக் கிறது.

**ELITISM**

**உயர்குடிக்கொள்கை**

பலர்மேல் சிலர் அதிகாரம் செலுத்தவேண்டும், கல்வி அந்த சலுகை பெற்ற சிறுபான்மையர் நலனுக்கே இருக்க வேண்டும் என்னும் சமூக அரசியல் கொள்கை.

**EMBOURGEOISEMENT**

**முதலாளிமயமாதல்**

சமுதாயத்தின் கீழ் வகுப்புகள் நடுத்தர வகுப்பின் பண்புகளை யும் மதிப்பீடுகளையும் ஏற்றுக் கொள்ளும் சமூக வரலாற்று நிகழ்முறை.

**EMBRYO**

**உட்கரு**

கருப்ப வளர்ச்சியின் தொடக்க நிலைகள். கருத்தரித்ததில் இருந்து 5வது / 6வது வார நிலவரம்.

**EMERITUS FELLOW**

**மேதகு அறிவு பெற்ற / ஓய்வு பெற்ற உறுப்பினர் / திறமை சால் பெற்ற உறுப்பினர்**

ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற கல்லூரி/பல்கலை உறுப்பினர், அதன்பின்னும் கல்லூரி / பல்கலை கூட்டாட்சி யில் பங்கேற்க உரிமை பெற்றிருப் பதைக் குறிக்கிறது.

EMERITUS PROFESSOR / PROFESSOR EMERITUS
**ஓய்வு பெற்ற பேராசிரியர்**
ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றும் இந்த கவுரவ பட்டம் வழங்கப்பட்டுள்ள பேராசிரியர்.

EMIGRATION
**குழு / நாடு பெயரல்**
மக்கள் ஒரு நாட்டிலிருந்து / சமூகத்திலிருந்து மற்றதுக்கு இடம் பெயர்வதைக் குறிக்கிறது.

EMOTION
**மனஎழுச்சி**
உச்சமடைந்த பார்வை, உடல் மாற்றங்கள், கவர்ச்சி அல்லது விலக்கல், அணுகல் அல்லது பின்வாங்கல் நடத்தை ஆகிய சிக்கலான நிலையைக் குறிக்கிறது.

EMPATHY
**உணர்வு ஒன்றல்**
இன்னொரு மனிதர்/ குழுவின் விருப்பங்கள் மற்றும் மனப்பான்மைகளுடன் தம்மை அடையாளப்படுத்தி காணல். மற்றவருடன் ஒன்றிவிட்டதாகவே உணர்தல்.

EMPIRICAL
**அனுபவஅறிவு**
காட்சி / அனுபவத்தின் அடிப்படையான ஆதாரம் அல்லது தகவலைக் குறிக்கிறது.

EMPIRICISM
**அனுபவ வாதம்**
இதன்படி கருத்துகள் அனைத்தும் அனுபவத்தின் விளைவே.

EMPLOYMENT AGENCY / BUREAU / PLACEMENT SERVICE / BUREAU
**வேலைவாய்ப்பு முகமை**
வேலை தேடுவோரை வேலை தரக்கூடியவருக்கு அறிமுகப்படுத்தும் நிறுவனம்.

EMPLOYMENT, INVENTORY OF
**வேலைவாய்ப்பு கண்டறி பட்டியல்**
ஒரு நிறுவனத்தில் வெவ்வேறு பணியாளர் பிரிவுகளிடையே தேவைப்படும் மற்றும் கிடைக்கும் ஆட்கள் பற்றிய ஆய்வு.

EMPLOYMENT RESEARCH
**வேலைவாய்ப்பு ஆய்வு**
வேலைவாய்ப்பு கிடைக்கும் முறைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வைக் குறிக்கிறது.

ENCODING
**குறியீடாக்கல்**
நடத்தையை/உத்தேசப் பொருளை சொற்களில் - குறியீடுகளில் - அல்லது குறியீட்டு நடத்தையில் வைக்கும் நடைமுறையைக் குறிக்கிறது.

ENDOCRINE GLANDS
**அகச்சுரப்பிகள்**
ஊக்கிகளை (ஹார்மோன்

களை) ரத்த ஓட்டத்தில் கலக்கும் படி சுரக்கும் நாளமில்லா சுரப்பி களைக் குறிக்கிறது.

**ENDODERM CELLS**

**உள்தோல் அணுக்கள்**

கரு வளர்ச்சியின்போது உயிரணுக்களின் உள் அடுக்கு வளர்ச்சி. இவையே பின்னர் சீரன மண்டலம், அது தொடர்பான சுரப்பிகள், தொண்டை, குரல் வளை, நுரையீரல் படலமாகிறது.

**ENDOGAMY**

**அகமணம்**

ஒருவரின் ரத்த உறவுக்குள் / சமூகக் குழுவுக்குள் மணமுடிக்க வேண்டும் எனும் நம்பிக்கை.

**ENDORSEMENT**

**மேலொப்பம்**

ஒரு சான்றிதழ் / பட்டயத்துடன் இணைக்கப்படும் கூடுதல் தகுதி.

**ENDOWED INSTITUTION**

**அறக்கட்டளை நிறுவனம்**

ஒரு அறக்கட்டளை அமைப்பு அல்லது நிதியத்திடமிருந்து பணம் பெறும் நிறுவனம்.

**END SPURT**

**முடிவு வேகம்**

வேலை முடியும் காலத்தில் முயற்சியை இறுதியாக விரைவு படுத்தும் கற்றல் போக்கு.

**ENERGY IN PLAY**

**விளையாட்டில் ஆற்றல்**

விளையாட்டு பற்றிய ஒரு கோட்பாடு. இதன்படி உபரி ஆற்றலில் இருந்தே விளையாட்டு தோன்றுகிறது. குழந்தைகள் தன் பெருக்கம் / இனப்பெருக்கம் இவற்றில் தம் ஆற்றல்களை செலவிடாததாலேயே உபரி ஆற்றல் எஞ்சுகிறது.

**ENERGY STUDIES**

**ஆற்றல் ஆய்வுகள்**

ஆற்றல் மூலங்கள், கிடைத்தல், அனுப்பல், இடை மாற்றீடு, சேமிப்பு, ஆற்றலை திறம்பட பயன்படுத்தல், மற்றும் தொடர்பான சமூக - பொருளியல் - சூழலியல் சிக்கல்களையும் ஆயும் ஆய்வுகளும் படிப்புகளும்.

**ENGINEERING SCIENCE**

**பொறியியல் அறிவியல்**

பொறியியல் துறைகள் - நடைமுறைகளின் அடிப்படையான அறிவியல் கொள்கைகளை குறிக்கிறது.

**ENGLISH AS A SECOND LANGUAGE (EEL)**

**இரண்டாம் மொழியாக ஆங்கிலம்**

ஆங்கிலம் பேசாத மாணவர்கள் அதை இரண்டாம் மொழியாகவோ அயல்மொழி யாகவோ கற்றல்.

**ENGLISH LANGUAGE BOOK SOCIETY (ELBS)**
**ஆங்கிலமொழி நூல் கழகம்**
இந்த அமைப்பு மூலம் 60க்கு மேற்பட்ட பிரிட்டிஷ் பதிப்பாளர்கள் தம் நூல்களை குறைந்த விலைநூல் திட்டம் மூலம் குறைந்த விலையில் வளரும் நாடுகளுக்கு கிடைக்கச் செய்கிறார்கள்.

**ENHANCEMENT MATERIALS**
**மேம்பாட்டு விசயங்கள்**
அடிப்படை பாட விசயங்களை பற்றிய புரிதலை, குறிப்பாக ஆசிரியருக்கு சிறப்பு அறிவிருக்கும் திசைகளில் அல்லது மாணவர்களுக்கு சிறப்பு தேவைகள் இருக்கும் துறைகளில் விரிவு படுத்துவதற்கான கல்வி விசயங்கள்.

**ENQUIRY BASED WORK**
**விசாரணை**
**அடிப்படையிலான கல்வி**
குறிப்பிட்ட தலைப்புகள் மீதான கேள்விகளுடனே குறிப்பிட்ட சிக்கல்களை தீர்ப்பதற்கான முயற்சிகளுடனே தொடங்கும் படிப்பு.

**ENRICHING ARTS**
**வளப்படுத்தும் கலைகள்**
இசை, கலை, கைத்தொழில், நாடகம், நடனம் போன்ற படைப்புக் கலைகள்.

**ENRICHMENT PROGRAM**
**வளமேற்றும் திட்டம்**
பண்பாட்டு வறுமையை ஈடுகட்டும் திட்டம்.

**ENROLMENT**
**பதிவு**
பள்ளி/கல்லூரி/பல்கலையில் மாணவர் எண்ணிக்கையை குறிக்கிறது.

**ENTERING ABILITY**
**நுழைவுத் திறன**
ஒரு படிப்பைத் தொடங்கும் போது மாணவரிடம் இருக்கும் திறமையைக் குறிக்கிறது.

**ENTERPRENEURIAL SYSTEM / CAFETERIA SYSTEM**
**தொழில் முனைப்பு முறை**
பலவித கல்வி முறைகளில் இருந்து பெற்றோர் தேரக்கூடிய கல்வி முறை.

**ENTRY BEHAVIOUR**
**நுழைவுக்கால நடத்தை**
ஒரு படிப்பு/திட்டம் தொடங்கும் போது கற்பவரின் நடைமுறை அளவு.

**ENTRY WORKER**
**நுழைவுத் தொழிலாளி**
எந்த திறமை/அறிவும் அற்ற அல்லது சிறிதே உள்ள புதிதாய் வந்த தொழிலாளி.

**ENURESIS**
**தூக்கத்தில் சிறுநீர் கழித்தல்**

தூங்கும்போது உணர்வின்றி சிறுநீர் கழிதல். இது தகவமையா நிலையைக் குறிக்கிறது.

**ENVIRONMENTAL EDUCATION**
**சூழ்நிலைக் கல்வி**

வட்டார வரலாறு, சூழலியல், மாசுபாடு முதலிய பாடங்கள் வழி சூழ்நிலை இயலின் புரிதலையும் முக்கியத்துவத்தை உணர்தலை யும் ஊக்குவிக்கும் கல்வித் திட்டம்.

**ENVIRONMENT BASED LEARNING**
**சூழ்நிலை அடிப்படையிலான கல்வி**

கல்வித் தொழில்நுட்ப உதவி களும் ஆசிரியர்களும் மாணவர் களுக்கு கிடைக்கும் மூலப் பொருட்கள் ஆகும் மாணவர் மையக் கல்வி.

**ENVIRONMENT FACTORS**
**சூழ்நிலை காரணிகள்**

பிறவி/மரபு காரணிகளுக்கு எதிராக பிறப்பு முதல் இறப்பு வரை தனி ஒருவரின் வாழ்க்கைக்கால காரணிகளை குறிப்பது. குடும்ப அளவு, சமூக வகுப்பு போன்றவை இதில் வரும்.

**ENVIRONMENT INTERPRETATION**
**சூழ்நிலை விளக்கம்**

கண்ணில் கண்ட சுற்றுசூழல் காரணிகளை பெயர்த்துரைத்தல்.

**ENVIRONMENT STUDIES**
**சூழ்நிலை ஆய்வுகள்**

மாணவரின் சூழ்நிலையில் முதன்மை அக்கறை உடையதும் கூடவே இலக்கியம் - வரலாறு - புவியியல் - அறிவியல் முதலிய இணைப்பு கூறுகளை கொண்டது மான பள்ளிப் பாடத்திட்டம்.

**EPILEPTIC**
**வலிப்புள்ள**

வலிப்பு நோயால் வருந்து பவரை குறிக்கிறது. இது நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டில் நேரும் ஒரு நோயாகும். உணர் வின்மை, இழுப்பு போன்றவை இதன் குறிகள்.

**EPISTEMOLOGICAL SCEPTICISM**
**அறிவுத்தோற்ற அறியொணாமை**

அறிவின் புறநிலை உண்மை யை ஐயுறுதல்.

**EPISTEMOLOGY**
**அறிவுத் தோற்றவியல்**

அறிவை அறியும் தர்க்க அமைப்பை ஆய்தல்.

**EQUAL ADDITION**
**சமகூட்டல்**
கணக்கில் கழித்தலுக்கு மாற்று உத்தி. ஒவ்வொரு வரிசையிலும் சமமாக கூட்டுதல்.

**EQUALITARIANISM**
**சமவாய்ப்பு கொள்கை**
உயர்கல்வியில் சேர்வது ஒருசிலரின் தனியுரிமையாக இருக்கக்கூடாது எனும் 19ஆம் நூற்றாண்டு இயக்கம்.

**EQUALITY OF OPPORTUNITY**
**சமவாய்ப்பு**
குடும்ப / சமூக வகுப்பு பின்னணிகள் பற்றி கவலைப்படாமல் குழந்தைகள் தம் திறமைகளையும் தகுதிகளையும் அதிக அளவு வளர்க்க சமவாய்ப்புகள் தருவதே லட்சியமான கல்வி அமைப்பு என்னும் அரசியல் கொள்கை.

**EQUIVALENCY TESTS**
**மாற்றிணை இயைவு சோதனைகள்**
முன்பு படித்த கல்வி/அறிவு, படிப்பின் தேவையை எந்த அளவு நிறைவு செய்கிறது என காண உதவும் சோதனை.

**ERGONOMICS**
**பணிச்சூழலியல்**
மனிதருக்கும் அவர் வேலைக்கும், சாதனத்துக்கும் சூழ்நிலைக்கும், குறிப்பாக அங்கு எழும் சிக்கல்களுக்கு உடலியல் - உளவியல்-உள் அமைப்பியல் அறிவை ப் பயன்படுத்துவதற்கான உறவு பற்றிய படிப்பு.

**ERROR OF MEASUREMENT**
**அளவுப் பிழைகள்**
நோய், களைப்பு, தவறான நிர்வாகம், நம்பகக் குறைவு இவற்றால் சோதனை அளவிடலில் நேரக்கூடும் மாற்றத்தைக் குறிக்கிறது.

**ERROR RATE**
**பிழைவீதம்**
ஒரு கூறு / தொகுப்பு / முழு நிரலுக்கு தவறாக எதிர்வினை புரியும் குறிப்பிட்ட மாதிரியின் எண்ணிக்கை / சதவீதம்.

**ERROR RESPONSE**
**பிழையான துலங்கல்**
நிரல்படுத்திய கட்டளையில் நேரும் தவறான துலங்கல்.

**ESCAPISM**
**தப்பித்தல்**
கடினமான/ மனதுக்குப் பிடிக்காத எதிலிருந்தும் நழுவும் ஆசையைக் குறிக்கிறது.

**ESPERANTO**
பெரிதும் ஐரோப்பிய மொழிகளுக்கு பொதுவாக கூறுகளில் இருந்து செயற்கையாக உருவாக்க முயன்ற உலகப் பொது மொழி.

**ESSAY TEST**
**கட்டுரைத் தேர்வு**
கொடுக்கப்பட்ட தலைப்பில் குறிப்பிட்ட நீளத்துக்கு எழுதும் சோதனை / தேர்வு

**ESSENTIALISM**
**சாரக் கொள்கை**
உயர்நிலை அடைய எல்லோருக்கும் ஒரேபோல் கற்பிக்கப் பட்டாகவேண்டிய - எல்லாரும் பெற்றுக்கொண்டாக வேண்டிய இன்றியமையாத - அடிப்படையான அறிவு - திறமைத்தொகுப்பு உண்டென்னும் கல்வியியல் நம்பிக்கை.

**ESTATE MANAGEMENT**
**தோட்ட சொத்து மேலாண்மை**
நில / பிற உடைமை மேலாண்மையை நிர்வாகத்தைக் குறிக்கிறது.

**ETHICS**
**அறவியல்**
நன்னெறிகள் - நன்மைக்கும் தீமைக்குமான பாகுபாடு பற்றி ஆயும் மெய்யியல் கிளை.

**ETHIC STUDIES**
**இனவியல் ஆய்வுகள்**
தனித்த பண்பாட்டுக் குழுக்கள் பற்றிய மரபினர / தேசிய இன ஆய்வுகளைக் குறிக்கிறது.

**ETHNOGRAPHY**
**இனவிளக்க இயல்**
வெவ்வேறு மனித இனங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைப் பற்றிய அறிவியல்.

**ETHNOLOGY**
**மாந்தஇனவியல்**
மனித பண்பாட்டு ஒப்பீட்டு விளக்க ஆய்வு.

**ETHOLOGY**
**ஒழுக்கவியல்**
மனிதரிலும் விலங்கிலும் இருக்கும் நடத்தை உறவுகளின் காரணங்களை ஆயும் இயல்.

**ETHOS**
**ஒழுக்க மாண்பு**
குறிப்பிட்ட பள்ளி / வேறு கல்வி நிறுவனத்தில் மேலோங்கி விளங்கும் வழக்கங்களையும் உணர்வுகளையும் குறிக்கிறது.

**EUCLID**
**யூக்ளிட்**
கி.மு. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க கணித மேதை. இவரது 'மூலகம்' என்ற கருத்து ஒரு காலத்தில் பள்ளிகளில் வடிவ கணித போதனையின் அடிப்படையாக விளங்கியது.

**EUGENICS**
**இனஆக்க மேம்பாட்டியல்**
மனித தனித்தன்மைகளின் மேம்பாடு அல்லது சீரழிவு என்னும் குறிப்பான நோக்கில் மரபியல் சுவீகரித்தல் பற்றிய அறிவியல்.

**EUREKA EXPERIENCE**
**கண்டுபிடிப்பு பெருமிதம்**
ஒரு சிக்கலைக் கையாளவும் அதற்கு தன் சொந்த தீர்வை காணவும் இயலும் மாணவருக்கு தோன்றும் சாதனை மற்றும் மனநிறைவு உணர்வு.

**EURHYTHMICS**
**தாளமுறை உடற்பயிற்சி**
19ஆம் நூற்றாண்டின் பின் பகுதியில் உருவாக்கப்பட்ட இசை அடிப்படையிலான உடல் பயிற்சி / கல்வி.

**EVALUATION**
**மதிப்பீடு**
நேரடி அளவீட்டிலோ ஊகத்திலோ ஒரு அவதானம்- செய்முறை - சோதனை அல்லது வேறெந்த தகவலும் குறித்த மதிப்பீட்டு தீர்ப்பு.

**EVALUATION INSTRUMENT**
**மதிப்பீட்டுக் கருவி**
மதிப்பீட்டில் பயன்படும் சோதனை / செய்முறை

**EVALUATION OF COURSES/ COURSE EVALUATION**
**படிப்பு மதிப்பீடு**
ஒரு படிப்பின் வெற்றியை மதிப்பிடும் நடைமுறை.

**EVALUATION OF TRAINING**
**பயிற்சி மதிப்பீடு**
குறிப்பிட்ட படிப்பு / பயிற்சியின் பொருள்வகை - சமூகவியல் -செலவு ஏற்புடைமையைப் பற்றியது.

**EVENING CLASS**
**மாலை வகுப்பு**
முறைப்படி கல்வியை முடிக்காத இளையோர் / முதியோருக்கான கல்வி வகுப்பு.

**EVENING COLLEGE**
**மாலைக் கல்லூரி**
பகுதி நேர படிப்பு வழங்கும் தனியார் கல்லூரி / பல்கலை.

**EXAMINATION FEE**
**தேர்வுக் கட்டணம்**
தேர்வு நடத்தும் முழு / பகுதி செலவை சமாளிக்க தேர்வு எழுதுவோரிடம் / அவர்களை அனுப்புவோரிடம் வசூலிக்கும் கட்டணம்.

**EXAMINATIONS**
**தேர்வுகள்**
திறமை, சாதனை, ஒரு பாடத்தில் தற்போதைய தேர்ச்சி நிலை இவற்றை மதிப்பிடும் உத்தி.

**EXCEPTIONAL CHILDREN**
**விதிவிலக்கான குழந்தைகள்**
தனிச்சிறப்பான கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகள். எ.கா: அறிவுத்திறன் மிக்க குழந்தைகள், பண்பாட்டில் பாதிப்பான நிலையில் உள்ள குழந்தைகள், மன / உடல் ஊனமுற்ற குழந்தைகள்.

**EXCEPTIONALITY**
**விதிவிலக்கு தன்மை**
அசாதாரண திறமை / உடல் மன ஊனமுள்ள நிலையைக் குறிக்கிறது.

**EXCEPTIONAL STUDENT**
அசாதாரண திறமை உள்ள / உடல்-மன ஊனமுள்ள மாண வரை குறிக்கிறது.

**EXCHANGE PROGRAM**
**பரிமாற்ற திட்டம்**
ஆசிரியரையும் மாணவர் களையும் பரிமாற்றிக் கொள்ளும் ஏற்பாடு.

**EXCHANGE STUDENT**
**பரிமாற்ற மாணவர்**
குறிப்பிட்ட காலத்துக்கு வேறொரு கல்வி நிலையத்தில் பயிலும் மாணவரைக் குறிக்கிறது.

**EXCHANGE TEACHER**
**பரிமாற்ற 'ஆசிரியர்**
தனது பள்ளியை விட்டு வேறு பள்ளியில் குறிப்பிட்ட காலத்துக்கு கற்பிக்கும் ஆசிரியர்.

**EXCITATARY POTENTIAL**
**தூண்டும் ஆற்றல்**
தூண்டலுக்கு துலங்கும் போக்கை குறிக்கிறது.

**EXHIBITIONISM**
**பகட்டாரவாரம்**
பிறர் கவனத்தை கவரத் திட்டமிட்ட இயல்பற்ற செயல் களையும் கருத்துக்களையும் குறிக்கிறது.

**EXISTENTIALISM**
**இருத்தலியம்**
தனியாள் இருத்தலே மிகப் பெரும் மெய்யியல் சிக்கல். நேரடி சமூகப் பங்கேற்பே உண்மை ஒழுக்கத்துக்கு வழி என்னும் மெய்யியல் நம்பிக்கை.

**EXOGAMY**
**புறமணம்**
ஒருவரின் ரத்த உறவுக்கு சமூகக் குழுவுக்கு வெளியேதான் மணம் முடிக்க வேண்டுமெனும் நடைமுறை.

**EXPECTANCY**
**எதிர்பார்ப்பு அளவு**
ஒரு மாணவரின் கடந்தகால வரலாற்றில் இருந்து ஒரு ஆசிரியர் எதிர்பார்க்கக்கூடிய செயல்திறன் அளவு.

**EXPECTANCY CHART**
**எதிர்பார்ப்பு அட்டவணை**
ஒரு மாணவரிடம் முன்கூட்டி எதிர்பார்க்கப்படும் சாதனை அளவை காட்டும் பட்டியல். ஏற்கனவே தெரிந்த சாதனையை ஆசிரியரின் எதிர்பார்ப்பை ஒட்டியது இது.

**EXPECTANCY THEORY**
**எதிர்பார்ப்புக் கோட்பாடு**

**EXPECTATION**
**எதிர்பார்ப்பு**
தன் விருப்பங்களுக்கேற்ப

வரவிருக்கும் நிகழ்ச்சிகளை எதிர்நோக்கல்.

**EXPERIENCE CHART**
**அனுபவ அட்டவணை**
மாணவர்களின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் தயாரிக்கும் அட்டவணை.

**EXPERIENCE CURRICULUM**
**அனுபவ பாடத்திட்டம்**
மாணவரின் இயல்பான ஆர்வங்கள் - அனுபவங்களின் அடிப்படையில் அமைக்கும் பாடத்திட்டம்.

**EXPERIENCE CURVE**
**அனுபவ வளைவு**
கற்றல் வளைவு. முறைப்படி பயிற்சி முடிவில் ஆன பணியில் இருக்கும் போதைய முன்னேற்றத்தையும் பதிகிறது.

**EXPERIENTIAL**
**அனுபவ**
தனியாள்களின் அக அனுபவத்துடன் - அவர்களின் நடத்தை பற்றிய உணர்வுள்ள மதிப்பீட்டுடன் தொடர்புடைய உளவியல் கோட்பாடு மற்றும் சோதனையின் கூறுகள்.

**EXPERIENTIAL LEARNING**
**அனுபவக் கல்வி**
முறைப்படியான பள்ளிக்கல்வி அல்லாத அனுபவ த்திலிருந்து பெறும் அறிவைக் குறிக்கிறது.

**EXPERIMENT**
**சோதனை**
நிலவும் சூழ்நிலையை அவ்வாறே ஆய்வதற்குப் பதில் மாறிகளை ஆய்வாளர் கட்டுப்படுத்தும் செயல்.

**EXPERIMENTAL ANALYSIS**
**சோதனை ஆய்வு**
கல்வி ஆய்வில் மாறிகளை ஆராயும் முறை. இதில் சோதனை ஓரிரு மாறிகள் தவிர பிறவற்றை கட்டுப்படுத்தி மாறாது பிடித்து வைக்கிறது.

**EXPERIMENTAL COLLEGE**
**சோதனைக் கல்லூரி**
பாடத்திட்டம், கற்றல் அனுபவங்கள், கற்பித்தல் முறைகள் இவற்றில் சோதனைகள் செய்து பார்க்கும் கல்லூரியைக் குறிக்கிறது.

**EXPERIMENTAL DESIGN**
**சோதனைத் திட்டம்**
ஒரு சோதனையின் நோக்கம், விசயங்கள், நிர்வாகம், புள்ளியியல் கையாட்சி, கல்வியியல் சிறப்பு உட்பட அதன் திட்ட விளக்கம்.

**EXPERIMENTALISM**
**சோதனை வாதம்**
அனுபவமே அறிவுக்கு போதிய மூலமாகும். அறிவியல் சோதனையே அனுபவத்தைக் கட்டுப்படுத்தும் மாபெரும் மூலவளமாகும் என்னும் மெய்யியல் நோக்கு.

**EXPERIMENTAL PSYCHOLOGY**
**பரிசோதனை உளவியல்**
உளவியல் தலைப்புகளை அறிவியல் முறையில் ஆராய்வதைக் குறிக்கிறது.

**EXPLICIT CONTINGENCY**
**வெளிப்படை தற்செயல்**
திட்டவட்டமாக வரையறுக்க முடியும் குறிப்பான தற்செயல் நிகழ்வு.

**EXPLORATORY FORECASTING TECHNIQUE**
**ஆராய்ச்சித் தன்மையுள்ள முன்னறிவிப்பு உத்தி**
ஆராய்ச்சித் தன்மையுள்ள முன்னறிவிப்புகள் கொண்ட, பிற துறைகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய வளர்ச்சிகளை கணக்கில் எடுக்க முயலாத தொழில்நுட்ப முன்னறிவிப்பு உத்திகள்.

**EXPONENTIAL SMOOTHING**
**விளக்க நிரவல்**
மிக அண்மைய போக்குகளை கணக்கில் எடுப்பதன் மூலம் முன்னறிவிப்பின் துல்லியத்தை மேம்படுத்த உதவும் கணித உத்திகள்.

**EXPOSITORY WRITING**
**வெளிப்படை எழுத்து**
அர்த்தங்களை உடனே புரிவதாகவும் உணர்ச்சி வசப்படா மொழியிலும் முன்வைக்கும் எண்ணத்துடன் கூடிய வரையறைகள், நிகழ்முறைகள், பொதுமைப் படுத்தல்கள், கருத்துகளையும் கொள்கைகளையும் தெளிவு படுத்துதல் ஆகியன.

**EXPRESSIVE ARTS**
**வெளிப்பாட்டு கலைகள்**
மக்கள் தம் சொந்த வெளிப்பாட்டையும் வளர்ச்சியையும் காண முயலும் நாடகம், இசை, விளையாட்டு, உடல்பயிற்சி போன்ற நடவடிக்கைகள்.

**EXPRESSIVE WRITING**
**வெளிப்பாட்டு எழுத்து**
அந்தரங்க குறிப்புகள், நாட் குறிப்பு எழுதல், தன் வரலாறு, தனிப்பட்ட கடிதங்கள் போன்றவற்றைக் குறிக்கிறது.

**EXPULSION**
**வெளியேற்றம்**
கடுமையான விதிமீறல் அல்லது பிற தவறுகளுக்காக ஒரு ஒழுங்குமுறை நடவடிக்கையாக மாணவரை பள்ளி கல்லூரியில் இருந்து நிரந்தரமாக நீக்குதல்.

**EXTENDED EDUCATION**
**நீடிக்கும் /நீட்டப்பட்டக் கல்வி**
சட்டப்படி பள்ளியை விட்டு நீங்கும் வயதை கடந்தும் தொடரும் படிப்பைக் குறிக்கிறது.

**EXTENDED FAMILY**
**விரிவான குடும்பம்**
ஒருதார/பலதார குடும்பங்கள். அவற்றின் ரத்த, திருமண

உறவினருடன் சேர்ந்த குழு வைக் குறிக்கிறது.

**EXTENSION CENTER**
**விரிவாக்க மையம்**
தொடர் கல்விக்கான பல்கலைப் பிரிவு.

**EXTENSION EDUCATION**
**விரிவாக்கக் கல்வி**
தம் வழக்கமான மாணவர்கள் தவிர பிறருக்காக கல்வி நிலை யங்கள் வகுக்கும் செயல்பாடுகள்.

**EXTENSION LIBRARY SERVICE**
**விரிவாக்க நூலக சேவை**
கல்லூரி / பல்கலை, தன் மாணவர் அல்லாத பிறருக்காக தன் வளாகத்துக்கு வெளியில் திறக்கும் நூலகம்.

**EXTENSION STUDIES**
**விரிவாக்கப் படிப்பு**
ஒரு பாடத்தின் இயல்பான வரம்பைக் கடக்கும் / தொடர் புடைய பிற பாடங்களை நாட அனுமதிக்கும் வேலையைக் குறிக்கிறது.

**EXTERNAL CONDITIONS OF LEARNING**
**கற்றலின் புற நிலைமைகள்**
ஒருவரிடம் ஒரு துலங்கலுக்கு காரணமாகும் எந்த தூண்டலும் அல்லது வெளி உதவியும்.

**EXTERNAL COURSE**
**புறநிலைப்படிப்பு**
ஒரு அமைப்பு தன் ஊழியர் களை அவர்களின் தேவை களுக்கு பொருந்திய பயிற்சிக்காக வெளிப்படிப்புக்கு அனுப்புதல்.

**EXTERNAL DEGREE**
**புறவழிப்பட்டம்**
பட்டம் தரும் நிறுவனத்தில் பதியாத / படிக்காத மாணவர் தேர்வு எழுதியதற்கு அந்நிறுவனம் தரும் பட்டம்.

**EXTERNAL EXAMINATION**
**புறநிலைத் தேர்வு**
தேர்வு எழுதும் மாணவர் பயிலும் கல்வி நிறுவனத்துக்கு அயலான தேர்வு அமைப்பு நடத்தும் தேர்வு.

**EXTERNAL EXAMINER**
**புறநிலை ஆய்வர்**
ஒரு கல்லூரி/ பல்கலையின் ஆசிரிய / ஆய்வு ஊழியர் அல்லாத ஆய்வரை குறிக்கிறது.

**EXTERNAL STUDY**
**புறவழிப் படிப்பு**
பல்கலை/கல்லூரி நடத்தும் அஞ்சல் வழிக்கல்வி.

**EXTERNAL VALIDITY**
**புறநிலைத் தகுதி**
ஒரு சோதனை ஆய்வின் விளைவுகள் எந்த அளவுக்கு வேறு மக்களுக்கு / சூழ்நிலைமை களுக்கு விரிவுபடுத்தப்பட முடியும் என்பது.

EXTINCTION
**அழிந்தொழிதல்**
ஒரு தூண்டலுக்கான துலங்கல் குறிப்பிட்ட காலப்போக்கில் குறைந்து போய் இறுதியில் அற்றுப்போகும் நிகழ்முறை.

EXTRA CLASS / EXTRA CURRICULAR ACTIVITIES
**வகுப்பு கடந்த செயல்பாடுகள்**
பள்ளி பாடத்திட்டத்துக்கு உட்பட்டு பள்ளிக்கு வெளியில் நடத்தப்படும் செயல்பாடுகள்.

EXTRA CURRICULAR ACTIVITES
**பாட-புற நடவடிக்கைகள்**
வழமையான பாடத்திட்டத்துக்கு அப்பால் நடைபெறும் செயல்பாடுகள்.

EXTRA MURAL DEPARTMENT
**பல்கலை-புற துறை**
கல்லூரி/ பல்கலையின் ஒழுங்கான மாணவர் அல்லாதவருக்கு படிப்பு முதலியவை வழங்கும் கல்லூரி / பல்கலைப் பிரிவு.

EXTRAPOLATION
**அறி ஊகம்**
கிடைக்கும் தரவுகளுக்கு அப்பாற்பட்ட மதிப்பை அளிப் பதைக் குறிக்கிறது.

EXTROVERSION
**புற முகம்**
ஒப்பீட்டு அளவிலான தயக்கமின்மை, குழு சேர்க்கை உணர்வு, குறிப்பிட்ட அளவு அத்துமீறும் மற்றும் நம்பகமற்ற தன்மை கொண்டோரின் ஆளுமை.

EXTROVERT
**புறமுகர்**
வெளிப்படையான - இணக்கமான இயல்பு, எந்த சூழ்நிலையிலும் எளிதாக பொருந்துதல், விரைந்து உறவுகளை நிறுவல், அறியாத நிலைமைகளில் ஏற்படக்கூடும் சிக்கல்களை யோசியாமல் துணிச்சலாகவும் நம்பிக்கையாகவும் முனைதல் ஆகிய தன்மைகளை கொண்டவரைக் குறிக்கிறது.

# F

FABLES TEST
**நீதிக்கதை சோதனை**
ஒரு குட்டிக்கதைக்கு விளக்கம் - அர்த்தம் கூறும்படி ஒருவரிடம் கேட்பதன்மூலம் அவரது படைப்புத் தன்மையை சோதித்தல்.

FACE TO FACE GROUPS
**முகாமுக குழுக்கள்**
சமூக உறவுகள் நேரடியாய் கொண்ட மக்கள் குழுக்கள்.

FACE VALIDITY
**தோற்ற மதிப்பு**
ஒரு சோதனை ஆய்வு, அது

எதை அளவிப்பதற்கானதாக தோன்றுகிறதோ அந்த தோற்ற அளவிலான திறனை ஏற்றலைக் குறிக்கிறது.

**FACILITY INDEX**
**திறமை குறியெண்**

ஒரு தேர்வு கேள்விக்கு ஒருவர் சரியாக விடை அளிப்பதன் பின்னம்/ சதவீதத்தைக் குறிக்கிறது. இவ்வெண் சுமாராக 25-75ரூ இருக்க வேண்டும்.

**FACT ASSEMBLY TEST**
**கூட்டிணைப்பு சோதனை**

யந்திர பாகங்கள் எவ்வாறு பூட்டப்பட்டுள்ளன என மனதில் காணும் திறன் பற்றிய யந்திர புரிதல் சோதனை.

**FACT COORDINATION TEST**
**ஒருங்கிணைவு சோதனை**

உடல் மன திறன்கள் பற்றிய சோதனை. கை - கால் ஒருங்கிணைந்து செயல்படும் துரிதம் - துல்லியம் பற்றிய சோதனை.

**FACTOR ANALYSIS**
**காரணி ஆய்வு**

ஒரு அளவைக்குள் இருக்கும் மதிப்புகளின் தொகுப்பிடையே ஆன உறவுகளை ஆயும் முறைகளில் ஒன்றைக் குறிக்கிறது.

**FACTOR LOADING**
**காரணி ஏற்றம்**

காரணி ஆய்வில் பயன்படும் ஒரு சோதனைக்கும் காரணிக்கும் இடையிலான இடையுறவைக் குறிக்கிறது.

**FACTORS OF ATTENTION**
**கவனக் காரணிகள்**

ஒருவர் கவனம் செலுத்த காரணமாகும் காரணிகளைக் குறிக்கிறது.

**FACULTY DIRECTOR**
**துறை இயக்குநர்**

ஒரு பல்கலை / கல்லூரி துறை ஊழியரை மேற்பார்வையிடுபவர்.

**FACULTY EVALUATION**
**துறை மதிப்பீடு**

துறை ஊழியரின் செயல்பாட்டை மதிப்பிடும் நிகழ்முறை.

**FACULTY EXCHANGE PROGRAM**
**துறை ஆசிரியர் பரிமாற்றத் திட்டம்**

கல்லூரிகள், பல்கலைகள் முதலியவற்றிடையே ஆசிரிய ஊழியர்களை முறைப்படி மாற்றிக் கொள்ளல்.

**FACULTY PSYCHOLOGY**
**மனக்கூறு உளவியல்**

மனத்துக்கு குறிப்பிட்ட சில கூறுகள் வழங்கப்படுவதாக அனுபவத்தை ஆய்ந்த முன்னாள் உளவியல் நோக்கு.

**FACULTY - STUDENT RATIO**
**ஆசிரியர் மாணவர் விகிதம்**

ஆசிரியர் - மாணவர் விகிதம்

அல்லது பணியாளர் - மாணவர் இடையிலான விகிதம்.

**FACULTY THEORY**
**மனத்திறன் கொள்கை**
மனம் தனித்தனி திறன்களால் ஆனது, குறிப்பிட்ட பயிற்சிகள் மூலம் அவற்றை பயிற்றுவிக்க முடியும் என்பது இக்கொள்கையின் நம்பிக்கை.

**FADING**
**மங்கல்**
துலங்கல்களை கற்பதில் தூண்டுதல் குறிப்புகளைப் படிப்படியாக நீக்கிவிடும் நிகழ்முறை.

**FAILURE**
**தோல்வி**
ஒரு படிப்பு / தேர்வு / சோதனையில் வெற்றிபெற இன்றியமையா குறைந்த அளவு மதிப்பெண்/ தரம் / கெலிப்பை விடவும் குறைவாக பெற்றுள்ள தைக் குறிக்கிறது.

**FAILURE RATE**
**தோல்வி வீதம்**
ஒரு மதிப்பீடு / தேர்வு / சோதனையில் வெற்றி (மதிப்பெண்) பெற தவறும் மாணவர் சதவீதம்.

**FAMILY GROUPING / VERTICAL GROUPING (OR CLASSIFICATION)**
**குடும்ப / குத்து நிலை குழுவாக்கம் / வகைப்பாடு**
ஒரே வகுப்பில் உள்ள மாணவர்களை வயது வாரியாக பிரித்தல் / தொகுத்தல்.

**FAMILY LIFE EDUCATION**
**குடும்ப வாழ்க்கைக் கல்வி**
வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையை ஊக்குவிக்க உருவாக்கப் பட்ட கல்வியைக் குறிக்கிறது.

**FAMILY PSYCHIATRY**
**குடும்ப உள மருத்துவம்**
குடும்பத்துக்குள்ளான மனிதரிடை உறவுகளில் கவனம் குவிக்கும், குழந்தை உளவியலின் விரிவாக்கம்.

**FAMILY SYSTEM**
**குடும்ப முறை**
சமூகவியலில் பெற்றோர், குழந்தைகள், மற்றும் வீட்டில் உள்ளோரைக் கொண்ட முதன்மையான சமூகக் குழு.

**FATHER FIGURE**
**தந்தை நிலை**
ஒருவரைத் தந்தையாக பாவிக்கும் நிலை.

**FATHERS OCCUPATION**
**தகப்பனார் தொழில்**
தந்தையின் வேலை / தொழில். பொதுவாக குடும்பத்தின் சமூக வகுப்பைப் பிரிக்க இதுவே அடிப்படையாக கொள்ளப் படுகிறது.

**FEED BACK**
**பின்னூட்டம்**
வெவ்வேறு மதிப்பீட்டு முறை

கள் வழி வழங்கப்படும் கற்றல் – கற்பித்தல் முன்னேற்றம் பற்றிய தகவல்.

**FEEDER PATTERN (OR PROGRAM)**
**ஊட்ட பாணி / நடைமுறை**

அடிப்படை பள்ளிகளுக்கும் அவற்றின் மாணவர்கள் செல்லும் உயர்நிலை பள்ளிகளுக்குமிடையிலான முறைப்படுத்திய உறவு.

**FEEDER SCHOOL / CONTRIBUTORY SCHOOL**
**ஊட்டும் பள்ளி / பங்களிக்கும் பள்ளி**

உயர்பள்ளிக்கு வரும் மாணவர்களை வழங்கும் / ஊட்டும் பள்ளியாக இருக்கும் அடிப்படை பள்ளி.

**FELLOW**
**சகா / உறுப்பினர்**

கல்லூரி / பல்கலை ஆசிரியர் / ஆய்வு ஊழியர்களில் ஒருவர் அல்லது தொழில்முறை நிறுவனத்தின் மூத்த உறுப்பினர்.

**FELS BEHAVIOUR RATING SCALES**
**பெல் நடத்தை மதிப்பீட்டு அளவைகள்**

வணிக முறையில் கிடைக்கும் குழந்தை நடத்தை அவதான அளவைகள்.

**FERNALD-KELLY METHOD**
**பெர்னால்டு-கெல்லி முறை**

மெதுவாக கற்கும் மாணவர்களுக்கு பயன்படும் கற்பித்தல் முறை. இது எழுதுவதற்கும் பேச்சு மொழியை – சொற்களை உச்சரிப்பதற்கும் முக்கியம் தருகிறது.

**FIELD SCIENCE**
**கள அறிவியல்**

நடைமுறை பணி மேற்கொள்ளப்படும் உழவு, உயிரியல், தாவர இயல், நிலவியல், புவிஇயல், தோட்டவியல், விலங்கியல் போன்ற பாடங்களைக் குறிக்கிறது.

**FIELDS OF KNOWLEDGE**
**அறிவுக் களங்கள்**

பல்வேறு பாடக் களங்கள். எ.கா: கலை, அறிவியல், தொழில்நுட்பம் போன்றவை.

**FIELD STATION**
**கள நிலையம்**

பள்ளி/ கல்லூரி / பல்கலையானது தன் முதன்மை கட்டிடங்களில் இருந்து குறிப்பிட்ட தொலைவில் நிறுவும் நிலையம். இதன் நோக்கம் பாதுகாப்பு முதலிய நோக்கங்களுக்காக தனிமைப் படுத்தப்பட வேண்டிய கள ஆய்வு / படிப்புகளை மேற்கொள்வதற்காகும்.

**FIELD STUDIES**
**கள ஆய்வுகள்**

வகுப்பறை / ஆய்வகங்களில் அல்லாமல் இயற்கையான சூழலில் நடைபெறும் ஆராய்ச்சி முதலான கல்வியியல் பணியைக் குறிக்கிறது.

**FIELD THEORY**
**புலக் கொள்கை**
எல்லா நடத்தையும் இலக்குகளை நோக்கியவையே, உளவியல் புலம் எப்போதுமே ஒழுங்காகவும் இயல்வதாகவும் உள்ளது என்னும் கற்றல் கோட்பாடு.

**FIELD WORK / FIELD LABORATORY EXPERIENCE**
**களப்பணி / கள அனுபவம்**
கல்லூரி / பல்கலைக்கு வெளியில் மாணவரின் செயல்பாட்டைக் குறிக்கிறது.

**FIELD WORKER**
**களப்பணியாளர்**
ஒரு கல்வி - சமூக - நல முகமை அமர்த்தும் சமூக ஊழியர். ஒரு சிக்கல் நிலவும் இடத்தில் அதை ஆய்வதும் இயன்றால் அதற்கு ஒரு தீர்வு காண்பதும் இவர் பணியாகும்.

**FINAL EXAMINATION / FINALE**
**இறுதித் தேர்வு**
ஒரு பல்கலை/ கல்லூரி படிப்பு முடிவில் நடக்கும் பட்டத் தேர்வைக் குறிக்கிறது.

**FINANCIAL ACCOUNTING**
**நிதிக்கணக்கு முறை**
ஒரு நிறுவனத்தின் நிதி மற்றும் வணிக பரிமாற்றங்களின் பதிவு - வகைப்பாடு - மற்றும் பரிசீலனையைக் குறிக்கிறது.

**FINE CONTROL SENSITIVITY**
**நுண்கட்டுப்பாட்டு உணர்திறன்**
நுட்பமான கட்டுப்பாடான தசை இயக்கங்கள் செய்வதற்கும், குறிப்பாக உடல்பயிற்சியில் இருப்பது போன்ற பெருமளவான தசைகளை இயக்குவதற்கும் ஒருவருக்குள்ள திறன்.

**FINGER DEXTERITY**
**விரல் அசைதிறன்**
விரல்களால் கட்டுப்படுத்தப் பட்ட இயக்கங்களை செய்ய ஒருவருக்குள்ள திறனைக் குறிக்கிறது.

**FINGER PAINTING**
**விரல் ஓவியம்**
தடையின்றி குழந்தைகள் வண்ணங்களை கொண்டு வரையும் ஓவியம். சில நேரங்களில் இது ஒரு உளவியல் சிகிச்சை நோக்கத்துக்கும பயன்படுகிறது. இதில் குழந்தைகள் தூரிகைக்குப் பதில் தம் விரல்களை பயன்படுத்த வேண்டும்.

**FIXATION**
**ஊன்றிய நிலை**
வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தோடு வளர்ச்சி தடைபட்டுப்போன நிலை. அல்லது குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான அளவு கடந்த பற்று.

**FIXATION LAW**
**ஊன்றல் விதி**
இதன்படி, கற்றல் சரியாக

நடந்திருந்தால் அது ஆழமாகப் பதிந்திருக்கும்.

**FIXED TRACKING**
**குறிப்பிட்ட மாறாத் தடத்தில் செல்லுதல்**
உறுதியாக நிறுவப்பட்ட கல்வித் திட்டங்கள் / பாடங்களைப் பயன்படுத்தல். மாணவர்களின் தனிப்பட்ட தெரிவுக்கு இதில் அனுமதி இல்லை.

**FLASH CARD**
**பளிச் அட்டை**
வாசிக்க கற்பிப்பதில் பயன்படும் சாதனம். சொற்கள் / சொற்றொடர்கள் பெரிய அட்டைகளில் பெரிதாக எழுதப்பட்டிருக்கும். அவை முழு வகுப்புக்கும் குழுவுக்கும் காட்டப்பட்டு கற்பிக்கப்படும்.

**FLEXIBLE SCHEDULE**
**நெகிழ்வான கால அட்டவணை**
கற்பித்தலின் தேவைகளை எதிர்கொள்ள காலத்தை அதிக திறம்பட வகுத்துக்கொள்ள பயன்படும் உத்தி. இதில் பள்ளிநாள் சமமான கால அளவில் பிரிக்கப்பட்டு தேவைக்கேற்ப இணைத்துக் கொள்ளப்படுகின்றன.

**FLEXIBLE TIME**
**நெகிழ்வான வேலைநேரம்**
திட்டவட்ட தொடக்க நேரம் - முடிக்கும் நேரமின்றி பணியாளர் பணிபுரியும் இடங்களில் பயன்படும் நெகிழ்வான வேலை நேரம்.

**FLOW CHART**
**போக்குப்படம்**
கட்டங்கள், செயல்பாடுகள் முதலியவற்றுக்கிடையிலான இடையுறவின் வரைபட வெளிப்பாடு.

**FLOW DIAGRAM / ROUTE DIAGRAM**
**வழிவரைபடம்**
செயல்படும் இடங்கள், அவற்றுக்கிடையிலான தடங்கள், ஆட்கள், பொருள்கள் முதலியவை பற்றிய வேலை ஆய்வு வரைபடம்.

**FLUID INTELLIGENCE**
**நுண்ணறிவு நீர்மம்**
திறனின் பொதுவான காரணி. அறிவு வளர்ச்சியின்மீதான உயிரியல் தாக்கங்களின் அளவை.

**FLUID MECHANICS**
**நீர்ம இயக்கவியல்**
நீர்மங்கள் மற்றும் வாயுக்களின் பாய்வின் தன்மைகளையும் இயக்கத்தையும் குறிக்கிறது.

**FOETUS**
**முதிர்கரு**
கருத்தரித்து 6வது வாரம் முதல் பிறக்கும் வரையான மனித உயிரி.

**FOLK EDUCATION**
**நாட்டுப்புறக் கல்வி**
பொதுமக்கள் மற்றும் பாரம்பரிய பண்பாடு தொடர்பான கல்வி.

**FOLKLORE**
**நாட்டார் வழக்காறு**
ஒரு மக்கள்/சமூகம் வாய்மொழியாகவோ குறியீட்டியலாகவோ உருவாக்கி விட்டிருக்கும் மரபு வழக்காறுகளை குறிக்கிறது. சமூக மானுடயிலாருக்கு இவை மதிப்பரிய தரவுகளை வழங்குகின்றன.

**FOOD FADS**
**உணவார்வம்**
குறிப்பிட்ட உணவு/ பான வகைகளில் குழந்தைகளுக்கு / பெரியவர்களுக்கு ஏற்படும் வெறித்தனமான விருப்பு வெறுப்புகள்.

**FOOD TECHNOLOGY**
**உணவுத் தொழில்நுட்பம்**
உணவுகளின் பண்புகள், தயாரிப்பு பற்றி குறிப்பாக தொழில் துறையில் செய்யும் ஆய்வைக் குறிக்கிறது.

**FORD FOUNDATION**
**போர்டு நிறுவனம்**
கல்விக்கு ஆதரவாக 1936இல் ஹென்றி போர்டும் எட்சல் போர்டும் உருவாக்கிய அற நிறுவனம். முகவரி: 320, East 43rd Street, New York, NY 10017.

**FORECASTING**
**முன்மதிப்பீடு**
கடந்த கால நடைமுறை, நிகழ்கால போக்குகள், அண்மை வருங்காலத்தில் எதிர்நோக்கும் மாற்றங்கள் இவற்றை கணக்கில் கொள்ளும் கணக்கீடுகளை பயன்படுத்தி வருங்காலத்தை முன் கணித்தல்.

**FOREIGN STUDENT ADVISOR**
**அயலக மாணவர் ஆலோசகர்**
அயலக மாணவர்கள் பள்ளி வளாக மற்றும் சமூக வாழ்க்கைக்கு கல்வித் துறை ரீதியில் - சமூக ரீதியில் - சுற்றுப்புற ரீதியில் தகவமைய உதவுபவரைக் குறிக்கிறது.

**FORGETTNG CURVE**
**மறதி வளைவு**
கற்ற செய்தியை நினைவு கூறும் வீதம் குறைந்து சென்று மறந்து போகும் அல்லது திறம்பட நினைவுகூற முடியாமல் போகும் நிலையை வரைபடமாக காட்டும் வளைகோடு.

**FORMAL EDUCATION**
**முறைசார் கல்வி**
ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பாத்திரங்களை வரையறுக்க முடிகிற - ஒருவருக்கு கற்பிக்கும் பொறுப்பை மற்றவர் ஏற்றுக் கொள்கிற கல்விமுறை.

**FORMALISM**
**முறைமை**
நிறுவனங்கள், கால அட்ட

வணைகள், ஒழுக்க வரையறை கள், கண்டிப்பான பாடத்திட்டங் கள், வலுவான கட்டுப்பாடு, மதிப்பீடு ஆகிய நெகிழ்வற்ற காரணிகளால் தீர்மானிக்கப்படு கிற சொந்த விருப்பம், ஆசிரியர் - மாணவர் பரஸ்பர உறவு, சமூக மையப்பாடு போன்றவற்றால் தீர்மானிக்கப்படாத கல்வி நடப்பு.

**FORMAL KNOWLEDGE**
**முறையான அறிவு**
கல்வி பெற சிறப்பு வாய்ப்பு பெற்றுள்ள சமூகப் பிரிவினர் மட்டுமே கொண்டுள்ள கருத்துக் களால் உருவாக்கப்பட்ட அறிவு.

**FORMATIVE ASSESSMENT (OR EVALUATION)**
**உருவாக்கும் மதிப்பீடு**
கற்பித்தல் முறைகளின் திறத்தை காட்டும் / கற்பதின் சிரமங்களை தெளிவாகக் காட்டும் சோதனை முடிவுகளில் இருந்து தகவல்களை பின்னூட்ட மாக பெற்று கற்றல் / கற்பித்தல் முறையை மேம்படுத்த முயலும் மதிப்பீடு.

**FORMS OF KNOWLEDGE**
**அறிவு வடிவங்கள்**
அறிவின் பல துறைகளை ஒன்றிலிருந்து மற்றதை தனித் துக் காட்ட பயன்படுத்தும் சொல்.

**FORWARD BRANCH OR WASH AHEAD BRANCH**
**முன்னோக்கிய கிளை**
நிரல்படுத்திய கட்டளைச் சொல். ஒரு கிளைப்பு நிரலில் பல சட்டங்களை கடந்து நிரலில் மேலும் அப்பால் உள்ள சட்டத் துக்கு மாணவரை முன்னோக்கி எடுத்துச் செல்லும் கிளையை குறிப்பது.

**FOSTER HOME OR BOARDING HOME**
**வளர்ப்பகம் / பாதுகாப்பகம்**
தன் குடும்பம் அல்லாத ஒரு குடும்பத்தில் குழந்தை வாழ் வதும் கவனித்துக் கொள்ளப் படுவதுமான இடம்.

**FOUNDATION ENGINEERING**
**அடித்தள பொறியியல்**
பொது பொறியியலின் ஒரு கிளை. இது கட்டிடங்கள், பாலங் கள் போன்றவற்றின் அடித்தளம் பற்றியது.

**FOUNDATION OF EDUCATION**
**கல்வியின் அடிப்படை**
கல்வி சிக்கல் பற்றிய ஆய்வு களை உள்ளடக்கிய கல்வி முறை களைக் குறிக்கிறது.

**FOUNDATION STUDIES**
**அடிப்படைப் படிப்பு**
உயர்ந்த மேலும் விரிவான படிப்பில் நுழைய ஆயத்தம் செய்ய உருவாக்கப்பட்ட படிப்பு.

**FOUND SPACES**
**கண்டுபிடித்த இடங்கள்**
மரபு கல்வி வசதிக்கு ஒத்தி ராத இடங்கள். ஆனால் எளிதில்

அதற்கேற்ப மாற்றப் பட்டுவிட முடியும் இடங்கள். எ.கா: உண வகங்கள், கடைத் தொகுப்புகள், மூடிய சுற்றுப் பகுதியுடைய வீடுகள்.

**FRAME OF REFERENCE**
**பார்வைச் சட்டகம்**

ஒரு பொருளின் தன்மை களை அல்லது ஒரு கருத்தின் பண்புகளை மதிப்பிட / அளவிட அளவுகோலாக / உரைகல்லாக பயன்படும் ஒரு தரத்தைக் குறிக்கிறது.

**FRATERNAL TWINS**
**இரு கரு இரட்டையர்**

இரு தனித்தனி முட்டை உயிர் அணுக்களில் இருந்து உருவாகிய இரட்டையரைக் குறிக்கிறது. ஒரே கருவில் இருந்து உருவான இரட்டையர் ஒருகரு இரட்டையர் - Identical twins எனப்படுவர்.

**F RATIO**
**F விகிதம்**

2 அல்லது கூடுதலான வேற்று மைகளின் இடையிலான புள்ளி யியல் வேறுபாடுகளை முடிவு செய்ய வேற்றுமை ஆய்வில் பயன்படும் வாய்பாடு. புள்ளியிய லார் ரொனால்டு ஃபிசரின் நினை வாக F எனப் பெயரிடப் பட்டது. F குழுக்களுக்கு இடையிலான வேற்றுமை (சோதனை விளைவு) / குழுக்களுக்குள்ளேயான வேற்றுமை (தற்செயல் பிழை)

**FREE GROUP DISCUSSION**
**சுதந்திர குழு விவாதம்**

விவாத தலைப்பும் திசையும் மாணவர் குழுவால் நெறிப் படுத்தப்படும் கற்றல் நிலைமை. ஆசிரியர் வெறுமனே கவனிக் கிறார். ஆனால் சில நேரங்களில் அவர் இடையில் தன் கருத்தைக் கூறலாம்.

**FREE PERIOD**
**சுதந்திர காலம்**

ஆசிரியரால் ஒரு குறிப்பிட்ட பணியில் ஈடுபடும்படி ஆணை யிடப்படாமல் மாணவர் தன் சொந்த வேலையை தானே திட்டமிடும் காலம்.

**FREE PLACE**
**இலவச இடம்**

பள்ளி /கல்லூரி /பல்கலை மாணவரிடம் கட்டணம் இன்றி அனுமதிக்கும் இடம்.

**FREE RESPONSE ITEM**
**கட்டற்ற விடை பகுதி**

ஏற்கக்கூடிய பொது அளவுகோலுக்கு பொருந்துமளவில் விடைகள் கட்டற்ற முறையில் தரமுடியும் தேர்வு பகுதி/ கேள்வி.

**FREE TRANSLATION**
**சரளமான மொழிபெயர்ப்பு**

துல்லியமான, சொல்லுக்குச் சொல் பெயர்ப்பாக இல்லாமல் பொதுவான பொருளை தரும் மொழிபெயர்ப்பு.

**FREQUENCY DISTRIBUTION**
**நிகழ்அளவு பகிர்வு**

ஒரு புள்ளியியல் சோதனையின் கெலிப்பெண்களை அட்டவணைப் படுத்தல். உயர்ந்த எண்ணிலிருந்து தாழ்ந்த எண்ணுக்கு, ஒவ்வொரு இடைவெளியிலும் தனியாளின் எண்ணிக்கையைக் காட்டுவதாக.

**FRICTIONAL UNEMPLOYMENT**
**உராயும் வேலையின்மை**

உழைப்பு மற்றும் திறன்களுக்கான தேவையில் வரன்முறையற்ற மாறுபாடுகளால் எழும் குறுகிய கால வேலையின்மை நிலை.

**FRINGER OR CLIMBER**
**விளிம்பர் / தொற்றி**

ஒரு விடலைப் பருவ நிகர் குழுவின் விளிம்பில் இருக்கும் ஒருவரைக் குறிக்கிறது. அவரது நிலைமை பாதுகாப்பற்று உள்ளது. குழுவின் ஒப்புதலை வலுவாக தேடும் நிலையில் இருக்கிறார் அவர்.

**FRUSTRATION**
**நிராசை / மனமுறிவு**

ஒரு உந்தல் உணர்ச்சி தடைபட்டதால் எரிச்சல், நிறைவின்மைக்கு இட்டுச் செல்லும் நடத்தை நிலவரம்

**F SCALE**
**F அளவுமுறை**

ஆளுமையில் இருக்கும் அதிகாரத் தன்மையை அளவிட உருவாக்கப்பட்ட முறை. (F என்பது முதலில் ஃபாசிசம் (= கொடுங்கோன்மை) என்பதைக் குறித்தது). இதற்கான மறைமுக வழி, அதிகாரம்-ஒழுங்கு-விசுவாசம் போன்ற விசயங்களைப் பொறுத்து மனிதர்களின் எதிர்வினை என்ன என்பதைக் கேட்டறிவதாகும்.

**FUGITIVE DOCUMENTS**
**வெளிவரா ஆவணங்கள்**

அச்சில் வராத - எனவே எளிதில் அடையாளம் காணப்பட முடியாத ஆவணங்கள் தகவல் மூலங்களை குறிக்கிறது

**FULL TIME TEACHER**
**முழுநேர ஆசிரியர்**

தம் பள்ளி / கல்லூரி /பல்கலையின் அதிகார ஒழுங்கு முறைகளால் விதிக்கப்பட்ட மணி நேர பணிபுரியும் ஆசிரியர்.

**FUNCTIONALISM**
**செயல்பாட்டு வாதம்**

ஒருவரின் வாழ்வில் மன நிகழ்வுகளால் விளையும் பாதிப்பை வலியுறுத்தும் உளவியல் பிரிவு.

**FUNDAMENTAL DESIGN METHOD (FDM)**
**அடிப்படை வடிவமைப்பு முறை**

பொறியியல் வடிவமைப்பு போன்ற படைப்புத் தன்மையுள்ள வேலை பற்றிய முறையான

அணுகல். இந்த உத்தி வேலை ஆய்வு, குறிப்பாக முறை ஆய்வை அடிப்படையாகக் கொண்டது. வடிவமைப்பின் குறிப்பிட்ட நிலைகளில் வடிவமைப்பவர் தன்னைத்தானே வினவிக் கொள்வதும் அடங்கியது.

# G

**GAIN MATRIX**
**ஆதாய அளவை**
விளையாட்டுக் கோட்பாட்டில் உள்ள அளவையை குறிக்கிறது. 2 அல்லது மேற்பட்ட எதிராளிகள் நகர்த்தும் மொத்த நகர்வுகள் ஒவ்வொன்றுக்கும் விளையாடுபவர் எதிர்பார்க்க முடியும் ஆதாயத்தைக் காட்டப் பயன்படுகிறது.

**GAIN SCORES**
**ஆதாய கெலிப்பெண்**
கற்பித்தல் அல்லது வளர்ச்சியின் ஒரு கட்டத்தின் முன்னும் பின்னும் ஏற்படும் முன்னேற்றத்தை சுட்டும் கெலிப்பெண்கள்.

**GAME**
**விளையாட்டு**
ஒருவகை கற்பித்தல் உத்தி. குறிப்பாக மேலாண்மை கல்வி மற்றும் பயிற்சியில் பயன்பட்டாலும் பிற துறை கல்வியிலும் கையாளப்படுகிறது.

**GAME PLAN**
**விளையாட்டு திட்டம்**
நடைமுறைத்திட்டம் எ.கா: வரும் காலாண்டுக்கான விளையாட்டுத் திட்டம். பெரிதும் போட்டித் தன்மையான திட்ட வட்ட குறிக்கோளும் விதிமுறைகளும் கொண்ட ஒழுங்குபடுத்திய விளையாட்டை இது குறிக்கிறது.

**GAMES DUTY**
**விளையாட்டு பொறுப்பு**
விளையாட்டுகளுக்கு சிறப்பாக குழு விளையாட்டுகளுக்கு பொறுப்பாக சில வகைகளில் உதவி வரும் ஆசிரியரின் பாத்திரம்.

**GEMES THEORY**
**விளையாட்டு கோட்பாடு**
மாதிரி அமைத்தல் மூலம் சிக்கல்கள் தீர்க்கும் கணித உத்தி.

**GANG**
**கும்பல்**
பெரிதும் ஒத்த வயதும் ஆர்வங்களும் உள்ள திட்டமற்ற ஒட்டுதலான குழந்தைகள் குழுவைக் குறிக்கிறது.

**GANSER'S SYNDROME**
**கன்சரின் நோய்க்குறி**
உளவெறியில் போல் பொருளற்ற பேச்சும் நடத்தையும் உடையது.

**GAS ENGINEERING**
**வாயுப் பொறியியல்**
வாயுவரத்து, சேமிப்பு மற்றும்

பயன்பாடு குறித்த பொறியியல் பிரிவு. (பொதுவாக வெப்பமூட்ட பயன்படும் நீர்வளிக்கரி)

GATEWAY COURSE
**நுழைவுப் படிப்பு**
கல்லூரி பல்கலை பட்டப் படிப்பு போன்ற பெரிய படிப்பில் நுழைய தகுதிபெறும் நோக்கில் மேற்கொள்ளும் படிப்பு.

GENERAL ABILITY
**பொதுவான திறன்**
அளவிடப்பட்ட பல திறன் களின் தொகுப்பைக் குறிக்கிறது.

GENERAL APTITUDE TEST BATTERY (GATB)
**பொதுநாட்ட சோதனைத் தொகுப்பு**
தொழில்நாட்டத்தை முடிவு செய்ய அமைக்கப்பட்ட 12 சோதனைகளின் தொகுப்பை குறிக்கிறது. இதன் முடிவுகள் ஒரு சுருக்க வடிவில் தரப்படுகிறது. இது 22 தொழில் படிப்பு குழுக் களுக்கான தரப்படுத்திய சுருக்க வரைவுகளைக் கொண்டு அளக் கப்படுகிறது. தொழில் கல்வியில் வழிகாட்டும் தொழில்சார் உள வியலாளர்களால் பயன்படுத்தப் படுகிறது.

GENERAL CULTURE COURSE
**பொதுப்பண்பாட்டு படிப்பு**
படிக்கும் துறை பற்றிய பொது சித்திரத்தை மட்டுமே வழங்கும் படி உருவாக்கப்பட்ட தொழில் கல்வி சாரா படிப்பு.

GENERAL EDUCATION
**பொதுக்கல்வி**
எல்லா மாணவர்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டிய அறிவு-அனுபவ பகுதிகள்.

GENERAL FACTOR
**பொதுக்காரணி**
காரணி ஆய்வு என்னும் புள்ளியியல் உத்தியை கொண்டு அவதானித்த எல்லா மாறிகளில் இருந்தும் வடித்தெடுத்த காரணி.

GENERALIST
**பொதுவியலார்**
பரந்துபட்ட துறைகளில் நாட் டம் கொண்ட ஆனால் எந்த குறிப்பிட்ட துறையிலும் சிறப்பு நாட்டமோ முற்றிலும் தொழில் கல்வி ரீதியான அக்கறையோ இல்லாத ஒருவர்.

GENERAL MENTAL ABILITY OR INTELLIGENCE
**பொது மனத்திறன் / நுண்ணறிவு**
பலவிதமான சோதனை களின் அடிப்படையாக இருப் பதாக கருதப்படும் காரணி.

GENERAL SCIENCE
**பொது அறிவியல்**
இயற்பியல் - வேதியியல் - உயிரியல் மூன்றின் அம்சங்களும் இணைந்து ஒரே பாடமாக கற்பிப்பதை குறிக்கிறது.

GENERAL STUDIES
**பொது ஆய்வுகள்**
மாணவர்களின் கல்வியை அவர்களின் முதன்மை பாடம் / பாடங்களுக்கும் அப்பால் பரவலாக்க உருவாக்கப்பட்ட ஆய்வுத் திட்டத்தைக் குறிக்கிறது.

GENERAL GAP
**தலைமுறை இடைவெளி**
வெவ்வேறு தலைமுறையினரிடையே மதிப்பீடுகள் - நம்பிக்கை - மனப்பான்மைகள்- நடத்தை போன்றவற்றில் ஏற்படும் வாக்குவாதங்களால் விளையும் அந்நியமாதலையும் தவறான புரிதலையும் குறிக்கிறது.

GENERIC TRAINING IN SOCIAL WORK
**சமூகப் பணியில் பொதுப் பயிற்சி**
சமூகப் பணியின் மொத்த பரப்பையும் உள்ளடக்கும்படி உருவாக்கிய பாடங்கள்.

GENES
**மரபணுக்கள்**
நிறப்புரியில் உள்ள மரபுப் பண்புகளை ஏந்திச் செல்பவை இவை. எனவே பெற்றோரில் இருந்து பிள்ளைகளுக்கு இன பண்புகளை கடத்தும் அடிப்படை அலகுகளாய் உள்ளன.

GENETIC ENGINEERING
**மரபணு பொறியியல்**
நுண் உயிரிகளின் மரபணு உள்ளடக்கத்தை திறத்துடன் கையாள்வதை குறிக்கிறது.

GENETIC FACTORS
**மரபணு காரணிகள்**
சூழலியல், பிறவி காரணிகள் அல்லாத கவீகரிக்கப்பட்ட காரணிகள்.

GENETIC FALLACY
**மரபியல் மடமை**
தர்க்க / வாத பிழை. இதில் ஒன்றை மறுப்பதற்கான முயற்சியானது, அது முன் வைக்கப்பட்டதற்கான காரணங்களை மறுப்பதன்மூலம் செய்யப்படுகிறது.

GENETIC PREDETERMINISM
**மரபியல் முன் நிர்ணய வாதம்**
மனிதரில் மரபுப்பண்புகள், சூழலியல் தாக்கத்தைவிட ஆதிக்கமாக உள்ளன என்னும் கோட்பாடு.

GENETiCS
**மரபியல்**
வமிசாவளி பற்றியும் சுவீகரித்துக் கொள்ளப்பட்ட பண்புகளிலிருந்து ஏற்படும் மாறுபாடுகளையும் பற்றிய உயிரியல் பிரிவு.

GENETAL PLAY
**பிறப்புறுப்புடன் விளையாடல்**
2 வயதுள்ள குழந்தை தன் உணர்வின்றியும் பெரிதும் பகிரங்கமாகவும் பிறப்புறுப்பை பிடித்து விளையாடும் நடத்தை.

**GENETAL STAGE**
**பிறப்புறுப்புக் கட்டம்**

உள - பாலியல் வளர்ச்சி முந்திய பிந்திய கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. முந்திய கட்டத்தில் (4-5 வயதுவரை) குழந்தை பிறப்புறுப்புக்களில் ஆர்வம் உடையதாகிறது. இரு பால்களை அறிகிறது. பெற்றோரை பாலியல் பிறவிகளாக காண்கிறது. பிந்திய கட்டத்தில் பருவமடைதல் - வயதுக்குவரல் வழியாக இளையவர் எதிர் பாலிடம் உண்மையான ஆர்வம் செலுத்தத் தொடங்குகிறார்.

**GENIUS**
**மேதை**

விதிவிலக்கான உயர் மனத் திறன் பெற்றுள்ள உச்ச படைப்புத் திறன் காட்டுகிற திறமையான செயல்பாட்டை உடைய மனிதர். மேதைமையின் கொடுமுடி என 140 நுண்ணறிவு ஈவு அளவை சிலர் ஏற்கிறார்கள்.

**GIFTED CHILD**
**மீத்திறக் குழந்தை**

இயல்பு சராசரி தரத்துக்கு மேற்பட்ட குழந்தை பொது அறிவு சிறப்புத் திறமை பெற்று விளங்கும் குழந்தைகள் அப்படி விளங்க பல புற-அக காரணங்கள் உள்ளன.

**GRADED APPROACH**
**படிப்படியான அணுகல்**

இந்த கற்பித்தல் முறையில் பாடங்களும் செய்திகளும் மென் மேலும் கடினமாகிச் செல்லும் முறையில் தரப்படுகின்றன.

**GRADED DIFFICULTY**
**படிப்படியான கடினம்**

மாணவரின் சாதனை படிப் படியாக விரிவடையுமாறு முன்னுக்குப் பின் மென்மேலும் கடினமாக்கப் பட்டிருக்கும் பணி களைக் குறிக்கிறது.

**GRADE INFLATION**
**தர வீக்கம்**

தம் தேர்வுகளுக்கு ஆன மதிப்பெண்களின் அளவை உயர்த்தும் நிறுவனங்களின் போக்கைக் குறிக்கிறது.

**GRADE LEVEL**
**தர அளவு**

பள்ளியில் அடையப்பட்ட தரத்துடன் மாணவர் அடைந் துள்ள கல்வி முதிர்ச்சி அளவு.

**GRADE LEVEL RETARDATION**
**தரஅளவு பின்னடைவு**

ஒத்த வயதுள்ள பிற மாணவர்களை விட கீழ்நிலை அடைந்துள்ளதைக் குறிக்கிறது.

**GRADUATE**
**பட்டதாரி**

கல்லூரி / பலதொழில் / கல்லூரி பல்கலைக்கழகம் போன்ற வற்றில் படிப்பு / ஆய்வு முடித்த பின் பட்டம் வழங்கப்பெற்ற ஒருவர்.

**GRADUATE ASSISTANT**
**பட்ட உதவியாளர்**
ஆய்வு / கல்வி உதவியாள ரைக் குறிக்கிறது.

**GRAUDATE EQUIVALENT**
**பட்டதாரிக்கு சமமானவர்**
குறிப்பிட்ட நோக்கத்துக் காகவோ குறிப்பிட்ட நிறுவனத்தி லோ முதல் நிலைக்கு சமமாக அங்கீகரிக்கப்பட்ட தகுதி பெற் றுள்ள ஒருவர்.

**GRADUATE LIBRARY SCHOOL**
**நூலகப் பட்டம் தரும் பள்ளி**
நூலகர் தகுதிக்கு பட்டப் படிப்பு வழங்கும் கல்வி நிறுவனம்.

**GRADUATION DAY (OR CEREMONY)**
**பட்டமளிப்பு நாள் (விழா)**
ஒரு பள்ளி / கல்லூரி / பல்கலைப் பட்டதாரிகளுக்கு பட்டம் / பட்டயம் வழங்கப்படும் நிகழ்ச்சி.

**GRAPHIC ART**
**வரைபடக்கலை**
அச்சு எழுத்தையும் அதனு டன் சேர்ந்த காட்சி அமைப் பையும் வெளியிடும் விதம் பற்றிய கலை-அறிவியல்.

**GRASPING STAGE**
**பற்றிப்பிடிக்கும் கட்டம்**
5-6 மாதமான குழந்தை சுற்றுப்புறத்தைக் குறித்த உணர் வுடன் உள்ளது, தன் உடனடி சூழலை கட்டுப்படுத்த கற்கிறது என்பதை காட்டும் முதல் குறிப்பு. அந்நிலையில் குழந்தை தன் கைக்கெட்டும் பொருள்களை பற்றிப் பிடிக்க பார்க்கிறது.

**GREAT BOOKS**
**மாபெரும் நூல்கள்**
தாராள கல்வியின் அடிப்படை ஆதாரங்கள் என கருதப்படும் முகாமையான வரலாற்று - இலக்கிய-அறிவியல்-மெய்யியல் நூல் பட்டியல்.

**GREAT MAN**
**மாமனிதர்**
வரலாற்றில் ஏதேனும் ஒரு துறையில் தலைசிறந்து விளங் கியவர்.

**GREATMAN THEORY**
**மாமனிதர் கோட்பாடு**
வரலாற்று முக்கியமுடைய அனைத்து நிகழ்ச்சிகளும் குறிப் பிடத்தக்க தனிமனிதர்களின் தாக்கத்தினாலேயே உருவா கின்றன. எனவே அத்தகைய மனிதர்களின் வாழ்க்கைகளை கற்பதன் வழியாக தான் வரலாற்றை சிறப்பான முறையில் கற்கமுடியும் என்னும் கருத்து.

**GREAT WORKS**
**மாபெரும் படைப்புகள்**
குறிப்பிட்ட துறைகளில் முக்கிய தகவல் மூலங்களையும் சிறந்த உரைகளையும் ஏற்கப்பட்டுள்ள நூல்கள் முதலியவற்றை குறிக்கிறது.

**GREGARIOUSNESS**

**கூடி வாழ்தல்**

ஒன்றில் சேர்ந்து வாழ வேண்டும் என்னும் மனித தேவை. பிற மனிதருடன் குறைந்த தொடர்பிலிருந்து மிக நெருங்கிய தொடர்பை நோக்கி முன்னேறுவதில் இது வெளிப்படுகிறது.

**GREY MATTER**

**மூளைப் பொருள்**

மூளையின் வெளிப்புறணியிலோ நரம்பணுக்கள் மிகுந்து உள்ள வேறிடத்திலோ மூளை திசுக்களில் காணும் சாயலை குறிக்கிறது.

**GREY AREA OCCUPATION**

**பொருந்திய வேலை**

உடல் உழைப்பும் மூளை உழைப்பும் சேர்ந்த உழைப்பைக் குறிக்கிறது.

**GROSS MOTOR SKILLS**

**மொத்த இயக்கத் திறன்கள்**

மொத்த உடல் /அனைத்து உறுப்புகளின் அசைவையும் வேண்டும் உடல் திறன்களை குறிக்கிறது.

**GROUNDS OF BELIEF**

**நம்பிக்கை அடித்தளம்**

ஒரு நம்பிக்கை / வாதத்துக்கு அடிப்படையான முற்கருத்துக்கள், ஊகங்கள், சான்று முதலியவற்றைக் குறிக்கிறது.

**GROUP**

**குழு**

சமூகக் குழு என்ற வகையில், எந்த எண்ணிக்கையிலும் சேர்ந்தோ தனித்தோ முறைப்படியோ திட்டமின்றியோ ஒருவருடன் ஒருவர் பொது அக்கறை மதிப்பீடு அல்லது பற்றினால் இணைந்துள்ள மனிதர்கள்.

**GROUP ABILITIES**

**குழுத் திறன்கள்**

சொல்திறன் என்னும் இன்னும் அதிக பொதுவான தலைப்பின் கீழ் கொணர முடியும் குறிப்பான திறன்களைக் குறிக்கிறது.

**GROUP COUNSELLING**

**குழு வழிகாட்டல்**

மாணவர்களுக்கு தனித்தனியாக ஆலோசனை வழங்குவதை விட கூட்டமாக வைத்து வழங்கல்.

**GROUP CULTURE**

**குழுப் பண்பாடு**

ஒரு குழுவுக்குள்ளான வழக்கங்கள், மதிப்புகள், ஆர்வங்கள், மரபு பழக்கங்கள், நடத்தையைக் குறிப்பது.

**GROUP DISCUSSION**

**குழு விவாதம்**

சிறு குழுவுக்குள் குறிப்பான தலைப்புகளில் திறந்த விவாதம் மூலம் கற்கும் முறை.

**GROUP EXAMINATION**
**தொகுப்புத் தேர்வு**
குறிப்பிட்ட சில பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற வேண்டிய தேர்வு.

**GROUP EXPERIMENT**
**குழுச் சோதனை**
சிகிச்சைக் குழுவாக பெருமளவான பேரை பயன்படுத்தும் சோதனை.

**GROUP GUIDANCE CLASSES**
**குழு வழிகாட்டி வகுப்புகள்**
மாணவர் குழுக்களுக்கு வேலையில் வழிகாட்டல் வழங்கும் வகுப்புகள்.

**GROUP LABELLING**
**தொகுதியாக்கல்**
கற்க, மனப்பாடம் செய்ய வேண்டிய பாடங்களை திரும்ப நினைவுக்கு கொணர வசதியாக குறிப்பிட்ட குழுக்களாக உட் குழுக்களாக தொகுத்தல்.

**GROUP NEEDS**
**குழு தேவைகள்**
தம் நிறைவுக்கு பிறரின் கூட்டு எதிர்வினை வேண்டும் கற்றோர் தேவைகள்.

**GROUP NORMS**
**குழு நியதிகள்**
ஒரு குழு / பண்பாட்டின் பெரும்பான்மை மக்களிடையே பரவலாக புழங்கும் நடத்தை தராதரம் பற்றிய எதிர்பார்ப்புகளை குறிக்கிறது.

**GROUP PROJECT WORK**
**குழுத்திட்ட வேலை**
மாணவர்கள் தனித்தனியாக அன்றி குழுகுழுவாக செயல்படும் திட்டவேலை.

**GROUP STRUCTURE**
**குழு அமைவு**
குழுவில் உள்ள தகுதி, பணி வேறுபாட்டு முறை. பெரும்பாலான குழுக்கள் கீழ் மேல் என்ற ஏற்றத்தாழ்வான தகுதியைக் கொண்டுள்ளன.

**GROUP TEACHING**
**குழு போதனை / கற்பித்தல்**
வகுப்பிலுள்ள மாணவர்களை அவர்களின் திறமை, ஆர்வம் போன்ற ஏதாவது அளவுகோலைக் கொண்டு குழுக்களாக பிரித்து கற்பித்தல்.

**GROUP TEST**
**குழுச் சோதனை**
பலருக்கு ஒரே நேரத்தில் ஏற்பாடு செய்யப்படும் உளவியல் சோதனையைக் குறிக்கிறது.

**GROUP THEORY**
**குழுக்கோட்பாடு**
பொதுவான சிக்கல் / தேவைகள் உள்ளவர்கள் அடங்கிய குழு.

ஒரு தேர்ந்த ஆசிரியரின் வழிகாட்டலின்கீழ் தம் சிக்கலை /தேவையை பற்றி பேசி ஒருவருக் கொருவர் உதவிக்கொள்ள செய்யும் சிகிச்சை முறை.

**GROUP TRAINING METHODS**
**குழுப்பயிற்சி முறைகள்**

தனியாள்களுக்கு அளிப்பதை விட குழுவுக்கு பயிற்சி அளிக்கும் முறைகள். இவற்றில் குழு உரை யாடல், சிக்கல் நிகழ்வு உத்தி, படிப்பு விவரம், நிபுணர்உடனிருத் தல், சொற்பொழிவுகள், கூ குழு பயிற்சி முதலியவை அடங்கும்.

**GROWTH**
**வளர்ச்சி**

உடல் / மன அமைப்பில் முதிர்ச்சியை நோக்கிய மனித வளர்ச்சியின் இயற்கை மாறுதல் களை குறிக்கிறது.

**GROWTH ERROR**
**வளர்ச்சிப்பிழை**

குழந்தை வளர்ச்சியில் ஒரு நிகழ்வு. நடைமுறை மென் மேலும் முதிர்ந்து செல்வதற்குப் பதில் முதிர்ச்சியுற்று செல்லுதல்.

**GROWTH HORMONE**
**வளர்ச்சி ஊக்கி**

பிட்யூட்டரி, தைராய்டு சுரப்பி சுரக்கும் ஊக்கி (ஹார்மோன்). உடலின் பொதுவான வளர்ச்சி யை இது ஒழுங்குபடுத்துகிறது.

**GROWTH SPURT**
**வளர்ச்சி பீறிடல்**

வளர்ச்சி வேகத்தில் குறிப் பிடத்தக்க முடுக்கத்தை குறிக் கிறது. எடுத்துக் காட்டாக, சிறுவயதிலேயே உயரத்தில் அதிக வளர்ச்சி ஏற்படல்.

**GUIDED READING**
**துணை வாசிப்பு**

ஆசிரியர்கள் பரிந்துரைக்கும்/ பாடத்திட்டத்திலேயே தரப் பட்டிருக்கும் வாசிப்புக்கான கூடுதல் நூல்கள், கட்டுரைகள் முதலியவை.

**GUTTMAN SCALE**
**கட்மன் அளவீடு**

மென்மேலும் தீவிரம் கூடிச் செல்லும் வரிசையான கூற்று களுக்கு ஆம் இல்லை என்ற வடிவில் பதில்கோரும் மனப் பாங்கு அளவை.

**GYMNASIUM**
**உடற்பயிற்சிக் கூடம்**

உடல் கல்விக்காகவும் (PE) அதுபோன்ற நடவடிக்கைகளுக் காகவும் உள்ள கட்டிடம் / அறை.

**GYP SCHOOL**
**GYP பள்ளி**

முறைப்படி ஏற்கப்படாத, அதிக கட்டணம் வாங்குகிற, ஆனால் சரியாக கல்வி தரப்படாத பள்ளியைக் குறிக்கிறது.

# H

**HABITS**
**பழக்கங்கள்**
பயிற்சி செய்த தன்னியக்க மான கற்ற எதிர்வினைகள் குறிப்பிட்ட நிலைமைகளில் தானாக துலங்குபவை. ஒருவரின் தேவைகளை எதிர்கொள்பவை.

**HABIT DISORDERS**
**பழக்க கோளாறுகள்**
பொதுவாக தகைக்கேட்டின் பண்பு. (வாய்) திக்கல், தூக்கத்தில் நடத்தல், உணவு வெறி போன்ற பழக்க கோளாறுகளை இது குறிக்கிறது.

**HAEMOPHILIA**
**குருதி உறையாமை**
குருதி உறையா மருத்துவ நிலை. ரத்தம் அதிகமாக வெளியேறும்.

**HALF TIMER**
**அரைநேரர்**
படிப்பில் அரைநேரமும் அரை நேரம் வேலையிலும் ஈடுபடு பவரைக் குறிக்கிறது. வார வேலை நாளில் பாதியளவே பணிபுரியும் ஆசிரியரைக் குறிக்கிறது.

**HALL OF RESIDENCE**
**குடியிருப்பு பகுதி**
ஒரு கல்லூரி / தொழில்பள்ளி பல்கலையுடன் இணைக்கப் பட்ட மாணவர் விடுதி / குடி இருப்பு பகுதி.

**HALO EFFECT**
**ஒளிவட்ட விளைவு**
ஆளுமையிலும் பிற மதிப் பீட்டு வடிவங்களிலும் ஒரு புறம் சாதாரணம். ஒரு மாணவரின் தலைசிறந்த ஒரு பண்பால் பாதிப்புறும் ஆசிரியர். அவரது தகுதியை மிகையாக மதிப்பிட்டு விடல் ஒரு எடுத்துக்காட்டு.

**HANDEDNESS**
**கைவரல்**
இடது / வலது கை வரல் - எழுதல் முதலான வேலைகளில் எந்த கை இயல்பாக / ஆதிக்கமாக வரும் என்பது.

**HANDICAPPED CHILDREN**
**ஊனமுற்ற குழந்தைகள்**
பார்வையற்ற, பார்வை குறை வுள்ள, காதுகேளாத, சரியாக கேட்காத, உடல் ஊனமுற்ற, நொய்மையான, தகவமைய முடியாத, கல்வியில் சராசரிக்கு கீழான, வலிப்புள்ள, பேச்சு குறைபாடுள்ள குழந்தைகளைக் குறிக்கிறது.

**HARD GAMES AREA**
**வன்தரைப்பரப்பு**
பொதுவாக வெளியில் விளை யாடப்படும் விளையாட்டுக்களுக் காக தரை கெட்டித்த பகுதியைக் குறிக்கிறது.

**HARING**
**குழப்பல்**

புதிதாக சேர்ந்த மாணவர்களை பழைய மாணவர்கள் அலைக்கழிப்பதைக் குறிக்கிறது. பள்ளி விதிமுறைகளுக்கு முரணானது.

**HARVARD, CASE METHOD**
**ஹார்வர்டு சூழ்நிலை முறை**

தொடர்ச்சியான சூழ்நிலை விவரங்கள், நிகழ்வு ஆய்வுகள் வழி மேலாண்மை - வணிக படிப்புகளை கற்பிக்கும்முறை. இது வகைப்பறையில் சாரமான நடைமுறை அனுபவத்தை வழங்கும் விளைவுடையது.

**HAWTHORNE EFFECT**
**ஹாத்தோ(ர்)ன் விளைவு**

புதிய உத்தியை அறிமுகப் படுத்துவதால் அதனால் ஏற்படும் ஆர்வத்தால் முன்னேற்றம் ஏற்படும் நிலையைக் குறிக்கிறது. உத்தியால் உண்டாகும் பயன் வேறு.

**HAYS PEGBOARD TEST**
**ஹேசின் செருகுபலகை சோதனை**

சுமார் 3 நிமிடமே பிடிக்கக் கூடிய மிக சுருக்கமான சோதனை. இடது / வலது இரு கைகளுக்கான கை-இலக்கு ஒருங்கிணைப்பை கணக்கிட இது உதவலாம்.

**HEAD BOY (OR GIRL)**
**மாணவர் தலைவர் (தலைவி)**

வழக்கமான பள்ளி நிகழ்ச்சிகளில் சிறப்பு செயல்களை செய்ய வேண்டிய மாணவர் / மாணவி.

**HEAD MASTER OR HEAD MISTRESS**
**தலைமை ஆசிரியர் / தலைமை ஆசிரியை**

பள்ளி நிர்வாக தலைமை ஆசிரியர்.

**HEAD OF DEPARTMENT**
**துறைத்தலைவர்**

ஒரு பள்ளி / கல்வி நிறுவனத்தில் குறிப்பிட்ட கல்வித்துறை அமைக்கப் பொறுப்பான அல்லது குறிப்பிட்ட துறை பாடத்தை கற்பிக்கப் பொறுப்பான ஆசிரியர்.

**HEALTH EDUCATION**
**உடல்நலக்கல்வி**

நல நடத்தை-மனப்பாங்குகள் பற்றிய விவரம் - தகவல் வழங்கும் பாடத்திட்டம்.

**HEALTH SCIENCE**
**உடல்நலவியல்**

நலத்தைக் காப்பதையும் நோயைத் தடுப்பதையும் பற்றிய அறிவியல்.

**HEALTH SUB PROFESSIONS**
**நல துணை பணிகள்**

பல் மருத்துவ உதவியாளர், தாதியர், மருத்துவமனை உதவியாளர் போன்ற பணிகளைக் குறிக்கிறது.

**HEARING HANDICAPED**
**காது கேட்புக் குறைபாடு /**

**காது கேளாமை**

ஒலிசார் காது கேளாமை, கேட்டல் சார் (காது) கேளாமை, உறுப்புசார் (காது) கேளாமை களைக் குறிக்கிறது. சரியாக கேட்பதில்லை என்பது முதல் முழு செவிடு வரையான குறை கள்.

**HEDONISM**
**இன்ப வாதம்**

வாழ்வின் உச்சநோக்கம் - நன்மை தனத்தின் ஊற்று இன்பமே என்னும் நம்பிக்கை. இன்பத் தேடல், இன்பதுன்பம் பற்றிய உளவியல் இன்பவியல் எனப்படும்.

**HEREDITY**
**பரம்பரை**

உயிரிகள் தம்மை ஒத்த கால் வழிகளை உருவாக்கும் ஒழுங் கான உயிரியல் நிகழ் முறை.

**HETERONOMY**
**புறஅதிகாரச் சார்பு**

இன்னொருவரின் அதிகாரத் தை சார்ந்திருத்தல். தன் - நிர்ணயம் இல்லாத தற்கட்டுப் பாடு அற்ற நிலை.

**HETERO SEXUALITY**
**எதிர்ப்பால் கவர்ச்சி**

எதிர்ப்பாலினர் மேல் விருப் பமும் அக்கறையும். ஆண்-பெண் இடையிலான பால் கவர்ச்சி.

**HEURISTIC METHODS**
**தானே அறி முறைகள்**

மாணவர் தானே கோட்பாடு களையும் விதிகளையும் கண்டு கொள்ள முடியும் வகையில் வேலையைத் திட்டமிட்ட கற் பித்தல் உத்திகள்.

**HEURISTIC MODELS**
**தானே அறி மாதிரிகள்**

கணித மாதிரி அமைக்கும் உத்தியை பயன்படுத்துவதைக் குறிக்கிறது. நடைமுறை அனு பவத்தின் பயன்களை இது கணக்கில் எடுக்கிறது.

**HIDDEN CURRICULUM**
**மறைவான கலைத்திட்டம்**

ஒரு பள்ளி, சமூக மதிப்புகளை பிரதிபலிக்கும் - ஆதரிக்கும் முறை சாரா - நுட்ப வழிகளைக் குறிக்கிறது.

**HIGH CULTURE**
**உயர் பண்பாடு**

சமூகத்தின் இலக்கியம் முதலான வெளிப்பாட்டுக் கலை களைக் குறிக்கிறது.

**HIGHER DEGREE**
**உயர் பட்டம்**

பட்ட மேல்படிப்பின் பட்டம் (எகா: M.Sc, M.A) அல்லது முனைவர் பட்டத்தை (எகா: Ph.D. D.Phil) குறிக்கிறது.

**HILL FOUNDATION**
**ஹில் நிறுவனம்**

ஐஅ கல்வி நிறுவனம். குறிப் பாக அறிவியலிலும் அனைத்து மட்டத்திலுமான கல்வி மேம்பாட் டிலும் கவனம் செலுத்துகிறது.

**HISTOGRAM**
**பட்டை வரைபடம்**
கிடை அச்சின்மேல் இணை வரிசையாக நிற்கும் செவ்வகப் பட்டைகள். அவற்றின் உயரம் அதற்கு நேருள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையை குறிக்கிறது.

**HISTORIGRAM**
**கால வரைபடம்**
காலப்போக்கில் மாறியில் ஏற் படும் மாற்றங்களை காட்டும் வரைபடம்.

**HISTORY**
**வரலாறு**
மக்கள் - நாடுகள் - அமைப்பு கள் - ஒழுங்குகள் முதலிய வற்றின் தோற்றம், வளர்ச்சி பற்றி முறைப்பட ஆயும் இயல்.

**HISTORY OF EDUCATION**
**கல்வி வரலாறு**
கல்வி முறைகள், கல்வி கொள்கை, கல்வி நிறுவனங்கள் இவற்றின் கடந்த கால வளர்ச்சி பற்றிய ஆய்வு. பொதுவான அரசியல் - சமூக - பண்பாட்டு மாற்றமெனும் வரலாற்று அமைப் பிற்குள் வைத்து ஆராயப்படு கிறது.

**HITCH HIKING**
**இலவசப் பயணம்**
புது கருத்துக்களை தூண்டி விட இருக்கிற கருத்துக்களை பயன்படுத்துவதைக் குறிக்கிறது.

**HOLDING POWER**
**கைப்பற்று அதிகாரம்**
மாணவர் பட்டம் பெறும் வரை / படிப்பை முடிக்கும்வரை அவர்களைப் பள்ளியில் இருத்த பள்ளிக்குள்ள உரிமையைக் குறிக்கிறது.

**HOLIDAY HOME**
**விடுமுறை விடுதி**
விடுமுறையில் மாணவர்கள் தம் பள்ளி நிருவாகத்தின் ஆதரவில் தங்கும் உண்டுறை விடுதி.

**HOLIST**
**முழுமைவாதம்**
ஒரு செய்தியைக் கற்றல் - நினைவு கூர்தல் - தொகுத் துரைத்தல் மூன்றும் ஒருசேர நிகழ்வதாக கற்றல் பாணியை வரையறுக்கும் வாதம்.

**HOLOPHRASTIC SPEECH**
**ஒருசொல் பேச்சு**
மொழி பயிலும் தொடக்க நிலைகளில் முழு வாக்கிய கருத்தையும் தெரிவிக்கும் ஒற்றைச் சொற்கள்.

**HOME BASED TUTOR**
**வீட்டுஆசிரியர்**
கடும் ஊனம், நொய்மையான உடல்நிலை, போன்ற காரணத் தால் வீட்டிலேயே கிடக்கும் - பள்ளிக்கு போக முடியாத குழந்தையின் வீட்டுக்கு வந்து சொல்லித்தரும் ஆசிரியர்.

**HOME ECONOMICS**
**வீட்டுப் பொருளியல்**
மனை அறிவியலை - வரவு செலவு திட்டத்தில் கூடுதல் கவனத்துடன் பயிலுதல்.

**HOME EXPERIMENTAL KIT**
**வீட்டு சோதனை கருவிப் பெட்டி**
அஞ்சல்வழி படிப்பு போன்ற படிப்புக்கு துணையாக வீட்டிலே யே சில அறிவியல் சோதனைகள் நடத்த மாணவர்க்கு உதவும்படி அமைக்கப்பட்ட கருவிப் பெட்டி.

**HOME RELATIONS UNIT**
**வீட்டு உறவு பிரிவு**
குறிப்பான உதவி / கவனம் தேவைப்படும் மாணவர்களின் வீடுகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் பிரிவு.

**HOMOGENEOUS GROUPING**
**ஓரகக்குழு**
ஒத்த அறிவு - திறமை- நோக்கம் முதலியவை கொண்ட மாணவர் அடங்கிய குழுவைக் குறிக்கிறது.

**HONOURS DEGREE**
**கவுரவ பட்டம்**
தேர்ச்சி பெற்று கிடைக்கும் பட்டத்துக்கும் மேலாக தீவிரமாக படித்த பின் கிடைக்கும் பல்கலை / அதற்கு சமமான பட்டம்.

**HONOURS SCHOOL**
**கவுரவ பள்ளி**
கவுரவ பட்டத்துக்கு ஆக படிக்கும் ஒரு வகுப்பை குறிக்கிறது.

**HORIZONTAL TRANSFER OR INTERNAL TRANSFER**
**கிடைமாற்று / உள்மாற்று**
புதிய மேலும் உயர்ந்த திறன்கள் கற்கப்படாமல், அதே மட்டத்திலான ஒரு புதிய பணிக்கு திறன்கள் பயன்படுத்தப் படும் மாற்றல் வடிவம்.

**HOSPITAL / HOME TUTION SERVICE**
**மருத்துவமனை வீட்டுப் படிப்பு சேவை**
நோய் காரணமாக வீட்டில்/ மருத்துவமனையில் கிடக்க நேர்ந்த மாணவர்களுக்கு கல்வி வசதிகள் வழங்கல்.

**HOSPITAL SCHOOL**
**மருத்துவமனைப் பள்ளி**
ஒரு மருத்துவமனையுடன் சேர்ந்த மருத்துவ / பல் மருத்துவ பள்ளியைக் குறிக்கிறது.

**HOURLY RATE INSTRUCTOR**
**மணிக்கட்டளை ஆசிரியர்**
மணி நேர அடிப்படையில் ஊதியம் வழங்கப்படும் வருகை தரு ஆசிரியர் / விரிவுரையாளரைக் குறிக்கிறது.

**HUMAN ASSET ACCOUNTING**
**மனித மதிப்புக் கணக்கு**
ஊழியர்கள் மீதும் அமைப்பின் மீதும் அமைப்பின் கொள்கைகள் விளைக்கும் பொருளியல் சமூகவியல் தாக்கத்தை இனங்காண ஒரு அமைப்பில் மனித காரணியின் மதிப்பை அளவிடல்.

**HUMAN BIOLOGY**
**மனித உயிரியல்**
மனித உடலை ஆயும் உயிரியல் பிரிவு.

**HUMANISM**
**மனித நேயக் கொள்கை**

மனிதன் ஒரு சமூக உயிரி. உலகளாவிய மதிப்பீடுகளான உண்மை, அழகு, போன்றவற்றை ஆய்வதில் தன் அறிவைப் பயன் படுத்துவதன் மூலமாக மக்கள் நல நாகரிகத்தை உருவாக்க அவனால் கூடும் என்னும் மெய் யியல் நம்பிக்கை.

**HUMANISTIC EDUCATION**
**மனிதநலக் கல்வி**

பல்வேறு பாடங்களிலும் நடத்தப்படும் ஒரு கல்விமுறை. அதிகமான தனிமனித தன்னு ணர்வையும் மக்களிடையிலும் பண்பாடுகளுக்கிடையிலும் இரு புற புரிதலையும் இது இலக்காகக் கொண்டுள்ளது.

**HUMANITIES**
**பண்பாட்டுக் கலைகள்**

மனிதனை மையப் பொரு ளாக கொண்டு ஆய்ப்படும் கலைகள். எகா: இலக்கியம்-வரலாறு-மெய்யியல்-மொழிகள்.

**HUMAN RELATIONS DEVELOPMENT**
**மனித உறவு வளர்ச்சி**

ஊழியர் உறவு மேம்பாட்டுத் துறை.

**HUMAN SERVICE**
**மனிதத்தனமான பணி**

பொதுத்துறையில் வாங்கு வோருக்கும் வழங்குவோருக்கு மிடையே இருசார் மனித உற வைக் கடைபிடித்தல்.

**HYDERABAD EDUCATIONAL CONFERENCE**
**ஐதராபாத் கல்வி மாநாடு**

1913இல் நிறுவப்பட்ட இந்தியக் கல்விக் கழகம். கல்வித் துறை ஆய்வை ஊக்குவிப்பினும் தேவையான மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதும் இதன் நோக்கம்.

**HYDROCEPHALY**
**நீர்மண்டை**

மண்டை ஓட்டுள்நீர் அதிக மாக கோர்த்து தலைபெரிதாகி அறிவுக் குறைவை உண்டாக்கும் மனஊன நிலை.

**HYPERACTIVITY**
**மிகை செயலூக்கம்**

குழந்தையிடம் காணும் மிகுதி யான உடல் செயல்பாடு. இது தசைக்கேட்டின் அறிகுறியாக லாம். தற்காப்பு உத்தியாகவும் பயன்படலாம்.

**HYPNOSIS**
**வசியம்**

உறக்கத்தை ஒத்த செயற்கை யாய் தூண்டடப்பட்ட நிலை. கருத்தேற்கும் தன்மை கொண்டது. சில மனக் குழப்பநிலைகளில் சிகிச்சைக்கு பயன்படுகிறது.

**HYPOTHALAMUS**

உணவு நீர் தட்பவெப்ப கட்டுப் பாட்டு தேவை நிறைவுடன் தொடர்பான நடத்தைக் கட்டுப் பாட்டை வழங்கும் உடல் உறுப்பு. பிட்யூட்டரி சுரப்பியின்

அருகில் உள்ளது. அதன்மீது ஓரளவு கட்டுப்பாடு செலுத்துகிறது.

**HYPOTHESIS (STATISTICAL)**
**(புள்ளியியல்) கருதுகோள்**
புலனாகும் ஒரு நிகழ்வை விளக்க முன்வைக்கப்படும் சோதிக்கப்படா கூற்று. பின் அது ஆய்வுமூலம் சோதிக்கப்படும்.

**HYPOTHETICO DEDUCTIVE REASONING (OR THINKING OR METHOD)**
**கருதுகோள் (அமைத்து) உய்த்துணர் முறை**
நிறுவப்பட்ட உண்மை விவரத்தைவிட கருதுகோள்களை முன்வைத்து பகுத்தாய்வதன் வழி முடிவுக்கு இட்டுச் செல்லும் முறை.

**HYSTERIA**
**இசிப்பு / மயக்க உணர்வு**
நரம்பு மண்டலத்தின் மிகை செயல்பாடு. இதன் பல குறிகள், தனக்கு தானே கருத்தேற்றிக் கொள்வதால் தோன்றுகின்றன. மன உடலியக்க உள்ளுறுப்பு தொடர்பான பலதரப்பட்ட அறிகுறிகளாகக் கொண்டு இது அறியப்படுகிறது.

**HYSTERICAL SYMPTOMS**
**இசிப்பு அறிகுறிகள்**
பிரித்தல், தற்கருத்தேற்றம், பதற்ற இறுக்கங்கள் முதலியவை இந்நரம்பு கோளாறின் அறிகுறிகள் ஆகும்.

# I

**ICONIC REPRESENTATION**
**சித்திரக் குறிப்பீடு**
கருத்தாக்கம் உருவாகும் நிகழ்முறையில் பழைய ஒத்த அனுபவங்களை இணைப்பதன் மூலம் ஒரு கலவை ஒலியை திரும்ப வருவிப்பதை குறிக்கிறது.

**ID**
ஆளுமை பற்றிய பிராய்டின் கருத்தில் 3 அமைப்பகளில் ஒன்று. மற்ற 2 தன்முனைப்பும் மீத் தன் முனைப்பும் ஆகும். 'இட்' என்பது நடத்தையின் உள்ளுணர்வு ஆற்றலின் உயிரியல் அடிப்படை. இன்பத்தை மிகுத்து துன்பத்தைக் குறைப்பதற்காக இறுக்கத்தை தளர்த்துவதே இதன் முதன்மை செயல்பாடு

**IDEALS**
**குறிக்கோள்கள்**
ஒழுக்க / சமூக நடத்தை அடிப்படையில் மிகவும் விரும்பப்படும் / மிக உயர்ந்த வாய்ப்புள்ள செம்மை / மேன்மை நிலையைக் குறிக்கிறது.

**IDENTIFICATION**
**ஒன்றுபடுத்திக் காணல்**
தாம் எதையும் சாதிக்காத போது, எதையேனும் சாதித்த உறவினருடன் /நண்பருடன் / ஒருவருடன் ஆன ஒருமை பற்றி பெருமை கொள்ளல்.

**IDENTITY**
**ஒற்றுமை, அடையாளம்**
பிற அனைவரிடமிருந்தும் தனித்துக் காணக்கூடிய ஒரு உருப்படியாக தொடர்ந்து தான் இருப்பதை உணர்தல்.

**IDENTITY CRISIS**
**அடையாள நெருக்கடி**
தன் கடந்தகாலம் - எதிர் காலம், தன் பெற்றோர் - சமுதாயம் தொடர்பாக தன் அடையாளத்தை மறுவரையறை செய்வதற்கான தேவை ஏற்படல்.

**IDEOGRAPHIC APPROACH**
**கருத்துக் குறியீட்டு அணுகல்**
நெருங்கிய கவனிப்பையும் ஒரு விவரம்/ ஆளை விவரிப்பதையும் சார்ந்த ஆளுமை மதிப்பீடு.

**IDEOGRAPHY**
**கருத்துக்குறியீடு**
படம் / குறியீடுகளை வைத்து கருத்து தெரிவிக்கும் எழுத்து முறை. எழுத்து/ உச்சரிப்பு ஒலி களை எழுதுவதில்லை.

**IDIOCY**
**மடமை**
உள்ளார்ந்த பற்றாக்குறையால் அல்லது மிக இளம் வயதில் மூளை சேதமானதால் உருவான பலவீன மனதின் மிகக் கீழான தரத்தை குறிக்கிறது.

**IDIOT SAVANT**
**மூட அறிவாளி**
மன வளர்ச்சி குறைந்திருந்தும் குறிப்பிட்டதுறையில் அதிகத் திறனுடையவர்.

**ILLUSIONS**
**திரியுக் காட்சி**
யதார்த்தம் பற்றிய தவறான புலனறிவு. இவற்றை ஆய்வது புலனறிவு நிகழ்முறை பற்றிய தகவல் தரும்.

**IMAGINATION**
**கற்பனை**
புலன்களின் முன் இல்லாத பொருள்களையும் ஆட்களையும் மனதில் காட்சியாக காணும் திறன்.

**IMMIGRANT**
**புலம் பெயர்ந்தவர்**
குடியிருப்பதற்கு ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு குடிபுகுந்தவர்.

**IMPOSITION**
**தண்டனை / நெருக்குதல்**
தண்டனையாகவும் ஓய்வு நேரமில்லாமல் செய்யவும் மாண வருக்கு ஏதாவது பயிற்சி எழுத்து வேலை அளிப்பது.

**IMPRESSION METHOD**
**பதிவு முறை**
ஒரு தேர்வாளர் ஒரு கட்டுரைக்கு அதன் இலக்கணம், தர்க்கரீதி முன்வைப்பு, கோவை யான அமைப்பு ஆகியவற்றை கவனியாமல் அது ஏற்படுத்தும் பொதுவான மனப்பதிவை வைத்து மதிப்பிடும் முறை.

**IMPRINTING**
**விலங்கறிவு**
பல பறவை - விலங்கினங்களில் வெளிப்படும் சிறப்பு சமூகப் பற்றுணர்வை குறிக்கிறது.

**IMPULSIVE BEHAVIOR**
**உள்தூண்டல் நடத்தை**
முன்கூட்டிய சிந்தனை / துணிதல் அற்ற உடனடி செயல்.

**IN ABSENTIA**
**ஆள் இல்லாமலே**
எடுத்துக்காட்டாக, ஒரு பட்டம் பெறும் மாணவர் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை என்றால் அவர் இல்லாமலே அவருக்கு பட்டம் வழங்கப்படலாம்.

**INADAPTIVE SCHOOL BEHAVIOUR**
**தகவமையா (பள்ளி) நடத்தை**
அழிவான, திருந்தாத நடத்தையால் மாணவர் ஒழுங்கு படுத்தும் பள்ளிக்கு அனுப்பப் படுவதை குறிக்கிறது.

**INAUGURAL LECTURE**
**தொடக்கச் சொற்பொழிவு**
ஆசிரிய பணியை தொடங்கியிருப்பதையும் தன் ஆய்வு மற்றும் கற்பித்தல் திசையைச் சுட்டவும் பேராசிரியர் தரும் உரை.

**INCIDENT APPROACH**
**தற்செயல் அணுகுமுறை**
வேறு பாடங்களின் இடையில் தற்செயலாக எண்களை அறிமுகப் படுத்துவது போல் செய்து அதைக் கற்பதில் விருப்பத்தை ஏற்படுத்தும் கணிதம் கற்பிக்கும் முறை.

**INCIDENT PROCESS**
**தற்செயல் நிகழ்முறை**
நிகழ்ஆய்வு முன்னேறும் அளவில் மேலுமான தகவல் பெறும் முறை.

**IN-COMPANY TRAINING**
**தொழிலகத்துள் பயிற்சி**
(Inplant or Inhouse Training)
ஒரு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு அதன் வளாகத்துக் குள்ளேயே பயிற்சி அளிப்பதைக் குறிக்கிறது.

**INCUBATION**
**உள்உணர்ச்சி**
சிக்கலுக்கு விடை கிடைக்காததால் நனவு நிலையில் அதை அறிந்தோ அறியாமலோ விலக்கினாலும் நனவிலி நிலையில் அதற்கான அலசல் நடந்து கொண்டிருப்பது.

**INDEPENDENT LEARNING**
**தானாக கற்றல்**
ஒரு வகுப்பு /குழுவின் பிற மாணவர்களில் இருந்து தனித்து ஒரு மாணவர் தொடர்ந்து கற்கும் நிலை.

**INDEPENDENT VARIABLE**
**தனித்த மாறி/ சார்பற்ற மாறி**

**INDIAN ADULT EDUCATION ASSOCIATION**
**இந்திய வயதுவந்தோர் கல்விக் கழகம்**

1939இல் நிறுவப்பட்ட இந் நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்றது.

**INDIAN INSTITUTE FOR EDUCATIONAL & CULTURAL CO-OPERATION**
**கல்வி-பண்பாட்டு கூட்டுறவுக்கான இந்திய நிறுவனம்**

கொள்கை வாதங்களிடையே குறிப்பாக பன்னாட்டு உறவு பற்றிய ஆய்வுகளில் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான கல்வி நிறுவனம்.

**INDIAN INSTITUTE OF TECHNOLOGY**
**இந்திய தொழில்நுட்பக்கழகம்**

தொழில்நுட்ப கல்வி-ஆய்வில் குறிப்பான அக்கறை யுடைய உயர்கல்வி நிறுவனம்.

**INDIAN MINISTRY OF EDUCATION AND SOCIAL WELFARE**
**இந்திய-கல்வி சமூக நல அமைச்சு**

கல்விக்குப் பொறுப்பான அரசாங்கத் துறை.

**INDIAN REORGANISATIONAL ACT 1934**
**இந்திய மறுசீரமைப்புச் சட்டம் 1934**

சீர்திருத்த நடவடிக்கை (நியூடீல்) நிர்வாகத்தின் பகுதி. இந்தியர்களுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் பள்ளிகள் அமைப்பது, ஆனால் அது வெள்ளையரின் கட்டுப்பாட்டில் கீழ் இருக்கும் என்றது இது. இந்த பள்ளிகள் 'அமெரிக்கமயப்படுத்தும்' நோக்கமுள்ளனவாய் இருந்தன.

**INDICATIVE PLANNING (OR PARTICIPATIVE PLANNING)**
**பங்கேற்பு முறை திட்டம்**

கட்டாயம் அல்லது சட்டம் மூலமாக அன்றி ஒப்புதலளித்து தாமே தேரும் இலக்குகளை குறிவைத்த திட்டம்.

**INDIVIDUAL DIFFERENCES**
**தனிமனித வேறுபாடுகள்**

உளவியல்/கல்வியியல் அடிப்படையில் தனிமனிதர்களுக்கு இடையிலான வேறுபாடுகளை குறிக்கிறது.

**INDIVIDUALISATION**
**தனியாள்படுத்தல்**

தனி மாணவருக்கேற்ற கல்வி முறைகளை வகுத்தல்/ஏற்றல்.

**INDIVIDUALIZED LEARNING (IL)**
**தனியாள் கல்வி.**

**INDIVIDUALISED READING**
**தனியாள் வாசிப்பு**

ஒருவரின் வாசிப்புத் திறன் மற்றும் ஆர்வத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி தொடர்பான உத்தி.

INDIVIDUAL METHOD

**தனியாள் முறை**

வகுப்பில் இருக்கும் ஒவ்வொரு மாணவர் மீதும் ஆசிரியர் வரிசையாக தனிப்பட்ட கவனம் செலுத்தும் பழைய கற்பித்தல் முறை.

INDIVIDUAL TEST

**தனியாள் சோதனை**

ஒரு தனியாளுக்கு பொருத்தமாக உருவாக்கப்பட்ட சோதனை.

INDOCTRINATION

**கருத்துதிணிப்பு**

மதம் போன்ற நம்பிக்கைகளை மாற்று கருத்து /மதிப்பீடுகளுக்கு இடமளிக்காமல் புகட்டுவதைக் குறிக்கிறது.

INDUCTION TRAINING

**உட்படுத்தும் பயிற்சி**

ஒரு அமைப்பின் நடைமுறைகளையும் நடவடிக்கைகளையும் ஊழியர்கள் உறுப்பினர்களுக்கு பரிச்சயப்படுத்தும் பயிற்சி.

INDUCTIVE REASONING

**உய்த்தறி காரணம்**

குறிப்பான பொருள்கள் நிலைமைகளில் இருந்து பொதுவான கருத்துக்களை உருவாக்கும் கருத்தாக்க உருவாக்கம்.

INDUSTRIAL ARCHAEOLOGY

**தொழில்துறை தொல்பொருள் இயல்**

முந்திய தொழில்துறை காலங்களின் தொழிற்சாலை, யந்திரம், கருவி, கைவேலைப் பாடுகள் பற்றிய ஆய்வு.

INDUSTRIAL DESIGN

**தொழில்துறைத் திட்டம்**

ஒரு உற்பத்திப் பொருளை அழகியல் வகையில் என்பதை விட செயல்திற வகையில் மேம்படுத்த முயலும் திட்டம்.

INDUSTRIAL LIAISON OFFICERS

**தொழில்தொடர்பு அதிகாரிகள்**

சில கல்லூரி பல்கலைகளின் அலுவலர்களில், தம் நிறுவனங்களில்/ நிறுவனங்களின் வழியாக கிட்டும் ஆய்வு - வளர்ச்சி - ஆலோசனை சேவைகளை தொழில்-வணிக குழுமங்களுக்கு தெரிவிக்கும் பொறுப்புள்ளவர்கள்.

INDUSTRIAL PSYCHOLOGY

**தொழிற்சாலை உளவியல்**

பணிச்சூழலியல் நெறிமுறைகளை பயன்படுத்துவதன்மூலம் உற்பத்தியிலும் சேவைகளிலும் திறன் அதிகரிப்பது தொடர்பான உளவியல் பிரிவு.

INFANTILISM

**சிறுபிள்ளைத்தனம்**

வளர்ந்த மனிதரில் காணும் குழந்தைக்குரிய நடத்தை. குழந்தை நிலையிலிருந்து மன வளர்ச்சி பெறாத தன்மை. முதியோரில் மீண்டும் குழந்தைத் தனம் ஏற்படும் போக்கு.

**INFERENCE**
**அனுமானம்**
கொடுக்கப்பட்ட தற்கோளில் அல்லது அவதானித்த தகவலில் இருந்து தருக்கரீதி முடிவை பெறும் நிகழ்முறையைக் குறிக்கிறது.

**INFERIORITY COMPLEX**
**தாழ்வு மனப்பான்மை**
தன்னைப் பற்றிய தாழ்வு உணர்வில் இருந்து எழும் கருத்துகள் நிரம்பி மேலிடல்.

**INFLUENCE RELATIONSHIPS**
**செல்வாக்கு உறவுகள்**
ஒருவர் தன் ஆளுமை-பங்கு-கவுரவம் மூலம் பிறரில் அவர் விரும்பிய திசையில் நடத்தை மாற்றங்கள் ஏற்படுத்த முடியும் சமூக உறவுகளைக் குறிக்கிறது.

**INFORMAL EDUCATION**
**எம்முறையும் சாராக் கல்வி**
ஆசிரியரையும் மாணவரையும் பிரித்தறிய முடியாத கல்வி முறை. கண் காட்சி, தொலைக் காட்சி, சொற் பொழிவு பிற.

**INFORMAL ORGANISATION**
**முறைசாரா அமைப்பு**
முறையான அமைப்பினுள் வளரும் ஆளிடை, குழுவிடை உறவுப் பாணிகள்.

**INFORMATION EXPLOSION**
**தகவல் பெருக்கம்**
இந்த நூற்றாண்டில் அறிவில் ஏற்பட்ட பெருக்கத்தைக் குறிக்கிறது. அதன் பின் விளைவான தகவல் பரிமாற்றம், சேமிப்பு, மீள்பெறுகை தொடர்பான சிக்கல்களையும் குறிக்கிறது.

**INFORMATION RETRIEVAL**
**தகவல் மீள்பெறுகை**
செய்தி ஒழுங்குபடுத்தும் முழு நடைமுறை - அதன் தகவல் உள்ளடக்கத்தை உடனடியாக முடிவு செய்யவும் கண்டுபிடிக்கவும் அதன் கூறுகள் தாமே வெளிப்படவுமான நடைமுறை.

**INFORMATION SCIENCE**
**தகவலறிவியல்**
யந்திரமய தகவல், கணினி தகவல் உட்பட அனைத்து வகை தகவல் - தொடர்பு அமைப்பு பற்றிய ஆய்வு

**INFORMATION SYSTEM**
**தகவல் அமைப்பு முறை**
தனி ஒரு குழு/ அமைப்புக்குள் தொடர்பு கட்டமைப்பு

**INFORMATION THEORY**
**தகவல் கோட்பாடு**
அளவு - பண்பு இரண்டு வகையிலும் தகவலை திறம்பட அனுப்ப கணித அடிப்படையிலான பெரிதும் கணினி மயமான அணுகல்.

**IN-GROUP**
**உட்குழு**
பிற குழுக்களில் இருந்து தன்னை தனிப் பிரித்துக் கொண்டு அவற்றைவிட தான் தனிச்சிறப்பானது ஒருவிதத்தில் உயர்வானது என கருதும் குழு.

**INHIBITION**
**செயல்படாமை**
தூண்டல் முன்வைக்கப்பட்ட பின்பும் தொடர்புடைய துலங்கல் எழுத் தவறுதலை குறிக்கிறது.

**INITIAL ABILITY; LEVEL OF INITIAL ABILITY**
**தொடக்கத்திறன்**
ஒரு படிப்பு, ஆட்டம் முதலியவற்றை தொடங்கும் போது ஒருவரிடம் இருக்கும்/ இருக்கவேண்டிய திறனைக் குறிக்கிறது.

**INITIATING STRUCTURE**
**தான் தொடங்காற்றல்**
ஆளுமையில் ஒரு காரணி. இதனால் தான் ஒருவர் பிறரின் கருத்துகள் மீதும் நடத்தை மீதும் செல்வாக்கு செலுத்த வல்லவராகிறார்.

**INNATE RELEASING MECHANISM (IRM)**
**உள்ளார்ந்த விடுவிப்பு உத்தி**
புற /உள் தூண்டலால் முடுக்கி விடப்படும் செயல்களின் வரிசையை முடிக்கும் பிறவி போக்கு.

**INNATE TENDENCIES**
**உள்ளார்ந்த போக்குகள்**
பிறவி / சூழல் போக்குகள் அல்லாத சுவீகரித்துக் கொள்ளப்பட்ட நடத்தைக் காரணிகளைக் குறிக்கிறது.

**INNER SPEECH**
**உட்பேச்சு**
குரலற்ற பேச்சு- வார்த்தைகளில் சிந்திக்கும் அடிப்படை. Internal Speech, Inner Language.

**INNOVATION**
**புத்தமைவு**
கல்வியிலும் கற்பித்தலிலும் புதிய கருத்துக்களையோ நடைமுறைகளையோ உருக்குவித்தல்.

**INPUT CHANNELS**
**உள்ளீடு வாயில்கள்**
தூண்டல்களை பெற்று பரப்பும் புலன் உறுப்புகளும் நரம்பு மண்டலமும்.

**INPUT-OUTPUT ANALYSIS**
**உள்ளீடு-வெளியீடு ஆய்வு**
இது ஒரு ஆய்வு உத்தி. இதை உலகம் பொருளியல் சிக்கல்களை தீர்க்க ஒரு கருவியாக தழுவிக் கொண்டுள்ளது.

**INSIGHT**
**உட்காட்சி**
சிக்கல் தீர்ப்பின் ஒரு கூறு. இதில் தீர்வு திடுமென வெளிப்பட்டு தோன்றுகிறது.

**INSPECTOR**
**ஆய்வர்**
கல்விஜய / கல்வி நிறுவனங்களை நிருவகிக்க / கண்காணிக்க அமர்த்தப்படும் அதிகாரிகளுக்கு பொதுவான பெயர். வெவ்வேறு நாடுகள் இச்சொல்லை வெவ்வேறு பொருளில், வெவ்வேறு

அளவில் வெவ்வேறு(புவியியல்) பொறுப்பில் பயன்படுத்துகின்றன.

**INSTINCT THEORY**
**இயல்பூக்க கோட்பாடு**
உள்ளார்ந்த, கற்றுத் தரப் படாத போக்குகளின் விளைவே நடத்தை, உயிரியல் - சமூகத் தேவைகளுக்கு எதிர் வினையாக இவை குறிப்பிட்ட வழிகளில் வெளிப்படுகின்றன எனும் கோட் பாடு.

**INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS**
**பட்டய கணக்கர் கழகம்**
தொழில்முறை மற்றும் தகுதி வழங்கு அமைப்பு (இந்தியா).

**INSTITUTE OF COST & MANAGEMENT ACCOUNTANTS**
**ஆக்க செலவு & மேலாண்மை கணக்கர் கழகம்**
தொழின்முறை மற்றும் தகுதி வழங்கு அமைப்பு. முன்பு ஆக்கசெலவு மற்றும் பணிக் கணக்கர் கழகம் எனப்பட்டது. (இந்தியா).

**INSTITUTIONAL MANAGEMENT**
**நிறுவன மேலாண்மை**
பள்ளி / கல்லூரி / பல்கலை முதலான கல்வி நிறுவன மேலாண்மை.

**INSTRUCTION**
**செய்முறைக்கல்வி**
பொதுவான கல்வி என்பதை விட திறன் பயிற்சியை ஒத்த கல்வி. ஒளி-ஒலி உதவி, அஞ்சல் வழி, தனியாள் கல்வி போன்ற வையாக இருக்கலாம்.

**INSTRUCTIONAL DESIGN**
**கற்பித்தல், போதனைத் திட்டம்**
குறிப்பிட்ட படிப்பின் தேவை களுக்கு கல்வி உளவியலை பயன்படுத்தல்.

**INSTRUCTIONAL MATERIAL**
**போதனைப் பொருள்கள்**
கற்பித்தலுக்கோ கற்றலுக் கோ உதவும் ஒலிஒளி சாதனங் களையும் அச்சிட்ட நூல்களையும் குறிக்கிறது.

**INSTRUCTIONAL MATERIAL CENTER**
**போதனைப் பொருள் மையம்**
குறிப்பாக தனியாள் படிப்பு வசதிக்கான பல்லூடக சாதன, வசதி மையம்.

**INSTRUCTIONAL MEDIA**
**போதனை தொடர்புக் கருவிகள்**
கல்வி தொழில்நுட்பம் / செய்முறை தொழில்நுட்பத்துக் கான கருவிகள். எ.கா: அச்சு, திரைப்படம், நாடா பதிவுகள்.

**INSTRUCTIONAL TELEVISION (ITV)**
**போதனை தொலைக்காட்சி**
முதன்மையாய் பள்ளிகளுக் குள் கருத்துப் பரப்பலுக்காக

உருவாக்கப்பட்ட தொலைக் காட்சி.

**INSTRUMENTAL BEHAVIOUR**
**கருவி நடத்தை**
மேலாண்மை-பணி நோக்கு-இலக்குகள் போன்றவற்றில் கவனமுடைய - குழுவின் நடத்தைக் கூறை குறிக்கிறது.

**INSTRUMENTAL LABORATORY TRAINING**
**கருவி சோதனைச் சாலை பயிற்சி**
முறையான பின்னூட்டம்; சரி பார் பட்டியல் - மதிப்பீட்டு அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தல் இவற்றுக்கு முக்கியம் தரும் T-குழு பயிற்சி உழவம்.

**INSTRUMENTAL ORDER**
**கருவி ஒழுங்கு**
உணர்வுப் பாங்கின் விளைவான நடத்தை அல்லாத அறிவில் - இலக்கு நோக்கிய சிந்தனையில் வேர்கொண்ட நடத்தை.

**INSTRUMENTS OF MANAGEMENT**
**மேலாண்மைக் கருவிகள்**
அதிகார அறிக்கை, பள்ளி, கல்லூரி விருப்புரிமை பகுதி, மேலாளர்கள்/ ஆளுநர்கள் இவற்றைக் குறிக்கிறது.

**INTEGRATED COURSE**
**ஒருங்கிணைந்த படிப்பு**
மேலுமான கல்வி பாடத் திட்டம் தொழிற்துறை பயிற்சி முழுக்க ஒருங்கிணைந்த கூறுகளாக வழங்கப்படும் முழுநேர படிப்பு அல்லது திட்டம்.

**INTEGRATED CRAFT**
**ஒருங்கிணைந்த கைப்பணி கைவேலை**
பல கைவேலைப் பகுதிகள் பாடங்களில் இருந்து செயல்பாடுகளை இணைத்த ஒரு கைவேலை.

**INTEGRATED CURRICULUM**
**ஒருங்கிணைந்த கலைத்திட்டம்**
பொருளுள்ள அமைப்பாக திரண்ட பாகங்களை உடைய பாடத்திட்ட உள்ளடக்க ஒழுங்கமைப்பு.

**INTEGRATED DAY**
**ஒருங்கிணைந்த நாள்**
பள்ளியின் கல்வித்திட்டத்தை தனித்தனி பாடங்களுக்காக கறாராய் பிரித்த கால அட்டவணைப்படி அல்லாமல் தனியாள் கற்றல் - கற்பித்தலை அதிகப்படுத்துமாறு ஒழுங்கமைக்கும் முயற்சி.

**INTEGRATED EDUCATION**
**ஒருங்கிணைந்த கல்வி**
பிரிவினை இன்றி எல்லா மாணவர்களும் ஒரேவித பள்ளியில் பயிலும் கல்வி முறை.

**INTEGRATED LEARNING SYSTEM**
**ஒருங்கிணைந்த கற்றல் முறை**

குறிப்பிட்ட இலக்குகளை அடைய பல்வேறு கல்வி செய்முறை உதவிகளை திட்டமிட்டு பயன்படுத்துவதையும் இணைப்பதையும் குறிக்கிறது.

**INTEGRATED PROGRAMMED INSTRUCTION**
**ஒருங்கிணைந்த திட்டமிட்ட செய்முறைக் கல்வி**

ஒருங்கிணைந்த கற்றல் முறையில் பிற கல்வி உதவிகள் மற்றும் போதனை முறைகளுடன் திட்டமிட்ட செய்முறைக் கல்வியையும் சேர்த்தல்.

**INTEGRATED STUDIES**
**ஒருங்கிணைந்த ஆய்வுகள்**

வெவ்வேறு பள்ளி வேலைகளை ஈடுபடுத்தும் - இணைக்கும் ஆய்வுகளைக் குறிக்கிறது.

**INTEGRATION**
**ஒருங்கிணைப்பு**

வெவ்வேறு பாடங்களை ஒரே பாடத்திட்டத்துக்குள் கொண்டு வருவதைக் குறிக்கிறது.

**INTELLECTUALLY IMPAIRED STUDENT**
**நுண் அறிவு பாதிக்கப்பட்ட மாணவர்**

உணர்ச்சி ஊனம் நரம்பியல் ஊனத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்.

**INTELLECTUAL PUSH UP**
**அறிவு உயர்த்தல்**

படிப்பின் நடுவில் ஒரு மீவிரைவு பயிற்சி. பொதுவாக இது தொழிற்கல்வியாக அன்றி பொதுப்படையான கல்வியறிவே இருக்கும்.

**INTELLIGENCE QUOTIENT (IQ)**
**நுண்ணறிவு ஈவு**

நுண்ணறிவு சோதனைகளில் தெரியவரும் மெய்யான மன வயதுக்கும் குறிப்பிட்ட உடல் வயதுக்கு இயல்பான மன வயதுக்கும் இடையிலான விகிதம். இந்த விகிதம் 100ஆல் பெருக்கப்பட்டு 100க்கு இவ்வளவு என்ற சராசரி கிடைக்கிறது.

**INTERACTION**
**இடைவினை**

தனியாட்கள் / குழுக்களுக்கு இடையிலான இருசார் பாதிப்புகள். பொதுவாக இது சமூக-உணர்ச்சிநிலை நடத்தையின் சமூகத் தன்மையை சிறப்பாக குறிப்பதாய் இருக்கும்.

**INTERACTION ANALYSIS**
**இடைவினை ஆய்வு**

ஒரு குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் மற்ற ஒவ்வொரு உறுப்பினரிடமும் கொள்ளும் எதிர்வினையை முறைப்படி ஆய்தலையும் பதிதலையும் குறிக் கிறது.

**INTERACTION PROCESS ANALYSIS**
**இடைவினை நிகழ்முறை ஆய்வு**

குழுக்களில் சமூக நடத்

தையை ஆய்வதற்கான உத்தி (எ.கா: மாணவர்களின் வகுப்பறை நடத்தை).

**INTERACTIVE QUALIFYING PROJECT (IQP)**
**இடைவினைப்படுத்தும் திட்டம்**
பல பாடப் பகுதிகளையோ துறைகளையோ கட்டாயமாக இணைக்கும் திட்டம்.

**INTERACTIVE SKILLS**
**இடைவினை திறன்கள்**
சமூகத் திறன்போல் ஒரு குழுவில் பிறருடன் இடைவினை புரிவதில் வேண்டிய திறன்கள். தனியாள்களின் சமூக உணர்வை வளர்ப்பதன்வழி குழுச்செயலை அதிக திறமாக்குவதற்கு வேண்டிய திறன்கள்.

**INTERCULTRUAL EDUCATION**
**பண்பாட்டிடை கல்வி**
தப்பெண்ணம், பாகுபாடு இவற்றை வெல்லவும் மக்களுக்கும் பண்பாட்டுக் குழுக்களுக்கும் இடையில் பரஸ்பர புரிதலை வளர்க்க இட்டுச் செல்லவும் திட்டமிட்ட கல்வியைக் குறிக்கிறது.

**INTER DISCIPLINARY APPROACH OR METHOD**
**துறையிடை அணுகுமுறை**
தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்பின் வழியாக நோக்கப்படும் ஒரு நிகழ்வு தலைப்பு.

**INTERDISCIPLINARY ENQUIRY (IDE)**
**துறைஇடை விசாரணை**
பல பள்ளிப் பாடங்களில் விசாரணைப் பணி தேவைப்படுகிற ஒரு திட்ட தலைப்புப் பணியைக் குறிக்கிறது.

**INTERDISCIPLINARY STUDIES**
**துறையிடை ஆய்வுகள்**
பல துறைகள் கல்விப் பாடங்களில் வேலை இருக்கு மாறு திட்டமிட்ட ஆய்வுகள்

**INTERFACE**
**இடைமுகம்**
பரப்புகள் கருத்துகள் நம்பிக்கைகள் முதலியவற்றுக்கு இடையிலான பொது எல்லை அல்லது சந்திப்பிடத்தைக் குறிக்கிறது.

**INTERFERENCE**
**குறுக்கீடு**
ஒரு படிப்பை இன்னொன்றால் தடுத்தலைக் குறிக்கிறது. மறப்பதற்கு ஒரு முதன்மை காரணமாக கருதப்படுகிறது.

**INTERFERING BEHAVIOR**
**குறுக்கிடும் நடத்தை**
உயர்வேகத்தில் நடைபெற்று, விரும்பத்தக்க நடத்தையைத் தடுக்கும் விரும்பத்தகாத நடத்தை.

**INTERGROUP EDUCATION**
**குழுவிடை கல்வி**
பண்பாடுகளுக்கிடையிலான புரிதலை வளர்க்கவும் ஆளிடை -

குழுவிடை தப்பெண்ணம் குறைக்கவும் வடிவமைத்த கல்வி.

**INTER LIBRARY LOAN**
**நூலகத்துக்கிடையான இரவல்**
நூலக பொருள்களை ஒரு நூலகம் மற்றதிடம் இருந்து இரவல் பெறுவதைக் குறிக்கிறது.

**INTERMEDIATE EXAMINATION**
**இடைநிலை தேர்வு**
தொழில்முறை தகுதி படிப்பில் பட்ட படிப்பில் முதல் தேர்வு.

**INTERMODE DIFFERENCE**
**முறையிடை வேறுபாடு**
போதனை தொடர்பு கருவிகளுக்கிடையில் அல்லது வெளியீட்டு முறைகளுக்கிடையில் ஆன வேறுபாடுகளைக் குறிக்கிறது.

**INTERN**
**உள்ளுறையாளி**
ஒரு பள்ளியில் பணிபுரிய புதிதாய் தகுதிபெற்ற ஆசிரியரை அல்லது ஒரு மருத்துவமனை போன்றவற்றில் பணியாற்ற புதிதாய் தகுதிபெற்ற மருத்துவ ஊழியரைக் குறிக்கிறது.

**INTERNAL CONDITIONS OF LEARNING**
**கற்றலின் உள்நிபந்தனைகள்**
முந்திய தாழ்நிலை கல்வியின் விளைவுகள் புதிய கல்வியைத் தொடங்க உறுதுணையாக இருப்பதைக் குறிக்கிறது.

**INTERNAL CONSISTENCY**
**அகப்பொருத்தம்**
ஒரு தேர்வின் அனைத்து கூறுகளும் எந்தஅளவுக்கு ஒரே திறனைக் காட்டுகின்றன என்பதைக் குறிக்கிறது.

**INTERNAL CONSISTENCY METHOD**
**அகப்பொருத்த முறை**
கூறுகளுக்கிடையிலான இடை உறவுகளைப் பொறுத்த வரை ஒரு தேர்வின் தகுதியுடைமையை தீர்மானிக்கும் ஒருமுறை.

**INTERNAL DEGREE**
**உள்பட்டம்**
ஒரு பல்கலையின் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் ஒன்றில் மாணவர்கள் பெறும் ஒரு பட்டத்தைக் குறிக்கிறது.

**INTERNAL EXAMINATION**
**அகத்தேர்வு**
ஒரு கல்லூரி பல்கலை வேறு கல்வி நிறுவனம் தன் சொந்த மாணவர்களுக்காக நடத்தும் தேர்வு.

**INTERNATIONAL ADVISER**
**பன்னாட்டு ஆலோசகர்**
வெளிநாட்டு பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவுரை கூறப் பொறுப்புள்ள கல்லூரி / பல்கலை ஆலோசகர்.

**INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES (IAU)**
**பல்கலைக்கழகங்களின்**

**பன்னாட்டுக் கழகம்**

நடைமுறையில் கல்வியியல் ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் உலகளாவிய பல்கலை நிறுவனங்களுக்கு உதவவும் 1950இல் நிறுவப்பட்டது. இக்கழகம் யுனெஸ்கோவுடன் ஒத்துழைக்கிறது.

**INTERNATIONAL ASSOCIATON OF UNIVERSITY PROFESSORS & LECTURERS**

**பல்கலை பேராசிரியர்கள் விரிவுரையாளர்களின் பன்னாட்டு அமைப்பு**

1944இல் அமைக்கப்பட்டது. பல்கலை ஆசிரியர்கள்- ஆய்வுப் பணியாளர்களிடையே தொடர்பை வளர்க்கவும் அவர்களின் சுயேச்சை சுதந்திரம் ஆர்வங்களை பாதுகாக்கவும் இது உள்ளது.

**INTERNATIONAL AUDIO VISUAL TECHNICAL CENTER**

**பன்னாட்டு ஒலி ஒளித் தொழில்நுட்ப மையம்**

கல்வி-கலை-தொழில்-சமூக நடவடிக்கைகளில் ஒலி ஒளி தொடர்புக் கருவிகளை ஊக்குவிக்க 1960ல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL BOARD ON BOOKS FOR YOUNG PEOPLE**

**இளையோருக்கான பன்னாட்டு நூல் வாரியம்**

சிறந்த குழந்தை நூல்களை ஆதரிக்க ஊக்குவிக்க குழந்தை நூல்களை அறிவியல் முறையில் ஆய்வதை ஊக்குவிக்க வளரும் நாடுகளுக்கு கல்வி உதவிக்கு ஏற்பாடு செய்ய 1953இல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL BUREAU OF EDUCATOIN (IBE)**

**பன்னாட்டு கல்வி அலுவலகம்**

1925இல் நிறுவப்பட்டு 1969இல் யுனெஸ்கோவின் கீழ் வந்தது. கல்வி-பயிற்சி-வேலை வாய்ப்பு இவற்றுக்கிடையிலான உறவு பற்றியது. IBE மாநாடுகள் நடத்துகிறது. பன்னாட்டுக் கல்வி கண்காட்சி நடத்துகிறது.

**INTERNATIONAL DEVELOPMENT ASSOCIATOIN (IDA)**

**பன்னாட்டு வளர்ச்சி அமைப்பு**

வளரும் நாடுகளில் பொருளியல் வளர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையும் ஊக்குவிக்க குறைந்த வட்டிக் கடன்களை பயன்படுத்துவதை முக்கியமாகக் கொண்ட இவ்வமைப்பு 1960ல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL ECONOMIC ASSOCIATION**

**பன்னாட்டு பொருளியல் அமைப்பு**

நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை வளர்ககவும் பொருளியல் அறிவைப் பரப்பவும் 1949இல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL EDUCATION**

**பன்னாட்டுக் கல்வி**

பன்னாட்டு உறவுகளில் கல்வி -சமூக-அரசியல் பொருளியல் ஆற்றல்கள் பற்றிய ஆய்வு.

**INTERNATIONAL FEDERATION OF WORKERS EDUCATIONAL ASSOCIATION**
**தொழிலாளர்கல்வி அமைப்புகளின் பன்னாட்டு கூட்டமைப்பு**

தகவல் பரிமாற்றம், கோடை பள்ளிகள் முதலியவை வழியாக தொழிலாளருக்கு கற்பிப்பதற்கான தேசிய அமைப்புகளிடையில் ஒத்துழைப்பை வளர்க்க 1947இல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL INSTITUTE FOR EDUCATIONAL PLANNING (IIEP)**
**கல்வித் திட்டமிடலுக்கான பன்னாட்டுக் கழகம்**

கல்வித் திட்டமிடலில் உயர் பயிற்சி மற்றும் ஆய்வுக்கான உலக மையமாக 1963இல் யுனெஸ்கோவால் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL INSTITUTE FOR SOCIOLOGY**
**பன்னாட்டு சமூகவியல் நிறுவனம்**

சமூகவியல் ஆய்வை ஊக்க 1893இல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL INSTITUTE OF INSTRUCTIONAL TECHNOLOGY (IIIT)**
**பன்னாட்டு செய்முறை தொழில்நுட்ப பயிலகம்**

செய்முறை பயிற்சி முறைகளையும் மாற்றங்களையும் இனம்காணும் வளர்த்தெடுக்கும் நிறைவேற்றும் நோக்கத்துடன் 1927இல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL MATHEMATICAL UNION (IMU)**
**பன்னாட்டு கணித சங்கம்**

கணிதத்தில் பன்னாட்டு ஒத்துழைப்பை வழங்கவும், பன்னாட்டு கணிதர் பேரவை மற்றும் பிற பன்னாட்டு மாநாடுகளுக்கு உதவவும், பிற பொருந்திய செயல்பாடுகளை ஊக்குவிக்கவும் 1952இல் நிறுவப்பட்டது.

**INTERNATIONAL MUSIC COUNCIL (IMC)**
**பன்னாட்டு இசை மன்றம்**

யுனெஸ்கோவின் ஆசியின் கீழ் இசைஞர், இசை, இசை குறித்த தகவல் பரிமாற்றத்தை பேண 1949இல் நிறுவப்பட்டது.

**INTERNATOINAL READING ASSOCATION (IRA)**
**பன்னாட்டு வாசிப்பு கழகம்**

1956இல் நிறுவப்பட்டது. எல்லா நிலையிலுமான ஆசிரியர்களின் கழகம்.

**INTERNATIONAL STUDIES**
**பன்னாட்டு ஆய்வுகள்**

அரசியல்-பொருளியல்-சட்டம் முதலியவை உட்பட பலதுறை ஆய்வுகள், பன்னாட்டளவில் நடைபெறுவன.

**INTERNATIONAL UNIVERSITY EXCHANGE FUND**
**பன்னாட்டு பல்கலை பரிமாற்ற நிதி**

அகதி மாணவர்களுக்கு குறிப்பாக ஆப்பிரிக்கர்களுக்கு உதவ

1951இல் நிறுவப்பட்ட அரசு சாரா அமைப்பு.

**INTERNATIONAL VALIDITY**
**பன்னாட்டு தகுதி**

நடத்தை இயல்களில் மேற்கொள்ளப்படும் சோதனை எந்த அளவுக்கு பன்னாட்டு அளவுகோலின்படி சரியாக திட்டமிடவும் கட்டுப்படுத்தப்படவும் படுகிறது என்ற அளவு.

**INTERNATIONAL YOUNG CHRISTIAN WORKERS**
**பன்னாட்டு இளம் கிறித்தவ தொழிலாளர்**

இந்த அமைப்பு இளம் தொழிலாளருக்கு சமூக-பொருளியல்-கல்வி உதவி அளிக்க 1945இல் நிறுவப்பட்டது.

**INTERPOLATION**
**இடைச்செருகல்**

மதிப்பீடுகள் தரப்படாத அளவுகோலில் இடைப்பட்ட மதிப்பை அளவிடும் முறை.

**INTERVENING VARIABLES**
**இடைபுகும் மாறிகள்**

தூண்டலுக்கும் துலங்கலுக்கும் இடையில் குறுக்கிடும் உடல் தேவைகள், ஊக்குவிப்புகள் போன்ற காரணிகளை குறிக்கிறது.

**INTERVISITATION PROGRAM**
**இடைவருகை திட்டம்**

புரிய பரிமாறத்தக்க கருத்துகளை தேடி ஆசிரியர்கள் பள்ளிகளுக்கும் பள்ளி முறைகளுக்கும் போய்வரல்.

**INTIMACY VERSUS ISOLATION**
**நெருக்கம் X தனிமை**

நெருக்கமான காதலுக்கும் படைப்புத் தன்மைக்கும் ஒருவர் இயல்வதாகும் 20களின் தொடக்க முதலில் நடுவயதின் தொடக்கம் வரையான காலத்தைக் குறிக்கிறது.

**INTRA MIGRATION**
**உட்குடிபெயர்ச்சி**

ஒரு மாநிலத்துக்குள் குறிப்பாக ஊரகங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் இடம் பெயரல்.

**INTRA MURAL BOARD**
**உள்நிலைய அவை**

ஒரு கல்லூரி / நிறுவனத்தின் ஆட்சி நிருவாகத்தை கவனிக்கும் சபை.

**INTRINSIC BRANCHING PROGRAM**
**உள்ளார்ந்த பிரிப்பு நிரல்**

ஒரு பயிலுநர் / மாணவரின் முந்திய சட்ட துலங்கல், அடுத்து அவர் எடுத்துள்ள வழிகாட்டப்பட்டுள்ள கட்டத்தை தீர்மானிக்கும் கட்டுப்பாட்டு நிரல் வடிவம்.

**INTRINSIC METHOD**
**உள்ளார்ந்த முறை**

திட்டமிட்ட பயிற்சிகள் வழி சொற்களை மாணவர் கண்டு கொள்ள உதவும் முறை. இதில் ஒரு கதை வடிவத்துக்குள்

இயல்பாக அச்சொற்களை அவர்கள் சந்திக்கிறார்கள்.

INTRINSIC MOTIVATION
**உள்ளார்ந்த தூண்டுதல்**
குறிப்பிட்ட நடத்தை வடிவங்களை மேற்கொள்ளும் ஆசை அந்த நடத்தையாலேயே தூண்டப்படுகிறது. அந்நடத்தைக்கு அப்பால் உள்ள ஏதோ இலக்கினால் அல்ல.

INTROVERT
**அகமுகர்**
ஆளுமையில் உள்நோக்கு கூறுகளை வெளிப்படுத்தும் ஆளைக் குறிக்கிறது.

INTUITIVE STAGE
**உள்ளுணர்வு கட்டம்**
கருத்தாக்கம் உருவாகும் வளரும் ஒருநிலை. இது 4-7 மனவயதில் நடைபெறுகிறது. இக்கட்டத்தில் குழந்தை மேலோட்ட புலன் அறிதல்களை சார்ந்துள்ளது. தன் கருத்துக்களை அந்த மனப்பதிவின் வடிவில் உருவாக்கிக் கொள்கிறது.

INVIGILATOR
**மேற்பார்வையாளர்**
தேர்வு நடக்கும்போது தொடர்புடைய அனைவரின நேர்மையான நடத்தையை உறுதி செய்யும் வகையில் அதைக் கண்காணிக்கும் பொறுப்புடைய பணியாளர்.

INVOLUNTARY REST PAUSES
**இச்சைக்குட்படாத ஓய்வு நிறுத்தங்கள்**
முனைப்பான தொடர் கவனம் தேவைப்படும் பணிகளில் ஈடுபட்டிருக்கும்போது கருத்தாவின் விருப்பத்துக்கு எதிராக ஓய்வுக்காக மேற்கொள்ளப்படும் இடைநிறுத்தங்கள்.

ITEM
**கேள்வி**
தேர்வின் ஒரு பகுதி. இது எந்த வடிவத்திலும் அமைக்கப்படலாம்.

ITEM BANK
**கேள்வி தொகுதி**
ஒரு கேள்வித்தாளை அமைப்பதில் உள்ளடக்கம், கடின அளவு முதலியவற்றை பொறுத்து பயன்படும் மொத்த கேள்வி வடிவங்களைக் குறிக்கிறது.

ITEM DIFFICULTY GRADIENT
**கேள்வி சிக்கலாகும் வரிசை**
தேர்வு எழுதுபவர் முதலில் எளிய கேள்விகளையும பின்மென்மேலும் கடினமான கேள்விகளையும் எதிர்கொள்ளும் வரிசையில் தேர்வுக் கேள்விகளை அமைத்தல்.

# J

**JANITOR/CUSTODIAN**

**(பாது)காவலர்**

பள்ளி / கல்லூரி முதலிய வற்றின் சுத்தம் பொது பேணல் ஆகியவற்றுக்கு பொறுப்பான வரை குறிக்கிறது.

**JOB DESCRIPTION**

**வேலை விவரம், பணி விவரம்**

ஒரு வேலையின் முக்கிய மான தன்மைகளும் அதைச் சிறப்பாக செய்ய வேலையாளிடம் தேவைப்படும் பண்புகளும் சேர்ந்த விவரம்.

**JOB EDUCATION**

**வேலைக்கல்வி**

தொழில்துறைப் பயிற்சியுடன் இணைந்த தொழில்நுட்ப கல்வி.

**JOB ENRICHMENT**

**வேலை வளமை**

வேலை உள்ளடக்கத்தையும் பொறுப்பு பிரிவினையையும் மறுசீரமைத்து அதன்மூலம் தனியாள் வேலையில் பொறுப்பு அளவையும் அதில் அவர் மன நிறைவு அளவையும் அதிகப் படுத்தலை குறிக்கிறது.

**JOB EVUALATION**

**வேலை மதிப்பீடு**

வேலைகளின் ஏற்றத்தாழ் வில் ஒரு வேலையின் ஒப்பீட்டு மதிப்பை நிறுவப் பயன்படுத்த உத்தியைக் குறிக்கிறது.

**JOB KNOWLEDGE TEST OR TRADE TEST**

**வேலை அறிவு சோதனை**

குறிப்பிட்ட வேலை/ திறமை / திறமைகளை சாதித்துக் காட்டுவதற்கான சோதனை

**JOB MOBILE**

**வேலை ஊர்தி**

வேலை காலியிடங்கள் போன்ற தகவல்களை வழங்க சமூக ஊழியர்கள் பயன்படுத்தும் வண்டி.

**JOB ORIENTED LEARNING EXPERINECE**

**வேலைவழி கற்கும் அனுபவம்**

திறமான படிப்பு அனுபவத் தையும் இருக்கும் வேலைகளில் வாய்ப்பையும் ஒருங்கே வழங்கும் படி உருவாக்கப்பட்ட தொழில் கல்வியைக் குறிக்கிறது.

**JOB SATISFACTION**

**வேலை மன நிறைவு**

ஒருவர் தன் வேலை உள்ளடக்கம், சூழ்நிலை குறித்து எந்த அளவு மகிழ்ச்சி/ நிறை வுடன் இருக்கிறார் அல்லது வேலையின் கடுமை அல்லது பணியிட நிலைமைகளின் குறை களால் மகிழ்ச்சியின்றி வெறுத்துப் போய் இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது.

**JOB CONJUGAL ROLE**
**மணவாழ்வில் கூட்டு பங்கு**
கணவனுக்கும் மனைவிக்கும் தெளிவாக வரையறுத்த கடமைகள் இல்லாத, வீட்டுக்குள் பல நடவடிக்கைகளிலும் இருவரும் சமமான பொறுப்பு ஏற்கும் குடும்ப உறவுமுறையைக் குறிக்கிறது.

**JOB SPECIFICATION**
**வேலை விவரக்குறிப்பு**
ஒரு வேலையில் தேவைப்படும் நடைமுறைகள், தகுதிகள், அனுபவம், தனிப்பட்ட பண்புகள் பற்றிய விரிவான குறிப்பு.

**JOURNEY MAN**
**வேலைக்காரர்**
பயிற்சி முடித்து பணியாளராய் இருக்கும் திறமைசாலி. முதலாளியோ, சுயதொழில் காரரோ அல்ல.

**JUVENILE COURT/ CHILDREN'S COURT**
**குழந்தைகள் நீதிமன்றம்**
இளம் குற்றவாளிகளையும் குழந்தைகளுக்கு கேடு விளைவிக்கும் வயது வந்தவர் களையும் கவனிக்கும் நீதி மன்றம்.

**JUVENILE OFFENDER**
**இளம் குற்றவாளி**
தவறாக நடந்துகொண்ட இளைஞர். ஆனால் சட்ட ரீதியில் குற்றவாளி என வகைப்படுத்தப் படாதவர்.

# K

**KALAKSHETRA**
**கலாசேத்திரம்**
இந்திய பாரம்பரிய இசை - நடனம் - நாடகம்- ஓவியம்-கைவினைகளுக்கான கல்வி மையம.

**KELLY'S PERSONAL CONSTRUCT SYSTEM**
**கெல்லியின் ஆள் அமைப்பு முறை**
மனிதன் நடந்துகொள்ளும் முறை முதலிலேயே எதிர்பார்க்கப் படக்கூடியது தான், செயலுக்கு எதிர்ச்செயலானது அல்ல அது (ஏற்கனவே உள்ளே உள்ளது தான்) என்ற கருத்தின் அடிப்படையிலான ஆளுமைக் கோட்பாடு.

**KEY WORDS**
**அடிப்படைச் சொற்கள்**
சொற்களைக் கற்பிப்பதில் முதன்மை முக்கியம் உடையதென்று கருதப்படுபவையும் குழந்தைகளின் சொல்வளம் பற்றிய அறிவியல் ஆய்வின் அடிப் படையில் அமைந்தவையுமான சொற்கள்.

**KINSHIP NETWORK**
**உறவுமுறை**
நெருங்கிய உறவினர் அடங்கிய குடும்ப அமைப்பை குறிக்கிறது.

**KLEPTOMANIA**
**திருட்டுவெறி**
லாபநோக்கமோ குற்றம்

புரியும் நோக்கமோ இல்லாமலோ பழக்க உந்துததலால் திருடு வதைக் குறிக்கிறது.

**KNOWLEDGE RATING SCALE**
**அறிவை மதிப்பீடும் அளவை**

கற்றலில் அடையப்படும் பொதுவான / குறிப்பான அறிவின் அளவை மதிப்பிட உருவாக்கப் படும் அளவையை குறிக்கிறது.

**KUDER PREFERENCE RECORD**
**குடர் முன்னுரிமைப் பதிவு**

தொழில்கல்வி ஆர்வங்களை மதிப்பிட உதவும் கேள்விப் பட்டியல். இதில் ஒருவர் தனக்கு மிகவும் பிடித்த பிடிக்காத நட வடிக்கைகளை குறிப்பிடுகிறார்.

# L

**LABORATORY**
**ஆய்வகம்**

அறிவியல் சோதனைகளுக் கும் செய்து காட்டல் களுக்கும் ஏற்ற வசதிகளுடன் அமைக்கப் பட்ட அறை. அல்லது அறிவியல் அல்லாத செய்முறை வேலைக் காக சிறப்பாக வடி வமைக்கப் பட்ட அறை.

**LABORATORY COURSE**
**ஆய்வகப் படிப்பு**

ஒரு ஆய்வகத்தில் நடத்தப் படும் படிப்பை குறிக்கிறது. இதன் நோக்கம் மெய் விவரங்களுடன் மாணவர்களை பரிச்சயப்படுத் தல், கோட்பாட்டுடன் நடை முறையை இணைத்தல், சோதனை உத்திகளையும் நடை முறைத் திறன்களையும் வளர்த் தல், மாணவர்களின் புதியது காணும் உணர்வை தூண்டிவிடல் என்பதாகும்.

**LABORATORY SCHOOL**
**ஆய்வகப் பள்ளி**

மாணவர்கள் வெவ்வேறு கற்பித்தல் முறைகளை காணவும் பயிலவும் வசதியாக கல்லூரி பல்கலை / கல்வித்துறையுடன் இணைக்கப்பட்ட பள்ளியைக் குறிக்கிறது.

**LABORATORY TRAINING**
**ஆய்வகப் பயிற்சி**

தன் ஆழ்அறிவு, நிகழ்முறை உணர்வு, ஆளிடை திறமை, மாறுதல் இயக்கம் இவற்றுக்கு வழிசெய்யும் பயிற்சி முறை.

**LABOUR EDUCATION OR WORKER EDUCATION**
**தொழிலாளர் கல்வி**

தொழிற்சங்கங்களும் சில பொது கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும் தொழிலாளர் களுக்கு வழங்கும் கல்வி மற்றும் பயிற்சியைக் குறிக்கிறது.

**LABOUR STUDIES**
**தொழிலாளர் ஆய்வுகள்**

முதலாளி - தொழிலாளி உறவுகள், தொழிலாளியின் சமூக - பொருளியல் நிலைமைகள் பற்றிய ஆய்வுகள்.

**LAGGING COMMUNITY**
**பின்தங்கிய சமூகம்**
கல்வியிலும் சமூகத்திலும் பின்தங்கிய சமூகத்தைக் குறிக்கிறது.

**LAISSEZ FAIRE**
**தன்னிச்சைப் போட்டி**
அறிவொளி பெற்ற தன்னல போட்டி முயற்சியால்தான் தனியாள் மற்றும் சமூக நலன் சிறப்பாக அடையப்படும் எனும் கருத்து.

**LAISSEZ FAIRE CLASSROOM CLIMATE**
**தன்னிச்சை போட்டியான வகுப்புச்சூழல்**
வகுப்பறையில் கற்கும் சூழ்நிலையைக் குறிக்கிறது. இந்த சூழலில் திட்டமிட்ட ஒழுங்கு முறைகள் இராது. கூச்சலும் குழப்பமுமான வகுப்பறையில் வேலை தன்னிச்சைபோல் நடைபெறும்.

**LANGUAGE ACQUISITION DEVICE (LAD)**
**மொழிஏற்புத் திறன்**
மொழி கற்க அமைந்த உள்ளார்ந்த திறனைக் குறிக்கிறது.

**LANGUAGE ARTS**
**மொழிக்கலைகள்**
தகவலையும் கருத்துகளையும் வெளிப்படுத்த தெரிவிக்கப் பயன்படும் எழுத்து பேச்சு திறன்கள்.

**LANGUAGE CODES**
**மொழி விதிமுறைகள்**
விரிவான, சுருக்கமான விதிமுறை என பெர்ன்ஸ்டைன் முன்வைத்த மொழிவடிவம். விரிவான முறை முதலில் மரபு மொழி என்னும் சுருக்கமான முறை பொதுமொழி என்றும் விளக்கப்பட்டது.

**LANGUAGE COMPETENCE**
**மொழித்திறமை**
மொழியைப் பயன்படுத்த ஒவ்வொருவரிடமும் அமைந்துள்ள உள்ளாற்றலைக் குறிக்கிறது.

**LANGUAGE DEFICIT**
**மொழி பற்றாக்குறை**
பண்பாட்டு வறுமை, சொல் தூண்டுதலற்ற சூழல் பல்வேறு வழிகளால் மொழி வளர்ச்சியில் ஏற்படும் குறைபாட்டை குறிக்கிறது.

**LANGUAGE GROWTH OR DEVELOPMENT**
**மொழி வளர்ச்சி**
அறிவு மட்டம், நல்ல பண்பாட்டுப் பின்னணி, வயது வந்தோரின் தரமான பேச்சுப் பாணி, வயதுவந்தோர் ஊக்குவிப்பு இவற்றால் தாக்கம்பெறும் மொழி வளர்ச்சி.

**LANGUAGE HANDICAP**
**மொழி ஊனம்**
பேச்சுக்கான புறக்கருவிகளின் குறைபாட்டால் அன்றி வேறு காரணங்களால் நேர்ந்த மொழி குறைபாடுகளைக் குறிக்கிறது.

LANGUAGE LABORATORY
**மொழி ஆய்வகம்**
சொந்த அயல் மொழிகளில் கற்பிக்கும் திறன்களுக்கான ஆய் வகம். இதற்கு நாடாப் பதிவான நிகழ்ச்சிகள், ஆசிரியர் வானொலிப்பெட்டி, ஒலி மற்றும் முடிந்தால் ஒளி சாதனம் போன்ற வை பயன்படுத்தப் படுகின்றன.

**LANGUAGE PATTERN**
**மொழிப்பாணி**
குறிப்பிட்ட மக்கள் நிலப்பகுதி அல்லது வரலாற்று கட்டத்திற்கே உரித்தான பேச்சு, மொழி கட்ட மைப்பு இவற்றைக் குறிக்கிறது.

**LANGUAGE PLAY**
**மொழி விளையாட்டு**
மொழித்திறன்களில் வளர்ச்சி அடைவதற்கான விளையாட்டுக் களை குறிக்கிறது.

**LANGUAGE TEAM**
**மொழிக்குழு**
மொழிச்சிக்கல்கள் உள்ள மாணவர்களில் கல்வியில் தொடர்புடைய, பெரிதும் இடம் பெயரும் ஆசிரியர் குழுவைக் குறிக்கிறது.

**LARGE TYPE READING MATERIALS**
**பெரிய எழுத்து வாசிப்பு நூல்கள்**
18 புள்ளி அல்லது அதைவிட பெரிய அச்செழுத்தில் எளிய வடிவில் அமைந்த நூல்கள், செய்தித்தாள்கள் போன்ற படிப் பதற்கான பொருள்கள்.

**LARYNX**
**குரல்வளை**
கழுத்தில் அமைந்துள்ள உறுப்பு. இதில் குரல் நாண்கள் உள்ளன. ஒலி உருவாக்கு வதற்கு காரணமானது.

**LATCHKEY CHILD**
**தற்கவனிப்பு குழந்தை**
பெற்றோர் வேலைக்குச் செல்வதால், பள்ளியில் இருந்து திரும்பியபின் தன்னைத்தானே பார்த்துக் கொள்ளும் குழந்தை யைக் குறிக்கிறது.

**LATENCY PERIOD**
**உள்ளுறை (வளர்ச்சிக்) காலம்**
குழந்தையை இயல்பான பாலுணர்ச்சி வளர்ந்த மனிதரில் இருந்து பிரிக்கும் காலத்தைக் குறிக்கிறது. இவ்விடைக் காலத் தில் பாலுணர்வு பிடித்து நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாக கருதப் படுகிறது.

**LATENT FUNCTION**
**உள்ளுறை செயல்பாடு**
ஒரு சமூக அமைப்பில் அதன் உறுப்பினர்களால் அவ்வண்ண மே கருதப்பட்டிராத / கண்டு கொள்ளப்பட்டிராத நோக்கங்கள்.

**LATENT LEARNING**
**உள்ளுறை கற்றல்**
குறிப்பிட்ட காலத்தில் வெளிப் பட்டுத் தோன்றாமல் நிகழ்ந்து கொண்டிருக்கும் கற்றலைக் குறிக்கிறது.

**LATERAL DOMINANCE**
**ஒருபக்க ஆதிக்கம்**
உடலின் ஒரு பக்க தசைகளும் உறுப்புகளுமே பயன்பாட்டில் எப்போதும் முன்னுரிமை தரப்படுவதைக் குறிக்கிறது.

**LATERAL THINKING**
**நேர்மாறு சிந்தனை**
**குறுக்குவாட்டு சிந்தனை**
ஒரே கருத்தின் வழியில் நெடுக சிந்திப்பதைவிட ஒவ்வொரு முறையும் மூல சிக்கலுக்கு திரும்பி புதிய அணுகுமுறைகளை சோதித்துப் பார்ப்பதை குறிக்கிறது.

**LAW OF DISUSE**
**பயன்படுத்தாமை விதி**
தூண்டல் - துலங்கல் இணைப்புகளுக்கு எவ்வளவு குறைவாக பயிற்சி தருகிறோமோ அவ்வளவுக்கு அந்த இணைப்பை நினைவுகூறல் அதிகக் கடினமாகும் என்னும் கற்றல் விதி.

**LAW OF EXCERCISE**
**பயிற்சி விதி**
குறிப்பிட்ட தூண்டலின் விளைவாக குறிப்பிட்ட துலங்கல் ஏற்படுவது, மொத்தத்தில் அதற்கு முன்பு இந்த நிகழ்ச்சிகள் எத்தனை தடவைகள் நடந்துள்ளன என்பதை பொறுத்ததே என்னும் விதி.

**LAW OF READINESS**
**ஆயத்தநிலை விதி**
குறிப்பிட்ட வழியில் செயல்பட ஒருவர் ஆயத்தமாகையில் அப்படி செய்வது அவருக்கு நிறைவளிப்பதாக இருக்கிறது.

**LAW OF REGENCY**
**அண்மைய விதி**
குறிப்பிட்ட தூண்டல் துலங்கல் இணைப்பு எவ்வளவு அடிக்கடி அல்லது எவ்வளவு அண்மையில் நடந்துள்ளதோ அவ்வளவுக்கு அந்த தூண்டல் துலங் கல் இணைப்புகள் நிறுவப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் என்னும் கற்றல் கோட்பாடு.

**LAW OF REPITATION**
**திரும்ப நிகழ்தல் விதி**
உணர்வுள்ள நிகழ்ச்சி எதன் நடப்பும் அது பின்னும் நிகழும் ஒரு போக்கை உருவாக்குவதாக கூறும் விதி.

**LEADERSHIP**
**தலைமைப் பொறுப்பு / தன்மை**
ஒரு குழு ஒன்றாக-நன்றாக வேலை செய்வதையும் ஒவ்வொரு ஆளும் தன் அதிகபட்ச பங்கை ஆற்றுவதையும் உறுதி செய்வதன்மூலம் எடுத்த பணியை முடிக்கும் நிகழ்முறை.

**LEAD LECTURE**
**வழிகாட்டு உரை**
பின்னர் விவாதிக்கவோ பங்கேற்று செயல்படவோ தேவையான செய்திகளை வழங்கும்படி அமைத்த தொடக்க சொற்பொழிவைக் குறிக்கிறது.

**LEARNER SELECTED OBJECTIVES**
**கற்பவர் தேரும் இலக்குகள்**
ஒரு செய்முறை வரிசையின் விரும்பிய விளைவை அல்லது ஆசிரியரை விட மாணவரே தேர்ந்தெடுக்கும் பாடத்தைக் குறிக்கிறது.

**LEARNERSHIP**
**பயில்நிலை**
ஒப்பந்தம் செய்யப்படாமலே முதலாளிக்கும் தொழிலாளிகளுக் கும் இடையில் ஏற்பாடாகும் முறைசார் பயிற்சியை குறிக்கிறது.

**LEARNING**
**கற்றல்**
தற்செயலாகவோ நிறுவனம் மூலம் ஆசிரியர் வழி பெற்ற கல்வி யாலோ கிடைத்த கடந்த கால அனுபவத்தால் நடத்தையும் ஏற் படும் ஒப்பீட்டளவில் நிலை யான மாற்றத்தைக் குறிக்கிறது.

**LEARNING ACTIVITY PACKAGE (LAP)**
**கற்றல் செயல்பாட்டு கருவித் தொகுதி**
குறிப்பிட்ட செய்முறைத் தொ டர்ச்சியில் உள்ள மாணவர்களின் தேவைகளை சந்திக்க உருவாக் கிய நாடாக்கள், (பட)வில்லை கள், அச்சு பொருள் அடங்கிய மூலப்பொருள் தொகுதி.

**LEARNING BLOCK**
**கற்றலில் தடை**
குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி கொள்வதில் உள்ள சிரமத்தைக் குறிக்கிறது.

**LEARNING DIFFICULTY**
**கற்றல் சிரமம்**
கொடுக்கப்பட்ட ஒரு பணி எந்த அளவுக்கு கற்க கடினமாக உள்ளதென்பது. காட்டாக, ஒரு சொல்லின் சரியான உச்சரிப்பை கற்க தேவையான காலம்அல்லது முயற்சிகளின் எண்ணிக்கையால் அளக்கப்படக் கூடிய சிரமத்தின் அளவு.

**LEARNING MODALITY**
**கற்றல் முறை**
வெவ்வேறு புலன் தூண்டும் முறைகளில் போதனை முன் வைக்கப்படுகையில் மாணவர் பயன்படுத்தும் புலன்முறையைக் குறிக்கிறது.

**LEARNING PATTERN**
**கற்றல் பாணி**
ஒரு படிப்பு / பாடம் / பகுதி யின் உள்ளடக்கம் மற்றும் கற்றல் நிகழ்முறையின் முதன்மை கூறு களின் சுருக்கம்.

**LEARNING SET**
**கற்றல் தொகுதி**
ஒரு சிக்கலைப்பற்றிய கற்ற லை அதே வகையான வேறு சிக்கல்களை கற்றலுக்கு மாற்றிக் கொள்ள முடியும் ஒரு மாணவரின் நிலை.

**LEARNING STRUCTURE**
**கற்றல் அமைப்பு**
ஒரு ஆசிரியர்தன் மாணவர் களுக்கு கற்பிப்பதை ஒழுங்க மைக்கும் வழியை - ஒரு அளவு

கோலின்படி பணிகளை அமைத்துக் கொள்வதை விளக்குகிறது.

**LEARNING STYLE**
**கற்றல்நடை**
சிக்கல் தீர்த்தல், சிந்தித்தல், அல்லது கற்றலில் ஒருவர் விரும்பி பயன்படுத்தும் முறையைக் குறிக்கிறது.

**LEARNING THEORY**
**கற்றல் கோட்பாடு**
பொதுவாக குறிப்பிட்ட உளவியல் பள்ளியுடன் தொடர்புடைய குறிப்பான பொதுவான கற்றல் கோட்பாடு.

**LIBERAL ARTS**
**பொதுவான கலைகள்**
தொழில்நுட்ப தொழில்முறை படிப்புகளைவிட கலைகள், இயற்கை அறிவியல்கள், சமூக அறிவியல்கள், பண்பாட்டுக் கலைகள் போல் பரந்த வீச்சும் விசாலமும் உள்ள துறைகளைக் குறிக்கிறது.

**LIBERAL ARTS COLLEGE**
**பொதுவான கலைக்கல்லூரி**
தொழில் சாரா பாடங்களில் பொதுவாக கலைகளிலும் அறிவியல்களிலும் பட்டப்படிப்பு வழங்கும் கல்லூரியைக் குறிக்கிறது.

**LIBERALISM**
**தாராளவாதம்**
சிந்தனைப் பேச்சு சுதந்திரம், தனிமனித உரிமை, அரசாங்கத்தின் வரம்பான கட்டுப்பாடு, ஒரு அற-ஆன்மீக சமுதாயத்தில் தனியாள் மற்றும் சமூக நல இலக்கு ஆகியவற்றைக் குறிக்கிறது.

**LIBIDO**
**பால்உந்தல்**
உடல் அடிப்படை கொண்ட கற்பிதமான ஒரு மன ஆற்றல் - வெவ்வேறு நிகழ்முறைகளிடையே இது பகிரப்படுகிறது.

**LIBRARY**
**நூலகம்**
ஒரு அறையில் / கட்டிடத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள நூல்கள் மற்றுமுள்ள தொடர்பு சாதன தொகுப்பைக் குறிக்கிறது.

**LIBRARY CLASSIFICATION SYSTEM**
**நூலக வகைப்பாட்டு முறைமை**
நூல்கள் மற்றும் பிற நூலகப் பொருள்களை ஒழுங்காக அடுக்கி வைக்கவும் உடனடியாக கண்டெடுக்கவும் உருவாக்கப்பட்ட முறைகள்.

**LIBRARY EXTENSION**
**நூலக விரிவாக்கம்**
நூலகங்களை ஊக்கல், உள்ளூர், வட்டார தேச முகமைகள் நூலக சேவையை விரிவுபடுத்தல்.

**LIBRARY RESOURCES SERVICE**
**நூலக ஆதார சேவை**
பல பள்ளிகளுக்கும் பிற

கல்வி நிறுவனங்களுக்கும் நூலக பணியாற்றும் நூலகம்.

**LIBRARY SCIENCE**
**நூலக இயல்**
அச்சிட்ட / எழுதிய ஏடுகளைக் கண்டறிதல், சேகரித்தல், ஒழுங்குபடுத்தல், பயன்படுத்தல் பற்றிய அறிவியல்.

**LIFE CHANCES**
**வாழ்க்கை வாய்ப்புகள்**
வளர்ந்த பருவத்தில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகளைக் குறிக்கிறது. இது குழந்தைப் பருவத்தில் பெற்ற கல்வியின் அளவாலும் தரத்தாலும் உருவாகவோ தடைபடவோ செய்கிறது.

**LIFE HISTORY**
**வாழ்க்கை வரலாறு**
ஒருவரின் வாழ்க்கைப் போக்கு பற்றிய உளவியல் ஆய்வு.

**LIFE STYLE**
**வாழ்க்கைப் பாணி**
சமூக / பண்பாட்டு சூழலுக்கு தனிப்பட்ட எதிர்வினையாக ஒருவர் வாழும் முறையைக் குறிக்கிறது.

**LIMITED CAPACITY CHANNEL**
**குறுகிய கொள்திறன் வாயில்**
மூளைக்கு வரும் தூண்டல் உள்ளீடு, ஒரு இடரை அடுத்து ஒரு வடிகட்டியால் ஒழுங்கு படுத்தப்படுகிறது. இது உள்ளீட்டில் கொஞ்சத்தை மூளையில் முறைப் படுத்தப்பட தேர்கிறது. இந்த இடரே குறுகிய கொள்திறன் வாயில் எனப்படுகிறது.

**LINEAR RELATIONSHIP**
**நேர்கோட்டு உறவுமுறை**
பொதுவாக நேர்கோடாக வெளிப்படுத்தப்படும் உறவைக் குறிக்கிறது. இரு மாறிகளிடையேயான நேரடி உறவைக் குறிக்கிறது.

**LINES OF DEVELOPMENT**
**வளர்ச்சிப் பாதை**
காலவரிசை பாடத்திட்டத்திலிருந்து கிளம்பி சில தலைப்புகளை மையப் பொருள்களாக்கி அவற்றை வரலாற்றினூடாக தேடிக் காணும் வரலாறு கற்பிக்கும் முறை.

**LINGUISTIC ABILITY**
**மொழித்திறன்**
முதல் இரண்டாம் மொழிகளில் திறன் பெற்றிருத்தல்.

**LINGUISTIC CONTEXT**
**மொழியியல் சூழல்**
ஒரு சொல் / வாக்கியம் தோன்றும் சொற்பொருளியல் உள்ளடக்கத்தைக் குறிக்கிறது.

**LINGUISTIC ENVIRONMENT**
**மொழியியல் சூழல்**
குழந்தையின் வீட்டிலும் சமூகப் பின்னணியிலும் மொழித் தூண்டலின் அளவைக் குறிக்கிறது.

LINGUISTIC PHILOSOPHY
**மொழியியல் தத்துவம்**
பொதுவாக மொழியின் சில் லறை விவரங்கள் மீது கவனம் குவிக்கும் கையாட்சி வடிவம். மொழியின் அடிப்படை கருத் தாக்கங்களை ஆய இந்த அணுகு முறை பெரிதும் போதுவதில்லை.

LINGUISTICS
**மொழியியல்**
மொழியை ஒரு நேரடி தொடர்புக் கருவி என மட்டும் பாராமல் அதன் பரந்த பொருளில் ஆயும் இயல்.

LIPREADING OR SPEECH READING
**உதட்டசைவறிதல்**
ஒருவரின்பேச்சை காட்சிக் குறிப்புகளாகக் கொண்டே சிறப் பாக முகத்தசைகள் அசைவைக் கொண்டே புரியும் முறை.

LITERACY
**எழுத்தறிவு**
ஒப்பீட்டளவான ஒரு பதம். ஒருவரின் சமூகக் குழுவில் /பண் பாட்டில் இயல்பாக படிப்பறிவு தேவைப்படுவதான இடங்களில் செயல்பாடுகளில் எல்லாம் அவர் திறம்பட ஈடுபடும் இயங்கும் அளவு எழுதும் பழக்கம் அறிவு-திறன் பெற்றிருந்தால் அவர் நடை முறையில் படிப்பறிவு உள்ளவர் என கொள்ளப்படுகிறார்.

LITERATURE
**இலக்கியம்**
கவிதையிலோ உரைநடையி லோ எழுதப்படும் கட்டுரைக் கலை அல்லது ஒரு குறிப்பிட்ட விசயம்பற்றி வெளியிடப்பட்ட நூல்கள்.

LOCK STEP IN EDUCATOIN
**பூட்டிவிடும் முறை**
ஒரு மாணவர் இன்னும் விரைவாக முன்னேற முடியுமா என்பதை பற்றி கவலைப்படாமல் ஆண்டுக்கு ஒரு பட்டம் என்ற இயல்பான வீதத்தில் அவரது முன்னேற்றத்தைக் கட்டுப்படுத் தல்.

LOCUS OF CONTROL
**கட்டுப்பாட்டு இடம்**
நிகழ்ச்சி நடந்த இடம் பற்றிய ஒருவரின் பார்வை, அதிர்ஷ்டம், விதி அல்லது புற ஆற்றல்கள் விசயத்தில் அவரது சொந்த நடத்தையால் உள்ளுக்குள் தீர் மானிக்கப்படுவதைக் குறிக்கிறது.

LOGICAL POSITIVISM
**தருக்க நேர்க்காட்சி வாதம்**
அறிக்கைகள் பொருளுடை யனவா என்பதை முடிவுசெய்ய அறிவியல் முறையை பயன் படுத்தும் நவீன மெய்யியல் இயக்கத்தைக் குறிக்கிறது.

LOGICAL POSITIVIST
**தருக்க நேர்க்காட்சிவாதி**
மொழியின் பொருளிலும் அதன் பொருளுடைமையின் சோதனையிலும் கருத்துடைய மெய்யியலாளரைக் குறிக்கிறது.

LONG TERM MEMORY (LTM)
**நெடுங்கால நினைவகம்**

நினைவு ஆய்வில் குறுகிய கால நினைவகம் (STM) என்பதிலிருந்து பிரித்தறியக் கூடியது. மிகுந்த கொள்ளளவுடைய நிரந்தர நினைவுகளின் சேமிப்பாக நெடுங்கால நினைவகம் பார்க்கப்படுகிறது.

LOOK & SAY METHOD
**பார்த்து சொல்லும் முறை**

மாணவர்கள் ஒரு நேரத்தில் ஒரு முழு சொல்லை சொல்லும் முறையில் வாசிப்பைக் கற்பிக்கும் முறை.

LOWER CLASS STUDENTS
**தாழ்ந்த வகுப்பு மாணவர்கள்**

பொருளியல் வகையிலும் பண்பாட்டிலும் பாதிப்பான நிலையில் உள்ள மாணவர்களைக் குறிக்கிறது.

LOYALTY OATH
**பற்றுறுதி மொழி**

ஆசிரியராக பணியமர முன் தேவையாக சில மாநில சட்ட சபைகளும் கல்வி வாரியங்களும் விதித்துள்ள விசுவாச உறுதி மொழி.

# M

MACRO ECONOMICS
**பெரும்பொருளியல்**

பரந்த பொருளியல் காரணிகளுக் கிடையிலான உறவுகளை ஆயும் பொருளியல் துறை.

MAIN STREAMING
**நீரோட்டத்தில் இணைத்தல்**

தனிப்பட்ட/சிறப்பான கல்வித் தேவைகள் உடைய குழந்தைகளை பொதுவான பள்ளிக் குழந்தைகளுடன் கலந்துவிடும் போக்கு.

MAJOR PREMISE
**பெருவாசகம்**

அளவையியலில் பயன்படுகிறது. ஒரு முடிவு அடையப் பெறுவதற்கான பெரு வாசகம், சிறுவாசகம் (Minor Premise) என அறியப்படும் 2 கூற்றுகளில் ஒன்று.

MALADJUSTED
**தகைக்கேடுள்ள**

தகவமையும் திறன் குறைந்த குழந்தைகளையும் பிறரையும் குறிக்கிறது.

MALADJUSTMENT
**தகைக்கேடு**

மாணவரில் உணர்ச்சி நிலைப் பின்மை, உளவியல் அலைக்கழிவு இருப்பதற்கு இது சான்று காட்டுகிறது. தனிப்பட - சமூகத்

தில் - கல்வயில் அவர் மீள்தகவ மைய மாணவருக்கு சிறப்பு கல்வி சிகிச்சை தேவை.

**MANAGEMENT ACCOUNTING**
**மேலாண்மை கணக்குவைப்பு**
உற்பத்தி செலவுகள், துறைகள், செயல்பாடுகள் பற்றிய விரிவான தகவல் வழங்குவதன் மூலம் மேலாண்மையின் முடிவெடுப்பு மேலும் சிறப்பாக அறிவிக்கப்படும் கணக்குவைப்பு பிரிவு.

**MANAGEMENT DEVELOPMENT**
**மேலாண்மை வளர்ச்சி / மேம்பாடு**
மேலாண்மை ஏணியில் மேலும் ஏற உள்ள வாய்ப்பை அதிகரிக்க மேலாண்மை ஊழியர்களுக்கு மேலும் அனுபவமும் பயிற்சியும் அளிக்கும் திட்டம்.

**MAN-COMPUTER SIMULATION**
**மனிதன் - கணினி பகர்ப்பு**
ஒரு கணினியில் பணி புரிவோர்க்கு அவர்கள் முடிவெடுக்க உதவும் பொருட்டு தகவல் சேமிப்பு - ஆய்வுக்கு அக்கணினி பயன்படும் முறையிலான பகர்ப்பு.

**MANIC-DEPRESSIVE**
**விரைந்து மாறுபடும் மனத்தவர்**
மிகுந்த மனவெழுச்சிக்கும் மிகுந்த மனச்சோர்வுக்குமிடையில் ஊசலாடும் நடத்தையுடைய உளவியல் கோளாறு உடைய மனிதரைக் குறிக்கிறது.

**MANIFEST FUNCTIONS**
**வெளிப்படை செயல்பாடுகள்**
ஒரு சமூக அமைப்பில் உள்ளவர்களால் அதன் நோக்கங்கள் என கருதப்படு பவையும் ஏற்கப்பட்டிருப்பவையு மான நோக்கங்களை குறிக்கிறது.

**MANIPULATION**
**கையாட்சி**
பொருள்களை ஆராய்ச்சி ரீதியாகவும் ஆக்க ரீதியாகவும் கையாளும் - இயங்கச் செய்வதை குறிக்கிறது.

**MANIPULATION TEST**
**கையாட்சி சோதனை**
உடல்திறனை மதிப்பிடத் தரப்படும் உள சோதனை குறிக்கிறது.

**MANIPULATIVE EXTROVERT**
**கையாட்சி மனத்தவர்**
மனிதர்களையும் பொருள்களையும் தாம் அதிகாரம் செலுத்த முடியக் கூடியவையாக பார்ப்பவர்.

**MAN-MACHINE SYSTEM**
**மனிதர் - யந்திர அமைப்பு**
மனிதரும் யந்திரங்களும் இடைவினை புரிந்து ஒரே அமைப்பாக அமையும் முறை.

**MANPOWER ANALYSIS**
**மனித ஆற்றல் ஆய்வு**
ஒரு அமைப்பின் அனைத்து பணியாளர்களையும் பற்றிய ஆய்வைக் குறிக்கிறது. இதில் வருபவை எடுத்துக்காட்டாக: வயது, பணிஅனுபவம், பால்,

வேலையின் பெயர், அது எந்த பிரிவின்கீழ் வருகிறது முதலியவை.

**MANPOWER PLANNING**
**மனிதஆற்றல் திட்டமிடல்**
தற்போதைய-இனியான மனித ஆற்றல் தேவைகள் - அந்த உபரி பற்றாக் குறையை சமாளிக்க திட்டம் அமைத்தல் பற்றிய ஆய்வு

**MANPOWER SURPLUS**
**உபரி மனித ஆற்றல்**
கிடைக்கும் வேலைகளுக்கு கூடுதலாக உள்ள மனித ஆற்றல் மிகை.

**MAN-PROFILE**
**ஆள் விவரம்**
ஒரு காலி இடத்துக்கு ஆள பணியரிடம் எதிர்பார்க்கப்படும் பண்புகள் பற்றிய புறநிலையான அறிவிப்பைக் குறிக்கிறது.

**MANUAL ABILITY**
**உடல்திறன்**
முதன்மையாய் விரைவு, துல்லியம் என்ற இரு இயக்கக் கூறுகளை உள்ளடக்கும் கையாட்சித் திறன்.

**MANUAL SIMULATION**
**மனித பகர்ப்பு**
கணினிப் பயன் தேவையில்லாத பகர்ப்பு வகை.

**MANUAL TRAINING**
**உடல்வகைப் பயிற்சி**
முன்னாள் பள்ளி சோதனைச் சாலை / தொழிற்சாலை செயல் முறை. இதில் மரவேலை, உலோக வேலை, யந்திர தொழில்நுட்ப வரைதல் ஆகிய வற்றில் எளிய உடற்பயிற்சிகள் தேவைப் பட்டன.

**MANUAL WORKER**
**உடல் உழைப்பாளி** (BLUE COLLAR WORKER)
திறன் வேண்டிய தேவைப் படாத உடல் உழைப்பு செய்பவர். தன் வேலையில் கருவிகளைப் பயன்படுத்துபவர்.

**MAOISM**
**மாவோ கொள்கை**
சீனத் தலைவர் மாசேதுங் கின் சமத்துவக் கொள்கைகள். சீன மக்கள் குடியரசின் கல்வி முறையின் பாடத்திட்டத்தில் இதன் செல்வாக்கு உள்ளது.

**MARGINALISM**
**விளிம்பு மனிதர்**
ஏற்புடைய முறையிலோ (எ.கா: சாமியார்) ஏற்கப்படாத முறையிலோ (எ.கா: கிப்பி hippy) சமூகத்தின் ஓரத்தில் வாழ்பவரைக் குறிக்கிறது.

**MARINE BIOLOGY**
**கடல் உயிரியல்**
கடல்வாழ் தாவரம், விலங்குகள் முதலான உயிரிகளை ஆயும் உயிரியல் பிரிவு.

**MARINE ECOLOGY**
**கடல் சூழலியல்**

கடல் உயிரியல், மனிதர்கள் விலங்குகள் தாவரங்களின் வாழ்வில் கடலின் தாக்கம் ஆகிய சூழலியல் கூறுகளை ஆய்கிறது.

**MARINE ENGINEERING**
**கடல்சார் பொறியியல்**

கப்பல் இயக்கம், கப்பலில் கிடைக்கும் சேவை தொடர்பான பொறியியல் பிரிவு.

**MARKETING**
**அங்காடியாக்கம்**

பண்டங்கள் மற்றும் பணி களின் விற்பனை - விற்பனை அதிகரிப்பு தொடர்பான மேலாண் மை உத்திகள். இவ்விற்பனை இன்னுமதிக ஆதாயமாகவும் திற மாகவும் நடக்கக்கூடும் இடங் களை கண்டுபிடிப்பது தொடர் பான உத்திகள்.

**MARKET RESEARCH**
**அங்காடி ஆய்வு**

இருக்கும் / வரும் பண்டம் மற்றும் பணிகளையும் வாடிக்கை யரின் வாங்கும் நடத்தை வாழ்க்கை முறைகளையும் அடை யாளம் காணும் மதிப்பிடும் நிகழ்முறையைக் குறிக்கிறது.

**MARKING SCHEME**
**மதிப்பெண் வழங்கல்**

பள்ளி கல்லூரியில் மாண வரின் வேலையின் சாதனையை அறிக்கையிட்டு மதிப்பிட பயன் படும் முறை.

**MARK SYSTEM**
**மதிப்பெண் முறை**

சரியான பதிலக்கு மாணவர் மதிப்பெண் பெறும் முறை. பின்னர் விரும்பிய துறையில் நுழைய இம்மதிப்பெண்களை அவர் பயன்படுத்த முடியும்.

**MARXIST DIALECTICS**
**மார்க்ஸிய இயங்கியல்**

இயங்கியல் பொருள் முதல் தத்துவம். இதன்படி, பொருளின் ஒரு செயல்பாடே மனம். மாற்றத் தின் வழி எல்லா பொருள்களும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பட்டிருக்கின்றன.

**MARX, KARL**
**காரல் மார்க்சு**

நவீன கால பொதுவுடைமை கோட்பாட்டின் நிறுவனர். வகுப்பு பேதமற்ற - ஏற்றத்தாழ் வற்ற சமுதாயத்துக்கு பாடு படுவதே- வன்முறையியலும் அதைக் கொணர்வதே மார்க்சிய கல்வியின் குறிக்கோள். மார்க்சிய இயங்கியல் கொள்கையை இது போதிக்கிறது.

**MASLOW'S HIERARCHY**
**மாஸ்லோவின் அடுக்கு அமைப்பு**

மனிதனை உந்தி செயல் படுத்துபவை தேவைகளின் ஒரு ஏறுமுக வரிசையே எனும்

கோட்பாடு. இது முதலில் அடிப் படையான தனியாள் உடல் தேவை - பாதுகாப்புக்கான காதல், சேர்ந்திருத்தல், பின் தன் மரியாதை, அதிலிருந்து தன்னை அறிதல் - புரிதல் - அறிவு என்ற உயர் தேவைகள் வரை ஏறுகிறது.

**MASS CULTURE**
**வெகுசன கலாச்சாரம்**
வெகுசன கூட்டம் தன்னை புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பயன்படுத்தும் எளிமையான-பொதுவான சொற்களும் பொருள்களும் உடைய பண்பாடு.

**MASS MEDIA**
**வெகுசன தொடர்புக் கருவி**
பேரளவான மனிதர்களிடம் ஏறக்குறைய ஒரே நேரத்தில் தொடர்பு கொள்வதற்கான கருவிகள்.

**MASTER OF ARTS (M.A)**
**முதுகலை**
கலைகள், பண்பாட்டுக் கலைகள் போன்ற பாடங்களில் பெறும் பட்டம்.

**MASTER OF BUSINESS ADMINSTRATION (M.B.A)**
வணிக நிர்வாகத்தில் முதுகலை மேலாண்மை -வணிகம் - தொழில் இவற்றில் உயர் பட்டம்.

**MASTER OF EDUCATION (M.Ed)**
**கல்வியில் முதுகலை**
கல்வி / கற்பித்தலில் முதுகலைப் பட்டம்.

**MASTER OF SCIENCE (M.Sc)**
**அறிவியல் முதுகலை**
அறிவியல் பாடங்களில் முதுகலைஞர் பட்டம்.

**MASTER UNIT**
**முதன்மை / தலைமை அலகு**
ஒரு அமைப்பிலுள்ள பிற பகுதிகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு பகுதியைக் குறிக்கிறது.

**MATCHED GROUPS**
**பொருந்திய குழுக்கள்**
ஒரு மாறியின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டு விசாரணைக்கு பொருத்தமான பிற அனைத்து மாறிகளாலும் தேரப்படும் மக்கள் குழுக்களை குறிக்கிறது.

**MATCHED SAMPLE**
**பொருந்திய மாதிரி**
ஆய்வைப் பாதிக்கக்கூடிய ஒத்த பண்புகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஆய்வுத் திட்டத்தின் மாதிரி மக்கள் தொகை

**MATCHING**
**பொருத்துதல்**
ஆய்வுத் திட்டத்திற்கு அயலான மாறிகளை குறைக்கும் முறை. இது பலவழிகளில் நடைபெற முடியும்.

**MATCHING FUNDS / GRANTS**
**பொருந்திய நிதி**
ஒருதிட்டத்துக்கு ஒரு அமைப்பு

வழங்கும் நிதிக்கு பொருந்திய ஒரு விகிதத்தில் ஒரு வெளி அமைப்பு நிதி வழங்கும் முறை.

**MATCHING TEST**
**பொருத்தும் சோதனை**
ஒரு வரிசையில் உள்ள கூறுகளை மறுவரிசையில் உள்ள கூறுகளுடன் சரியாக பொருத்த வேண்டிய சோதனை.

**MATERIAL OBJECTS OF ATTACHMENT**
**பற்றுதலின் பொருள்வகை காரணிகள்**
ஒருவரின் உடல், உடை, பணம், வீடு போன்றவற்றைக் குறிக்கிறது.

**MATERIAL SCIENCE**
**பருப்பொருள் அறிவியல்**
பலவிதமான பொருள்களின் தன்மைகள், பயன்கள், முதலிய வற்றை ஆயும் இயல்.

**MATERIAL SELF**
**பொருள்வகை தான்**
பற்றுதலின் பொருள் வகை காரணிகளை முதன்மைப் படுத்தும் தான் என்ற கருத்தின் கூறுகளைக் குறிக்கிறது.

**MATERNAL DEPRIVATION**
**தாயன்பு கிடைக்காமை**
ஒரு குழந்தையின் முதல் சில ஆண்டுகளில் அதன் தாயின் தொடர்ச்சியான இதமான-நெருக் கமான-உறவு கிடைக்காத நிலை.

**MATHEMATICAL MODELS**
**கணித மாதிரிகள்**
நிச மற்றும் கோட்பாட்டு சிக்கல்களுக்கான கணிதவியல் தீர்வுகள்.

**MATHEMATICAL PSYCHOLOGY**
**கணித உளவியல்**
சில கற்றல் கோட்பாடுகள், அளவீட்டு கோட்பாடு இவற்றில் உளவியல், கணித மொழியில் வெளிப்படுத்தப்படுதல்.

**MATRIARCHAL SOCIETY**
**தாய்வழி சமூகம்**
பெண்களின் தலைமை கொண்ட சமூகம்/ குடும்பத்தைக் குறிக்கிறது.

**MATRICULATED STUDENT**
**பல்கலை நுழைவு மாணவர்**
கல்லூரி/ பல்கலை நுழைவுத் தேர்வு எழுதி பட்டப்படிப்புக்கு ஏற்கப்பட்ட மாணவர்.

**MATRICULATION**
**பல்கலை நுழைவு**
பல்கலை நுழைவுக்கான குறைந்தபட்ச தேவைகள்/ தேர்வு.

**MATURATION**
**முதிர்ச்சியடைதல்**
உடல் வளர்ச்சியுடன் சேர்ந்து நடக்கும் உடல் - உள மாற்றங் களைக் குறிக்கிறது. இது பெரிதும் உள மாற்றத்தையே குறிக்கிறது. முதிர்ச்சியடைந்தவர்கள் அதிக தடியாக-உயரமாக-நிறமாக

இருக்கிறார்களா என்று பார்ப்பதில்லை. ஆனால் முதிர்ச்சியற்றவர்களில் இருந்து குறிப்பிட்ட விதத்தில் வேறுபட்டு நடக்கிறார்களா என்பதே பார்க்கப்படுகிறது. காட்டாக, உடல் ஒருங்கிணைந்து செயல்படுகிறதா அருவமான முறையில் சிந்திக்கிறார்களா இனப்பெருக்கத்துக்கு தகுதியாக உள்ளார்களா போன்றவை.

**MATURE STUDENT**
**முதிர்ந்த மாணவர்**

பள்ளியிலிருந்து நேராக உயர்கல்விக்கு வருபவரைவிட கொஞ்சகாலம் வேலையில் இருந்துவிட்டு வரும் மாணவரைக் குறிக்கிறது.

**MEAN SQUARE**
**வர்க்க சராசரி**

வேறுபாடு முதலான புள்ளியியல், அளவுகளின் ஆய்வில் ஒரு படி. வர்க்கங்களின் சராசரியை கண்டுபிடிப்பதன் மூலம் இது பெறப்படுகிறது.

**MEASUREMENT**
**அளவீடு**

ஒரு பொருளின் பரிமாணங்களை காணும் நடைமுறை. அதன்மூலம் கண்ட அளவு.

**MECHANICAL ABILITY**
**யந்திரத்திறமை**

யந்திரவிதிகளை ஈடு படுத்தல், கருவிகளைப் பயன் படுத்தல், யந்திர சிக்கல்களை கையாளல் முதலியன.

**MECHANICAL APTITUDE TESTS**
**யந்திர தகுபாட்டு ஆய்வு**

இயக்கம் எவ்வாறு யந்திர ரீதியில் நடைபெறுகிறது என்பதைப் புரிந்துகொள்வது குறித்த சோதனை. யந்திர புரிதல்.

**MECHANICAL ENGINEERING**
**எந்திரப் பொறியியல்**

யந்திரங்களையும் யந்திர இயக்கங்களையும் பற்றிய பொறியியல் பிரிவு.

**MECHANISTIC PSYCHOLOGY**
**யந்திரிக உளவியல்**

உள் அனுபவத்தை ஆராயாமல் நடத்தையை யந்திர கதியில் நோக்கும் உளவியல் பள்ளி / பார்வை.

**MEDIA**
**ஊடகம்**

அச்சு, வானொலி, தொலைக்காட்சி முதலான வெகுசன தொடர்பு வாயில்களைக் குறிக்கிறது.

**MEDIA ANALYSIS**
**ஊடக ஆய்வு**

குறிப்பிட்ட பார்வையாளர்களை அடையவோ குறிப்பிட்ட பண்டங்களையும் பணிகளையும் விளம்பரப்படுத்தவோ விளம்பர ஊடகத்தின் திறனை மதிப்பிடல்.

**MEDIA LITERACY**
**ஊடக அறிவு**

இதழியல், செய்திபரப்பு

முதலிய அடிப்படை நடைமுறை திறமைகளில் தேர்ச்சி பெற்ற நிலையைக் குறிக்கிறது.

**MEDIA MOBILES**
**ஊடக ஊர்திகள்**

ஒலி – ஒளி காட்சி மையங்களாக அமைக்கப்பட்ட பேருந்துகளைக் குறிக்கிறது.

**MEDIA RESEARCH**
**ஊடக ஆய்வு**

செய்தித்தாள் வாசகர், வானொலி நேயர், தொலைக்காட்சி பார்வையாளர், சினிமா ரசிகர் போன்றோர் பற்றிய ஆய்வு.

**MEDICAL EDUCATION**
**மருத்துவக் கல்வி**

மருத்துவ தொழில்களுக்கான தொடக்க இடைக்கால பயிற்சியைக் குறிக்கிறது.

**MEIOSIS**
**குன்றல் பிரிவு**

உயிரி அணு பிரிதல் நிகழ்ச்சி. பருவம் வரும் வரை வெளிப்படாமல் செயல்மிகு விந்து / முட்டையாக மாற ஆயத்தமாதல்.

**MEMORIZING**
**மனனம் செய்தல்**

மனப்பாட நிகழ்முறையில் முதல் கட்டம், பகுதி பகுதியாக பாடம் செய்தல், முழுமையாக பாடம் செய்தல் என பலவழிகளில் இது நடைபெறலாம்.

**MEMORY**
**நினைவு**

தனி ஆளின் கடந்த கால உணர்வுள்ள உணர்வற்ற அனுபவ பதிவு.

**MEMORY SPAN**
**நினைவு வீச்சு**

ஒரு முன்வைப்பின் பின் திரும்ப நினைவு கூற முடியக் கூடிய தொடர்புள்ள இல்லாத கூறுகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

**MENARCHE**
**பூப்பு**

முதல் மாதவிடாய் பருவம். வயதுக்கு வந்ததை வரையறுப்பதிலும் மருத்துவக் கல்வி ஆய்வுகளிலும் முக்கியமானது.

**MENTAL ABILITY TEST**
**மனத்திறன் சோதனை**

பொதுவான / குறிப்பான திறமைகளுக்கான நுண்ணறிவு சோதனை.

**MENTAL AGE**
**மனவயது**

வெவ்வேறு உடல் வயதுகளில் பிறரின் சராசரி அறிவு அளவுடன் ஒப்பிடும்போது ஒருவரின் மனவளர்ச்சி நுண்ணறிவு அளவு.

**MENTAL FACULTY THEORY**
**மனவகைமை கோட்பாடு**

இதன்படி, கல்வியானது மன

வகைமையை வளர்க்கிறது. இதன்மூலம் ஒருவர் எல்லாவித மான சிக்கல்களையும் சிறப்பாக தீர்க்க முடிகிறது.

**MENTAL HANDICAP**
**மன ஊனம்**
மனச்செயல்பாடு சராசரிக்கும் குறைவாக இருக்கும் நிலைமை களை குறிக்கிறது. பின்தங்கிய நிலைமை, வளர்ச்சி குறைவு, மெதுவாக கற்றல் ஆகியவை இதில் அடங்கும்.

**MENTAL HEALTH OR MENTAL HYGIENE**
**மனநலம்**
நிறைவான தனியாள் தகை மை பேணலும் ஒப்பீட்டளவில் மனக்கோளாறு இன்மையும். இத்தகைமையை பற்றிய ஆய்வு மருத்துவ கல்வியிலும் ஒரு பிரிவாக உள்ளது.

**MENTALISM**
**மனவாதம்**
மனமே அடிப்படை மெய்மை என்ற தத்துவ நம்பிக்கை.

**MENTAL PHILOSOPHY**
**உளமெய்யியல்**
அகத்தின் மெய்மையை ஆயும் மெய்யியல் கொள்கை. உளவியலுடன் நெருங்கிய உறவுடையது.

**MENTAL RETARDATION**
**உளக்குறைபாடு**
மன வளர்ச்சி, இயல்பைவிட குறைவாக உள்ள நிலை.

**MENTAL SET**
**மனமுனைப்பு**
ஒருவர் தன் பார்வையையும் அறிவையும் குறிப்பிட்ட விதத் தில் அமைத்துக் கொள்ள ஆயத்த மான நிலையைக் குறிக்கிறது.

**MESODERM CELLS**
**நடுத்தோல் அணுக்கள்**
கருநிலை வளர்ச்சியின்போது உயிர்அணுவின் நடு அடுக்கின் வளர்ச்சி, இந்த அணுக்கள் உடல் சார் அணுக்களாக பிரிகின்றன.

**METALLURGY**
**உலோகவியல்**
தாதுக்களில் இருந்து உலோ கங்களை பிரித்தெடுத்தல். இதில் சுத்திகரித்தல், கலப்புலோகம், வார்ப்பு, சிறப்பு பக்குவங்கள் இவை அடங்குவன.

**METEOROLOGY**
**வானிலை இயல்**
காற்றழுத்தம், வெப்பம், காற்று வேகம், ஈரப்பதம் முதலான வானிலைகளை ஆயும் இயல்.

**METHODOLOGY**
**முறைஇயல்**
கல்வியியலில் இது கற்பித்தல் முறைகள், கல்வி முறைகள் பற்றிய படிப்புகள் போன்ற வற்றைக் குறிக்கிறது.

**METRONOME**
**தாளக்கருவி**
இசை வகுப்புகளில் சீரான கால அளவில் சொடக்கு சத்த

மெழுப்பும் கருவி. உளவியல் சோதனையிலும் பயன்படும்.

**MICRO BIOLOGY**
**நுண் உயிரி இயல்**
குச்சியம் (பாக்டீரியா), நச்சியம் (வைரஸ்), நுண்பூஞ்சை, நுண்பாசி ஓரணு உயிரி, நுண் அளவிலான உயர் உயிரிகள் பற்றி ஆய்கிறது.

**MICRO ECONOMICS**
**நுண்பொருளியல்**
தனிமுடிவு அலகுகள் பற்றி ஆயும் பொருளியல் பிரிவு.

**MICRO FORM**
**நுண்வடிவு**
மீக்குறுக்கிய புகைப்பட பிம்பம் /அச்சுபடி. இதை படிக்க தனி கண்ணாடி தேவைப்படும். தகவல் சேமிப்பு, நூலகங்கள், கல்வி - பயிற்சி நிறுவனங்கள் இவற்றில் நுண்வடிவ படிகள் தேவைப்படும்.

**MICRO PHOTOGRAPHY**
**நுண்புகைப்படம்**
பின்னர் பெரிதுபடுத்த / திரையிட குட்டியளவுக்கு அச்சு பதிப்பை குறுக்க பயன்படும் உத்தி.

**MICRO PUBLISHING**
**நுண்பதிப்பு**
நுண்வடிவ படிகளை பதிப்பிப்பது பற்றிய பொதுசொல்.

**MICRO TEACHING**
**நுண்கல்வி**
கற்பித்தலின் குறைந்த வடிவம். இது புதியவகை கல்வித் திறன்களை வளர்க்கவும் நிலவுவற்றை ஆயவும் ஏற்றபடி திட்டமிடப்படுகிறது.

**MIDDLE SCHOOL**
**நடுநிலைப்பள்ளி**
8-12, 9-13, அல்லது 10-14 வயதுடைய மாணவர்களுக்கான பள்ளி. ஆரம்ப பள்ளிகளில் இருந்து இதற்கு வருகிறார்கள். இங்கிருந்து இடைநிலை பள்ளிகளுக்கு போகிறார்கள்.

**MIGRANT**
**இடம்பெயர்பவர்**
நாட்டின் ஒரு பகுதியில் இருந்து வேறுபகுதிக்கு குடிபுக செல்பவர். அல்லது எப்போதும் இடம்விட்டு இடம் மாறும் வாழ்க்கை நடத்துபவர்.

**MIGRANT EDUCATION**
**குடியேறி கல்வி**
குடிபெயர்வோருக்கான / நாடோடிகளுக்கான கல்வி.

**MIGRATORY ELITE**
**புலம் பெயரும் படித்த வகுப்பு**
உயர்கல்வி கற்றவர்கள் தம் தாய் மண்ணில் இருந்து பெரிதும் மாறுபடும் வேறு சமூகங்களில் குடியேறி அங்கே வேலை வாய்ப்பு தேடுவதைக் குறிக்கிறது.

**MILITARY ACADEMY OR SCHOOL**
**போர்த்திற கழகம் / பள்ளி**
படையுடையது போலவே சீருடை அணிந்து அன்றாட நடைமுறைகளுடன் போர்க்கலை பழகும் மாணவர்களை கொண்ட பள்ளி.

**MINORITY GROUP**
**சிறுபான்மை குழு**
ஒரு சமூகத்தில் இனத்தால் / சாதியால் / மதத்தால் குறைந்த எண்ணிக்கையிலான குழு.

**MIRROR WRITING**
**பிரதிபலிப்பு எழுத்து**
சாதாரண எழுத்தை கண்ணாடியில் தெரிவது போல் எழுதுதல். இதை ஒரு கண்ணாடியில் பார்த்துதான் எளிதாக வாசிக்க முடியும்.

**MISCUE**
**தவறான குறிப்பு**
எழுதப்பட்ட ஏட்டில் இல்லாத சொல்லை / பொருளை காணுமாறு வாசகரை இட்டுச் செல்லும் குறிப்பு.

**MISSION ORIENTED**
**பணி நோக்கிய**
குறிப்பிட்ட சிக்கல்களை தீர்க்கும் அடிப்படையிலான கல்வி அணுகுமுறை.

**MISSION SCHOOL**
**பணிவழி பள்ளி**
ஒரு மத அமைப்பு அதிகாரத்தால் நடத்தப்படும் பள்ளி - தன் மதத்தை பரப்பும் நோக்கமுடையது.

**MODERN LANGUAGE APTITUDE TEST**
**நவீன மொழி தகுபாட்டு ஆய்வு**
மாணவர்கள் ஒரு அயல் செம்மொழியை எவ்வளவு எளிதாக கற்பர் என மதிப்பிடும் சோதனை.

**MONGOLISM**
**டவுன் நோய்க்குறி**
மங்கோலிய முக அமைப்புடன் கூடிய உளக்குறைபாட்டு வகை.

**MONOGAMY**
**ஒருதுணைமணம்**
ஒருநேரத்தில் ஒரு ஆணும் பெண்ணும் மணம் புரியும் குடும்ப அமைப்பு.

**MONOTECHNIC**
**ஒருதொழில் (நுட்ப)கல்லூரி**
ஒரு குறிப்பிட்ட பாடம்/துறைக்கான உயர்கல்வி / கல்லூரி நிலையத்தைக் குறிக்கிறது.

**MONOVOCATIONAL COLLEGE**
**ஒரு தொழில் (கல்வி) கல்லூரி**
எல்லா மாணவர்களும் ஒரே தொழில்/ வேலைக்காக கற்பிக்கப் படும் / பயிற்றுவிக்கப் படும் கல்லூரி. எ.கா: கல்வியியல் கல்லூரி.

MORAL DEVELOPMENT
**ஒழுக்க வளர்ச்சி/அறநெறி வளர்ச்சி**
சரி தவறை பிரித்தறியவும் அறநிலைபாடுகளையும் மதிப்பீடுகளையும் வளர்த்தெடுக்கவும் ஒருவருக்கு உள்ள திறனின் வளர்ச்சி.

MORES
**வழக்கம்**
சரியான நடத்தையை குறித்து காட்டும், சமூகத்தின் நன்மைக்கு முதன்மை அளிக்கும் மரபுகளைக் குறிக்கிறது.

MORNING EXERCISES OR OPENING EXERCISES
**காலை / தொடக்க நடவடிக்கைகள்**
பள்ளி தொடங்கும் நேர கூட்டுப்பாடல், கொடிவணக்கம் போன்ற நடவடிக்கைகள்.

MORON
**அறிவிலி**
50-70 நுண்ணறிவிஎவு உள்ளவரைக் குறிக்கிறது. நொய்ந்த மனம் உடையவர்.

MORO REFLEX
**மொரோ மறிவினை.**
புதிதாய் பிறந்த குழந்தை திடுக்கிட செய்யும் ஒலி போன்ற தூண்டலுக்கு செய்யும் துலங்கல். இதற்கு குழந்தை தன் கை கால்களை அகல விரித்து பின் தற்காப்பான ஒரு தழுவல் நிலையை எடுக்கிறது.

MOTHER FIGURE
**தாய் நிலை**
ஒருவரை தாயாக பாவிக்கும் நிலை.

MOTIVATION
**ஊக்குவித்தல்**
உடலியல் / சமூகத் தேவைகளால் கொணரப்படும் இலக்குகளை நோக்கி செலுத்தப்படும் நடத்தையைக் குறிக்கிறது.

MOTIVE
**ஊக்கி**
ஒரு செயலைக் கிளப்பி ஆதரிக்கும் தூண்டல் / உந்தல்.

MOTOR ABILITY
**இயக்க திறன்**
தசை செயல்பாடுகளை ஒழுங்காக நிறைவேற்றும் திறனைக் குறிக்கிறது.

MOTOR ACTIVITY
**உடலியக்க செயல்பாடு**
ஒரு பொருளைக் கையாள / ஒரு சூழ்நிலையில் எதிர்வினை புரிய தேவையான தசை செயல்பாட்டை நிறைவேற்றல்.

MOTOR SEQUENCES
**உடலியக்க வரிசை**
ஒரு செயலுக்கு தேவைப்படும் தொடர்ச்சியான உடல் இயக்கங்களின் வரிசை. காட்டாக, ஆடை அணிய தேவைப்படும் உடல் அசைவுகளின் வரிசை.

**MOUTH TO EAR INSTRUCTION**
**செவிவழி போதனை**
மரபான பேச்சு வழி கற்பித்தல். விரிவுரை போன்றவை.

**MOVEMENT EDUCATION**
**அசைவுக் கல்வி**
தொடக்கப்பள்ளிப் பாடம். ஒருங்கிணைந்த லயத்தோடு கூடிய உடலியக்கத்தை மாணவருக்கு பழக்குதலுடன் தொடர்புடையது.

**MULTIETHNIC TEXT**
**பல்லின பாடநூல்**
வேறு பண்பாட்டு இன பின்னணி கொண்ட மாணவர்களின் பயனுக்கென உருவாக்கிய நூல்கள் / பிற கற்பித்தல் பொருள்களை குறிக்கிறது.

**MULTIPLE CHOICE ITEM**
**பல்வாய்ப்பு கேள்வி**
பல பதில்களில் இருந்து சரியான / சிறந்த பதிலை தெரிவு செய்ய வேண்டிய தேர்வு கேள்வி.

**MULTIPLE MARKING**
**பல்வழி மதிப்பெண்**
ஒவ்வொரு தேர்வுத்தாளுக்கும் பலர் மதிப்பெண் அளித்து இறுதியில் ஒரு மொத்த ஏற்புடைய மதிப்பெண்ணை தேரல்.

**MUSEUM**
**அருங்காட்சியகம்**
அறிவியல்-கலை-இலக்கியம் இவற்றில் அக்கறைக்குரிய பொருள்களை பாதுகாத்து காட்சிக்கு வைக்கப் பயன்படும் அறை / கட்டிடம்.

**MYTH**
**கட்டுக்கதை, பழங்கதை**
இயற்கை நிகழ்ச்சிகள் பற்றி அல்லது கற்பனை நாயகர்களின் செயல்கள் பற்றிய மெய்ப்பிக்கப் பட்ட சான்று அடிப்படை அற்ற பண்பாட்டு மரபு விசாரணையைக் குறிக்கிறது.

# N

**NARRATION METHOD**
**கதைகூறல் முறை**
மாணவர்கள் தாம் படித்த ஒரு கதையை தம் சொந்த சொற்களில் கூறும்படி சொல்லும் கற்பித்தல் முறை.

**NATIONAL ACADEMY OF SCIENCES (INDIA)**
**தேசிய அறிவியல் கழகம்**
அறிவியல் அனைத்தையும் வளர்க்க 1930இல் உருவாக்கிய அறிவாளர் அமைப்பு. முகவரி 5, Lajpatrai Road, Allahabad-2. Uttar Pradesh.

**NATURAL CONSEQUENCES**
**இயற்கை பின்விளைவு**
தண்டனை என்பது தவறுக்கு ஒரு தண்டனை என்பதைவிட இயற்கையின் ஒரு பின்விளைவே எனல் வேண்டும் எனும் நம்பிக்கை.

**NATURAL HISTROY**
**இயற்கை வரலாறு**
புவி, கோள்கள், அவற்றில் வாழ்ந்துள்ள உயிரிகள் பற்றிய அறிவியல் ஆய்வு.

**NATURALISM**
**இயற்கை கொள்கை**
மொத்த யதார்த்தமும் இயற்கையே எனும் நம்பிக்கையைக் குறிக்கிறது.

**NATURAL SCIENCE**
**இயற்கை இயல்**
இயற்கை மற்றும் இயற்கை நிகழ்வுகள் பற்றிய அறிவியல்.

**NATURAL WASTAGE OR NORMAL WASTAGE**
**இயற்கை கழிவு**
தாமேவிலகிச்செல்லும் ஊழியர் களுக்கு பதில் ஊழியர்களை அமர்த்தாததால் தொழிலாளர் ஆற்றல் அளவு குறைந்து செல்லும் நிகழ் முறையைக் குறிக்கிறது.

**NATIVISM**
**இயல்புக் கொள்கை**
கருத்துகள் பிறவியிலேயே இருப்பவை, அறிவு முதிரும் போது அவை வெளிப்படுகின்றன என்னும் மெய்யியல் கருத்து.

**NAUTICAL SCHOOL**
**கடலோடிப் பள்ளி**
கடல்பயணப் பணிகளில் பயிற்சி தரும் நிறுவனம்

**NEEDS / WANTS**
**தேவைகள்**
ஒருவரை குறிப்பிட்ட இலக்குகளை/ நிலைமைகளை நோக்கி உந்தி செலுத்தும் உடன்பாட்டு ஆற்றல்கள்.

**NEEDS ASSESSMENT**
**தேவை மதிப்பீடு**
ஒரு ஆள் / அமைப்பின் தேவை களையும் முன்னுரிமை களையும் தீர்மானித்தல்.

**NEED TO ACHIEVE**
**சாதிக்கும் தேவை**
இதில் மாணவர் அறியவும் புரியவும் விரும்புகிறார். பள்ளிப் படிப்பு மூலம் தகுதி பெறவும் பிறரால் மதிக்கப்படவும் விரும்பு கிறார்.

**NEGATIVE TRANSFER**
**எதிர்மறை மாறுதல்**
முன்பு வேறு ஒரு சூழலில் படித்ததால் இப்போது படிப்பதில் திறமை குறைதல்.

**NEGATIVSIM**
**எதிர்மறைவாதம்**
ஒருவர் ஒன்றை ஏற்க மறுப்பது மட்டுமல்ல, உண்மையில் சொல்வதற்கு நேர் எதிரானதையே (வேண்டுமென்று) செய்யும் நடத்தை பாணி.

**NEGLECTEE**
**புறக்கணிக்கப்பட்டவர், கண்டு கொள்ளப்படாதவர்**
தன் சமூகக் குழுவால் ஏற்கவும் படாத மறுக்கவும் படாத ஒருவர்.

**NEO FREUDIAN**
**புது பிராய்டியர்**
அடிப்படையில் பிராய்டின் கொள்கைகளை ஏற்கும் - ஆனால் வளர்ந்துவரும் ஒரு ஆளுமையின் மேல் ஆன சமூக தாக்கத்துக்கு கூடுதல் அழுத்தம் தரும் உளவியல் ஆய்வரைக் குறிக்கிறது.

**NEONATE**
**பச்சிளம் குழந்தை**
பிறந்து 4 வாரங்கள் வரை யான குழந்தையை குறிக்கிறது.

**NEPOTISM**
**உறவுச்சலுகை**
உறவினருக்கு தனிச்சலுகை - ஆதரவு வழங்கல்.

**NERVOUS SYSTEM**
**நரம்பு மண்டலம்**
இதில் மூளை - மூளைத் தண்டு-தண்டுவடம் அடங்கிய மத்திய நரம்பு மண்டலம் (CNS), உடல்சார் நரம்பு மண்டலம் (CNS உடன் நரம்பு இழைகள், தசை நார்கள்); தன்னியக்க நரம்பு மண்டலம் ஆகியவை உள்ளன. இது மேலும் பரிவு துணைப்பரிவு நரம்பு மண்டலங் களாக பிரிந்து உள்ளது. முன்னது விரைந்த துலங்கல்களுக்கு காரணமா கிறது. பின்னது உடல் இயக்கங் களை குறைக்கிறது.

**NEUROLOGICAL HANDICAP**
**நரம்பியல் ஊனம்**
மைய நரம்பு மண்டலத்தின் சீர்கேட்டைக் குறிக்கிறது.

**NEURON**
**நரம்பணு**
நரம்பு மண்டலத்தின் கட்டு மான அலகு. அணுப்பொருளாலும் அதன் நிகழ்முறை களாலும் ஆனது.

**NEW ENTRANT**
**புது நுழைவு / புதிதாய் சேர்பவர்**
ஒரு கொடுக்கப்பட்ட நிரலில் போக்கில் முதல் முறையாக பதியும் மாணவரைக் குறிக்கிறது.

**NIGHT SCHOOL**
**இரவுப்பள்ளி**
வழக்கமான பள்ளி நேரத் தைக் கடந்து கல்வி வழங்கும் பள்ளி. வேலைக்குப் போவோர் தம் படிப்பை முடிக்கவோ தொடர்ந்து கல்வி கற்கவோ உதவுகிறது.

**NIHILISM**
**இன்மைக்கொள்கை**
எல்லா ஒழுக்க மதிப்பீடு களையும் மறுக்கும் மெய்யியல். நம்பிக்கை மறுப்பு. எதுவும் நிலவவில்லை. ஒன்றும் தோன்ற வில்லை எனும் கொள்கை.

**NOBEL PRIZES**
**நோபல் பரிசுகள்**
ஆல்பிரட் நோபலின் உயில் படி 1900இல் நிறுவப்பட்ட கல்வி நிறுவனம். ஆண்டுதோறும் இயற்பியல், வேதியியல், இலக்கி யம், அமைதி, பொருளியல்,

இவற்றுக்கு நோபல் பரிசு வழங்கு கிறது. (நடுவராக குறிப்பிட்ட மேலை நிறுவனங்கள் செயல்படு கின்றன) முகவரி Noble House, Sturegatan 14, 11436, Stockholm.

**NOMINAL SCALE**
**பெயரளவு அளவை**
கல்வி அளவீட்டில் பயன்படும் 4 அளவைகளில் மிக கீழானது. மற்றவை. தொடர் அளவை, இடைவெளி அளவை, விகித அளவை.

**NON INSTRUCTIONAL STUDENT COSTS**
**கற்பித்தல் சாரா மாணவர் செலவு**
நூல் செலவு, அறை, கரும் பலகை, பள்ளிக்குப் போய்வரும் போக்குவரத்து செலவு முதலி யவை.

**NONLINEAR**
**நேர்கோடல்லா**
வரைபடத்தில் நேர்கோட்டில் காட்ட முடியாத உறவு.

**NON RESIDENT STUDENT**
**உடன் / உறையா மாணவர்**
தன் கல்லூரி / பல்கலை தனக்கு வழங்கியிருக்கும் உறை விடத்தில் வசியாத மாணவரைக் குறிக்கிறது.

**NONSENSE FIGURE**
**பொருளற்ற உருவம்**
பொருளற்ற கோடு - குறி - உருவமுள்ள வடிவம். நுண் ணறிவு ஆய்விலும் கற்பதிலும் பயன்படுகிறது.

**NONSENSE SYLLABLES**
**வெற்றசைகள்**
பொருளுள்ள சொற்களாக ஆகாத எழுத்து சேர்க்கைகள். கற்றல் மற்றும் மறத்தல் பற்றிய சோதனைகளில் பயன்படுவன.

**NON VERBAL COMMUNICATION (NVC)**
**சைகை / பேச்சற்ற கருத்துத் தொடர்பு**
பேச்சின்றி செய்தி தெரிவித்தல். எ.கா: சைகை, அபிநயம், உடல் அமைவு, அசைவு போன்றவை வழி.

**NON VERBAL INTELLIGENCE TEST**
**பேச்சற்ற நுண்ணறிவு சோதனை**
பேச்சோ மொழியோ பயன்படுத் தாமலே நுண்ணறிவை அளவிடும் சோதனை. பேச்சு குறிகள் தொடர் பில்லாத சிக்கல்களைத் தீர்க்கும் திறனை மதிப்பிட இவ்வித சோதனை கள் உதவுகின்றன.

**NORMATIVE BEHAVIOR**
**விதிமுறை நடத்தை**
இணக்கத்தை உருவாக்க முயலும் சமூக அழுத்தங்களை பயன்படுத்தும் / அவற்றுக்கு எதிர்வினை புரியும் நடத்தை.

**NOVICE TEACHER**
**கற்றுக்குட்டி ஆசிரியர்**
பயிற்சி அடிப்படையில் அமர்த்தப் பட்ட அனுபவமற்ற ஆசிரியரைக் குறிக்கிறது.

NUCLEAR ENGINEERING
**அணுக்கரு பொறியியல்**
அணுக்கரு பிணைப்பு / பிளவு பற்றி ஆயும் பொறியியல் பிரிவு.

NUCLEAR FAMILY
**தனிக் குடும்பம்**
கணவன் /மனைவி /குழந்தைகள் மட்டும் கொண்ட நல்லுறவுள்ள சிறு குடும்பம்.

NUMBER COMPLETION TEST
**எண்முடிப்பு சோதனை**
இதில் குறிப்பிட்ட விதிப்படி வெளியிடப்படும் எண்வரிசையை ஒருவர் அதே முறையில் முடிக்க / தொடர வேண்டும்.

NUMERICAL ABILITY
**எண்ணியல் திறன்**
சொல், எண் மற்றும் கல்வித் திறன்கள் சேர்ந்த திறனைக் குறிக் கிறது.

NURSERY CLASS
**குழந்தை வகுப்பு**
கட்டாய பள்ளி வயதைவிட குறைந்த வயதுள்ள குழந்தைகளுக் கான ஆரம்பப்பள்ளி வகுப்பு.

NURSING COUPLE
**பால் (கொடுக்கும் -குடிக்கும்) இணை**
புதிதாக பிறந்த குழந்தையும் அதன் தாயும் சேர்ந்து அனுபவிக்கும் உயிர் தொடர்பான அனுபவம் என உளவியல் ஆய்வர்கள் குறிப்பர்.

NUTRITION
**ஊட்டம்**
உணவுகளின் மதிப்புகள், அவற்றில் நமக்கு தேவை யானவை பற்றிய அறிவியல் ஆய்வு.

# O

OBEDIENCE
**கீழ்ப்படிதல்**
பெற்றோரோ ஆசிரியரோ விரும்பும் ஆணையிடும் செய லுக்கு இணங்குதல். உத்திரவு களை நிறைவேற்றல்.

OBJECTIVE TEST
**புறவய நிலை / தேர்வு**
எந்த ஒரு மதிப்பீட்டாளரும் குழப்பமின்றி கெலிப்பெண் குறிக்க இயலும் தேர்வு.

OBSERVATIONAL TECHNIQUES
**உற்றுநோக்கல் உத்திகள்**
உற்றுநோக்கு ஆய்வில் பயன் படும் முறைகளை குறிக்கிறது.

OCCUPATION
**தொழில்**
ஒருவர் ஒரு வருமானத்தை ஈட்டுவதற்கான தொழில், வேலை அல்லது வேறு முதன்மையான வழியைக் குறிக்கிறது.

OCCUPATIONAL ANALYSIS
**தொழில் ஆய்வு**
ஒரு பொதுப்பெயரின்கீழ்

வகைப்படுத்த முடியுமளவுக்கு போதிய பொதுவான கடமைகள் கொண்ட வேலைகளை இனங் காணல்.

**OCCUPATIONAL GUIDANCE**
**தொழில்வழிகாட்டல்**

தனியாட்கள் எவ்வித வேலைக்கு பொருத்தமானவர் கள் என்ற ஆலோசனை கூறல்.

**OCCUPATIONAL PSYCHOLOGISTS**
**தொழில் உளவியலார்**

தொழில் உளவியலின் தொழில்முறை உளவியலாரைக் குறிக்கிறது.

**OCCUPATIONAL STRUCTURE**
**வேலைகட்டமைப்பு**

நாட்டளவிலும் அல்லது தனி நிறுவனத்திலும் வேலைகளின் அமைவை குறிக்கிறது.

**OCCUPATIONAL THERAPY**
**பணிசிகிச்சை**

ஊனமுற்றவருக்கு சிகிச்சை யாகவும் கல்வியாகவும் வேலை அளித்தல்.

**OESTROGENS**
**பெண் ஊக்கிகள்**

சூல்பை உற்பத்தி செய்யும் பெண் ஊக்கிகள் (ஹார்மோன் கள்)

**OFF CAMPUS CLASSES**
**புற வளாக வகுப்புகள்**

தன் வளாகத்துக்கு வெளியில் கல்லூரி / பல்கலை வழங்கும் ஆய்வுகளைக் குறிக்கிறது.

**OFF THE JOB TRAINING**
**பணியிடம் சாரா பயிற்சி**

பணி இடத்துக்கு வெளியே ஒரு பயிற்சி மையத்திலோ வேறு ஒரு நிறுவனத்திலோ ஏற்பாடு செய்யப் பட்டு வழங்கப்படும் பயிற்சியைக் குறிக்கிறது.

**OMBUDSMAN**

மனிதர்கள் அதிகார வகுப்பின் நிர்வாகத்தின் அல்லது கெடு பிடியான அரசாங்கத்தின் கைகளிலோ துன் புறும்போது அவர்களின் உரிமை களை எதிரொலிக்கும் அலுவலர் / பொதுப்பணி அலுவலர் குற்றத்தை விசாரணை செய்யும் அலுவலர்.

**ONE PARENT FAMILY OR SINGLE PARENT FAMILY**
**ஒற்றை பெற்றோர் குடும்பம்**

குடும்பத்தில் / வீட்டில் பெற் றோரில் ஒருவர் எப்போதுமே இல்லா திருக்கும் குடும்பம்.

**ONE WAY SCREEN**
**ஒருவழித் திரை**

ஒருபுறமிருந்து மட்டும் பார்க்க முடியும் கண்ணாடி மூலம் குழந்தை கள் அறியாமல் அவர்களை தெளி வாக கவனிக்க முடியும் ஏற்பாட்டை குறிக்கிறது.

**OPEN BOOK TEST**
**பார்த்தெழுதும் தேர்வு**

கேள்விகளுக்கு விடை தரும் போது மாணவர்கள் தம் நூல்களை

யும் ஏடுகளையும் பார்த்துக் கொள்ள அனுமதிக்கப்படும் எழுத்துத் தேர்வுகள்.

**OPEN COMMUNICATION STRUCTURE**
**திறந்த தொடர்பு அமைப்பு**
பள்ளி / கல்லூரியில் ஒவ்வொரு வரும் மற்ற ஒவ்வொருவரிடமும் எளிதாக தொடர்புகொள்ளும் வகை யிலான அமைப்பு முறை.

**OPEN DATE ENROLMENT**
**திறந்த நாள் சேர்க்கை**
கல்வியாண்டு தொடக்கம் போன்ற கல்வியில் சேர குறிப்பிட்ட காலவிதிப்பு எதுவுமில்லாத சேர்க்கை முறை. ஆண்டின் எந்த காலத்திலும் சேரலாம்.

**OPEN ENDED**
**திறந்த தன்மையான**
ஒரே சரியான விடை என்பதற்குப் பதில் பல விடைகள் வரக்கூடிய கேள்வி / தேர்வு எதையும் குறிக்கிறது.

**OPEN MATERIALS**
**திறந்த பொருள்கள்**
விளையாட்டில் கணக்கில் கொள்ள வேண்டிய காரணிகள் மீதும் விளையாட்டின் முடிவின் மீதும் பங்கு எடுப்போருக்கு அதிக சுதந்திரமும் செல்வாக்கும் இருக்கும் விளை யாட்டு / பகர்ப்பு பொருள்களை குறிக்கிறது.

**OPEN TEST**
**திறந்த சோதனை**
ஒரு உளவியலாரோ தகுதிபெற்ற சோதனையாளரோ அல்லாத வரும் பயன்படுத்த கிடைக்கும் சோதனை.

**OPERATIONALIZE**
**(கணிக்க) அணியப்படுத்து**
அவதானம்/ சோதனை/ தகவல் தொகுப்பு வழி அளவிட இயலும் வடிவில் எந்த ஒரு கருத்தையும் ஆய்வு முன் வைப்பையும் மாற்றுதல்.

**OPERATIONS**
**நடவடிக்கை**
ஒருவர் தன் கற்பனையில் உள்ள நடவடிக்கைகளை செயல் படுத்தும் திறனைக் குறிக்கிறது.

**OPHTHALMIC OPTICS**
**கண் பார்வை இயல்**
கண்ணின் செயல்பாடு, அமைப்பு, செயல்திறன் பற்றிய இயல்.

**OPPORTUNISTIC TEACHING**
**சூழ்நிலைக்கேற்ற கல்வி / கற்பித்தல்**
உள்ளக் கிளர்ச்சியின் அடிப் படையில் செயல்படும், வாய்ப்பு கள் அமையும்போது அவற்றைப் பயன்படுத்தி பொதுவான இலக்குகளை நோக்கி இலங்கும், முன்கூட்டி திட்டமிட்ட நோக்கங் கள் இல்லாத கட்டமைக்கப் படாத கற்பித்தல் பாணி.

**ORAL HISTORY**
**வாய்மொழி வரலாறு**
நேரடி பேச்சு, பதிவு அல்லது

பெயர்ப்புகள் மூலம் பரப்பப்படும் வரலாறு.

**ORAL LANGUAGE SKLLS**
**வாய்மொழித் திறன்கள்**
பேச்சில் மொழியை திறம்பட, தெளிவாய் கையாளும் திறன் உடைமை.

**ORALS**
**வாய்மொழி**
உயர்பட்ட வேட்பர்களுக்கு வைக்கப்படும் வாய்மொழித் தேர்வு.

**ORAL STAGE**
**வாய்கட்டம்**
காம, அக வளர்ச்சியின் முதல் நிலை. இந்நிலையில் வாயே முதன்மை இன்ப, அனுபவ மையமாக இருக்கிறது என்பதை குறிக்கிறது.

**ORDER OF SKILL**
**திறமை வரிசை**
குழந்தை வளர்ச்சியில் உடலியக்க திறன் வளர்ச்சி. எ.கா: கழுத்து நிற்றல், நடுஉடல் கட்டுப்பாடு, கைத்தசை இயக்கம்.

**ORGANIC DISORDERS**
**உறுப்புசார் சீர்கேடுகள்**

**ORGANIC LITERACY**
**தொகுப்பு படிப்பறிவு**
சொற்கள் யதார்த்தத்துக் கிடையிலான இணைப்புகள், கற்பனைகள், உணர்ச்சிகள், நிகழ்ச்சிகளின் ஆராய்ச்சி இவற்றைக் குறிக்கிறது.

**ORGANISM**
**உயிரி**
உயிருள்ள தனியாரை / ஒழுங்கமைந்த சமூகக் குழுவைக் குறிக்கிறது.

**ORGANISATIONAL BEHAVIOR**
**அமைப்புசார் நடத்தை**
ஒரு நிறுவனத்துக்குள்ளும் வெளி உலகுடன் அதன் உறவுகளிலும் ஆன நடத்தை இடைவினையைக் குறிக்கிறது.

**ORGANISATIONAL THEORY**
**அமைப்புக் கோட்பாடு**
அமைப்பின் செயல்பாடு, கட்டமைப்பு, விரும்பத்தக்க வடிவம் இவற்றை ஆய்வதைக் குறிக்கிறது.

**ORIENTATION COURSE**
**புத்தாக்கப்படிப்பு அல்லாத பயிற்சி**
மாணவர்களை ஒரு பாடம் நிறுவனத்தக்கு அறிமுகம் செய்ய அமைத்த படிப்பு.

**ORIGINAL SOURCES OR PRIMARY SOURCES**
**மூல ஆதாரங்கள் / முதன்மை ஆதாரங்கள்**
படி எடுக்கப்படாத வேறு மூலங்களில் இருந்து பெறப்படாத மூலப்பொருள்கள், ஆவணங்கள் முதலியவற்றைக் குறிக்கிறது

**ORTHOGONAL FACTORS**
**தொடர்பற்ற காரணிகள்**
பிற காரணிகளுடன் தொடர் பற்ற காரணிகளைக் குறிக்கிறது.

**ORTHOPAEDIC STUDENT**
**முடமான மாணவர்**
நோயாலோ எலும்பு / தசை கோணல் வளர்ச்சியாலோ முட மான மாணவரைக் குறிக்கிறது.

**OSTRACISM**
**சமூக விலக்கு**
ஒருவரை ஒரு குழு / குடும்பம் சமூகத்திலிருந்து விலக்குவதை குறிக்கிறது.

**OUTLETS**
**சேரிடம்**
பணிகள் அல்லது உயர் படிப்பில் நுழைதல் என படிப்பு கொண்டு போய் விடுமிடம்.

**OVER LEARNING**
**மிகை படிப்பு**
உடனடி நினைவு / செயல் திறமைக்கும் கூடுதலாக படித்தல் / மனப்பாடம் செய்தல்.

**OVER PERMISSIVE**
**மிகை இடம்**
வீட்டில் / பள்ளியில் ஒழுங்கில் தாராளம் காட்டல். இதில் குழந் தைகளுக்கு சிறிதும் கட்டுப்பாடு இருப்பதில்லை. சுதந்திரம் கொடுக்கிறார்கள் என்பதை விட அதிக செல்லம் / இடம் கொடுக் கிறார்கள்.

**OVER POSSESSIVE**
**மிகை ஆதிக்கம்**
குழந்தைக்கு சுதந்திரம் தர மறுக்கும் அல்லது குடும்பத்தை விட்டு குழந்தை வெளியே போய் வருவதைத் தடுக்கும் பெற் றோரின் உடைமை குணம்.

**OVER PROTECTIVE**
**மிகை கடுப்பு**
தம் குழந்தைகளின் நலம், பாதுகாப்பு பற்றி அளவுக்கு மேல் பதறும் பெற்றோரின் குழந்தை வளர்ப்பு முறை.

---

# P

---

**PACING**
**உலவல்**
மாணவர்களின் வாசிப்பு விரைவை அதிகரிக்க ஆசிரியர் கையாளும் வழிமுறையைக் குறிக்கிறது.

**PAEDIATRICS**
**குழந்தை மருந்தியல்**
குழந்தை நலம் - நோய் பற்றி கவனிக்கும் மருத்துவப் பிரிவு.

**PANEL INTERVIEW**
**குழுப்பேட்டி**
ஒவ்வொருவரையாக நேர் காண்பதைவிட குழு குழுவாக இணைத்து நடத்தும் நேர் காணல்.

**PAPER**
**ஆய்வுக் கட்டுரை / ஆய்வுரை**
தொழில்முறை ஆய்விதழில் வெளியாகும் ஆய்வு அறிக்கை / விவாதம் / இலக்கியக் கட்டுரை அல்லது ஒரு கருத்தரங்கு/ மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

**PAPER & PENCIL TEST**
**தாள், பென்சில் சோதனை**
கேள்வித்தாள், பதில்தாள், எழுதுகருவி மட்டும் தேவைப் படும் கல்வி / உளவியல் சோதனை.

**PARAGRAPHIA**
தவறான சொற்கள் / எழுத்து களையே பயன்படுத்தி எழுதும் எழுத்து நிலைமை.

**PARALLEL PLAY**
**இணை விளையாட்டு**
எல்லா குழந்தைகளும் ஒரே வித பொம்மைகளையே பயன் படுத்தினாலும் ஒருவர் ஒருவரு டன் சேர்ந்து விளை யாடாமல் அக்கம் பக்கமாக அமர்ந்து விளையாடல்.

**PARA MEDICAL OCCUPATIONS**
**துணை மருத்துவப் பணிகள்**
தகுதிபெற்ற மருத்துவர்களின் பணிக்கு உதவும் - ஆதரவாக - துணைநிற்கும தொழில்கள் / வேலைகளைக் குறிக்கிறது.

**PARANOIA**
**அறிவு பிறழ்ச்சி**
பொய்க்கருத்துக்ளை குறிப் பாக தான் கொடுமைப் படுத்தப் படுவதான பொய்க் கருத்துக் களை கொண்டிருக்கும் உள வியல் சீர்கேடு.

**PARAPLEGIC**
**கீழ்வாதர்**
உடலின் கீழ்பாகம் முடங்கிப் போன ஒருவர்.

**PARA PROFESSIONAL**
**துணைப்பணியர்**
தொழிலில் குறைந்த பயிற்சி யே பெற்று முழு தகுதி பெற்றவருக்கு உதவியாளராக வேலை செய்பவரைக் குறிக்கிறது.

**PARENTAL VALUE SYSTEM**
**பெற்றோரின் கருத்தமைப்பு**
சமூக-கல்வி-அற-அரசியல் துறைகளில் பெற்றோரின் நிலைப் பாடுகளையும் நம்பிக்கைகளை யும் குறிக்கிறது.

**PARENT ASSOCIATION**
**பெற்றோர் கழகம்**
குறிப்பிட்ட பள்ளி மாணவர் களின் பெற்றோரின் சங்கம்.

**PARTIAL CORRELATION**
**பகுதி இயைபுபடுத்தல்**
மூன்றாவது மாறியின் விளை வுகளை வைத்தபடி 2 மாறிகள் இடையிலான உறவை ஆய பயன்படும் புள்ளியியல் உத்தி.

**PARTIALLY SEEING OR SIGHTED**
**பகுதிப்பார்வை**
பார்வை வரம்புடைய குழந் தைகளை குறிக்கிறது

PARTICIPANT
**பங்கேற்பாளர்**
வயதுவந்தோர் கல்வி / மேலாண்மைக் கல்வி மாணவரைக் குறிக்கிறது.

PARTICIPANT INVOLVEMENT
**பங்கேற்பாளர் ஈடுபாடு**
கல்வி செயல்பாடுகளின் உருவாக்கம், நிறைவேற்றல், மதிப்பீடு ஆகியவற்றில் கற்பவரின் தீவிர ஈடுபாடு.

PARTICIPANT SATISFACTION
**பங்கேற்பவர் நிறைவு**
ஒரு கற்றல் அனுபவம் எந்த அளவுக்கு தன் தேவைகளை நிறைவு செய்தது என்ற மாணவரின் மதிப்பீட்டைக் குறிக்கிறது.

PARTICIPATORY SYSTEM
**பங்கேற்பு முறை**
பள்ளியை நடத்துவதில் பகுதியில் உள்ள சமூகமும் பங்கு பெறும் பள்ளி முறை.

PAST LEARNING
**பிரித்து பாடம் செய்தல்**
தகவலின் மொத்த செய்தியை கற்பதற்கு முன் தகவலை பல அலகுகளாக உடைத்து ஒவ்வொரு அலகையும் கற்று நினைவில் கொள்ளுதல்.

PART PUBLICATION OR PART WORK
**பிரித்து வெளியிடல்/ பகுதி வெளியீடு**
கலைக்களஞ்சியம் போன்ற மிகப்பெரிய நூலை சீரான கால இடைவெளியில் பகுதி பகுதியாக வெளியிடல்.

PASSIVE LEARNING
**செயலற்ற படிப்பு**
ஆசிரியரே நடத்தும், மாணவருக்கு கற்பதில் எந்த பங்கும் இல்லாத கற்பித்தல் நிலைமையைக் குறிக்கிறது.

PASSIVE SYMPATHY
**செயலற்ற ஒத்துணர்வு**
காட்டாக, திகிலடைந்த ஒரு கும்பல் ஓடும்போது அப்பகுதியில் உள்ள மற்றவர்கள் காரணம் அறியாமலே கூடச் சேர்ந்து ஓடுதல்.

PASSIVE VOCABULARY
**செயலற்ற சொல்வளம்**
ஒரு குழந்தை புரிந்து கொள்ளும் சொற்களின் எண்ணிக்கை.

PASS MARK
**தேர்ச்சி மதிப்பெண்**
ஒரு மதிப்பீடு / தேர்வில் வெற்றிக்கும் தோல்விக்கும் எல்லைக் கோடான மதிப்பெண்.

PASS RATE
**தேர்ச்சி வீதம்**
ஒரு மதிப்பீடு / தேர்வில் தேர்ச்சி மதிப்பெண் பெற்ற வேட்பாளர்களின் சதவீதம்.

PATERNALISM
**தந்தை பாணி**
அதிகாரத் தன்மையும் விரிவான நலத்திட்ட வழங்கலும் கலந்த மேலாண்மை பாணி.

**PATHOLOGY**
**நோயியல்/ நோய்குறியியல்**
குறிப்பாக மருத்துவத்தில் நோய்,- காரணம் - விளைவு பற்றிய ஆய்வு பொதுவாக நோய்க் கூறான நிலைமைகள் பற்றிய ஆய்வு.

**PATTERN DRILL**
**திட்டமுறை பயிற்சி**
மொழி கற்பித்தலில் அடிப் படையான முன் மாதிரியான உச்சரிப்புகளை வாய்வழி பயிற்சி தருவதைக் குறிக்கிறது.

**PATTERN VARIABLES**
**முறை மாறிகள்**
ஈடுபாடு-பற்றற்ற நிலை, குறிப்பான இலக்கு பரவலான இலக்கு போன்ற ஆசிரியரின் பாத்திரத்தின் எதிரெதிர் நிலை கள்.

**PEDAGOGY OF THE OPRESSED**
**ஒடுக்கப்பட்டோரின் படிப்பு**
பாலோ பிரேரி என்ற லத்தீன் அமெரிக்க முற்போக்கு கல்வி யாளர் எழுதிய நூலின் தலைப்பு.

**PERCENTAGE RANK**
**நூற்றுமானத் தகுதி**
நூற்றுக்கு இவ்வளவு என மதிப்பிடப்படும் ஒருவரின் மதிப் பெண் தரத்தை குறிக்கிறது

**PERCEPTION**
**புலன்காட்சி**
ஒருவர் தன் புலன் அனுபவத் தை ஒழுங்கமைத்து பொருள் படுத்திக் கொள்ளும் நிகழ்முறை.

**PERCEPTUAL DEFENCE**
**பார்வைக் காப்பு**
ஆளுமை, மதிப்பீடுகள் முதலியவற்றுக்கு ஊறு நேராமல் தடுப்பதற்காக தான் பார்க்க விரும்பாததை பார்க்காதிருக்கும் தந்திரம்.

**PERCEPTUAL GROWTH**
**புலன்காட்சி வளர்ச்சி**
புலன்களின் பயிற்றுவிப்பு மற்றும் வளர்ச்சியில் புலன் காட்சி வளர்ச்சி நிகழ்முறை.

**PERCEPTUAL SET**
**பார்வை முறை**
பொருள்களையும் உறவு களையும் குறிப்பிட்ட முறையில் - பொதுவாக ஒரு அமைப்புக்குட் பட்டு பார்க்கும் முறை.

**PERENNIALISM**
**நிலைப்புக் கோட்பாடு**
உண்மை, யதார்த்தம், அறிவு, மதிப்புகள் போன்ற கருத்துக்கள் என்றும் மாறாதவை என்னும் நம்பிக்கை.

**PERFORMANCE**
**செய்துகாட்டல்**
ஒரு கற்றல் பணியை ஒரு ஆள் / குழு நிறைவேற்றும் செய லைக் குறிக்கிறது.

**PERFORMANCE BASED EDUCATION**
**செய்து காட்டலின் அடிப்படை யிலான கல்வி**
குறிப்பிட்ட தொழில் கல்விக்கு

இன்றியமையாத பல்வேறு திறமைகளுக்கு சாட்சியமாக அவற்றை வெளிப்பட செய்து காட்டுவதற்கு அழுத்தம் தரும் பயிற்சி.

**PERINATAL**
**பிறப்பு நேர**
பிறப்பின்போது / பிறப்பை ஒட்டிய வளர்ச்சிக்கால அளவு.

**PERIOD**
**பாடவேளை**
பள்ளி / கல்லூரி நாள் பகுக்கப் பட்டுள்ள அடிப்படை அலகு நேரம்.

**PERIPATETIC CONFERENCE**
**இடம்மாறும் மாநாடு**
அடுத்தடுத்து வெவ்வேறு இடங்களில் தொடரும் மாநாடு.

**PERIPATETIC TEACHER**
**இடம்மாறும் ஆசிரியர்**
பல பள்ளிகளில் பாடம் நடத்தும் ஆசிரியர் அவருக்குள்ள சிறப்புத்திறன் சார்ந்த பொறுப்பு களை நிறைவேற்றுவதற்காக போய்வரும் ஆசிரியர்.

**PERSON**
**ஆள்**
தன் சொந்த பண்புகளையும் தனக்கே உரிய சமூக உறவு களையும் கொண்டிருக்கும் தனி மனிதர்.

**PERSONALITY MEASUREMENT**
**ஆளுமை அளவீடு**
ஆளுமையின் வெவ்வேறு கூறுகளை அளவு ரீதியில் / பண்பு ரீதியில் அளப்பதைப் பயன்படுத்தி ஆளுமையை ஆராயும் படிப்பு.

**PERSONALITY PROFILE**
**ஆளுமைச் சித்திரம்**
தனியாளின் ஆளுமையின் சுருக்கமாக வரைவு.

**PERSONALITY TESTS**
**ஆளுமைச் சோதனைகள்**
ஆளுமையை அளப்பதற்கான மதிப்பீடும் அளவைகள், பட்டியல் கள், முன்கணிப்பு சோதனைகள் இவற்றைக் குறிக்கிறது.

**PERSONALITY TRAIT**
**ஆளுமைப் பண்பு**
ஆளுமையின் / உள்ளார்ந்த கற்கப்பட்ட தனியாள் பண்பை குறிக்கிறது

**PERSONAL TEACHING**
**தனிப்பட்ட போதனை**
சிறு வட்டத்திடம் நேருக்கு நேர் உரையாடி கற்பித்தல்.

**PERSONNEL OFFICER OR ESTABLISHGMENT OFFICER OR EMPLOYEE RELATION OFFICER**
**பணியாள் அலுவலர்**
பணியாள் துறையில் பொறுப்புடைய செயலர் / நிர்வாகி

**PERSONNEL PLACEMENT**
**பணியாள் அமர்த்தீடு**
இருக்கும் வேலைகளில் கிடைக்கும் பணியாளரை இயன்ற

வரை திறமையாக அமர்த்தும் செயல்முறை.

**PERSONNEL SELECTION**
**பணியாள் தேர்வு**

ஒரு காலி இடத்துக்கு வந்து உள்ள பல வேட்பாளர்களில் மிகப் பொருத்தமானவரை தெரிவு செய்யும் நிகழ்முறை.

**PHALLIC STAGE**
**குறி கட்டம்**

உளப்பகுப்பாய்வு கொள்கையின் மூன்றாம் கட்ட வளர்ச்சி. இந்நிலையில் பாலுறுப்புகளே இன்பத்தின் தோற்றுவாயாக உள்ளன.

**PHALLUS**
**குறி, இலிங்கம்**

விரைத்து நிற்கும் ஆண்குறி வடிவம். வழிபாட்டில் - சில பாரம்பரிய, ஆரிய முறைகளில் வளமை மற்றும் படைப்புத் திறனின் சின்னமாக வணங்கப் படுகிறது.

**PHARMACOLOGY**
**மருந்தியல்**

மனிதர் மீதும் விலங்குகள் மீதும் வேதிப் பொருள்கள் ஏற் படுத்தும் விளைவுகள் பற்றிய அறிவியல் ஆய்வு.

**PHARMACY**
**மருந்தாட்சி**

மருந்துகள் செய்வதும் தருவதும் ஆன இயலை செயலைக் குறிக்கிறது.

**PHARMENOLOGY**
**நிகழ்வியல்**

தனியாளின் நோக்கு நிலையில் இருந்து நடத்தையை ஆயும் உளவியல் அணுகல்.

**PHILOLOGY**
**மொழி இயல்**

மொழி, சொற்பிறப்பியல், இலக்கணம், சொல்லாட்சி முதலியவை பற்றிய அறிவியல் ஆய்வு.

**PHILOSOPHY**
**மெய்யியல்**

சிந்தனைவாத வடிவங்கள் பற்றிய ஆய்வையும் பிற துறை அறிவின் அடிப்படைகளையும் பற்றியது.

**PHILOSOPHY OF EDUCATION**
**கல்வி மெய்யியல்**

கல்வியின் நோக்கங்களையும் மதிப்புகளையும் விரிவாக ஆயும் கல்வியியலின் பிரிவு.

**PHOBIA**
**வீணான அச்சம்**

குறிப்பிட்ட பொருளை / நிலைமையை எதிர்கொள்ளும் போது ஏற்படும் உள நரம்பியல் பதற்றத்தைக் குறிக்கிறது.

**PHONEME**
**ஒலியன்**

பேச்சு / பேச்சு மொழியில் புரிந்து கொள்ளப்படக்கூடிய அடிப் படையான- மிகச்சிறிய ஒலி அலகு.

**PHONETICS**
**ஒலிப்பியல்**
உச்சரிப்பியல் அல்லது சொற்களை அவற்றின் பேச்சுக் கூறுகளாக பகுத்து ஆயும் இயல்.

**PHONOLOGY**
**பேச்சொலி இயல்**
பேச்சொலிகளின் கோட்பாடு மற்றும் வரலாற்றை குறிக்கிறது.

**PHONIC METHOD**
**ஒலி முறை**
வாசிக்க கற்பிப்பதில் பயன்படும் முறை. இது எழுத்துக்களை அவற்றின் பெயரால் கற்பிப்பதை விட அவற்றின் ஒலியால் கற்பிப்பதன் அடிப்படையானது.

**PHOTOGRAPHIC MEMORY**
**அச்சமுத்தமான நினைவு**
மனதில் இருத்தி திரும்ப வெளியெடுக்க முடியக்கூடிய ஆற்றலில் அசாதாரண வலுவான ஆற்றலைக் குறிக்கிறது.

**PHYSICAL CHEMISTRY**
**இயற்பியல் வேதியியல்**
வேதி மாற்றங்களுடன் இணைந்த இயற்பியல் மாற்றங்கள் பற்றிய அறிவியல் ஆய்வு.

**PHYSICAL EDUCATION**
**உடல்பயிற்சிக் கல்வி**
உடல்பயிற்சிகள், விளையாட்டுகள், போன்றவை மூலம் மாணவர்களை உடல் ரீதியில் வளர்த்தெடுக்க உருவாக்கப்பட்ட கல்வி.

**PHYSICAL GEOGRAPHY**
**இயற்பியல் புவியியல்**
புவி-அதிலுள்ள மண்-நீர்-காற்று - இவற்றின் இயல் பண்புகளை ஆயும் புவியியல் பிரிவு.

**PHYSICAL TRAINING**
**உடல்பயிற்சி (PT)**
உடல்பயிற்சிக் கல்விக்கான (PE) பழைய சொல்.

**PHYSICS**
**இயற்பியல்**
பொருள் மற்றும் ஆற்றலின் தன்மைகள் பற்றி ஆயும் அறிவியல் துறை.

**PHYSIOLOGY**
**உடலியல்**
உடல் அணுக்களிலும் உயிரிகளிலும் நடைபெறும் உயிர் நிகழ்முறை பற்றிய அறிவியல்.

**PHYSIOTHERAPY**
**பிடித்துவிடல் சிகிச்சை**
உடம்பு பிடித்துவிடுவது மற்றும் தொடர்புடைய புறமுறைகள் வழி செய்யும் மருத்துவ மண்டுவம்.

**PICTURE PHONE OR VIEW PHONE**
**படபேசி**
ஒலியுடன் ஒளி உள்ளீடு - வெளியீடு செய்யும் தொலைத் தொடர்பு முறை.

**PILOT SCHOOL**
**முன்னோடி பள்ளி**
புது கற்பித்தல் முறைகளை யும் கருத்துகளையும் உருவாக் கும் /சோதிக்கும் நோக்கிலான பள்ளி.

**PILOT STUDY**
**முன்னோடி ஆய்வு**
பெரிய திட்டம்/ஆய்வு போன்ற வற்றை தொடங்குமுன் மேற் கொள்ளும் சோதனை ஆய்வு.

**PLAY DAY OR FIELD DAY**
**விளையாட்டு நாள்**
விளையாட்டு போன்ற நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட பள்ளி நாள்.

**PLAY LEADER**
**விளையாட்டு தலைவர்**
ஒரு விளையாட்டு திடலில் குழந்தைகளின் செயல்பாடு களை ஊக்குவிக்கும் மேற்பார்க் கும் ஒருவர்.

**PLAY RULES**
**விளையாட்டு விதிகள்**
விளையாட்டில் கடைப்பிடிக் கப்படும் மரபுகள், ஒப்பந்தங்கள், கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறை கள்.

**PLAY STREET**
**விளையாட்டு வீதி**
போக்குவரத்துக்கு தடுக்கப் பட்டு குழந்தைகள் விளையாட அனுமதிக்கப்படும் தெரு.

**PLAY THERAPY**
**விளையாட்டு சிகிச்சை**
ஊனமுற்ற குழந்தைகளின் நோயியல்பு அறியவும் குண மாக்கவும் சிறப்பாக உருவாக்கிய பொம்மைகள் முதலியவை கொண்டு செய்வது.

**POETIC WRITING**
**கவிதை நடை**
உரை / கவிதை வடிவங்களில் கலை இலக்கிய தன்மையான வெளிப்பாட்டைக் குறிக்கிறது.

**POLITICAL EDUCATION**
**அரசியல் கல்வி**
அரசாங்கத்தின் சிக்கல்கள், விவகாரங்கள், முறைகள் பற்றிய கல்வி.

**POLITICAL SCIENCE**
**அரசியல் அறிவியல்**
அரசாங்க கொள்கைகள், முறைகள், இலக்குகள் பற்றிய ஆய்வு.

**POLYGAMY**
**பல இணைமணம்**
ஒரு ஆண் பல பெண்களை யோ ஒரு பெண் பல ஆண்களை யோ மணம் புரியும்/ கூடிவாழும் முறை.

**POLYTECHNICAL EDUCATION**
**பலதொழில் கல்வி**
பலவித தொழில்நுட்ப திறன் களின் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையிலான கல்வி.

**POOLING**
**குவிப்பு**
பல கல்லூரிகள் கூட்டு படிப்புகளை நடத்த மூலவளங்களை தொகுத்துக் கொள்ளல்.

**POPULAR CULTURE**
**பொது பண்பாடு**
பெருவாரி மாணவர்களின் விருப்பம் அறிவை பிரதிபலிக்கும் / அதற்கு பொருத்தமான பண்பாடு.

**POPULATION**
**மக்கள் தொகை**
ஒரு வரையறுத்த கூட்டத்தில் இருக்கும் மக்களின் மொத்த எண்ணிக்கை.

**POPULATION MOBILITY**
**மக்கள் இடப்பெயர்ச்சி**
ஒரு நாட்டுக்குள் மக்கள் இடம் விட்டு இடம் பெயரும்/ அதற்கு வாய்ப்புள்ள அளவு (எ.கா: கிராமத்திலிருந்து நகருக்கு)

**PORTFOLIO**
**தேர்வுறை**
ஒரு கலை மாணவன் படைப்புகளில் சிறந்தவற்றின் தொகுப்படங்கிய உறையைக் குறிக்கிறது.

**POST DOCTORAL**
**முனைவருக்கு பிந்திய மேல்நிலை**
முனைவர் பட்டத்துக்கு மேற் பட்ட ஆய்வுகளைக் குறிக்கிறது.

**POWER TEST**
**ஆற்றல் சோதனை**
சாதனை மட்டத்தை அடைய எடுத்த நேரத்தை விட சாதனையளவே அதிக முக்கியமாகும் சோதனை.

**PRACTICE EFFECT**
**நடைமுறை விளைவு**
இந்திய நடைமுறை பின் வரும் நிகழ்த்தலை பாதிப்பதைக் குறிக்கிறது.

**PRACTICE ITEMS**
**பயிற்சி அம்சங்கள்**
சோதனை வடிவத்துடன் வேட்பரை பரிச்சயப்படுத்த ஒரு கேள்வித்தாளில் உள்ள மாதிரி கேள்விகள்.

**PRECONSCIOUS**
**நனவு அடிமனம்**
நனவுப் பகுதிக்கு அடியில் உள்ள பகுதி. இதில் உள்ள தகவல்களை எப்போது வேண்டுமானாலும் நனவுப் பகுதிக்கு கொண்டுவரமுடியும். ஆனால் உடனடி நினைவில் இராது.

**PREGENITAL STAGE**
**பிறப்புக்கு முன் நிலை**
உள பாலுணர்வு வளர்ச்சி குறித்த பிராய்டின் கோட்பாட்டில வாய்வழி, குதவழி, மற்றும் குறிவழி நிலைகளைக் குறிக்கிறது.

**PREHENSION**
**பிடிப்பு**
கைகளாலும் விரல்களாலும் பற்றிக் கொள்ளும் திறன்.

**PREJUDICE**
**சார்பெண்ணம்**

ஆட்கள் / பொருள்கள் / கருத்துகளுக்கு சார்பான / எதிரான முழுமையான மனச் சாய்வைக் குறிப்பது.

**PRESSURE GROUP**
**அழுத்தக்குழு**

பொதுவான மதிப்பீடுகள்/ ஆர்வங்கள் கொண்டவர்கள் பிறர் தம் கருத்துக்களையோ கொள்கைகளையோ ஏற்குமாறு செய்ய பல இணக்குவிப்பு வடிவங்களை கையாள்பவர்கள்.

**PRIMARY EDUCATION**
**தொடக்கக் கல்வி**

தொடக்க/ஆரம்பப்பள்ளி வழங்கும் கல்வி.

**PRIVATE COLLEGE**
**தனியார் கல்லூரி**

முதன்மையாக தனியார் நிதியாலேயே நடைபெறும் கல்லூரி.

**PROBABILITY THEORY**
**நிகழ்தகவு கோட்பாடு**

குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுமா என்பதை அறுதியிட பயன்படுகிறது. ஒரு நிகழ்ச்சியின் நிகழ் தகவு 0,1 என்பவற்றில் வேறுபடுகிறது (0=நிகழ்ச்சி கண்டிப்பாக நிகழாது, 1=நிகழ்வது உறுதி)

**PROBATION**
**தகுதி பெறல்/தகுதிகாண் பருவம்**

இந்த காலத்தில் ஒருவரின் தகுதி சோதிக்கப்படுகிறது. அது வரை நியமன உத்திரவு நிறுத்தி வைக்கப்படுகிறது.

**PROBATION CARD**
**தகுதிகாண் அட்டை**

தகுதிகாண் பருவத்தில் ஒருவரின் நடத்தையை பதிவதற்கான அட்டை.

**PROBATION OFFICER**
**கண்காணிப்பு அலுவலர் / நன்னடத்தை அலுவலர்**

நீதிமன்றங்களின் முன் தோன்றுபவரை கண்காணிப்பதற்குரிய அதிகாரி

**PROCESS CHART**
**நிகழ்முறை அட்டவணை**

ஒரு நிகழ்முறையில் வேலையின் வரிசை முறை யையும் நிகழ்ச்சிகளின் இயல் பையும் குறிக்கும் அட்டவணை.

**PROFESSOINAL CONTINUING EDUCATION**
**தொழில்தொடர்கல்வி**

குறிப்பிட்ட தொழிலில் ஒருவர் பணியாற்ற ஆயத்தப் படுத்தும் தொடர்கல்வி வடிவம்.

**PROFESSIONAL DEGREE**
**தொழில்பட்டம்**

கல்வி, மருத்துவம், சட்டம் போன்ற தொழில் படிப்பில் தரப்படும் பட்டம்.

**PROFESSIONAL INSTITUTE (OR INSTITUTION)**
**தொழில்கழகம் / நிறுவனம்**

குறிப்பிட்ட தொழிலுக்கான

தகுதி வழங்கும் அமைப்பு அதில் தகுதி பெற்ற உறுப்பினர்களின் அமைப்பு.

**PROFESSIONAL SCHOOL**
**தொழில்கல்வியகம்**
சட்டம்,மருத்துவம்போன்ற தொழில் படிப்புகள் வழங்கும் நிறுவனத்தைக் குறிக்கிறது.

**PROFESSIONAL STATUS**
**தொழில் தகுதி**
ஒரு தொழிலை சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கவுரவம், மதிப்பு, சலுகைகள்.

**PROFILE ANALYSIS**
**சுருக்க ஆய்வு**
ஒரு வாழ்க்கைச் சுருக்கத்தில் ஆயத்த நிகழ் முறையையும் தகவல் ஆய்வையும் குறிக்கிறது.

**PROFILE (PERSONNEL)**
**தகவல் சுருக்கம் (பணியாளர்)**
வேலைதரும்அமைப்பின் பணியாளர் பதிவேட்டில் ஒரு பணியாளரைப் பற்றி பதிந்துள்ள தகவல்.

**PROGMATISM**
**பயன்அளவைக் கொள்கை**
தன் தகுதி உடைமைக்கு சான்றாக பின் விளைவுகளை வலியுறுத்தும் ஒரு கோட்பாடு / நடைமுறையைக் குறிக்கிறது.

**PROGRAM**
**நிகழ்ச்சி நிரல்**
குறிப்பிட்ட ஆய்வுத் துறையின் பாடத்திட்டம் அல்லது பாடத் தொகுப்பு.

**PROGRAM ANALYSIS & REVIEW (PAR)**
**நிகழ்ச்சி ஆய்வும் மதிப்பீடும்**
மூலவளங்கள் மெய்யாகவே உருப்படியாக பயன்படுகிறதா என ஆயவும் மதிப்பிடவும் அரசு துறைகளிலும் பொது நிர்வாகத்திலும் உதவும் மேலாண்மை உத்தியும் அணுகலும்.

**PROGRAMMED PRESENTATION OF TASKS**
**பணிகளின் நிரலான முன்வைப்பு**
படிப்படியாய் அதிகரிக்கும் சிக்கல் போல மாணவர் சாதனை படிப்படியாய் விரிவுபடும்படியாக மாணவர் பணிகளை வரிசைப் படுத்தல்.

**PROGRAMMED TEXT**
**நிரல் (படுத்திய) ஏடு**
தனித்தனி மாணவர்களின் எதிர்வினை களுக்கும் தேவை களுக்கும் தக படிப்படியான ஒரு முறையில் அச்சிடப்பட்ட கற்பித்தல் / போதனை பொருள் களைக் குறிக்கிறது.

**PROGRESS CHART**
**முன்னேற்ற அறிக்கை**
அடுத்தடுத்த நிலைகளை நிறைவு செய்வதற்கு அறிகுறியாய் வெவ்வேறு வண்ணங்களால் பிரிக்கப்பட்ட அட்டை.

**PROGRESSIVE PART METHOD**
**பகுதியாய் முன்னேறும் முறை**
இதில் ஒரு பாடம் தனித் தனியாக கற்கும் பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பகுதியும் முடிந்ததும் ஏற்கனவே கற்கப்பட்டதுடன் அது இணைக் கப்படுகிறது. இந்த வரிசையை A, B, A+B, C, A+B+C, D, A+B+C+D, எனக் குறிக்கலாம்.

**PROGRESSIVE RETARDATION**
**தொடர்ந்த பின்னடைவு**
சாதனையில் / செயல்முறை யில் தொடர்ச்சியான பின்னடை தலைக் குறிக்கிறது.

**PROGRESSIVE SCHOOL**
**முற்போக்குப் பள்ளி**
முற்போக்கான கற்பித்தல் முறைகளை கொண்ட, எளிதான சுதந்திரமான ஒழுக்கத்தைக் கொண்ட ஓரளவு மாணவரின் தன்னாட்சி உடைய பள்ளி.

**PROGREESSIVE TEACHING**
**முற்போக்குக் கல்வி**
மாணவரை முதன்மைப் படுத்தும், கண்டுபிடித்தல் கற்றல் போன்ற உத்திகளுக்கு அழுத்தம் தரும் கற்பித்தல் முறைகளைக் குறிக்கிறது.

**PROGRESSIVISM**
**முன்னேற்றவாதம்**
சமகால சிக்கல்களில் கவனம் செலுத்தும் மெய்யியல் நம்பிக்கை.

**PROJECT**
**ஆய்வு / செயல்திட்டம்**
மாணவரால் மேற்கொள்ளப் படும் ஆசிரியரால் வழிகாட்டப் படும் பணி/ செயல்பாட்டைக் குறிக்கிறது.

**PROJECT GROUP**
**செயல்திட்டக்குழு**
குறிப்பிட்ட செயல் திட்டத் தை முடிக்க உருவாகிய மாணவர் / பிறரின் குழுவைக் குறிக்கிறது

**PROJECTION**
**ஏற்றிப்பார்த்தல்**
தன்னால் ஏற்கமுடியாத விருப்பங்களையும், தவறுகளை யும் அடுத்தவர்மேல் ஏற்றிக் காணும் நடைமுறை.

**PROJECT METHOD**
**செயல்திட்ட முறை**
செயல்திட்ட வேலையால் குறிப்பிடப்படும் கற்பித்தல் முறை. நடப்பில் மாணவர் தொடங்கி ஒழுங்கமைக்கும் செயல்திட்ட இலக்கு, ஆசிரியர் இயக்கும் கட்டங்களாக மாற்றப் படுகிறது. எ.கா: சிக்கலைக் குறிப்பிடல். தேவையான தகவல் சேகரித்தல் - மாற்று அணுகல் களை பரிசீலித்தல் - பணிநிறை வேற்றல் - திறம் மதிப்பிடல்.

**PROSPECTUS**
**தகவல் ஏடு**
ஒரு கல்லூரி / பல்கலை / பள்ளி தான் வழங்கும் பாடங் களையும் வசதிகளையும் பற்றி

தெரிவிக்க வெளியிடும் ஏடு. தம் நிறுவனத்தில் சேரக்கூடிய மாணவர்களுக்கு தகவல் வழங்கு வதே இதன் குறிப்பான நோக்கம்.

**PROTOCOL MATERIALS**
**நடத்தைமுறை தொகுப்பு**
ஆசிரிய மாணவர்கள் பார்க் கவும் ஆயவும் முடியக்கூடிய நடத்தை பற்றிய ஒலி ஒளி பதிவுகளைக் குறிக்கிறது.

**PRO-VICE-CHANCELLOR**
**உதவி துணைவேந்தர்**
பல்கலை அதிகார வரிசை யில் துணைவேந்தருக்கு உதவி யாளர்.

**PROXIMODISTAL DIRECTION**
**மையத்திலிருந்து வெளி நோக்கி**
வளர்ச்சி என்பது உடலின் மைய பாகங்களில் இருந்து வெளிநோக்கியது என்னும் உடல் வளர்ச்சிக் கோட்பாட்டைக் குறிக்கிறது.

**PSEUDO CONCEPTS**
**போலி கருத்தாக்கம்**
கருத்தாக்க வளர்ச்சியில் ஒரு நிலை. இதில் குழந்தை பொருள் களிடையான உறவுகளின் சாரத்தை புரிந்து கொள்ளாமல் பொருள்களிடையான மே லோட்ட தொடர்புகளை மட்டும் பார்க்கிறது.

**PSEUDO RETARDED**
**போலி பின்னடைவு நிலை**
ஒருவர் மேல் பார்வைக்கு பின்னடைந்தவர் போல் இருந் தாலும் பண்பாட்டுக் கல்வி, பயிற்சித் திட்டங்கள் சமூக வழிகாட்டல் போன்றவை மூலம் வரைத் தக்கவராக இருப்பதைக் குறிக்கிறது.

**PSYCHIATRIST**
**உளவியல் மருத்துவர்**
உளவியல் மருத்துவத்தில் பயிற்சி முடித்த மருத்துவரைக் குறிக்கிறது.

**PSYCHIATRY**
**உள மருத்துவம்**
மனநோய் மற்றும் தகவமை யும் சிக்கல்கள் பற்றி ஆயும் மருத்துவ பிரிவு.

**PSYCHO ANALYSIS**
**உளப்பகுப்பாய்வு**
உணர்வற்ற நடத்தையை ஆய்வதற்கும் இயல்பான இயல்பு மீறிய நடைமுறைகளை ஆய் வதற்குமான உளவியல் முறை.

**PSYCHO DRAMA**
**உளநாடகம்**
உணர்ச்சி சிக்கல்களை தீர்க்க நாடகத்தை ஒரு சிகிச்சை வடிவமாக பயன்படுத்தும் முறை. நாடகம் மூலம் குழந்தைகளின் ஆளுமை உள்ளாற்றலை வளர்க்க உதவுகிறது.

**PSYCHO EDUCATIONAL CLINIC**
**கல்வி உளவியல் மருத்துவம்**
பள்ளி சூழல் தொடர்பாக பள்ளிக் குழந்தைகளுக்கு நேரும்

நடத்தை சிக்கல்களை முதன்மை யாய் கவனிக்கும் மருத்துவ மனையைக் குறிக்கிறது.

**PSYCHOPATH**
**உளநோயர்**

ஆளுமைக் கோளாறு உடைய, சமூக விரோத நடத்தை கொண்ட மனிதரை குறிக்கிறது. இவர் மன அழுத்தம், பொறுப் பின்மை, இன்பநாட்டம் உடைய வராயும் சமூகப் பொறுப் பற்ற - குற்ற உணர்வற்ற - பரிவு இரக்கம் அற்றவராயும் இருக்கிறார்.

**PSYCHOSIS**
**உளநோய்**

யதார்த்தத்தை புறக்கணிக் கும் - உணர்ச்சி நடத்தை சீர்குலைந்தும் காணப்படும் உளக் கோளாறு.

**PSYCHOTIC**
**உளநோயர்**

உளநோயால் வருந்துபவர்.

**PSYCHOTICISM**
**கடும் உளநோய்**

மனப்பாங்குகளும் நடத்தை யும் கடுமையாகப் பாதிக்கப்பட் டுள்ள நிலை.

**PUBLIC EDUCATION**
**பொதுக்கல்வி**

தனியாரைவிட அரசு / அரசாங்கம் வழங்கும் கல்வி.

**PUPIL EXPECTATION**
**மாணவர் எதிர்பார்ப்பு**

சாதனை, பிற வளர்ச்சி விசயங்களில் மாணவரின் விருப்பத்தை குறிக்கிறது. இவை யதார்த்தமானவையாகவும் இருக்கலாம். கற்பனைத் தன்மை யிலும் இருக்கலாம்.

**PUPIL PACED MATERIALS**
**மாணவர் வேக பொருள்கள்**

மாணவர்கள் தம் இயல்பான வேகத்தில் முன்னேறும் விதத் தில் உருவாக்கப்பட்ட கற்பித்தல் பொருள்களையும் கற்றல் வாய்ப்பு களையும் குறிக்கிறது.

**PUPIL STUDENT**
**மாணவர்**

குறிப்பட்ட படிப்பை முடிக்க பள்ளி கல்லூரி-பல்கலையில் சேரும் ஒருவர் (ஆண் அல்லது பெண்).

---

# Q

---

**Q - DATA**
**கே - தரவு**

ஒரு கேள்விப் பட்டியலில் இருந்து பெறும் தரவைக் குறிக்கிறது.

**QUADRANGLE OR QUAD**
**சதுக்கம்**

கல்லூரியின் கட்டிடங்களால் சூழப்பட்ட சதுரமான வெளி.

**QUALIFICATION**
**தகுதி**

கல்வி / தொழில் அடைவை

குறிக்கும் அங்கீகரிக்கப்பட்ட / புலப்படு தகுதியைக் குறிக்கிறது.

**QUALITATIVE DATA**
**பண்புவகை தகவல்**

அளவுவகையில் முன்வைக் கப்படாமல், புள்ளியியல் கை யாட்சி மற்றும் முன்வைப்புக்கு இடம்தரக்கூடும் வழிகளில் பகுத் தாய / வகைப்படுத்தக் கூடிய முறையில் முன்வைக்கப்படும் தகவல்.

**QUALITY CONTROL AND RELIABILITY**
**தரக்கட்டுப்பாடு மற்றும் நம்பகம்**

**QUALITY SCALE**
**தர அளவுகோல்**

சிறப்பின் வரிசையில் அள விடப்பட்ட பள்ளி மாதிரிவேலை களை குறிக்கிறது. அந்த பள்ளிப் பாடத்தில் பிற வேலைகளை மதிப்பிடும் அளவுகோலாக பயன்படுகிறது.

**QUARTILE**
**கால்நூறு**

நூற்றில் 25ஆவது பகுதி. முதல் கால்நூறு நூற்றுக்கு 25 ஆவது. இரண்டாவது கால்நூறு நூற்றுக்கு 50ஆவது (அல்லது நடுவெண்).

**QUESTION BANKS**
**வினாவங்கி**

மாணவர்களின் அறிவையும் புரிதலையும் திறம்பட மதிப்பிட தக்கவை என ஆசிரியர்களும் தேர்வர்களும் அனுபவத்தில் கண்ட தேர்வுக் கேள்வித் தொகுப்பு.

**QUESTIONNAIRE**
**வினாப்பட்டி**

திட்டமிட்ட கேள்விகளின் அச்சிட்ட தொகுப்பு. பதில்களை நிரப்ப இடம் விடப்பட்டிருக்கும்.

---

# R

---

**RACE**
**இனம்**

பொதுவான - தனித்த - உள்ளார்ந்த உடல் பண்புகளைக் கொண்ட மனிதக் குழுவைக் குறிக்கிறது.

**RADIO LISTENING GROUP**
**வானொலி கேட்கும் குழு**

கல்வி ஒலிபரப்பை கேட்டு விவாதிக்க கூடும் மக்கள் குழு.

**RAGGING**
**கடும்கேலி**

மாணவர்களின் முரட்டு நடத்தை. குறிப்பாக சகமாணவர் களை மனம் புண்படச் செய்ய நடத்தப்படுகிறது.

**RANDOM ACCESS**
**வரன்முறையற்ற அணுக்கம்**

தேர்ந்தெடுத்த ஒலி ஒளி நிரலை பரப்புவதற்கான மீள் பெறுகையைக் குறிக்கிறது.

**RANDOM LEARNING**
**வரன்முறையற்ற கற்றல்**
முறையான கல்வி மூலமல்லா மல் தானே திட்டமிட்டு கற்றதாக வும் அல்லாமல் தற்செயலாக அடைந்து கொண்ட கல்வி.

**RANGE OF ATTENTION**
**கவன எல்லை**
ஒரு நேரத்தில் நாம் எந்த பொருளையும் கவனிக்க முடியக் கூடிய எல்லையைக் குறிக்கிறது.

**RATIONALISATION**
**நியாயம் / காரணம் கற்பித்தல்**
செயல் முடிந்தபின் அதன் செயல்முறை நியாயப்படுத்தப் படுதல் மட்டுமல்ல அதன் உண்மை நோக்கத்தையும் மறைத்தலைக் குறிக்கிறது.

**RAW DATA**
**கச்சா தகவல்**
கணிதச் செயல்பாடுகளால் மேம்படுத்தப் படாத புள்ளி விவரங்கள்.

**REACTION FORMATION**
**எதிர்வினை அமைவு**
தற்காப்பு உத்தி. பிற விருப்பங் கள், நிலைபாடுகள், அல்லது பழக்கங்களை மறுக்க முனையும் உளவியல் நிலைபாடு / பழக்கத்தை குறிக்கிறது.

**REACTIVE BEHAVIOR**
**எதிர்வினை நடத்தை**
முதன்மையால் முந்திய புறச் சூழ்நிலைகளால் தீர்மானிக்கப் பட்ட நடத்தை.

**READINESS**
**தயார்நிலை**
துலங்க ஆயத்தமான நிலை யில் ஒருவர் இருக்கும் உளவியல் நிலைமை.

**READING LIST**
**வாசிப்புப் பட்டியல்**
குறிப்பிட்ட படிப்பில் வாசிக்கப் பரிந்துரைக்கப்படும் நூல்பட்டியல்.

**READING SKILLS**
**வாசிப்புத் திறன்கள்**
வாசிப்பில் பயன்படும் அறிவு மற்றும் காட்சித் திறன்கள். இதில் கண்டறியும் உச்சரிக்கும் புரிந்து கொள்ளும் சொற்களை சரளமாக படிக்கும் திறன்கள் அடங்கும்.

**REALISM**
**புறஉண்மைக்கொள்கை**
அனுபவத்திலிருந்து சுயேச் சையாக பருப்பொருள்கள் நிலவு கின்றன என்னும் கொள்கை.

**REASONING**
**பகுத்தறிவு**
பொதுவிதிகளை பயன் படுத்தி செல்வாக்கு செலுத்தும் / சிக்கல் தீர்க்கும் சிந்தனை நிகழ் முறை.

**RECEPTOR FIBRES**
**ஏற்பு நரம்புகள்**
புலன் உறுப்புகளில் இருந்து மைய நரம்பு மண்டலத்துக்குப் போகும் நரம்பிழைகள்.

**RECESS**

**இடைவேளை**

பாடநேரங்களுக்கு இடையிலான சிறு இடைவேளை.

**RECESSIVE GENE**

**பின் ஒதுங்கும்மரபணு**

ஒரு ஆதிக்க மரபணுவுடன் சோடி சேரும் போது தன் பரம்பரை பண்புகள் வெளிப்படுத்தப்படாத மரபணுவைக் குறிக்கிறது.

**RECIPROCITY**

**பரிமாற்ற தன்மை**

இரு நிறுவனங்கள் ஒன்று மற்றதன் தொழில்முறை தகுதி அங்கீகரித்துக் கொள்வதை குறிக்கிறது.

**RECONSTRUCTIONSIM**

**சீரமைப்புக் கொள்கை**

ஆசிரியரும் கல்வியும் சமுதாயத்தை குறிப்பிட்ட மதிப்பீடுகளின்படி சீரமைக்கக் கூடியன என பார்க்கும் கல்விக்கொள்கை.

**RECREATION THEORY**

**மனமகிழ்வுக் கோட்பாடு**

விளையாட்டும் ஓய்வும் மீண்டும் நலமளிக்கும் இழந்ததை மீட்டுத் தரும் என கருதும் விளையாட்டுக் கொள்கை.

**RE - EVALUATION**

**மறுமதிப்பீடு**

தம் பணிக்காலத்தில் குறிப்பிட்ட இடைவெளிகளில் தகுதி பெற்ற மனிதர்கள் தம்மை மறு தகுதிப் படுத்திக் கொள்ளல் தேவை எனும் கொள்கையைக் குறிக்கிறது.

**REFEREE**

**நடுவர்**

விளையாட்டில் தீர்ப்பு கூறுபவர்; ஒரு ஆய்வுரை வெளியிட பொருத்தமானதா என்பதை மதிப்பிட கல்வித்துறை இதழால் அமர்த்தப்படுபவர்.

**REFERENCE**

**பார்வைக்குறிப்பு**

ஒரு வெளியீட்டில் வாசகரை வேறொரு பகுதியை / மூலத்தை பார்க்கக்கூறும் குறிப்பு. வேலை தேடும் / அறிமுகம் வேண்டும் ஒருவருக்கு பரிந்துரை வழங்கும் ஒருவர்.

**REFERENCE GROUP**

**பார்வைக்குழு**

இக்குழுவுடன் ஒருவர் தன்னை இணைத்து இனம் காண்கிறார். தன் மதிப்பீட்டுக்கும் வழிகாட்டடல் பெறவும் அக்குழுவை அளவுகோலாக - ஆதாரமாகக் கொள்கிறார்.

**REFERENCE LIBRARY**

**பார்வை நூலகம், மேற்கோள் நூலகம்**

தகவல் கிடைக்கக்கூடிய நூல்களும் பிற செய்திவழிகளும் பார்க்கக் கிடைக்கும் நூலகம்.

**REFLECTON**

**ஆழ்சிந்தனை**

புதிய உறவுகளை கண்டு

பிடிக்கவும் கருதவும் அனுபவங்களையும் கருத்தாக்கங்களையும் பிறவற்றையும் சிந்தித்தல்.

**REFLEX**
**மறிவினை**
உணர்வு ரீதியில் கட்டுப்படுத்தப் படாத அனிச்சை செயல். மறிவினைகள் ஓரிடம் சார்ந்தவை, குறிப்பானவை, மனித கருவிலேயே இருப்பவை.

**REFORM**
**சீர்திருத்தம்**
கல்விக்கொள்கை மற்றும் நடைமுறை முன்னேற்றத்தை நோக்கி திட்டமிடப்படும் மாற்றத்தைக் குறிக்கிறது.

**REFORM SCHOOL**
**சீர்திருத்தப்பள்ளி**
இளையோரை திருத்தும் தண்டனை அமைப்பு. கல்வி வழங்கல், மறுவாழ்வளித்தல், நெறிபிறழ்ந்தவரின் தகைக்கேட்டை திருத்தல் ஆகியவை இதன் நோக்கம்.

**REGISTER**
**பதிவேடு**
பள்ளியில் / வகுப்பில் இருக்க வேண்டிய வந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை வருகை பதிவு.

**REGISTRATION FEE**
**பதிவுக்கட்டணம்**
ஒரு படிப்புக்காக / திட்டத்துக்காக சேரும்போது பதியும்போது வசூலிக்கப்படும் கட்டணம்.

**REHABILITATION**
**மறுவாழ்வளித்தல்**
ஒருவரை சுதந்திர வாழ்வுக்கு பிழைப்புக்கு மீண்டும் கொண்டு வருதல்.

**REHABILITATION CENTER**
**மறுவாழ்வு மையம்**
மறுவாழ்வளிப்பதற்கான வசதிகளை வழங்கும் நிறுவனத்தைக் குறிக்கிறது.

**REINFORCEMENT**
**வலுவூட்டல்**
ஒரு தூண்டலுக்கான துலங்கல் ஒத்த நிலைமைகளில் மீண்டும் உருவாகும் வாய்ப்பை உறுதிசெய்யும் நிகழ்ச்சியைக் குறிக்கிறது.

**REINFORCEMENT CONTINGENCEIS**
**வலுவூட்டும் தற்செயல்கள்**
குறிப்பாக கற்பவரின் நடத்தையை மாற்றியமைப்பதற் காக கற்றல் நிரலுக்குள் வைக்கப்படும் தற்செயல் ஏற்பாடுகளைக் குறிக்கிறது.

**REINFORCER**
**வலுவூட்டி**
தன்னைப் பின்தொடரும் துலங்கலை வலுப்படுத்தும் தூண்டல் நிகழ்ச்சியைக் குறிக்கிறது.

**RELATIVE DEPRIVATION**
**ஒப்பீட்டு பாதிப்பு**
ஒருவர் பிறருடன் தன்னை ஒப்பிட்டு அந்த வகையில் அதில்

தன்னை பாதிக்கப்பட்டவராக கருதும் நிகழ்முறை.

**RELATIVE GRATIFICATION**
**ஒப்பீட்டு மேம்பாடு**
ஒருவர் பிறருடன் தன்னை ஒப்பிட்டு அந்த வகையில் தன்னை நல்ல நிலையில் உள்ளவராகக் கருதல்.

**RELEARNING**
**மீள்கற்றல்**
ஏற்கனவே கற்று இப்போது ஓரளவோ முற்றிலுமோ மறந்து விட்டதை திரும்பவும் கற்றல் நிகழ்முறையைக் குறிக்கிறது.

**RELEVANCE ANALYSIS**
**பொருத்தப்பாட்டு ஆய்வு**
குறிப்பிட்ட / ஆய்வு வளர்ச்சி திட்டம் ஒரு அமைப்பின் தேவை களுக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றது / இருக்கும் என்பதை மதிப்பிட பயன்படும் உத்தி.

**RELIABILITY**
**நம்பகத்தன்மை**
ஒரு சோதனையில் / பிற அள வுக்கருவியில் எந்த அளவுக்கு நிருவாக தவறுகள் இல்லாமல் உள்ளன என்பது.

**RELIGIOUS EDUCATION (RE)**
**மதக்கல்வி**
ஒரு மத நம்பிக்கையிலும் நடை முறையிலும் ஆன போதனையை புகட்டலை கருத்தேற்றத்தைக் குறிக்கிறது.

**REMAKE**
**மீள்ஆக்கம்**
நிலவும் படிப்புகளை மேம் படுத்தும்-புத்துருவாக்கும் நிகழ் முறையைக் குறிக்கிறது.

**REMAND CENTER**
**காவல் வைப்பு மையம்**
இளம் குற்றவாளிகளை காவலில் பிடித்து வைப்பதற் கான அல்லது விசாரணை/ தண்டனையை எதிர்நோக்கி காத்திருக்கும் போது வைத் திருப்பதற்கான நிறுவனம்.

**REMEDIAL CLASS**
**குறைதீர் வகுப்பு**
சில வித குறைபாட்டை களைய சிறப்புதவி தேவைப் படும் மாணவர்களுக்கான சிறு வகுப்பு.

**REMEMBERERING**
**நினைவு கூர்தல் /**
**நினைவிற் கொள்ளல்**
ஒரு முந்திய அனுபவத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் / திரும்ப செய்யும் செயல்.

**REMOTE ASSOCIATIONS TEST**
**தொலை இணைப்பு சோதனை**
ஒரு தூண்டல் சொல்லுக்கு,

குறைந்த படைப்புத்தன்மை உள்ளவர்களைவிட அதிக படைப்புத்தன்மை உள்ளவர்கள், அதிக இணைப்பு களை உருவாக்குவார்கள் என கருதும் படைப்புத்திறன் சோதனை.

**RENTAL LIBRARY**
**வாடகை நூலகம்**
நூல்கள் இரவல்தர ஒரு கட்டணம் வசூலிக்கும் நூலகம்.

**REPERTOIRE ASSESSMENT**
**அனைத்துதிறன் மதிப்பீடு**
ஒரு மாணவர் ஒரு படிப்பை தொடங்குமுன் அவரது திறன்கள் மற்றும் அனுபவத்தின் விதங்கள் மற்றும் அளவை மதிப்பிடல்.

**REPORT CARD**
**அறிக்கை அட்டை**
மாணவரின் செயல்முறை, முன்னேற்றம், மனப்பான்மை முதலியவை பற்றி அவரது பெற்றோர் அல்லது காப்பாளருக்கு பள்ளியிலிருந்து சீரான கால அளவில் முறையாக அனுப்பப் படும் அறிக்கை.

**REPORTING BY RESPONSIBILITY**
**பொறுப்பான அறிக்கை**
உயர்பதவி / பொறுப்பில் உள்ளவர்களுக்கு அவர்கள் பணியாற்ற தேவையான தகவல் கிடைக்கும் தேவையற்ற தகவல்களால் அவர்கள் நிரப்பப் படுவதில்லை என்பதை உறுதிப் படுத்தல்.

**REPRESENTATIONAL MEDIATION PROCESS**
**பகராண்மை இணக்க நிகழ்முறை**
ஒரு நடுநிலை தூண்டல், ஒரு தூண்டலுக்கும் துலங்களுக்கும் இடையில் இணக்கப்படுத்தும் முறையைக் குறிக்கிறது.

**REPRESSION**
**உள்ளழுத்தல்**
வலிதரும் வருத்தம் தரும் உணர்வு மனத்தின் தூண்டல் களையும் ஆசைகளையும் உணர் வற்ற மனத்துக்குள் அழுத்தி தள்ளிவிடல்.

**REQUIREMENTS**
**தேவைப்படுபவை**
ஒரு பட்டம் பெற ஒரு மாணவர் அடைய தேவையான சிறப்புகளின் வகைகளும் எண் களும். ஒரு படிப்பு / திட்டம்/ வேலையில் நுழைய தேவைப் படும் முன்தேவைகள்.

**RESEARCH&DEVELOPMENT (R&D)**
**ஆய்வும் வளர்ச்சியும்**
புதிய உற்பத்திகள் மற்றும உற்பத்தி முறைகளின் வளர்ச்சி தொடர்பான தொழில்நுட்ப மற்றும் பயன்பாட்டு அறிவியல் நடவடிக்கை.

RESEARCH GRANT
**ஆய்வுத் தொகை / ஆய்வு மானியம்**
குறிப்பிட்ட தலைப்பில் ஆய்வு செய்வதற்காக ஒரு கல்விஆய்வு நிறுவனம் வழங்கும் உதவித் தொகை.

RESEARCH LITERATURE
**ஆய்வு இலக்கியம்**
ஆய்வு குறித்த வெளியிடப் பட்ட வெளியிடப்படாத இலக் கியங்களைக் குறிக்கிறது.

RESEARCH SEMINAR
**ஆய்வுக் கருத்தரங்கு**
ஒரு ஆய்வின் தேவைக்காக நடத்தப்படும் கருத்தரங்கு.

RESEARCH SUPERVISOR
**ஆய்வு மேற்பார்வையாளர்**
கல்வி நிலைய / கல்லூரி / பல்கலை பணியாளரில் மூத்த உறுப்பினர் - இளம் உறுப்பினர் களின் குறிப்பாக ஆய்வு மாணவர் களின் ஆய்வை வழிநடத்தவும் அதன்மேல் கருத்துக் கூறவும் பொறுப்புடையவர்.

RESIDENTIAL INSTITUTION
**தங்கிட நிறுவனம்**
தன் பணியாளருக்கு / மாணவர்களுக்கு இருப்பிடம் வழங்கும் பள்ளி / கல்லூரி மையம்.

RESIDENT STUDENT
**தங்கிட மாணவர்**
தன் கல்லூரி / பல்கலை வழங்கும் தங்கிடத்தில் தங்கி இருந்து படிக்கும் முழுநேர கல்லூரி பல்கலை மாணவர்.

RESISTANCE
**எதிர்ப்பு, தடை**
பதற்றம் நிரம்பிய அனுபவங் களை நினைவுகூற ஒருவரால் முடியாமை அல்லது அதில் அவருக்கு விருப்பமின்மை.

RESOURCE
**மூலப்பொருள்**
மாணவருக்கு தூண்டு தலாகும் ஆசிரியருக்கு துணைப் பொருளாகும் ஆய்வுப் பொருள் எதுவும். இதில் அச்சுநூல், ஒளி ஒலி சாதனங்கள், கண்காட்சி பொருள்கள், ஒரு பகுதியில் உள்ள சான்று மாதிரிகள் முதலியன அடங்கும்.

RESOURCE PERSON
**கருத்துவள ஆள் / கருத்தாளர்**
ஒரு பாடம் எப்படி கற்பிக்கப் பட வேண்டும் என்பதை அறிவுறுத்தவும் கற்பித்தலுக்கு உதவக்கூடிய பொருள்களை வழங்கவும் பொறுப்புடைய ஆசிரியர்

RETROACTIVE INHIBITON
**பின்நோக்க தடை**
இரண்டாம் பணியை கற்கும் போது முதல் பணி நினைவுக்கு கொணர்வதால் உண்டாகும் தடையைக் குறிக்கிறது.

REVERSE DISCRIMIANTION
**எதிர்த்திசை பாகுபாடு**
சிறுபான்மை இனத்தவரை காக்க போடப்பட்ட சட்டத்தின் விளைவாக பெரும்பான்மை இனத்தவர்மீது காட்டப்படும் பாகுபாட்டைக் குறிக்கிறது.

REVERSABILITY
**திசைமாற்றும் திறன்**
ஒரு சிக்கலின் அனைத்துக் கூறுகளிலும் கவனம் செலுத்து வதன் மூலம் அவதானங்களை எதிர்மாறாக்க முடியும் திறன்.

REVIEW ITEM
**மீள்நோக்கு அம்சம்**
நிரல்படுத்திய போதனையில் மீள் பார்வைக்கான பொருளை வழங்கும் சட்ட(க)த்தைக் குறிக்கிறது.

REWARDS
**வெகுமதி**
வெற்றிகரமான படிப்பை முடிக்கும் தனியருக்கு கிடைக்கும் பயன்களை குறிக்கிறது.

RIGIDITY
**இறுக்கம்**
ஒரு பணி / திறனில் இருந்து இன்னொன்றுக்கு மாறிக் கொள் வதில் ஒருவருக்குள்ள தடையைக் குறிக்கிறது.

RIGIDITY / FLEXIBILITY
**இறுக்கம் இணக்கம்**
குறிப்பிட்ட பணிக்காக ஒருவர் தேர்ந்துகொண்டுள்ள முடிவை மாற்றிக் கொள்ள / திறனாய ஒருவருக்குள்ள ஆயத்த நிலையின் அளவைக் குறிக்கிறது.

RISK ANALYSIS
**இடர் ஆய்வு**
நிகழ் தகவுகளை ஆய்வது தொடர்பான கணித உத்தி. இடர்களை கணிப்பதும் முன் கணிப்புகள் எந்த அளவுக்கு தவறாகிப் போய்விட முடியும் அதன் நட்டம் எவ்வளவு என்பதை மதிப்பிடுவதுமே இதன் நோக்கம்.

ROCKEFELLER FOUNDATION
**ராக்பெல்லர் நிறுவனம்**
1913இல் நிறுவப்பட்டது. கல்வி-கலை வளர்ச்சியை ஊக்கு விப்பது உட்பட்ட கொடைச் செயல்களை செய்து வருகிறது.

ROLE CONFLICT
**பாத்திர முரண்**
ஒன்றுக்கொன்று முரண் படும் பகையான இரு பாத்திரங் களை ஒருவர் ஆற்றும் படி எதிர் பார்க்கப்படும் ஒரு நிலைமை.

ROLE OF THE TEACHER
**ஆசிரியரின் பாத்திரம்**
ஆசிரியர் சமூகத்திடமிருந்து எதிர் பார்க்கப்படும் பொதுவான நடத்தை.

ROLE PLAYING
**பாத்திரமாற்றல்**
ஒருசிக்கல் நிலைமையை

பங்கேற்போராய் நடிப்பதன்மூலம் தீர்க்கும் மாணவர்களின் உத்தி.

**ROLE SET**
**பாத்திர தொகுப்பு**
சமூக அமைப்பில் குறிப்பிட்ட இடத்தை வகிப்பதால் மக்கள் ஏற்கும் பாத்திரங்களின் உறவுகளின் வலைப்பின்னலை தொகுப்பைக் குறிக்கிறது.

**ROLLING PLAN**
**புரள் திட்டம்**
சீராக மறு ஆய்வுக்குட்படுத்தப்படும் ஒவ்வொரு மறு ஆய்விலும் மீண்டும் அதே மூலத்திட்டத்தை - அதே கால அளவில் முடிப்பதற்கு முன் எடுக்கும் நீண்ட காலத்திட்டம்.

**ROTARY GANG**
**சுழல் திரள்**
சிலர் பயிற்சி முடித்து போய் பிறர் பயிற்சி பெற வருவதால் உறுப்பினர்கள் மாறினாலும் எண்ணிக்கை மாறாத பயில்வோர் குழுவைக் குறிக்கிறது.

**RUBRIC**
**தலைப்பு**
முதன்மைத் தேவைகளை வரையறுத்து ஒரு தேர்வுத் தாளினால் தரப்படும் முன்னுரைகள். அல்லது ஒரு அச்சு பாடத்தின் தலைப்புரை.

# S

**SADISM**
**பிறர் துன்பத்தில் மகிழ்தல்**
இன்னொருவரை துன்பத்துக்கு அவமானத்துக்கு உள்ளாக்குவதில் மனநிறைவு பெறுவதைக் குறிக்கிறது.

**SAHITYA ACADEMY**
**இந்தியாவின் தேசிய இலக்கியக் கழகம்.**

**SAMPLE**
**வகை மாதிரி**
மொத்த மக்களைப் பற்றிய பொதுக்கருத்துக்கு வரும் நோக்கில் அவர்களில் ஆய்வுக்காக தேர்ந்து எடுக்கும் ஒரு குழு.

**SAMPLE STATISTICS**
**புள்ளியியல் வகை மாதிரி**
வகை மாதிரியின் ஒரு பண்பை குறிக்கும் மதிப்பு.

**SAMPLE SURVEY**
**மாதிரி அளவாய்வு**
மொத்த மக்களின் ஒரு பிரதிக் குழுவை ஆய்வதன் அடிப்படையிலான கல்வியியல் அளவாய்வைக் குறிக்கிறது.

**SAMPLING**
**மாதிரி ஆய்வு**
ஆய்வுக்கான ஒரு கூட்டத்திலிருந்து மாதிரிக்கான ஒரு பகுதியைத் தேரும் பொதுவான நிகழ்முறையைக் குறிக்கிறது.

SANCION
**தடை**
நடத்தையின் குறிப்பிட்ட வடிவங்களை ஊக்கங்கெடுக்கும் நோக்கமுள்ள தண்டனையைக் குறிக்கிறது

SATISFIER
**நிறைவு தரு பொருள்**
தேவைகளை நிறைவு செய்யும் / மன உந்துதல்களை நிறைவு செய்யும் எந்த ஒரு அனுபவம், சூழ்நிலை அல்லது தூண்டுதலையும் குறிக்கிறது.

SCALING
**அளவிடுதல்**
தேர்வு மதிப்பெண்களை அளவிடலைக் குறிக்கிறது. இதன் அடிப்படை விதி தொடர்புடைய மாணவர் அனைவருக்கும் பொதுத் தேர்வு நடத்தப்பட்டு அதன் அளவுகோலின்படி ஒவ்வொருவரின் நிறை வேற்றமும் ஒப்பிடப்படுகிறது.

SCAPEGOATING
**பலிகடாஆக்கல்**
ஒரு தற்காப்பு நடவடிக்கை. இதில் தவறு/ குற்றம் தம் தரப்பின்மீது வராது தவிர்க்க சில மனிதர்கள் குழுக்கள் மேல் சுமத்தப்படுகிறது.

SCENARIO
**பின்னணி**
ஒரு விளையாட்டு / பகர்ப்புக்கு தேவையான பின்புல தகவல்களை குறிக்கிறது.

SCHEDULING
**திட்டமிடல்**
பள்ளி / கல்லூரிகள் முதலியவற்றில் கற்பித்தல் நேரம் முதலிய அட்டவணைகளை திட்டமிடும் ஒழுங்கமைக்கும் நடைமுறை.

SCHIZOPHERNIA
**உளப்பிளவு, சிதைவு**
யதார்த்தத்திலிருந்து ஒதுங்கல், திரிந்துபோன உணர்ச்சிகளும் பேச்சும், மருட்சிகள், கொடுமை குறித்த அச்சம், அளவு கடந்த செயலின்மை ஆகிய ஒருவித மனநோய்.

SCHOLARSHIP
**உதவித்தொகை**
ஒரு கல்வி சாதனத்துக்காக பொருள்வகையில் மாணவருக்கு அளிக்கப்படும்அன்பளிப்பு.

SCHOLARSHIP EXAMINATION
**உதவித்தொகை தேர்வு**
உதவித்தொகை பெறுவதற்காக, அளிப்பதற்காக நடத்தப்படும் போட்டித் தேர்வைக் குறிக்கிறது.

SCHOOL
**பள்ளி**
18-19 வயது வரைகல்வி வழங்கும் எந்த ஒரு நிறுவனமும்.

SCHOOL ADJUSTMENT DISTURBANCE
**பள்ளிக்கு தகவமையும் சிரமம்**
பள்ளி வாழ்க்கைக்கு தக

வமையும் சிரமத்தால் ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்பு.

**SCHOOL ASSESSMENT**
**பள்ளி மதிப்பீடு**
பள்ளி மாணவர்களின் படிப்பையும் திறமையையும் அவர்களின் ஆசிரியர்களே மதிப்பிடுவதைக் குறிக்கிறது.

**SCHOOL AUDIT**
**பள்ளித் தணிக்கை**
பள்ளி பதிவேடுகளையும் கணக்கு களையும் சரிபார்க்கும் நடைமுறை.

**SCHOOL BOYCOTT**
**பள்ளிப் புறக்கணிப்பு**
பெற்றோர் தம் பிள்ளைகளை பள்ளிக்கனுப்ப மறுத்தல். அல்லது பிள்ளைகளே பள்ளி செல்ல மறுத்தல்.

**SCHOOL BROADCASTING**
**பள்ளி ஒளி,ஒலிபரப்பு**
பள்ளிக்காக குறிப்பாக திட்டமிட்டு பரப்பப்படும் ஒலி/ஒளிபரப்பைக் குறிக்கிறது.

**SCHOOL COLOURS**
**பள்ளி வண்ணம்**
பள்ளிச் சீருடை மற்றும் பொருள்களில் பயன்படுத்தும் சின்னங்களை குறிக்கிறது. ஒரே மாதிரியான தோற்றத்தையும் கூட்டுணர்வையும் தோற்றுவிக்க.

**SCHOOL EXPERIENCE**
**பள்ளி அனுபவம்**
குறுகிய காலத்துக்கோ குறிப்பான நோக்கத்துக்கோ ஆசிரிய மாணவர்கள் பள்ளி களுக்கு வருகை புரிவதைக் குறிக்கிறது.

**SCHOOL HEALTH SERVICE**
**பள்ளி நலப்பணி**
பொதுப் பள்ளிக்குழந்தைகளுக்கு நலத்துறை அலுவலர்கள் இலவசமாக வழங்கும் மருத்துவ சோதனைகளையும் பல் சோதனையையும் குறிக்கிறது.

**SCHOOLING**
**கல்வி**
ஆசிரியரும் கருவிகளும் உடைய நிறுவனத்தில் தரப்படும் பெறப்படும் கல்வியைக் குறிக்கிறது.

**SCHOOL MEDICAL OFFICER**
**பள்ளி மருத்துவஅதிகாரி**
பள்ளி நலப்பணி அமர்த்தும் ஒருவர்.

**SCHOOL NEWSPAPER**
**பள்ளி செய்தி ஏடு**
பெரிதும் பள்ளி மாணவரால் மாணவர்களுக்காக ஆக்கப்பட்டு வெளியிடப்படும் செய்தித்தாள் / பருவ ஏடு.

**SCHOOL OF EDUCATION**
**கல்வி இயல்பள்ளி**
ஆசிரியப் பயிற்சி / கல்வி வழங்கும் கல்லூரி / பள்ளி.

**SCHOOL OF THOUGHT**
**தத்துவப் பள்ளி, சிந்தனைப் பள்ளி**
கல்வியாளர் குழுவின் குறிப்பிட்ட நிலைபாட்டை குறிக்கிறது.

**SCHOOL PHOBIA OR SCHOOL SICKNESS**
**பள்ளி அச்சம் / பள்ளி நோய்**
பள்ளிச் சூழலின் சிலபல அம்சங்கள் பற்றிய நடுக்கம். குறிப்பாக வீட்டிலிருந்து பெற்றோரிடம்இருந்து பிரிந்திருப்பதில் ஏற்படும் நடுக்கம்.

**SCHOOL REFUSAL**
**பள்ளி மறுப்பு, பள்ளி வெறுப்பு**
முடிந்தபோதெல்லாம் குழந்தை பள்ளியை தவிர்ப்பதற்கு இட்டுச் செல்லும் உணர்ச்சித் தொல்லை.

**SCHOOL SHOP / STORE**
**பள்ளி பண்டகம்**
உயர்நிலைப் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு தேவையான பொருள்களை விற்கும் கடை.

**SCHOOL TECHNOLOGY**
**பள்ளித் தொழில்நுட்பம்**
பள்ளி பாடத்திட்டத்தின் பகுதியாக உருவாக்கப்பட்டனவும் மரபு கல்வியல்- பாடத் திட்டத்தைவிட அதிக படைப்புத் திறன், அமைப்பாக்கம் மற்றும் சிக்கல்தீர்க்கும் திறன் உள்ளனவுமான தொழில்நுட்ப செயல் பாடுகள்.

**SCIENCE**
**அறிவியல்**
கவனமுள்ள அவதானம், அளவீடு, பரிசோதனையால் உருவாக்கப்படும் முறைப்படுத்திய அறிவு ஆய்வு. தான் ஆயும் நிகழ்வை விளக்கப் பொதுவான விதிகள் / கோட்பாடுகளை உருவாக்க முயல்கிறது.

**SCREEN EDUCATION**
**திரைக்கல்வி**
திரைப்பட, தொலைக்காட்சிப் பட தயாரிப்பு மற்றும் நிகழ் முறைகள் பற்ற்ய கல்வி.

**SCRIBLING STAGE**
**கிறுக்கும் கட்டம்**
குழந்தை படம் வரைவதில் முதல்கட்ட வளர்ச்சி. (2-3 வயது).

**SEARCH COMMITTEE**
**தேடல் குழு**
உயர் பதவிக்கு வேட்பர்களை தேட அமர்த்தப்பட்ட குழு.

**SECONDARY EDUCATION**
**இடைநிலைக்கல்வி, உயர்நிலைப்பள்ளிக்கல்வி**
தொடக்க நிலை கல்வியை அடுத்து வழங்கப்படும் கல்வி.

**SECONDARY GROUP**
**இரண்டாம் நிலைகுழு**
நெருக்கமான உறவற்ற- நேரடித் தொடர்பு குறைவான - முதல்நிலைக் குழுவுடன் ஒப்பிடும்போது குறுகிய காலமே

நிலவும் பெரிய குழுவைக் குறிக் கிறது.

**SECRETARIAL ACCOUNTING**
**செயலாண்மை கணக்கு வைப்பு**

செயலாண்மை வேலையில் தேவைப்படும் கணக்கு வைப்பு படிப்பு.

**SECULAR TREND**
**மதச்சார்பற்ற போக்கு**

**SECURITY**
**பாதுகாப்பு**

பற்று, தகுதி, நட்பு, வருவாய் முதலிய இழப்புக்கு எதிராக பாதுகாப்பாய் உணரும் தேவை.

**SEED FUNDING**
**தொடக்க நிதி உதவி**

ஒரு திட்டம் / நிறுவனத்தின் தொடக்க நிலைகளில் ஆதரவாக வழங்கப்படும் சிறப்பு நிதிகளைக் குறிக்கிறது.

**SEGREGATED CONJUGAL ROLE**
**பிரிக்கப்பட்ட குடும்ப பாத்திரம்**

கணவனுக்கும் மனைவிக் கும் தனித் தனியான வெவ்வேறு கடமைகளும் பொறுப்புகளும் என பிரிக்கப்பட்ட குடும்ப உறவுமுறை.

**SEGREGATED SCHOOL**
**பிரிக்கப்பட்ட பள்ளி**

ஒரு பால் மாணவர்களை மட்டுமே ஏற்கும் பள்ளியைக் குறிக்கிறது.

**SEGREGATION**
**பிரிவினை**

இன, சமூக, அரசியல், மத பிற குழுக்களை தனித்த வகுப்பு களாக பிரித்தல்.

**SELF**
**தான்**

ஆளுமை அமைப்பின் மைய மான அகம் என்பதற்கிணை யான கருத்து. சில நேரங்களில் தனிமனிதனின் குறுகிய பொரு ளிலும் பயன்படுகிறது.

**SELF ABSORBTION**
**தன்னில் மூழ்கல்**

புற உலகிலிருந்து முற்றிலும் உள் வாங்கி கருத்துகளிலும் சிக்கல்களிலும் ஆழ்தல்.

**SELF ACTUALISATION**
**தன் நிறைவேற்றம்**

தன் உள்ளாற்றலை நிறைவு செய்யும் விருப்பத்தைக் குறிக் கிறது.

**SELF ASSESSMENT QUESTIONS**
**தன்மதிப்பீட்டு கேள்விகள்**

ஒரு படிப்பில் தன் முன்னேற் றத்தை மாணவர் தானே மதிப்பிட வசதியாக அமைத்த கேள்விகள்.

**SELF CONCEPT**
**தற்கருத்து**

ஒருவர்தன்னைப் பற்றி கொண்டுள்ள சித்திரம் / பிம் பத்தை குறிக்கிறது.

**SELF DIRECTED LEARNING**
**தன் தேர்வு படிப்பு**
படிப்பவர் தானே தேர்ந்தெடுத்த படிப்பு.

**SELF DISCLOSURE**
**தன் வெளிக்காட்டல்**
தன் ஆளுமை மற்றும் பின்னணி பற்றிய தகவல்களை பிறருக்கு வழங்க ஒருப்படல்.

**SELF FULFILLING PROPHECY**
**அப்படியே பலிக்கும் வாக்கு**
நாம் எதிர்பார்க்கும் அதே விதத்தில் நிகழும் ஒரு நிகழ்வைக் குறிக்கிறது.

**SELF INSTRUCTIONED DEVICE**
**தானே புரியும் கருவி**
ஆசிரியரின் துணை இன்றியே மாணவர் பயன்படுத்த முடியும் பாடசாதனங்களைக் குறிக்கிறது.

**SELF ORIENTED**
**தன் (லை) முனைப்புள்ள**
தன் நலன்களை பிறர் நலன்களைவிட முதன்மையாக முன்வைப்பவர்.

**SELF STUDY MATERIALS**
**தானே படிக்கும் பாடப் பொருள்கள்**
ஆசிரியர் துணை இன்றி மாணவரே பயன்படுத்தும் முறையில் உருவாக்கப்பட்ட பாடங்கள்.

**SEMANTICS**
**சொற்பொருளியல்**
சொற்களின் பொருள் பற்றிய அறிவியல்.

**SEMINAR**
**கருத்தரங்கு**
ஒரு குறிப்பிட்ட தலைப்பில் அறிஞர்கள் கட்டுரையளித்து விவாதித்தல்.

**SEMINAR ROOM**
**கருத்தரங்கு அறை**
கருத்தரங்குக்காக வழங்கப் படும் அறைகள்.

**SEMIOTIC FUCNTION**
**குறியியல் செயல்பாடு**
ஒன்றுக்கு இன்னொன்றை பொருளாக்கும் மனச் செயல் பாட்டைக் குறிக்கிறது.

**SENATE**
**பேரவை**
ஒரு பல்கலை / கல்லூரியின் உச்ச கல்வியியல் அதிகாரம்.

**SENSATION**
**புலன் உணர்ச்சி**
நிறம், சுவை போன்ற தூண்டலை அடிப்படை நிலையில் அறிந்து கொள்வதை குறிக்கிறது.

**SENSATIONALISM**
**உணர்ச்சித்தூண்டல் தன்மை**
புலன் உணர்ச்சிகளை மிகுதியாக அனுபவிப்பதிலிருந்து எல்லா அறிவும் எழுகிறது என்னும் மெய்யியல் கருத்து.

**SENSE TRAINING**
**புலன் பயிற்சி**
கண் - காது - தொடுகை

முதலான புலன்களின் வளர்ச்சி தொடர்பான கல்வி மற்றும் பயிற்சியைக் குறிக்கிறது.

**SENSITIVITY**
**நுண்ணுணர்வு**
தன் நடத்தைக்கு பிறரின் எதிர் வினையை துல்லியமாக உணரும் திறமையைக் குறிக் கிறது.

**SENSITIVITY TRAINING**
**நுண்ணுணர்வுப் பயிற்சி**
மற்றவர்கள் உங்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதைக் கண்டு கொள்ளும் திறனை வளர்க்கும் குழுப் பயிற்சி.

**SENSORY AREA**
**புலப்பகுதி**
பெருமூளை புறணி பகுதி. பக்க கதுப்புகளில் அமைந்து உள்ளது. உடல் புலன் உணர்ச்சியை அறிவதுடன் தொடர்புடையது.

**SENSORY CAPACITY**
**புலன் ஏற்பு திறன்**
புலன்கள் வழி செய்தி ஏற்கும் திறன்/ ஆற்றல்.

**SENT DOWN OR EXPELLED**
**வெளியேற்றப்பட்டவர்**
கல்வித் தோல்விக்காகவோ ஒழுக்கப் பிழைக்காகவோ பல்கலையில் இருந்து வெளியேற்றப் பட்ட மாணவர்.

**SENTENCE COMPLETION TEST**
**வாக்கியமுடிப்பு சோதனை**
நீட்டிப்பு உத்திகளின் அடிப்படையிலான உளவியல் சோதனை. முடிக்கப்படாத வாக்கியங்கள் ஒரு தூண்டலாக செயல்படுவதாக இது கொள்கிறது. அவற்றை முடிக்கச் செய்தால் அதில் முடித்தவரின் நிலைபாடுகள், மனப்போக்குகள், தேவைகள் வெளிப்படும் என்பது.

**SENTIMENT**
**பற்று**
ஆள்/ பொருள் தொடர்பான நிலையான ஆர்வங்களையும் உணர்ச்சிகளையும் குறிக்கிறது. எ.கா: வீட்டின் மேல் பற்று.

**SEPARATISM**
**பிரிவினை வாதம்**
கல்வி முதலியவற்றில் இனப் பிரிவினை - பிரித்துவைப்பு கோட்பாடு.

**SEQUENTIAL APPROACH**
**வரிசைமுறை அணுகல்**
இதில் பாடப்பொருள்கள் ஒரு திட்டமிட்ட-தர்க்கரீதி வரிசையில் அமைக்கப்படுகிறது.

**SERIAL LEARNING**
**தொடர்ச்சி கற்றல்**
தொடர்ச்சியான துலங்கல்களை சரியான வரிசையில் செய்ய கற்றல்.

**SERIAL LITERATURE / PUBLICATION**
**தொடர் இலக்கியம் / வெளியீடு**
சீரான கால இடைவெளியில்

வெளியிடும் ஏடு, ஆய்விதழ் ஆண்டு மலர் முதலியவற்றைக் குறிக்கிறது.

**SERIATION**
**வரிசைப்படுத்தல்**
ஒழுங்குபடுத்தப்படாத தகவல்களை ஒழுங்கான புள்ளியியல் வடிவத்துக்கு கொணரும் நிகழ்முறை.

**SETTING**
**கணமாக்கல்**
மாணவர்களைக் குறிப்பிட்ட பாடங்களில் அவர்களின் திறமைக்கேற்ப குறிப்பிட்ட வயது உள்ள குழுக்களாகப் பிரித்தல்.

**SEVERELY HANDCAPED**
**கடும் ஊனர்**
மறுவாழ்வுப் பணிகள் தேவைப்படும் நிலையில் உள்ள கடுமையான ஊனமுற்றோர். சாதாரண ஊனமுள்ளோருக்கு வழமையான சிறப்புக் கல்வித் திட்டங்களே போதுமாயிருக்கும்.

**SEX EDUCATION**
**பால்கல்வி**
பாலியல் நடைமுறைகள் பற்றிய கல்வி. அல்லது பாலியல் உந்தல்கள் மற்றும் நடத்தை பற்றிய புரிதலை வளர்ப்பதற்கான கல்வி.

**SHORTAGE SUBJECT**
**பற்றாக்குறை பாடம்**
எந்த பாடம் / துறையில் ஆசிரியர்கள் போதுமான அளவில் இல்லையோ அந்த பாடம்.

**SHORT TERM MEMORY (STM)**
**குறுகிய கால நினைவு**
சிலநிமிடங்களுக்கே நினைவில் நிற்கும் நினைவு செயல்பாடு. இதன் நிலைத்து நிற்கும் திறன் மிகவும் வரம்புடையது.

**SHORTDOWN GAME**
**வலுக்காட்டல் ஆட்டம்**
பங்கேற்போர் ஒருவர் மற்றவரின் செயலை கணக்கில் எடுக்காமல் ஒரே நேரத்தில் செயல்படும் விளையாட்டு.

**SIGNIFICANT OTHER**
**மதிப்புக்குரிய மற்றவர்**
முக்கியமானவர் என்றும் தன்னைப் பற்றிய கருத்தில் தாக்கம் செலுத்துபவர் என்றும் தான் கருதும் ஒருவர். இது பெற்றோராகவோ ஆசிரியர் அல்லது நண்பர் அல்லது யாராகவும் இருக்கலாம்.

**SIGN LEARNING**
**குறியீடு கற்றல்**
ஒருவரை அவரின் அசைவுகளை அல்லது நிகழ்ச்சிகளை வைத்து பார்ப்பதைவிட குறிகளுக்கிடையிலான உறவுகள், அனைவருக்கும் பொருள் என்ன என பார்க்கும் கற்றல் கோட்பாடு.

**SIMULATION GAME**
**பகர்ப்பாட்டம்**
விளையாட்டின் போட்டித்

தன்மைகளை ஒரு பகர்ப்பின் நிச வாழ்க்கைப் பதிலிகளுடன் இணைக்கும் கற்பித்தல் செயல் பாடு.

**SINISTRALITY**
**இடதுகை பழக்கம்**
எழுதல் முதலான தசை இயக்க வேலைகளில் இடது கையைப் பயன்படுத்த முன்னு ரிமை தரல்.

**SIT in**
**உள்ளமர்வு**
போராட்ட வடிவம். பெரும் எண்ணிக்கையில் ஆட்கள் கட்டி டங்களுக்குள் நிரம்பி இடத்தை அடைத்துக் கொள்ளுதல். அவற்றின் வழக்கமான இயக் கத்தை இயலாததாக்குவதே நோக்கம்.

**SKILL**
**திறமை**
முறைப்படியான ஒருங்கி ணைந்த உடன் மன செயல் வடிவம். ஏற்பு மற்றும் செயல் படுத்து நடைமுறைகள் கொண்டது. திறன்கள் காட்சி, தசை இயக்க, உடல், மன, சமூக எனப் பலவாய் இருக்கலாம்.

**SKILLED MAN (OR WORKER)**
**திறமைசாலி / தொழிலாளி**
ஒரு தொழில் வேலையில் கைத்திறம் மிக்கவர். குறைந்த வழிகாட்டல் மற்றும் மேற்பார் வையில், அடிப்படையில் ஒரே விதமான வேலையாய் இராத வேலையில் விரிவான திறமை களையும் செய்முறை அறிவையும் பயன்படுத்த முடிகிறவர்.

**SKINNER BOX**
**ஸ்கின்னர் பெட்டி**
விலங்கு நடத்தை மற்றும் கற்றல் ஆய்வுகளில் பயன்படும் சோதனைப் பெட்டி.

**SLAVE UNIT**
**ஊழிய அலகு**
அமைப்பின் தலைமை அலகால் செயல் கட்டுப்படுத்தப் படும் பகுதி.

**SLIDE SEQUENCE**
**படவில்லை தொடர்**
ஒரு தொடர்ச்சியான காட்சி வழி செய்தியை அடுத்தடுத்து காட்டுவதற்காக அமைக்கப்பட்ட படவில்லை தொடர். இதனுடன் பேச்சு விளக்கம் சேர்ந்திருக்க லாம். சேராமலும் இருக்கலாம்.

**SLOW MOTION ANALYSIS**
**மெது அசைவு ஆய்வு**
குழந்தை வளர்ச்சி படிப்பிலும் படமாக்கிய தகவலை ஆய்வதி லும் மெது ஓட்ட திரைப்படத்தை பயன்படுத்தல்.

**SNELLEN CHART**
**சினெல்லன் படம்**
எழுத்து வரிசைகள் தர வரிசையான அளவில் அச்சிட்ட அட்டை - தூரப்பார்வை சோ தனைக்காக உருவாக்கியது.

**SOCIAL ACCEPTABILITY**
**சமுதாய ஏற்பு**
ஒரு குழந்தை / ஆள் எந்த அளவுக்கு அவரது சமுதாயத்தால் ஏற்கப்படுகிறார் என்பது.

**SOCIAL ACCOUNTING**
**சமூகக் கணக்கெடுப்பு**
திட்டங்களின் பொருளியல் மதிப்பீடு. அவற்றின் சமூக விலையையும் கணக்கில் எடுத்தல்.

**SOCIAL ACTION**
**சமூகச் செயல்பாடு**
பிறரின் செயல்பாட்டில் தாக்கம் ஏற்படுத்தும் கருத்துடைய நடத்தை.

**SOCIAL ADMINISTRATION**
**சமூக நிருவாகம்**
சமூகக் கொள்கை, அதன் இயல்பு வெவ்வேறு அரசியல் பொருளியல் சூழல்களில் அதன் நிர்வாகம் பற்றிய படிப்பு.

**SOCIAL ANTHROPOLOGY**
**சமூக மானுடவியல்**
சமூகம் மற்றும் சமுதாயங்களின் பண்பாடு பழக்கவழக்கம் நம்பிக்கை பற்றிய நடத்தை இயல்.

**SOCIAL AUDIT**
**சமூக தணிக்கை**
குழும தேச கொள்கைகள் சமூகத்தின் மேல் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய ஆய்வு.

**SOCIAL BEHAVIOR**
**சமூக நடத்தை**
அடுத்தவர் முன்னிலையில் தேவைப்படும் அதாவது சமுதாயத்தால் கட்டுப் படுத்தப்படும் அல்லது பிறர் மேல் தாக்கம் செலுத்த தே.. வப்படும் நடத்தை.

**SOCIAL CENTERED EDUCATION**
**சமூக மையக் கல்வி**
மாணவர்கள் வாழும் ‹ முதாயம் பற்றிய அவர்களின் புரிதலின் அடிஒற்றிய கல்வி.

**SOCIAL CLASS**
**சமூக வகுப்பு (வர்க்கம்)**
சமூகத்தில் மக்கள் ெ...ரு க்கும் தரம் தகுதி அடிட் யில் பிரிக்கப்படும் குழு (க...

**SOCIAL CLIMATE**
**சமூகச் சூழ்நிலை**
ஒரு சமுதாயத்தின் சூழலின் ஒட்டுமொத்த தன்மையை குறிக்கிறது.

**SOICAL DIALECTS**
**சமுதாய மொழிகள்**
குறிப்பிட்ட சமுதாய பின்னணியில் அதை சேர்ந்தவர்கள் பேசும் ஒரு மொழிக்குள்ளான பலவித பகுதி மொழிகள்.

**SOCIAL DISTANCE**
**சமூக இடைவெளி**
இரு ஆண்கள் அல்லது குழுக்களுக்கு இடையான நெருக்கத்தின் அளவு.

**SOCIAL EQALITARIANIMS**
**சமூக சமஉரிமை**
குறிப்பிட்ட சமூகக் குறிக்கோள்களுக்கு பொது வாய்ப்பு அளிக்கும் கல்லூரிகள் பல்கலைகளின் நடவடிக்கையை குறிக்கிறது.

**SOCIAL HISTORY**
**சமூக வரலாறு**
சமூக நிலைமைகள் மற்றும் வளர்ச்சி நிலைபாட்டில் இருந்தான வரலாற்று ஆய்வுகள்.

**SOICAL INSTITUTION**
**சமூக நிறுவனம்**
ஒப்பீட்டளவில் நிலையான பணிகளை சமூகத்தில் ஆற்ற உருவாக்கப்படும் அமைப்பைக் குறிக்கிறது. எ.கா: பள்ளி.

**SOCIAL INTELLIGENCE**
**சமூக அறிவு**
சமூக உறவுகளை கையாள்வதற்கும் சமூக சூழ்நிலைக்கு நலமான முறையில் ஒத்தியங்கலுக்கும் ஆன திறனைக் குறிக்கிறது.

**SOCIAL INTERACTION**
**சமூக இடைவினை**
ஒரு சமூகத்தை சேர்ந்த மக்கள் மற்றும் அமைப்புகளுக்கிடையிலான இடைவினை.

**SOCIAL INVESTMENT**
**சமூக முதலீடு**
பள்ளிகள், வீடுகள், மருத்துவமனைகள் போன்ற சமூகத் தேவைகள் தொடர்பான பொருளியல் உள்கட்டு மானத்தின் பகுதியான முதலீடு.

**SOCIALISM**
**சமூகஉடைமை**
பொருள் உற்பத்தி பங்கீடு போன்றவற்றின் சாதனங்களில் அரசு சமூக உடைமையின் பலவேறு வடிவங்கள்.

**SOCIALIZATION**
**சமூக மயமாதல்**
தன் குடும்பம் மற்றும் சமூகம் எதிர்பார்க்ம் பாத்திரங்களையும் நடத்தையையும் பயில்வதும் பிறருடன் நிறைவான உறவுகளை வளர்ப்பதும் ஆகும்.

**SOICAL LEARNING**
**சமூக கற்றல்**
சமூக மயமாகும் போக்கிலிருக்கும் அல்லது ஒரு சமூக சூழலில் வாழும் மனிதர் அடைந்துகொள்ளும் அவருக்கு தேவைப்படும் அறிவு திறன்கள்.

**SOCIALLY DISADVANTAGED OR SOCALLY HANDICAPPED**
**சமூக ரீதியில் பாதிக்கப்பட்டவர்**
பெரும்பாலான பிறருடன் ஒப்பிடும்போது பாதிப்பான சமூக நிலைமைகளுக்குள் இருக்க நேர்ந்துள்ளவரைக் குறிக்கிறது.

**SOCIAL PSYCHOLOGY**
**சமூக உளவியல்**
ஒரு மக்கள் பிறருடன் கொள்ளும் சமூக உறவுகளை ஆய்வுதன் மூலமாகவும் தனிஒருவரின் தனிப்பட்ட சமூக மயமாதலை ஆய்வதன் மூலமாகவும் சமுதாய நடத்தையை ஆயும் படிப்பு.

**SOCIAL PSYCHOLOGY OF EDUCATION**
**கல்வியின் சமூக உளவியல்**
சமூக உளவியலின் அறிவியல் முறையைப் பயன் படுத்தும் கல்வியியல் செய்திகள் மற்றும் அமைப்புகள் பற்றிய ஆய்வு.

**SOCIAL REARGUARD**
**சமூகத்தில் பிற்பட்டோர்**
போதுமான கல்வி சரியான சமூக நிலைமைகள் கிடைக்காததால் வளர்ச்சி பாதிக்கப்பட்ட வயது வந்தோரைக் குறிக்கிறது.

**SOCIAL REWARDS**
**சமூகக் கைம்மாறு**
ஒருவருக்கு கிட்டும் பொருள் வகையல்லா சமூகப் பயன்களை காட்டாக அந்தஸ்து, சமூக அங்கீகாரம் போன்றவற்றைக் குறிக்கிறது.

**SOCIAL SCIENCE**
**சமூக அறிவியல்**
மனித உறவுகளை விரிவான முறையான பாடத்திட்டங்கள் வழி பயிலும் அறிவியல் ஆய்வு. எ.கா: பொருளியல் உளவியல் சமூகவியல்.

**SOCIAL SECURITY**
**சமூகக் காப்பு**
வேலையற்றோர், ஊனமுற்றோர் முதியோர் போன்ற சமூகத்தில் பாதிக்கப்பட்டவர் களுக்கு பொருளுதவி அளிக்க அரசாங்கம் எடுக்கும் நட வடிக்கைகள்.

**SOCIAL SERVICE**
**சமூகச் சேவை**
சமூகத்தில் உள்ள தம்மை தாமே மேம்படுத்திக்கொள்ள இயலாதவர்களுக்கு பயன்படும் உதவிகள்.

**SOCIAL SKILLS**
**சமூகத் திறமைகள்**
சமுதாயத்தில் இயல்பான சமூக வாழ்வு நடத்த இன்றியமையாத திறமைகள்.

**SOCIAL STIMULI**
**சமூகத் தூண்டல்**
தம் இயல்பில் மூலத்தில் சமூகத் தன்மை கொண்ட தூண்டலைக் குறிக்கிறது.

**SOCIAL STUDIES**
**சமூக ஆய்வுகள்**
கல்வி பயிற்சி நிலையங்களில் பயன்படுத்த தேரப்பட்ட சமூக வியல் பகுதிகளைக் குறிக்கிறது.

**SOCIAL WORK**
**சமூகப் பணி**
தனிநபர், குழு, சமுதாயத்தின் தேவைகளுக்கு உதவவும் அவர்களின் நலனை உயர்த்தவும் சில செயல்பாடுகளையும் முறை

களையும் உள்ளடக்கிய பாடங் களைக் கொண்ட படிப்பு.

**SOCIO ECONOMIC STATUS (SES)**
**சமூகப் பொருளியல் தரம்**
குறிப்பிட்ட குழு /சமூகம் / பயன்பாட்டில் வாழும் ஒருவரின் தகுதியைக் குறிக்கிறது.

**SOCIO LINGUISTICS**
**சமூக மொழியியல்**
மொழியின் சமூகவியலை அல்லது மொழி பண்பாடு சமூக அமைப்பு இவற்றுக்கிடையிலான உறவுகளை ஆயும் துறை.

**SOCIOLOGY**
**சமூகவியல்**
சமூக நடத்தை, சமூகச் செயல்பாடு, சமூக அமைப்புகள், முறைகள் போன்றவற்றை ஆயும் இயல்.

**SOCIOLOGY OF KNOWLEDGE**
**அறிவின் சமூகவியல்**
அறிவை சமூகப் பயன்பாட்டு களத்தில் வைத்து பார்க்கும் வரலாற்றில் மனிதர்களின் தீவிர ஈடுபாட்டின் விளை பயன் என பார்க்கும் அறிவுக் கொள்கை.

**SOCIOTECHNICS**
**சமூக உத்திகள்**
சமூக மாற்றத்தை கொணர் வதற்கும் சமூக சிக்கல்களை களைவதற்கும் சமூக நிறுவனங் களை உருவாக்கவும் சமூக அறிவியல் அறிவையும் முறை களையும் பயன்படுத்துவதைக் குறிக்கிறது.

**SOCRATES**
**சாக்ரட்டீசு**
ஏதென்சில் பிறந்த கிரேக்க அறிஞர். இவரது சிந்தனையை இவர் மாணவராகிய பிளேட்டோ விவரித்துள்ளார். இவர் பார்வை கருத்து முதல் தன்மை கொண்டது.

**SOFTWARE**
**மென்பொருள்**
கணினி அதன் உத்திரவு களை தரும் வாயில்களான நிரல் கள், கட்டளைகள் முதலியவை. கல்வித் தொழில்நுட்பத்தில் இச்சொல் வேறுவித சாதனங் களைக் குறிக்க பயன்படுகிறது.

**SOIL MECHANICS**
**மண்திறனியல்**
குறிப்பிட்ட பயிர்களுக்கு குறிப்பிட்ட மண் தாக்குபிடிக்கு மா என ஆயும் கட்டிட (தொழில்) நுட்ப வியல் பிரிவு.

**SOIL SCIENCE**
**மண் இயல்**
மண்களின் உள்ளடக்கம் மற்றும் பயன்களை அறிவியல் ரீதியில் ஆய்தல்.

**SOLIPSISM**
**தன் உண்மைக் கொள்கை**
"நான் உறவு கொள்ள முடியும்,

ஒரே உணர்வுப் பொருள் நான் தான்" என்னும் நம்பிக்கையை குறிக்கிறது.

**SOPHOMORE SLUMP**
**காலப்போக்கிலான மெத்தனம்**

கல்லூரி / பல்கலையில் தம் இரண்டாம் ஆண்டு படிப்பு முயற்சிகளில் சில மாணவர்கள் தொய்யும் போக்கு. இக்கட்டத்தில் அவர்கள் சற்று பாதுகாப்பாக உணர்வதால் படிப்பு சாரா நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடுவதால் இந்நிலை.

**SORORITY**
**தோழிமை**

கல்லூரி / பல்கலை மாணவர்களின் தோழமை

**SPAN OF APREHENSION**
**புரிதல் அளவு**

ஒரு நேரத்தில் சரியாகபுரிந்து கொள்ள முடியும் விசயங்களின் அதிகபட்ச அளவு.

**SPAN OF CONTROL**
**கட்டுப்பாட்டு அளவு**

ஒரு நிர்வாகிக்கு கீழ் இருக்கும் அவர் நேராக பொறுப்பேற்க வேண்டிய ஊழியர் எண்ணிக்கை, குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருந்தால் அவரால் திறம்பட இயங்க முடியாது என்னும் மேலாண்மை கொள்கை.

**SPATIAL ABILITY**
**வெளியறி திறன், கனபரிமானம் காணும் திறன்**

தான் உட்பட ஒரு பொருளின் இடவெளி தன்மைகளை காணும் படிக்கு வெளியில் இருக்கும் பொருள்களின் இடையிலான வேறுபாடுகளையும் உறவுகளையும் புரிந்துகொள்ள ஒருவருக்குள்ள திறனைக் குறிக்கிறது.

**SPEARMAN, C.**
**சி. பியர்மேன்**

பிரிட்டிஷ் உளவியலாளர். 1904இல் நுண்ணறிவை அளத்தல் பற்றிய தன் புகழ்பெற்ற கட்டுரையில் காரணி அலசலின் விதிகளை அவர் தெளிவாக விரித்துரைத்தார். நுண்ணறிவின் இரு காரணி கொள்கை, ஜி. காரணி கருத்தாக்கம், ஸ்பியர்மேன் பிரவுன் சூத்திரம், ஸ்பியர்மன் தர இயைபு கெழு ஆகிய அவரது உருவாக்கங்கள் அவருக்கு வரலாற்று முக்கியம் சேர்க்கின்றன.

**SPECIALIST**
**வல்லுநர்**

குறிப்பான பாடம்/ஆய்வு செயல்பாட்டில் சிறப்பாக ஈடுபடுபவர்

**SPECIALIST TEACHER**
**சிறப்பு ஆசிரியர்**

குறிப்பிட்ட பாடம் பாடங்களை கற்பிக்க சிறப்பு தகுதி படைத்த ஆசிரியர்.

**SPECIALISATION**
**சிறப்புப் பயிற்சி**

குறிப்பிட்ட பாடத்தில் கூடுதல் அறிவை பெற அதில் மட்டும் ஆழமாக பயிலும் உயர்நிலைக் கல்வி நடைமுறை.

SPEECH THERAPY
**பேச்சு பண்டுவம்**
பேச்சுக் கோளாறுகள் உள்ள ஒருவரை சீர்படுத்தும் முறை.

SPEECH TRAINING
**பேச்சுப் பயிற்சி**
குழந்தைகள் தெளிவாகவும் சரியான உச்சரிப்புடனும் பேச உதவும் பயிற்சி.

SPEED TEST
**விரைவுச் சோதனை**
குறிப்பிட்ட நேரத்துக்குள் எவ்வளவு அதிகமான கேள்வி களுக்கு விடையளித்து உள்ளனர் என்பது மட்டுமே தீர்மான காரணியாய் உள்ள நுண்ணறிவு சோதனை வகை.

SPELLING AND READING TESTS (SAR)
**உச்சரிப்பு-வாசிப்பு சோதனைகள்**
படிப்பறிவை எளிய முறையில் மதிப்பிடுவதற்கான சோதனை.

SPORTS CENTER
**விளையாட்டு மையம்**
அறைக்குள், வெளியில் என பலவித விளையாட்டு நட வடிக்கைகளுக்கும் வாய்ப்பான இடத்தைக் குறிக்கிறது.

SPORTS SCHOLARSHIP
விளையாட்டுத் திறனுக்காக கல்வி உதவித்தொகை வழங்கப் படல்.

SPOT QUESTION
**குறித்த வினாக்கள்**
வரவிருக்கும் தேர்வில் கேட் கப்படுமென எதிர்பார்க்கப்படும் கேள்விகள். அல்லது கட்டுரை வடிவில் அல்லாமல் கறாரான பதிலை விரும்பும் வினாக்கள்.

STAFF TURN OVER
**பணியாளர் மாறுதல்**
பணி ஓய்வு, பணி உயர்வு, பணி விலகல், பணி நிறுத்தம் போன்றவற்றால் ஒரு பள்ளியின் ஆசிரிய பணியாளர்களில் பருவத் துக்கு பருவம் ஏற்படும் மாறுதல்.

STAMINA BUILDING
**வலுஏற்றல்**
தொழில்துறை பயிற்சிக்கு வந்தவர்களின் செயல்திறனை அனுபவம் பெற்ற தொழி லாளியின் விரைவின் தாங்கு திறனின் அளவுக்கு ஏற்றும் நடைமுறை.

STANDARD WORKS
**அடிப்படை நூல்கள்**
குறிப்பிட்ட பாடங்களில் அதி காரபூர்வ தகவல்கள் நிரம்பி யவை என ஏற்கப்பட்டு எப்போ தும் பயன்படுத்தப்படும் நூல்கள்.

STANDING ORDERS
**நிலையான விதிகள்**
ஒரு நிறுவனம் தன் கூட்டங் களில் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றி உருவாக்கிய கட்டளை தொகுப்பு. குறைந்த பட்ச எண்ணிக்கை, நடைமுறை

வரிசை, விவாத முறைகள், தீர்மானம் திருத்தம் முன்மொழியும் முறை, முடிப்பு முறை, பேச்சு நேர வரம்பு, வாக்கெடுப்பு முறை, கூட்டம் நடக்கும் நேர அளவு போன்றவை இதில் அடங்கும்.

**START UP COST**
**தொடக்க செலவு**
ஒரு திட்டம் இயங்க தொடங்கியபின் தேவைப்படும் வழக்கமான நடைமுறை செலவுகளுக்கும் மேல் அத்திட்டத்தை/ நிறுவனத்தை தொடங்கி இயங்கச் செய்வதற்கு தேவைப்படும் தொகை முதலியன.

**STATE AID**
**அரசு உதவி (அ) மாநில அரசு உதவி**
வட்டார கல்வி மாவட்டங்களுக்கு மாநிலம்/ அரசு வழங்கும் பொருள் உதவி.

**STATISTICS**
**புள்ளி இயல்**
மாதிரிகளில் இருந்து விவரங்களை அலசும் முறை, மேலும் அந்த மாதிரியைப் பற்றியோ அல்லது அதற்கு மூலமான இன்னும் பெரிய மக்கள் கூட்டம் பற்றியோ பயனுள்ள அறிவார்ந்த முடிவுகள், விளக்கங்கள், ஊகங்கள் முதலியவற்றை செய்யும் வகையில் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை.

**STATUS**
**தகுதி**
ஒரு சமூக குழுவின் சமுதாயத்தின் தகுதி வரிசையில் ஒருவரின் அல்லது ஒரு பொருளின் இடத்தை மதிப்பைக் குறிக்கிறது.

**STATUS ACCEPTING**
**தகுதி ஏற்றமைத்தல்**
சமூகத்தில் குழுவின் தன் இடத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனநிலை.

**STATUS ASPIRING**
**தகுதிக்கு ஏங்கல்**
தான் பிறந்த / தற்போது இருக்கும் தகுதியைவிட உயர்ந்த தகுதியை தன் சமூகத்தில் / குழுவில் அடையும் பேரார்வம்.

**STATUS DEPRIVATION**
**தகுதி இழப்பு**
ஒருவருக்கு முன்பிருந்த தகுதி குறைவதால் எடுக்கப்பட்டதால் அல்லது தடுக்கப்பட்டதால் விரும்பிய மதிப்பை மரியாதையை இழந்த நிலை.

**STATUS DISCREPANCY**
**தகுதிக் குறைவு**
உயர் தகுதியுடையோரை கீழ் தகுதியுடையோருக்கும் கீழ் நிலை நிறுத்தல்.

**STATUS FRUSTRATION**
**தகுதி வெறுப்பு**
தகுதிக் குறைவால் ஒருவரில் விளையும் மன நிறைவின்மை (அதிருப்தி)

STEREO TYPE
**மாறாக்கருத்து**
ஒரு குழுவிலுள்ளோர் கொண்டிருக்கும் பெரிதும் மிகை எளிமைப்படுத்தப்பட்ட நிலைபாடுகள் அல்லது நம்பிக்கைகளின் இறுகிய தொகுப்பை குறிக்கிறது.

STIGMATIZED YOUTH
**அவமான இளைஞர்**
சமூகத்தின் பிறரால் வேறுபட்டவராகவும் பொதுவாக தாழ்வானவராகவுமே கருதப்படும் இளைஞர்களை குறிக்கிறது.

STIMULUS
**தூண்டல்**
ஒரு புலன் உறுப்பை கிளர்த்தும், சூழலில் உள்ள ஒரு பொருளில் அல்லது ஆற்றலில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கிறது.

STIMLUS DISCRIMINATION
**தூண்டல் பாகுபாடு**
ஒத்த ஆனால் ஒன்றல்லாத தூண்டல் களுக்கிடையில் பிரித்தறியும் திறனைக் குறிக்கிறது.

STIMULUS RESPONSE (SR)
**தூண்டல் - துலங்கல்**
எதையும் தூண்டல் - துலங்கல் அளந்துவிடமுடியம என கருதும் கற்றல் நோக்கு.

STIMULUS RESPONSE REINFORCEMENT
**தூண்டல்-துலங்கல் உறுதிப்பாடு**
ஸ்கின்னர் உருவாக்கிய நடத்தைமுறை கற்றல் மாதிரி. ஒரு தூண்டலுக்கு கற்பவர் தரும் துலங்கலுக்கு பரிசு தரப்பட்டு அது உறுதிப்படுத்தப்படுகிறது.

STRATEGIES
**செயல் உத்திகள்**
கற்றலில் அல்லது எண்ணுதலில் பயன்படும் உத்திகளை குறிக்கிறது.

STRATIFIED SAMPLING
**அடுக்காக்க மாதிரி, அடுக்கு மாதிரி**
ஒரு மக்கள் கூட்டத்தை அடுக்குகளாக பிரித்து பின் ஒவ்வொரு அடுக்கில் இருந்தும் ஒரு மாதிரியை எடுக்கும் புள்ளியியல் மாதிரி உத்தி.

STREET WORKER
**தெருமுனை பணியாளர்**
தெருவில் கிடக்கும் ஏதிலிகளுக்காகவும் ஏழைகளுக்காகவும் பாடுபடும் சமூகப் பணியாளர்.

STRESS
**மன அழுத்தம்**
பதற்றம், முரண்பாடு, உணர்ச்சி அதிகரிப்பு, ஏமாற்றம் ஆகிய மனநிலை.

STRUCTURAL ENGINEERING
**கட்டமைப்பு பொறியியல்**
கட்டமைப்புகள் பற்றிய கட்டிட பொறியியல் பிரிவு.

**STRUCTURALISM**
**அமைப்பியல்**
எண்ணம், நடத்தை அல்லது சமூக அமைப்பின் அடிப்படை வடிவங்கள் பற்றிய ஆய்வு.

**STRUCTURAL UNEMPLOYMENT**
**அமைப்புசார் வேலையின்மை**
பண்டம் மற்றும் திறன்களுக் கான நீண்ட கால / நிலையான மாறுதல்களில் இருந்து எழும் வேலையின் மையை குறிக்கிறது. நிலவும் சமூக அமைப்பு முறை யின் விளைவான வேலையின் மை.

**STRUCTURED INTERVIEW**
**வரம்புபடுத்திய பேட்டி**
பதிலளிப்போரின் பதில்களை வரம்பு படுத்தும் நோக்கில் அமைக்கப்படும் கேள்விகளைக் கொண்ட பேட்டி.

**STUDENT AID**
**மாணவர் உதவி**
மானியம், கடன், உதவித் தொகை, போன்ற மாணவர் களுக்கு நிதிஉதவி தரும் வடிவங் களைக் குறிக்கிறது.

**STUDENT COUNCIL**
**மாணவர் பேரவை**
மாணவர் பிரதிநிதிகளைக் கொண்ட பள்ளி/கல்லூரி ஆலோ சனை/ ஆட்சிக்குழு.

**STUDENT DEVELOPED MATERIALS**
**மாணவர் அமைத்த சாதனங்கள்**
மாணவர்கள் உருவாக்கிய கல்வி சாதனங்களை குறிக்கிறது.

**STUDENT LOAN**
**மாணவர் கடன்**
மேல்படிப்பு படிக்க இயலு மாறு மாணவர்களுக்கு வழங்கப் படும் கடன்கள்.

**STUDENT PARTICIPATION**
**மாணவர் பங்கேற்பு**
படிப்புத் திட்டங்களை திட்ட மிடுவதிலும் கல்வி நிறுவனங் களை நடத்துவதிலும் மாணவர் பங்கேற்பைக் குறிக் கிறது.

**STUDENT PLACEMENT**
**மாணவர் பணியமர்த்தம்**
மாணவருக்கு பகுதிநேர / முழுநேர வேலை தரப்படுவதைக் குறிக்கிறது.

**STUDY ABROAD**
**வெளிநாட்டுப் படிப்பு**
யுனெஸ்கோ வெளியீடு. பல நாடுகளை சேர்ந்த பல்வேறு அரசாங்க முகமைகளும் பல்கலை களும் பிற நிறுவனங்களும் பன்னாட்டு அரசு அரசு சாரா முகமைகளும் வழங்கும் பலப்பல உதவித் தொகைகளையும் மானியங்களையும் இது தெரிவிக் கிறது.தேசிய முகமைகள் தம் சொந்த நாட்டவர் வெளிநாட்டில் படிக்கவும் வெளிநாட்டிலிருந்து

தம் நாட்டுக்கு படிக்க வரும் மாணவர்களுக்கும் வழங்கும உதவித் தொகைகளும் இதில் தெரிவிக்கப்படுகின்றது.

**STUDY CENTRE**
**படிப்பு மையம்**
தனிப்படிப்புக்கு இடமும் பிற வசதிகளும் வழங்கும் இடம்.

**STUDY CIRCLE**
**படிப்பு வட்டம்**
பொது அக்கறைக்குரிய விசயத்தை விவாதிக்க ஒன்று குழுமும் ஆட்கள்.

**STUDY LEAVE**
**படிப்பு விடுப்பு**
ஒரு தொழிலாளி ஒரு தேர்வுக்கு ஆயத்தமாக அல்லது ஒரு குறிப்பிட்ட படிப்பைத் தொடர முதலாளி வழங்கும் விடுப்பு.

**STUDY READER**
**வாசிப்பு ஏடு**
பள்ளியில் பயிலும் பாடங்கள் குறித்து மேலும் எழுதப்பட்ட எழுத்துக்கள் வழி வாசிப்பு திறனை வளர்க்க உருவாக்கப் பட்ட நூல்.

**STYLE OF LEARNING**
**கற்றல் பாணிகள்**
வெவ்வேறு மாணவரிடையே முதன்மையாய் செயல்படும் அறிதல் முறை. எ.கா. சிலர் எழுதிக் கற்பதைவிட காதில் கேட்பதன் வழி சிறப்பாய் கற்கிறார்கள்.

**SUB CONSCIOUS**
**அடிமனம்**
மன நடவடிக்கைகளின் தடங்கள் அடங்கியது. இவை உணர்வு மனத்தில் இல்லா விட்டாலும் கடந்த கால அனுபவத்தை தீவிரமாய் திரும்ப நினைப்பதன் வழி அங்கு கொணரப்பட முடியும்.

**SUBCULTURE**
**துணைபண்பாடு**
குறிப்பிட்ட மக்கள் பிரிவினரின் வாழ்க்கை முறையும் மதிப்புகளும். இவை அவர்கள் வாழும் சமூகத்திலிருந்து சில விதங்களில் மாறுபட்ட நோக்குகளும் போக்குகளும் அவர்களிடம் இருக்க காரணமாகிறது.

**SUBJECT**
**ஆய்பொருள்/பாடம் /தலைப்பு**
ஆயப்படும்/பகுத்தாயப்படும் ஒன்றைக் குறிக்கிறது.

**SUBJECT CENTERED**
**பாடமையம் கொண்ட**
மாணவர்களின் தேவைகளைவிட பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்துக்கே முக்கியம் தரும் கற்றல் கற்பித்தல் அணுகல்.

**SUBJECTIVE TEST**
**அகநிலைப்பட்ட தேர்வு**
புறநிலைத் தேர்வு முறையின் அளவுகோல்படி அல்லாமல் விடைகளின் மதிப்பு பற்றிய தேர்வரின் சொந்த அபிப்ராயத்தின் அடிப்படையில் மதிப்பெண் அளிக்கப்படும் தேர்வு.

**SUBLIMATION**
**மடைமாற்றம்**
ஒரு குறிக்கோளில் ஏற்பட்ட ஏமாற்றத்தை இன்னொரு நடவடிக்கையால் மகிழ்ச்சியாக மாற்றிக் கொள்ளுதல். இந்த தற்காப்பு நடத்தை நல்லதென்றார் பிராய்டு. எ.கா: காதல் தோல்வியை கவிதை வெற்றியாக்கல். தனக்கு குழந்தை பிறக்காததால் அனாதைக் குழந்தையை ஆதரித்தல் - வாழ்வளித்தல்.

**SUBSTITUTIVE GOAL**
**மாற்றீட்டு இலக்கு**
மூல இலக்கின் இடத்தை எடுத்துக் கொண்டுவிட்ட வேறு இலக்கைக் குறிக்கிறது.

**SUCCEISSIVE HURDLES METHOD**
**தொடர்தடை முறை**
தொடர்ச்சியான சோதனைகளை பயன்படுத்தும் தேர்வு உத்தி.

**SUCCESS RATIO**
**வெற்றி வீதம்**
ஒரு பாடம்/திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களின் வெற்றிவீதம்.

**SUCKLING**
**பால்குடி குழந்தை**
தாயிடம் / புட்டி பால் குடிக்கும் பச்சைக் குழந்தை.

**SUGGESSTION**
**கருத்தேற்றம்**
ஒரு கருத்து / நிலைபாட்டை திறனாயாது ஏற்றல்.

**SUGGESTIBILITY**
**கருத்தேற்பு தன்மை**
தன் இயல்பாகவோ வசிய நிலையின்கீழோ பிறர் கருத்துக்களை ஏற்க விருப்பமுடைமை.

**SUMMATIVE EVALUATION**
**தொகுப்பு மதிப்பீடு**
எந்த ஒரு கல்வித்திட்டம் / நடவடிக்கை முடிவிலும் அந்த செயல்பாட்டின் வலிமையை காணும் மதிப்பீடு.

**SUMMER CAMP**
**கோடை முகாம்**
கோடை விடுமுறையில் மாணவர்கள் பங்கேற்கும் முகாம்.

**SUPERIORITY**
**உயர்வுப்பான்மை**
தன்னை தானே உயர்வாய் கருதல். இது தன் முயற்சிக்கு முதன்மை ஊக்கியாக கருதப்படுகிறது.

**SURROGATE MOTHER**
**மாற்றுத்தாய்**
ஒரு சிறு குழந்தைக்கு-சோதனைக்காக அமர்த்தப்படும் - பதிலி தாயைக் குறிக்கிறது.

**SUSPENSION**
**தற்காலிக நீக்கம்**
ஒரு மாணவரை அவரது

பள்ளி / கல்லூரி / பல்கலையில் இருந்து தற்காலிகமாக நீக்கி வைத்தல்.

**SYLLABUS**
**பாடத்திட்டம்**
ஒரு தேர்வுக்கான பாடப் பகுதியின் சுருக்கமான வரை யறை / விவரிப்பு.

**SYLLOGISM**
**முக்கூற்று முடிவு**
இரண்டு தரவுகளும் அவற் றில் இருந்து பெறப்படும் முடிவும் அடங்கிய தருக்க வாதம்.

**SYMBOL**
**குறியீடு**
ஒரு செயலை / பொருளைக் குறிக்கும் இன்னொரு செயல் / பொருள்.

**SYMBOLIC PLAY**
**குறியீட்டு விளையாட்டு**
இதில் குழந்தை காட்டாக குச்சி போன்ற ஒரு பொருளை துப்பாக்கியாகவோ, கொடிக்கம்ப மாகவோ, கத்தி - கடப்பாறை - கோடாரி என ஏதாவது ஒன்றாக எடுத்துக் கொண்டு விளை யாடும்.

**SYMPATHY**
**பரிவு**
அடுத்தவரின் உணர்ச்சி அனுபவத்தை மதித்து ஏற்கும் திறன்.

**SYMPOSIUM**
**கருத்துக்கோவை**
குறிப்பிட்ட தலைப்பைப் பல உட்கூறுகளாக்கி ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கக் கேட்டு அவை பற்றி விவாதிப்பதற்கான கூட்டம்.

**SYMPTOMS**
**அறிகுறிகள்**
உடல் மன நலம் சீர்கெட் டிருப்பதை குறிக்கும் இயல்பற்ற நடத்தை உடல் குறிகள்.

# T

**TABULA RASA**
**எழுத்திலா பட்டிகை**
குழந்தையின் மனம் எழுதப் படா பலகை போன்றது. அதில் அறிவும் அனுபவமும் பிறகு பதிவாகின்றன எனும் நம்பிக்கை யைக் குறிக்கிறது.

**TACTILE ADAPTATION**
**தொடுஉணர்வுக்கு மாற்றல்**
பார்வையற்றவருககான கல்வியில் பயன்படும் கல்வி சாதனங்களின் மாறுதல்.

**TALKING BOOK**
**பேசும் புத்தகம்**
பார்வையற்றோருக்காக உரு வாக்கப்பட்ட பாடபதிவு நாடா / அதுபோன்ற கருவி

**TALKING TYPEWRITER**
**பேசும் தட்டச்சுப்பொறி**

ஒவ்வொரு பொத்தானை அழுத்தும் போதும் ஒரு உச்சரிப்பை எழுப்புவதன் மூலம் கற்பிக்கும் கருவி.

**TAUTOLOGY**
**கூறியது கூறல்**

ஒரே செய்தியை ஒரே நேரத்தில் இருமுறை இருவிதமாக கூறும் வாசகம்.

**TO TEACH**
**கற்பி**

அறிவை / திறனை பிறருக்கு வழங்கல். பிறருக்கு போதனை வழங்கல். பயிற்சி / பாடம் வழங்கல்.

**TEACHER CHARACTERISTICS RESEARCH**
**ஆசிரியர் பண்பாய்வு**

ஆசிரியரின் உளவியல் சமூகவியல் பண்புகள் பற்றிய ஆய்வு.

**TEACHER EDUCATION**
**ஆசிரியர் கல்வி**

தொழில்முறை கல்வியையும் ஆசிரியர்களை பயிற்றுவித்தலையும் குறிக்கிறது. இதில் பாட வேலையுடன் மேற்பார்வையின் கீழான பயிற்சி கற்பித்தலும் பணியிடை படிப்புகளும் அடங்கும்.

**TEACHER POWER**
**ஆசிரியர் அதிகாரம்**

கல்விக் கொள்கைகளை வகுப்பதில் ஆசிரியர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கும் நோக்கிலான செயல்பாட்டைக் குறிக்கிறது.

**TEACHER RECRUITMENT**
**ஆசிரியப்பணிக்கு ஆளெடுப்பு**

ஆசிரியர் கல்விக்கு மாணவர் சேர்க்கும் நிகழ்முறை. அல்லது குறிப்பிட்ட பள்ளி / பள்ளி முறையில் உள்ள ஆசிரியர்க்கான காலி இடங்களுக்கு ஆசிரியர்களை தேடும் நிகழ்முறை.

**TEACHING LOAD**
**ஆசிரிய சுமை**

கற்பித்தல், கற்பித்தலுக்கான ஆயத்த காலம் ஆகிய வகையில் ஆசிரியரின் பணிச்சுமையைக் குறிக்கிறது.

**TEACHING MACHINE**
**கற்பிக்கும் கருவி**

ஆசிரியர் உதவி இல்லாமலே தானே கற்க உதவும் கருவி. பல படி நிலைகளில் நிரல்படுத்திய பாடங்களை வழங்கக்கூடியது.

**TEACHING METHOD**
**கற்பித்தல் முறை**

பாடங்கள் - பயிற்சிகள் முதலியவற்றை முன்வைக்க பயன்படும் முறை.

**TEACHING STYLE**
**கற்பித்தல் பாணி**

இது ஒவ்வொருவருக்கும் மாறுபடக் கூடியது.

**TEACHING TECHNIQUE**
**கற்பித்தல் உத்தி,**

**கற்பித்தல் நுட்பம்**

சிலஉத்திகளைப் பயன் படுத்திக் கற்பிப்பது.

**TECHNICAL ASSISTANCE**

**தொழில்நுட்ப உதவி**

வளரும் நாடுகளுக்கு வளர்ந்த நாடுகளும் ஆசிரியர்கள் -விரிவுரையாளர்கள் ஆசிரியர் பயிற்சி பணியாளர்கள் கல்வி நிர்வாகிகள் உதவிப் பணியாளர் தொண்டூழியர் முகமைகளும் கல்வி பயிற்சி வசதிகள் பொருள் கள், கருவிகள், பயிற்சி ஆய்வு முறைகள் ஆகியவற்றை வழங்கு வதைக் குறிக்கிறது.

**TECHNOLOGICAL FORECASTING**

**தொழில்நுட்ப முன்னறிவிப்பு**

தொழில்நுட்பத்தில் வரக்கூடும் மாற்றங்களையும் குறிப்பிட்ட தொழில்கள் நிறு வனங்கள் பொருள்களில் அவற் றால் ஏற்படக்கூடும் தாக்கங் களையும் பற்றிய அறிவிப்பு.

**TECHNOLOGY**

**தொழில்நுட்பம் / நுட்பவியல்**

அறிவியலின் ஒரு துறையை தொழில்துறை முதலான நடை முறை சூழ்நிலைமைகளில் படைப்புத் தன்மையோடு பயன்படுத்தல்.

**TELECLASS**

**தொலைவகுப்பு**

உடல் ஊனம் முதலிய காரணங்களால் வகுப்புக்கு வர முடியாத மாணவர்களுக்கு தொலைபேசி வழி ஆசிரியர் கற்பிக்கும் முறை.

**TELECOMMUNICATIONS**

**தொலைதொடர்பு**

ஒலிகள் உருவங்கள் சமிக்கை கள் இவற்றை தொலைபேசி / தொலைவரைவி மூலம் அனுப் பல்.

**TELEWRITER**

**தொலைஎழுதி**

எழுத்து, வரைபடம், கோட் டோவியம் போன்ற காட்சித் தகவல்களை தொலைபேசி வழி அனுப்ப இயலும் தொலை தொடர்பு அமைப்பு. அனுப்பு மிடத்தில் மின்அணு எழுதுபல கையும் வாங்குமிடத்தில் ஒரு தொலை பேசி இணைப்பும் இருக்கும்.

**TEMPERAMENT**

**மனநிலை**

மனிதரில் காணும் அனைத்து உணர்ச்சிகள், அவற்றை எழுப்பும் தூண்டல்களுக்கு அவர் ஆட் படும் நிலைமைகள், வெவ்வேறு செயல்பாடுகளுக்கு அவரின் உள்ளார்ந்த எதிர் வினைப் போக்குகள் இவற்றைக் குறிக் கிறது.

**TERMINAL ASSESSMENT**

**இறுதிக்கட்ட மதிப்பீடு**

ஒரு படிப்புக்கு வரையறுத்த

காலம் முடியும்போது மாணவரின் செயல்பாட்டை மதிப்பிடல்.

**TERM PAPER**
**பருவக் கட்டுரை, பருவத்தாள்**
ஒரு பாடத்துக்கான ஒரு பருவத்துக்குரிய பணியாக சேர்க்கப்படும் ஒரு ஆய்வுக் கட்டுரையைக் குறிக்கிறது.

**TERTIARY EDUCATION**
**மூன்றாம் நிலைக்கல்வி**
இரண்டாம் நிலை (உயர் நிலை) கல்வி முடித்தபின் வரும் கல்வி (கல்லூரிக் கல்வி)

**TESSELATION**
**வடிவக் கொளுவல்**
எந்தெந்த வடிவங்கள் எவற்றுடன் பொருந்தி மொத்தத்தில் ஒரு பரப்பை உருவாக்கும் என கண்டுபிடிக்கும் ஒரு குழந்தை விளையாட்டைக் கொண்டு கணிதம் கற்பிக்கும் செயல்பாடு.

**TEST**
**சோதனை**
ஒன்றின் இருப்பு, தரம் மேன்மையை உறுதி செய்யும் முறை.

**TESTIMONIAL**
**சான்று**
காலி இடத்துக்கு விண்ணப்பிப்பவர் சமர்ப்பிக்கும் எழுத்து மூல பரிந்துரை.

**T GROUP**
**T-குழு**
உறுப்பினர்கள் தம் சொந்த சமூக இடைவினையை தாமே ஆய்ந்து தம் சமூகத் திறன்களையும் உறவு முறைகளையும் மேம்படுத்த முயல்வதற்கான குழு.

**THEOLOGICAL COLLEGE**
**இறையியல் கல்லூரி**
குருமார்களுக்கான தொழில் பயிற்சி வழங்கும் நிறுவனம்.

**THEORIES OF KNOWLEDGE OR EPISTEMOLOGY**
**அறிவுக் கோட்பாடுகள் அல்லது அறிவுத் தோற்றவியல்**
அறிவின் தோற்றம், இயல்பு, வரம்பு பற்றிய கோட்பாடுகள் பற்றியது.

**THEORY OF EDUCATION OR EDUCATIONAL THEORY**
**கல்விக் கோட்பாடு**
கல்விக் கொள்கை நடைமுறையின் விதிகள் மற்றும் விவரங்கள் தொடர்பான கோட்பாடு.

**THESIS**
**ஆய்வுரை**
ஒரு ஆய்வின் முடிவுகளின் எழுத்துமூல முன்வைப்பு. பொதுவாக ஒரு மாணவர் உயர்பட்டம் பெற சமர்ப்பிப்பது இது.

**THINK TANK**
**அறிவர் குழு**
நீண்ட கால திட்டத்தை துறையிடை ஒத்துழைப்புடன்

உருவாக்குவதற்கான குழு. அல்லது நிலவும் கோட்பாடு களையும் நம்பிக்கைகளையும் கேள்விக்குள்ளாக்கும் குழு.

**THOUGHT**
**எண்ணம்**
சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கத்தில் புதிய உறவுகளை கண்டுபிடிக்க இட்டுச்செல்லும் குறியீடுகளை பயன்படுத்து வதைக் குறிக்கிறது.

**TISSUE**
**திசு**
குறிப்பிட்ட செயல்பாட்டை நிறைவேற்ற தனித்தனியாய் உள்ள ஒத்த உயிரணுக்களின் திரட்சி. எ.கா: நரம்பு திசு/தசை திசு/சுரப்பி திசு.

**TOTAL TECHNOLOGY**
**மொத்த தொழில்நுட்பம்**
தொழில்நுட்ப நிருவாக நிதி விசயங்களுடன் பாடத்தையும் கணக்கில் கொண்ட ஒருங் கிணைந்த பரந்த தொழில்நுட்ப படிப்பு.

**TOWN PLANNING**
**நகர அமைப்புத்திட்டம்**
சூழலியல் - அழகியல் கேடு களையும் தாறுமாறான கட்டு மானத்தையும் தவிர்க்கும் நோக்கில் நகரப் பகுதியை உருவாக்கும் ஒருங்கிணைந்த திட்டம்.

**TRADE UNION / LABOUR UNION**
**தொழிலாளர் சங்கம்**
ஊதியம், வேலை நிபந்தனை கள் போன்றவற்றில் கூட்டாக செயல்படும் தொழிலாளர்கள் சேர்ந்த அமைப்பு.

**TRADITOINALIST**
**மரபுவாதி, பழமைக் கோட்பாட்டாளர்**
கடந்த கால நம்பிக்கை களையும் நடைமுறைகளையும் பிரதிபலிக்கும் மனப்பாங்கும் நடத்தையும் கொண்டவர்.

**TRAINABILITY TEST**
**பயில்திறன் சோதனை**
புதிய திறன்களை கற்க ஒருவர் தகுதியானவரா என அறியும் வகையில் அமைக்கப் பட்ட சோதனை.

**TRAINEE**
**பயிற்சியாளர்**
வேலைசார் திறன்களை பெறும் மேம்படுத்தும் நோக்கில் தொழில்பயிற்சி, நிர்வாக, தொழில் நுட்ப பயிற்சித் திட்டத்தில் பங்கேற்பவர்.

**TRAINER**
**பயிற்சியாளர்**
வழிகாட்டுணர்வு (அ) ஆசிரியர் (அ) பயிற்றுனர்

**TRAINING GANG**
**பயிற்சிக் குழு**
தொழிற்சாலையில் பயிற்சி பெறும் தொழிலாளர் குழுவைக் குறிக்கிறது.

**TRAINING SCHOOL**
**பயிற்சிப் பள்ளி**
தொழில்நுட்ப, தொழில்கல்வி வழங்கும் பள்ளி.

**TRAIT**
**பண்புக்கூறு**
ஒருவரில் நீடித்திருக்கும் பண்புக்கூறு. இதனால் ஒருவர் பலவிதமான சூழ்நிலைகளிலும் ஒரு குறிப்பிட்ட விதமாக எதிர்வினைபுரிகிறார்.

**TRANSCRIPT**
**பதிவுப்படி**
வானொலி / தொலைக் காட்சியில் ஒலிபரப்பியதை அல்லது ஒரு பேச்சை எழுத்தில் பதிந்த பதிவு.

**TRANSCRIPT LIBRARY**
**பதிவுப்படி நூலகம்**
இசை-பேச்சு-சொற்பொழிவு முதலியவை பதிந்த நாடா, வட்டு நூலகம்.

**TRANSIENT CHILD**
**நிலையற்ற குழந்தை**
அடிக்கடி வீடுமாறும் பெற்றோரின் குழந்தை.

**TRANSPARENT UNIVERSITY**
**வெளிப்படை பல்கலைக் கழகம்**
ஆய்வு மற்றும் கல்வி பணிகள் பல்கலை உறுப்பினர்களுக்கும் பிறருக்கும் எளிதாக பார்வையிட இடம் அளிக்கும் பல்கலையைக் குறிக்கிறது.

**TRAUMA**
**உளஅதிர்ச்சி**
மன அலைக்கழிவுக்கு இட்டுச் செல்லும் உடல் / உணர்ச்சி சார் ஊறு அல்லது அதிர்ச்சியைக் குறிக்கிறது.

**TRAVELLERS SCHOOL**
**பயணர் பள்ளி**
நாடோடிகளுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் வழங்கப்படும் கல்வி.

**TRAVEL TRAINING**
**நடமாட்ட பயிற்சி, பயண பயிற்சி**
உடல் ஊனர் தன் கற்றாடலில் எளிதாக இயங்க கற்பித்தல்.

**TRIAL & ERROR LEARNING**
**முயன்று தவறி கற்றல்**
வரன்முறையற்ற பல முயற்சிகளில் ஒரு முயற்சி தற்செயலாக வெல்லும் வரை முயன்று ஒரு சிக்கலை தீர்க்கும் முறை.

**TRIMESTER**
**முப்பருவம்**
பள்ளி ஆண்டை / கல்வி ஆண்டை 3 மாதங்கள் கொண்ட 3 பருவங்களாக பிரித்தல்.

**TRUE - FALSE TEST**
**சரியா தவறா சோதனை**
சரி தவறு இரண்டில் ஒன்றைக் குறியிடும்படி கேட்கும் கேள்விகளை கொண்ட சோதனை.

**TUTORIAL SYSTEM**
**தனிப்பயிற்சி முறை**

ஒரு மாணவர் / சிறு குழு ஒரு ஆசிரியரிடம் இருந்து நேரடி கல்வியும் வழிகாட்டலும் பெறும் முறை.

# U

**UNCONDITIONED RESPONSE**
**கட்டற்ற எதிர்வினை, இயல்பான துலங்கல்**

ஒரு உளவியல் தூண்டலுக்கு இயல்பான/ இயற்கையான எதிர்வினை.

**UNCONDITONED STIMULUS**
**கட்டற்ற தூண்டல்**

உடலியல் மறிவினைகளுக்கோ உள்ளுந்தலான எதிர்வினைகளுக்கோ தன்னைப் போல் இட்டுச்செல்லும் உளவியல் - உடலியல் தூண்டல்களைக் குறிக்கிறது.

**UNCONSICOUS**
**நனவிலி**

அமுக்கப்பட்ட உணர்ச்சிகளைக் குறிக்கிறது. உணர்வற்ற உள் நோக்கங்களாலும் நிலைபாடுகளாலும் தாக்கம் பெற்ற நடத்தை. உளவியல் பகுப்பாய்வு மூலம் உணர்வு மனத்துக்கு இவை மீளவும் கொணரப் படலாம்.

**UNDER ACHIEVEMENT**
**குறை சாதனை**

மாணவரின் கடந்த கால சாதனையின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்டதை விட குறைந்த சாதனை.

**UNDER EMPLOYED**
**குறைந்த வேலை வாய்ப்பினர்**

பகுதிநேர அல்லது நாட்கூலி அடிப்படையில் வேலை பெறுபவரைக் குறிக்கிறது.

**UNDERGRADUATE**
**இளநிலைப்பட்டதாரி**

இளங்கலை பட்டம் போன்ற முதனிலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்.

**UNDERGROUND PRESS**
**தலைமறைவு ஏடுகள்**

அரசியல் / சமூகவியல் / கலையியல் முன்னோடி குழுக்களால் உறுப்பினர்களால் வெளியிடப் படும் செய்தித்தாள்கள் இதழ்கள். இவை பெரிதும் புரட்சிகரமான நடப்பு அமைப்புக்கு எதிரான தன்மையன. பெரிதும் வணிக நோக்கற்ற அடிப்படையில் நடத்தப்படுவன.

**UNEDUCATED CAPACITY**
**கற்பிக்கப்படா ஆற்றல்**

கல்வி இன்னும் வழங்கப் படாததால் சாதனைக்கு வராத ஆற்றலைக் கொண்ட ஆள் / சமூகம்.

**UNEMPLOYABLE**
**வேலைபெற முடியாதோர்**
வேலைக்கு ஆள் பற்றாக் குறை இருந்தாலும் கூட வேலை கிடைக்கப்பெறாத உழைக்கும் வயது மக்கள்.

**UNESCO**
**யுனெஸ்கோ**
ஐக்கிய நாட்டு கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பு. 1946இல் உருவாக்கப்பட்டது. அனைவருக்கும் இலவச-கட்டாயக் கல்வி உரிமை அதிகமதிகம் அளிக்கப்படுவதை ஊக்குவிப்பதும் எங்கணும் கல்வித் தரத்தை மேம்படுத்து வதும் இதன் நோக்கம்.

**UNICEF**
**யுனிசெப்**
ஐக்கிய நாட்டு குழந்தைகள் நிதியம். ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் 1946இல் உருவாக்கப்பட்டது. ஐ.நா. பொருளியல் சமூகவியல் பேர வைக் குழுவால் இது கண் காணிக்கப்படுகிறது.

**UNIT PLAN**
**ஒன்றிய திட்டம்**
பாடத்தையும் அனுபவத்தை யும் ஒருங்கிணைக்கும் கல்வித் திட்டம் உருவாக்கல்.

**UNIVERSAL CULTURE**
**உலகப் பண்பாடு**
அனைத்து இனமக்களுக்கும் பொருந்தும் அனைவராலும் ஏற்கப்படும் பண்பாட்டு மதிப்பு க்களை குறிக்கிறது.

**UNIVERSITY**
**பல்கலை (கழகம்)**
உயர்கல்வி நிலையம். கல்வி ஆய்வில் உச்ச மதிப்புடையது. தன் பட்டங்களை தானே வழங்க அதிகாரம் பெற்ற கூட்டமைப்பு ஆகும்.

**UNIVERSITY EXTENSION**
**பல்கலை விரிவாக்கம்**
உழவு மற்றும் கூட்டுறவு ஆய்வுகள் உட்பட்ட பல்கலை விரிவாக்க நடவடிக்கையை குறிக்கிறது.

**UNIVERSITY GRANTS COMMISSION (UGC)**
**பல்கலை நிதி நல்கைக் குழு**
இந்திய பல்கலைகளுக்கான நிதி வழங்கலை மேற்பார்க்க பொறுப்புள்ள அமைப்பு.

**UNIVERSITY WITHOUT WALLS**
**சுற்றுச்சுவரற்ற பல்கலை**
முழு உலகுமே வகுப்பும் ஆய்வுக் களமும் ஆக விரும்பும் பல்கலைக் கருத்து.

**UNSCHEDULED TEACHING**
**திட்டமிடாத கல்வி**
ஆசிரியரின் கால அட்ட வணை பணிப்பொறுப்பின்படி முறையாக நடைபெறா கல்வி.

**UNSTRUCTURED INTERVIEW**
**திட்டமிடாத பேட்டி**
பேட்டியாளர் கேள்விகளை

முன்பே திட்டமிடாது பேட்டி தருபவருடன் தான் அடையும் நெருக்கத்துக்கேற்ப உருவாக்கிக் கொள்ளும் கேள்விகள் கொண்ட பேட்டி.

**UNTENURED POST (OR RANK)**
**கால உறுதியற்ற பணி (அல்லது தகுதி)**
பணிக்கால உறுதியற்ற தற்காலிக பதவியைக் குறிக்கிறது.

**UPDATING TRAINING**
**பயிற்சியைப் புதுக்கல்**
புதிய முறைகள், பொருள்கள், தொழில்நுட்பம் மூலம் அறிவையும் திறமையையும் நிகழ்காலத் தரத்துக்குக் கொணரமுடியும் உருவாக்கும் பயிற்சி முறை.

**UPGRADING TRAINING**
**பயிற்சிநிலை உயர்த்தல்**
உழைப்பில் பலவிததன்மை - இடம் பெயர் தன்மையை அதிகரிக்கவும் கூடுதல் அறிவும் திறனும் வழங்கவும் உருவாக்கிய பயிற்சி முறை.

**UPPER CLASS**
**மேல் வகுப்பார்**
சமூகத்தில் வளமை வசதி பெற்றவர்கள் பிரபுக்கள் பெருநில உடைமையர் முதலாளிகள் - ஆட்சியர் போன்றோரைக் குறிக்கிறது.

**USHER**
**கட்டியர்**
ஊர்வலம் கட்டுப்பாடாக நடக்க உதவுநர். பார்வையாளர்களை அவர்களின் இருக்கைக்கு வழிநடத்துபவர்.

**UTILITARIANISM**
**பயனுடைமை கொள்கை**
பயன்படும் மகிழ்வுதரும் செய்திகள் மட்டுமே கற்பிக்கப் படல் வேண்டும் என நம்பும் கொள்கை.

# V

**VACATION**
**விடுமுறை / பருவம்**
பள்ளி / கல்லூரி / பல்கலை பாடப் பருவங்களுக்கு இடைப்பட்ட விடுப்புக்காலம். அல்லது தனிப்பயிற்சி அல்லது ஆய்வு மேற்கொள்ளும் காலம்.

**VALIDATION BOARD**
**மதிப்பீட்டு வாரியம்**
தேர்வு / பட்டம் வழங்கு அமைப்புக்காக ஒரு படிப்பை மதிப்பிடும் பொறுப்பு தரப்பட்ட குழு.

**VALIDITY**
**தகுதியுடைமை**
எந்த அளவுக்கு ஒரு சோதனை அதனிடம் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு பொருந்திய அளவீடாக உள்ளது என்பது.

**VALUE ANALYSIS ENGINEERING**
**மதிப்பு ஆய்வு / பொறியியல்**

கூடியவரை சிக்கனமாக நிறைவேற்றப் படுவதை உறுதி செய்யக்கூடிய விதமான வடிவமைப்பு உற்பத்தி சந்தைப் படுத்தல் செயல்பாடுகளை காண பயன்படும் உத்திகள்.

**VALUE SYSTEM**
**மதிப்பீட்டு அமைப்பு**

ஒரு பண்பாடு அல்லது சமூக வகுப்பினால் நடத்தையின் சரியான தவறான கூறுகள் எனக் கருதப்படும் அறிவுறுத்தல்கள்.

**VARIABLE**
**மாறி**

ஒரு கல்வி நிகழ்வின் அவதானத்தை/ மேலாண்மையை பாதிக்கக்கூடிய கல்வியியல் ஆய்வு காரணியைக் குறிக்கிறது.

**VARIANCE**
**மாறுபாடு**

ஒரு தொகுப்பான பகுதி சிதறி கலைந்து கிடக்கும் அளவு.

**VARIANCE CONTROL**
**மாறுபாட்டுக் கட்டுப்பாடு**

குறிப்பிட்ட வடிவமைப்பின் மாறுபாட்டை கட்டுப்படுத்த ஆய்வர் அமைக்க இயலும் சோதனை வடிவமைப்பின் முகாமைக் கோட்பாட்டை குறிக்கிறது.

**VERBAL REASONING QUOTIENT (VRQ)**
**சொல் பகுத்தறி ஈவு**

பழைய சொல்லான நுண்ணறிவு ஈவு (IQ) என்பதற்கு ஈடான புதுச்சொல்.

**VERNACULAR SCHOOL**
**வட்டார மொழிப்பள்ளி**

ஏழைக் குழந்தைகளுக்கு அவர்களின் சொந்த மொழியில் கற்பிக்கும் பள்ளியைக் குறிக்கிறது.

**VERTICAL SOCIAL MOBILITY**
**செங்குத்தான சமூக அசைவு**

வெவ்வேறு சமூக வகுப்பு (வர்க்கம்) அல்லது தகுதியில் இருப்போர் மேல் கீழ்நோக்கி இயங்குவதைக் குறிக்கிறது.

**VIGILANCE BEHAVIOR**
**விழிப்பான நடத்தை**

உயர்கவனம்/ உசார்த்தன்மை தேவைப்படும் நிலைமைகளில் விரைந்து செயல்படும் ஆயத்தமாயிருக்கும் தன்மை.

**VISITING PROFESSOR**
**வருகை (தரு) பேராசிரியர்**

தற்காலிக பகுதிநேர பேராசிரியர் இவர் வேறொரு கல்வி நிலையத்திலிருந்தோ தொழில்துறை அரசாங்கம் போன்ற வேறொரு துறையிலிருந்தோ வருபவராயிருக்கலாம்.

**VISUAL ABILITIES TEST**
**காட்சித்திறன் சோதனை**

ஆழக்காட்சி, வெவ்வேறு

தொலைவுகளில் பார்வையின் கூர்மை போன்றவற்றை சோதிக்க அமைக்கப்பட்ட ஊழியர் தெரிவு சோதனை வகை.

**VISUAL LITERACY**
**காட்சி அறிவு**
புலப்படு நிகழ்வுகளை புரிந்து கொள்ளும் விளக்கும் திறன்.

**VOCABULARY TEST**
**சொல்வள சோதனை**
ஒருவர் புரிந்துகொள்ளும் சொற்களின் மொத்தத்தைக் காண பயன்படும் சோதனை. இதில் ஒரு நிலையான சொற்ப ட்டியல் இருக்கும். சோதிக்கப்படு பவர் அவற்றைப் பலவேறு மாறுபட்ட வரையறைகளில் விளக்க வேண்டியிருக்கும்.

**VOCATIONAL CHOICE**
**தொழில்தெரிவு**
மாணவர் தன் வருங்கால வேலை / பணி / தொழிலை தேர்ந்துகொள்ளும் முடிவைக் கூறுகிறது.

**VOCATIONAL EDUCATION**
**தொழில்கல்வி**
தொழில்திறமையை வளர்க்க உருவாக்கிய செய்முறைகளைக் குறிக்கிறது.

**VOCATIONAL IMMATURITY**
**தொழில் தெரிவில் முதிர்ச்சியின்மை**
தொழிலை பொருத்தமின்றி தேர்ந்தெடுப்பதால் வேலை பணியில்பாதக நிலையடை வதைக் குறிக்கிறது.

**VOCATIONALISM**
**தொழில்கல்வி வாதம்**
கல்வியை முழுவதும் தொழில் சார் கல்வியாக்க வேண்டுமெனும் கருத்து.

**VOCATIONAL ORIENTATON**
**தொழில்பார்வை அளித்தல்**
வெவ்வேறு வேலைகள் பணிகளின் தன்மை பற்றிய விளக்கப் பாடங்களைக் குறிக், கிறது.

**VOLUNTARY ISOLATE**
**வலிய ஒதுங்குபவர்**
ஒரு சமூகக் குழுவிற்கு வெளியிருப்பதையே தேர்பவர். அதனுள் இருக்க அவர் அனுமதிக் கப்பட்டாலும் ஏனெனில் அதனுடன் தனக்கு பொதுவான விசயம் ஒன்று மில்லை என உணர்கிறார்.

**VOLUNTEER BUREAU**
**தன்னார்வர் அலுவலகம்**
தன்னார்வ அமைப்புகளும் ஆட்களும் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக் கொள்ளு மிடம்.

# W

**WANTS**
**விருப்பங்கள்**
நடத்தையை தொடக்கி நிலைநிறுத்தும் உடன்பாட்டு / எதிர்மறை ஆற்றல்களைக் குறிக் கிறது. எ.கா: பாலியல் விருப்பம் உறவுகொள்ள இட்டுச்செல்லுதல்.

**WARDEN**
**பாதுகாவலர்/காப்பாளர்**
கல்லூரி / பல்கலை ஊழியரில் ஒருவர். தனிப்பட்ட நிர்வாக, நடத்துதல் கடமைகள் உடைய வர்.

**WELFARE SCHOOL**
**நலப்பள்ளி**
தகைக்கேடுள்ள குழந்தை களுக்கான பள்ளியைக் குறிக் கிறது.

**WHITE PAPER**
**வெள்ளை அறிக்கை**
நாடாளுமன்றத்தில் மசோத வாக முன்வைக்கப்படப் போகும் அரசாங்க கொள்கை விளக்கக் வெளியீடு. சட்டம் வரையப்படு முன் ஓரளவு பொது விவாதம் நடக்க இது வாய்ப் பளிக்கிறது.

**WHOLECLASS APPROACH**
**மொத்தவகுப்பு அணுகல்/ முழுவகுப்பு அணுகல்**
வகுப்பு மொத்தமும் ஒரே செயல்பாட்டு தரத்தில் ஈடு பாட்டில் உள்ளதாக கொள்ளும் கற்பித்தல் அணுகுமுறை.

**WHOLE MAN**
**முழுமனிதர்**
ஒருவரின் உணர்ச்சிகள், கலைத் திறன்கள், அறிதல் கூறுகள் என அனைத்து தழுவிய கல்வியை அவருக்கு அளிப் பதைக் குறிக்கிறது.

**WILD SUBJECT**
**பொருந்தா பாடம்**
ஒரு படிப்பில் அதன் முதன் மை நோக்கத்துடன் எவ்வகை யிலும் உறவற்று சேர்க்கப் பட்டிருக்கும் பாடம்.

**WITHDRAWAL CHILDREN**
**பின்வாங்கும் / ஒதுங்கும் / தமக்குள் சுருங்கும் குழந்தைகள்**
தகைக்கேட்டின் ஒரு வடிவம். குழந்தைகள் தம்மைச் சூழ்ந் துள்ள உலகிலிருந்து கழண்டு தமக்குள் ஒதுங்குவதன் மூலம் சிக்கல்களை சமாளிக்க முயல் வதைக் குறிக்கிறது.

**WOMEN'S STUDIES**
**பெண்கள் பற்றிய ஆய்வுகள்**
இலக்கியம் முதலான துறை களில் பெண்களின் பங்களிப்பு பற்றிய ஆய்வுகள்.

**WORD METHOD**
**சொல்முறை**
முழு முழு சொற்களாகவே வாசிக்க கற்பிக்கும் முறை.

WORKING CLASS
**தொழிலாளி வகுப்பு (வர்க்கம்)**
தம் கைகளைக் கொண்டு கூலி உழைப்பாளிகளாக பணி யாற்றும் சமூகத்தின் அடிமட்ட மக்கள் பிரிவைக் குறிக்கிறது.

WORKING DAY
**வேலைநாள்**
உயர்நிலைப்பள்ளி மாணவர் கள் தொழிற்சாலை உற்பத்தி யிலும், தம் ஏட்டறிவின் நடை முறைப்பக்க வேலையிலும் ஈடுபடும் நாள்.

WORKING MOTHER
**பணிசெல் தாய்**
தம் குழந்தைகளை வளர்ப் பதுடன் பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ வேலைக்குச் செல்லும் பெண்கள்.

WORKING PARTY
**பணிக்குழு**
ஒரு சிறப்பு கடமை முடிக்க வோ குறிப்பிட்ட விசயத்தை ஆய்ந்து அறிக்க தரவோ பணிக்கப் பட்ட குழு.

WORKING POPULATON / OCCUPIED POPULATION
**வேலைசெய்வோர் தொகை**
மொத்த மக்கள்தொகையில் வேலை வாய்ப்பு பெற்றுள்ள மக்கள்தொகை.

WORK LOAN PROGRAM
**வேலை - உதவித்திட்டம்**
மாணவர்கள் தம் கல்லூரி / பல்கலை சோதனைச் சாலை முதலியவற்றில் வேலைசெய்து ஊதியம் பெற்றபடியே படித்தல்.

WORKSHOP
**பட்டறை**
கைவினைப் பாடங்களில் நடைமுறை வேலைக்காக அமைக்கப்பட்ட அறை கட்டிடம் விவாதக்குழு.

WORLD BANK
**உலக வங்கி**
மறுகட்டுமானம் மற்றும் வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி.

WORLD COMPAIGN FOR UNIVERSAL LITERACY
**அனைவரும் கல்வியறிவு பெறுதற்கான உலக இயக்கம்**
1950களின் கல்வி வீதங்கள் பற்றிய அளவாய்வு உள்ளிட்ட யுனெஸ்கோவின் 1962 அறிக்கை. தேசிய கல்வியறிவுத் திட்டத்துக் கான பரிந்துரைகளை மொழிந் தது. உலகின் மூன்றில் இரு பங்கு நிலவும் கல்வியின்மையை பத் தாண்டில் ஒழிக்க ஆக்க செலவு நன்மைப் பகுப்பை வழங்கியது.

WORLD HEALTH ORGANISATION (WHO)
**உலக நல அமைப்பு**
ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகமையாக 1948இல் செயலுக்கு வந்தது. 'எல்லோருக்கும் இயன்ற அளவு அதிகபட்ச நலம்' என்பதுவே அதன் முதன்மை

இலக்கு. கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சி வகுப்புகள் மூலம் நலத்தொழில், கல்வியின் தரத்தை முன்னேற்றுவது உள்ளிட்டவை WHO இன் நடவடிக்கைகள் ஆகும்.

**WORLD PSYCHIATRIC ASSOCATION (ASSOCIATION MONDIALE DE PSYCHIATRIC)**
**உலக மனநோய் கழகம்**
மனநோய்களின் சிக்கல்கள் பற்றிய பன்னாட்டு அறிவை ஊக்க 1961இல் நிறுவப்பட்டது.

**WORLD UNIVERSITY SERVICE**
**உலகப் பல்கலைச் சேவை**
உலக பல்கலை சமூகத்தின் ஆதாரங்களை திரட்டிக் கொள்ளவும் சமூக அரசியல் சிக்கல்களை ஆய்ந்து மதிப்பிடவும் நலத்திட்டத்துக்காக வாதாடவும் 1920ல் நிறுவப்பட்டது.

**WRIST FINGER SPEED**
**மணிக்கட்டு விரல் வேகம்**
உள இயக்கத்திறன் வகை. வட்டச்சுற்று முதலான மணிக்கட்டு இயக்கத்திறன் ஒருவரில் உள்ள அளவைக் குறிக்கிறது.

# X

**XENOPHOBIA**
**அயலின அச்சம்**
மனித இனங்களிடையே நிலவும் வெறுப்பை குறிக்கிறது.

# Y

**YOKE**
**நுகம்**
சோடி எருதுகளை உழவுக்காக சேர்த்துப்பூட்டும் தடி. மேலும் இணைந்து வேலைசெய்யும் எந்த விலங்கு இணையையும் குறிக்கிறது. கொட்டிலில் விலங்கைக் கட்டுத்தறியில் கட்டி வைப்பதற்காக விலங்கின் கழுத்தை சுற்றி மாட்டும் தளை.

**YOLK**
**மஞ்சள் கரு**
முட்டை மஞ்சள் கரு. ஊட்டக்கரு.

# Z

**ZERO GRAZING**
**சுழிநிலை மேய்ப்பு**
இம்முறையில் புல்முதலிய தீவனங்கள் நாளும் நறுக்கப்பட்டு கொல்லையிலோ அடைக்கப்பட்ட திடலிலோ இருக்கும் கால்நடைகளுக்கு போடப்படுகிறது. இதனால் (அடர்ந்த பகுதிகளில்) கால்நடை திருட்டுப் போவது, பரவலாக இடத்தை அசுத்தப்படுத்துவது, அங்கு

மிங்குமாக மேய்வதால், கழிவா வது தடுக்கப்படுகிறது. சிறிய இடத்து தீவன விளைச் சலில் இருந்து அதிக தீவனம் எடுக்க வழங்க முடிகிறது.

**ZIGZAG HARROW**
**வளைநெளி பரம்பு**

இந்த பரம்பில் சட்டங்கள் கோணலாக இருக்கும். குறுகிய கூரிய கவைமுள் கொண்டு இருக்கும். ஒவ்வொன்றும் ஒவ் வொரு நிலத்துக்கு ஏற்ப அமைந் திருக்கும். பொதுவாக விதைப் படுகை தயாரிப்பின் இறுதி நிலைகளில் பயன் படுத்தப் படுகிறது. மேலும் விதைத்த பின் உழுவைகளின் அடை யாளங்களை அகற்றவும் விதை களை முழுமையாக மூடவும் உதவுகிறது.

**ZINC**
**(துத்த)நாகம்**

தாவர உணவுச்சத்தில் ஒன்று. இதை துத்த அயனியாக ($Zn^{2}+$) செடி உட்கொள்கிறது. தாவர வளர்சிதை மாற்றத்தில் முக்கிய செயல்பாடுகளுக்கு தேவையான நொதி அமைப்புகளுக்கு இன்றி யமையாததாக கருதப்படுகிறது. சில வளர்ச்சி ஊக்கிகளின் உரு வாக்கத்தில் துத்தநாகம் உதவு கிறது. சில தாவரங்களின் இனப் பெருக்கத்துக்கு உதவுவதாக கருதப்படுகிறது.

**ZOONOSIS**
**தாவுநோய்**

விலங்கிடமிருந்து மனிதருக்கு தாவவல்ல ஒரு நோய்வகை. இவற்றில் முக்கியமானவை Salmonellosis, Leptospirosis, Campylobacter மற்றும் Q காய்ச்சல்.

------------